# திருவாசகத்தில் சிவபுராணம்

இனிய இலகு தமிழ் உரைநடையுடன்



சரோஜினிதேவி சிவஞானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L 17739

# திருவாசகத்தில் சிவபுராணம்

Purchased Under the
Authors Aid Project 2019 of the
Department of Cultural Affairs

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்
"திருமுறைநெறிச் செல்வர்"
திருமதி. சரோஜினிதேவி சிவஞானம் MA
(சைவசித்தாந்தம்) முதுகலைமாணி
கலாபூஷணம், இந்துதர்மாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L
294.5

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | திருவாசகத்தில் சிவபுராணம் |
| நூலின் வகை | :- | சமய இலக்கியம் |
| நூலாசிரியர் | :- | திருமதி. சரோஜினிதேவி சிவஞானம் |
| வெளியீடு | :- | நூல் ஆசிரியர் |
| பதிப்புரிமை | :- | திருமதி. சரோஜினிதேவி சிவஞானம் |
| காலம் | :- | 2018 |
| பக்கம் | :- | 206 |
| பிரதிகள் | :- | 1000 |
| தாளின் வகை | :- | 70 GSM |
| அச்சிட்டோர் | :- | ஏ.ஆர். டிரேடர்ஸ்<br>திருஞானசம்பந்தர் வீதி, திருமலை<br>0776566173 |
| விலை | :- | 300/= |
| ISBN | :- | 978-955-42918-0-0 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 1 - நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! | - 33 |
| 2 - இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க. | - 36 |
| 3 - கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க. | - 38 |
| 4 - ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க. | - 39 |
| 5 - ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க. | - 40 |
| 6 - வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க. | - 42 |
| 7 - பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க. | - 44 |
| 8 - புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க. | - 45 |
| 9 - கரம்குவிவார்உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க. | - 47 |
| 10 - சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க. | - 48 |
| 11 - ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி | - 50 |
| 12 - தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி | - 51 |
| 13 - நேயத்தே நின்ற நிமலன்அடி போற்றி | - 52 |
| 14 - மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி | - 54 |
| 15 - சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி! | - 55 |
| 16 - ஆராத இன்பம் அருளும் மலை போற்றி | - 57 |
| 17 - சிவன் அவன் என் சிந்தனையுள் நின்ற அதனால் | - 59 |
| 18 - அவன் அருளாலே அவன் தாள் வணங்கி | - 61 |
| 19 - சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை | - 63 |
| 20 - முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான் | - 64 |
| 21 - கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி | - 67 |
| 22 - எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி | - 68 |
| 23 - விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்குஒளியாய் | - 70 |
| 24 - எண்இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ் சீர் | - 72 |
| 25 - பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன் | - 74 |
| 26 - புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப் | - 77 |
| 27 - பல்விருகம்ஆகிப் பறவைஆய்ப் பாம்ஆகி | - 78 |
| 28 - கல்ஆய் மனிதர்ஆய் பேய்ஆய் கணங்கள்ஆய் | - 79 |
| 29 - வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் | - 81 |
| 30 - செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் | - 82 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 - எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான் - 84
32 - மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன் - 85
33 - உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற - 88
34 -மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள் - 91
35 - ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே - 92
36 - வெய்யாய்த் தணியாய் இயமானன் ஆம்விமலா - 94
37 - பொய்ஆயின எல்லாம் போய் அகலவந்தருளி - 95
38 - மெய்ஞானம் ஆகிமிளிர்கின்ற மெய்ச்சுடரே - 97
39 - எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே - 99
40 - அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே - 101
41 - ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும் - 103
42 - ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய் - 104
43 - போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில் - 106
44 - நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே - 108
45 - மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே - 110
46 - கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போல - 112
47 - சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று - 113
48 - பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் - 115
49 - நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த - 116
50 - மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை - 118
51 - மறைந்திட மூடிய மாய இருளை - 119
52 - அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி - 121
53 - புறத்தோல் போர்த்(து) எங்கும்புழுஅழுக்கு மூடி - 122
54 - மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை - 123
55 - மலங்க புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய - 125
56 - விலங்கு மனத்தால் விமலா! உனக்குக் - 127
57 - கலந்த அன்பு ஆகிக் கசிந்து உள் உருகும் - 128
58 - நலம்தான் இல்லாத சிறியேற்கு நல்கி - 130
59 - நிலந்தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காஅட்டி - 132
60 - நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்கு - 134
61 - தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே - 136
62 - மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே - 137
63 - தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரனே - 138



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64 - பாசம் ஆம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே - 140
65 - நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெட - 141
66 - பேராது நின்ற பெரும் கருணைப் பேர் ஆறே - 143
67 - ஆரா அமுதே அளவு இல்லாப் பெம்மானே - 145
68 - ஓராதார் உள்ளத்து ஒளிர்க்கும் ஒளியானே - 146
69 - நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே - 147
70 - இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே - 149
71 - அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய் - 150
72 - சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே - 151
73 - ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே - 153
74 - ஈத்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே - 154
75 - கூர்த்த மெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின் - 156
76 - நோக்கரிய நோக்கே நுணுக்அரிய நுண்ணுணர்வே - 158
77 - போக்கும் வரவும் புணர்வும் இல்லாப் புண்ணியனே - 160
78 - காக்கும் எம்காவலனே காண்பரிய பேர் ஒளியே - 161
79 - ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற -163
80 - தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய் - 165
81 - மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம் - 166
82 - தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள் - 168
83 - ஊற்று ஆன உண் ஆர் அமுதே உடையானே - 170
84 - வேற்றுவிகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப - 171
85 - ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்று என்று - 173
86 - போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார் - 174
87 - மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே. - 177
88 - கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே - 178
89 - நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே. - 180
90 - தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே. - 182
91 - அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று - 184
92 - சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ். - 186
93 - சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார். - 188
94 - செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ் - 189
95 - பல்லோரும் ஏத்தப் பணிந்து - 191



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"வேதாகமமாமணி"
சிவஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்கள்
சமாதான நீதவான்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
(பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்)
திருக்கோணமலை
தொ.பே. 026 - 2222760
026 - 2224680
websit: www.trincopathirakali.com



"VETHAKAMAMAMANI"
**Siva sri.S.Ravichchandira kurukkal**
JUSTICE OF THE PEACE (J.P)
SRI PATHIRAKALIAMBAL THEVASTHANAM
(Chief Incumbent & Chief Priest)
Trincomalee

8/11/2018



# ஆசியுரை

**வேதாகமமாமணி**

**பிரமஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்**

**ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாவும்**
**பிரதமகுருவும் திருகோணமலை**

சைவசமய குரவர்களில் முதன்மையானவரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் அக்கரையிலேயே நின்று பாடப்பட்ட தலம் தான் திருக்கோணேசுவரம் மாதுமையம்பாள் உடனுறையும் கோணேசப்பெருமானும் எம்பெருமாட்டி ஸ்ரீ பத்திரகாளி அம்பாளும் அருளாட்சி புரியும் திருக்கோணமலையின் கண்ணே என்றும் அருள் ஓங்கி விளங்குவதை நாம் கண்முன்னேயே காண்கின்றோம். ஈழநாடு "சிவபூமி" என்று திருமூலநாயனாரால்! புனிதம் மிக்க தொன்றாக அழைக்கப்பட்டது. இதன் கண் தெட்சணகைலாயம் என்றழைக்கப்படும் திருக்கோணமலையிலே அடிக்கொரு சிவலிங்கம் இருப்பதாக ஆராட்சியாளர் கூறிவைத்துள்ளார்கள்.

இந்த சிவபூமியை வாழ்விடமாகக் கொண்ட திருமதி. சரோஜினிதேவி, சிவஞானம் திருவருளால் தூண்டப் பெற்று திருவருளின் துணையோடு "திருவாசகத்தில் சிவபுராணம்" என்ற நுண்பொருள் நூலினை ஆராய்ந்து ஒரு ஆய்வு நூலாகத்தந்துள்ளார். இது அவரின் நான்காவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நான்காவது நூலிற்கும் ஆசிவழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகம் திருமுறைகள் பன்னிரண்டில் எட்டாம் திருமுறையாக வைத்து எண்ணப்படுவது "மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து விரையார் கழலை அடையச்செய்வது திருவாசகம்" திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது கற்றுணர்ந்து உருகி உருகி நெகிழ்ந்தவர்கள் கூறிவைத்த வாசகம் ஆகும்.

அதிலே அதாவது "திருவாசகத்தில் சிவபுராணம்" என்பது ஞான அதிர்வுக்குரிய ஒலி நுட்பத்தைக் கொண்டது. ஞானம் பயிலும் மாணவர்கட்கு திருவாசகத்தில் சிவபுராணம் என்பது சிறந்ததொரு உரைநூலாக உரைவிளக்கங்களாக அமைகின்றது. அதன் ஒலி அதிர்வே அனைத்து உள்ளங்களுக்கும் பக்தியை வளர்க்கும். இவ் உரைநூலானது சிறுவர்கட்கும் பாமரமக்களுக்கும் விளங்கும் விதத்தில் நூலாக எளிய உரைநடையில் நன்கு ஆய்வு செய்து இவ் அம்மையார் அவர்கள் நூலாக்கி உள்ளார்கள். இது சைவநன்மக்கள் யாவருக்கும் பயன்படவேண்டுமென்று எண்ணி சகல கருமங்களையும் முன்னெடுத்து நடாத்தும் பத்திரகாளி அம்பாள் பாதாரவிந்தங்களைப் பணிந்து ஏற்றி ஆசீர்வதிக்கின்றேன். மேலும் அவரது உள்ளத்தில் எழுகின்ற உணர்வுகளுக்கெல்லாம் அம்பாள் என்றென்றும் துணைபுரிய வேண்டுகின்றேன்.

**- சுபம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# ஆசியுரை

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி**
**ப.கோபாலகிருஷ்ண ஐயர்**
**வாழ்நாள் பேராசிரியர்**
**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்**

சைவ சமயத்திற்குப் பெருமை சேர்க்கும் அரிய நூல் மாணிக்கவாசகரின் திருவாசகமாகும். இது எட்டாம் திருமுறையாகப் போற்றப்படுவது மக்கள் தம் பிறவிப் பிணியிலிருந்து உயர்வு பெறுவதற்கு உரிய சீரிய சிந்தனைகளைக் கூறுவது பெருவாசகமாகிய திருவாசகம். இவ்வரிய நூலை எமக்கு அளித்தவராகிய மாணிக்கவாசகப் பெருந்தகை அவரது தூய உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட அனுபூதித் திறன் வாய்ந்த செஞ்சொற்களாகிய மணிகளை அன்பென்னும் அரிய நூலில் கோர்த்து இறைவனுக்குச் சூட்டி இன்பங்கண்டவர். அதன் பொருள் எம்பெருமானகிய சிவனே என உணர்ந்து அவனது திருவடிகளில் நீங்காப் பேரின்பம் பெற்றவர். தேனினும் இனிய அவரது திருப்பாடல்கள் படிப்போரினதும் கேட்போரினதும் உள்ளத்தை உருக்குவன. "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற பெருமை இதற்குண்டு. மாணிக்கவாசகர் சுவை மிகுந்தப் பாடல்களை ஐம்பத்தொரு பதிகங்களால் அமைத்துள்ளார். அவற்றின் முதலாவது பதிகமே சிவபுராணமாகும். திருவாசகம் எமக்கு அறிவுறுத்தும் வழிபாட்டு நெறிகள் சிறப்பாக இரண்டாகும். முதலாவது நாதனின் திருவடிகளைப் போற்றுதல், இரண்டாவது நாதனின் தாள் போற்றுதல். இவற்றைத் தொடக்கமாகக் கொண்ட சிறப்பு சிவபுராணத்திற்குள்ளது.

சிவபுராணம் என்பது சிவனது அநாதி முறைமையான பழைமை என்று பொருள்படும். சிவபுராணம் குருவருள் விளக்கத்தை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. பக்குவமான ஆன்மாக்களை இறைவன் குருவடிவில் வந்து ஆட்கொண்டருள்வான் என்பது சைவசித்தாந்தம் கூறும் கோட்பாடாகும். திருவாசகத்தின் சிறப்பு யாதெனில் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப்பொருளும் திருவைந்தெழுத்தின் விளக்கமாகும். அதற்கமைவாக சிவபுராணம் ''நமச்சிவாய வாழ்க'' எனத் தொடங்குவது போற்றுவதற்குரியது. திருவாசகத்தின் முழுப்பொருளும் திருவைந்தெழுத்தின் விளக்கமும் திருவடிபேறே. திருவாசகத்தில் சிவபுராணத்தின் பயன் உன்னதமானது.

**"சொல்லிய பாட்டின்**
**பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தின்**
**உள்ளார் சிவனடிக்கீழ்**
**பல்லோரு மேத்தப்பணிந்து"**

கொக்குவில் பொது நூலகம்

இத்தகைய சிறப்பு மிக்க திருவாசகத்தில் இடம் பெறும் சிவபுராணத்தின் உட்பொருளை பலரும் நன்கு தெளிந்து உணர்ந்து நயப்பதற்கு ஏதுவாக திருக்கோணமலையைச் சேர்ந்த திருமதி. சரோஜினிதேவி சிவஞானம் திருவாசகத்தில் சிவபுராணம் என்ற இச்சிறு நூலை எழுதி வெளியிடவிருப்பது அறிந்து மிகமகிழ்ந்து அவரைப் பாராட்டுகின்றோம். இளந்தலை முறையினரைச் சிவபுராணப் பாராயணத்திற்கு ஆற்றுப்படுத்தும் வகையில் திருமதி சரோஜினிதேவி சிவஞானம் இந்நூலை ஆக்கியுள்ளார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உயர்பட்டப் படிப்புப் பீடத்தினால் நடாத்தப்பட்ட சைவசித்தாந்த முதுகலைமானிப் பயிற்சி நெறியில் பயின்ற எனது மாணவியருள் ஒருவர் என்பதுடன் சிறந்த குருபக்தி மிக்கவர்.

சைவத்துறையில் மிகுந்த அறிவுடையவர். பாடல் பெற்றத் தலமாகிய திருக்கோணேஸ்வரத் திருத்தலம் அமைந்துள்ள திருக்கோணமலையை தமதிடமாகக் கொண்ட நிலையில் சிவபுராண விளக்க நூல் எழுதும் பாக்கியமும் திருவருளும் அவருக்கு கிட்டியுள்ளது. திருவாசகத்தில் உள்ள சிவபுராணம் படிக்குந் தோறும் புதுபுது சிந்தனைகளை வெளிக் கொண்டரும் சிறப்பு வாய்ந்தது. எம்பெருமானின் தெய்வீகப் பெருமைகளையும் அவன்மீது நாம் செலுத்தும் பக்தியின் சிறப்பையும் பயனையும் நன்கு எடுத்துக் கூறும் உன்னத பகுதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அவனருளாலே அவன்தாள் வணங்கி**
**சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை**
**முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்"**

என்ற வரிகள் சைவசித்தாந்த விழுமியங்களைக் கொண்டவை இத்தகைய சிறப்பு வாய்ந்த சிவபுராணத்தை யாவரும் படித்து பயன் பெற வேண்டும், என்ற உயரிய நோக்கில் திருமதி சரோஜினிதேவி சிவஞானம் இவ்விளக்க நூலை உருவாக்கியுள்ளார். அவரது இந்நூலை சைவ உலகம் உவந்து வரவேற்கும் என்பதில் ஐயம் இல்லை. திருமதி சரோஜினிதேவி சிவஞானம் இவ்வரிய நூலின் வழி எம் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாகியுள்ளார். அவர் இது போன்ற சிறந்த சமய நூல்களை எதிர் காலத்தில் சைவ உலகிற்கு வழங்கி அரிய பணியாற்றும் வகையில் சிறந்த தேக நலத்துடன் சகல வளங்களும் பெற்று இனிதே வாழ எம் பெருமான் தில்லைக் கூத்தனின் திருவருள் என்றென்றும் துணை நிற்பதாகுக என எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். நூல் சகல நிலைகளிலும் சிறப்பு பெற்று வெளியீட்டு விழா வெற்றிபெற எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## நல்வாழ்த்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com

T.P No : 021 - 3213151

திகதி:..............................

Fax:- 021 2241909

தலைவர்.
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511




உ

**சிவமயம்**

# செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனையுரை

மணிவாசகப் பெருமான் படைத்த திருவாசகம் சைவத்தமிழர்களின் உன்னத சொத்து என்றால் அது மிகையாகாது. இன்று உலகில் இருபத்தொரு மொழிகளில் திருவாசகம் மொழிபெயர்க்கப் பட்டு உலகலாவிய ரீதியில் ஆன்மீக தத்துவவியலாளர்கள் திருவாசகம் பற்றிப் பெருமையாகப் பேசுகிறார்கள். சைவ மக்கள் இது குறித்துப் பெருமைப்பட வேண்டும். திருவாசகம் முழுவதும் கேள்வி ஞானத்திலேயே எம் முன்னோர் பலர் மனனம் செய்துபார்த்தனர். நல்லை நகர் நாவலர் பெருமான் சுதேசிகளுக்காக தான் கட்டிய பாடசாலையில் நேர அட்டவணை தயாரிக்கும் போது வெள்ளி தோறும் சிவபுராணம் பாடும் மரபை உருவாக்கி வழக்கப்படுத்தினார். இம்மரபு இன்றுவரை இலங்கையிலுள்ள சைவப்பாடசாலைகளில் வெள்ளிதோறும் சிவபுராணம் படிக்கும் மரபு தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகத்துக்கு இதுவரை பலர் உரை எழுதியுள்ளார்கள். இலங்கையிலும் காரைநகர் அருளம்பலவாணர், மாவிட்டபுரம் நவநீதகிருஷ்ணபாரதியார் எழுதிய உரைகள் மிகவும் பிரசித்தமானவை திருக்கோணமலையில் வசிக்கும் சைவ ஆர்வலர் சைவப் புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் திருமதி சறோஜினிதேவி சிவஞானம் M.A. அவர்கள் பாடசாலைச் சிறார்கள் பக்தர்களின் நன்மை கருதி சிவபுராணத்துக்கு எளிமையான உரையை எழுதி நூலாக்குவது அறிந்து வாழ்த்துகின்றேன். அவரது முயற்சி எம் சமூகத்துக்குப் பயன் தரப் பிரார்த்திக்கிறேன்.

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்பவர்கள் சிவபுரத்தை அடைவர் என்பது மணிவாசகர் வாக்கு. எனவே பொருள் விளங்கிக் கற்பதுவே உண்மைப் பலன். இந் நூலாசிரியர் சிறந்த உரையினைப் படைத்துள்ளார் அன்னாரின் முயற்சி பாராட்டுக்குரியது. இந்நூலை அனைவரும் நன்கு கற்றுப் பிறருக்கும் பயனாகவென பிரார்த்தித்து அமைகிறேன்.

**இமைப் பொழுதும் என் நெஞ்சில்**
**நீங்காதான் தாள் வாழ்க**

**கலாநிதி ஆறு திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை**
**தலைவர்**
**சிவபூமிஅறக்கட்டளை**
**இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

அறுபத்து நான்காவது வயதிற் சைவப் புலவர் 'சைவ சித்தாந்த பண்டிதர் பட்டம் பெற்று, அறுபத்தொன்பதாவது வயதிற் சைவசித்தாந்த முதுகலைமாணிப் பட்டம் பெற்று 2014 இல் இலக்கியத் துறைக்கான கலாபூஷணம் விருது பெற்று, "அன்னைக்கு என் உள்ளக்கமலம்," "பிள்ளைக் குணம்" "வெருகலம் பதியும் அருகும் எம் விதியும்" ஆகிய நான்கு நூல்களை உருவாக்கி எமக்குத்தந்த திருமதி. சரோஜினிதேவி சிவஞானம் அம்மையார் அவர்கள் ஒரு தசாப்த இடைவெளியில் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து எல்லோரும் சொல்லும் வகையிற் திருவாசகத்தில் சிவபுராணம் என்ற முதலாவது பாயிரத்திலுள்ள தொண்ணுற்றைந்து வரிகளுக்கும் இலகு பொருள்தந்து ஞானஒளி தரவல்ல அகவல் யாப்பில் அமைந்த பாயிரங்களை அனைவரும் உணரத்தக்க வகையில் ஆக்கிய இந்நூல் முயற்சி சிறப்புற்று அமைய எல்லாம்வல்ல எம்பெருமானை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

**திரு.அ. உமாமகேஸ்வரன்**
**பணிப்பாளர்**
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

அன்பே சிவம். அன்பினால் இறைவன்பால் இணைத்துக் கொள்ளும் வாய்ப்பு பலருக்கு இலகுவில் கிடைத்துவிடுவதில்லை. ஆனால் வயது முதிர்ச்சியையும் பொருட்படுத்தாது திருமதி சரோஜினிதேவி சிவஞானம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தில் கடந்த வருடம் வைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி பட்டத்தை சிறப்பாக நிறைவு செய்தது மட்டுமல்லாது அதில் கற்றதை செயலாக்கி இவ்வாறான "திருவாசகத்தில் சிவபுராணம்" என்னும் நூலை எழுதி அதனை வெளியிட முன்வந்தமை கற்றதனை நிறைவு செய்கின்ற கைங்கரியமாகவும் இறைபணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பதனை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருக்கின்றது. திருக்கோணமலையிலிருந்து கிழமைதோறும் தவறாமல் வருகை தந்து இக்கற்கை நெறியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி சிறப்பாக கற்றுத்தேறியதுடன் அதனுடன் தாம் கற்ற கற்கையை தனக்கென மட்டும் மட்டுப்படுத்திவிடாது மக்களுக்கு பயன்தரத்தக்கதாக இவ்வாறான நூலை எழுதி அச்சேற்றி அதனை பிரசுரிக்கின்ற தன்மையை அனைவரும் மனமகிழ்ந்து வாழ்த்துகின்றனர், இவ்வாறான சிவபுராணத்தின் மகிமைபற்றி அதிலும் திருவாசகத்தில் சிவபுராணம் என்னும் கருவை மையப்படுத்தி ஆய்வு செய்து அதனை நூலாக மாற்றியிருக்கும் தன்மை பாராட்டைப் பெறுகின்றது. இதன் மூலம் தாம் கற்ற கற்கைநெறியின் முழுப்பயன்பாட்டை தமது செயலால் வெளிப்படுத்தியிருப்பதனை அறியும் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடம் மனதார வாழ்த்துவதுடன் பெருமைப்பட்டும் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயத்தின்பால் உள்ளீர்க்கப்பட்ட அடியார்கள் சமயத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற நல்ல செய்திகளை அதன் சாராம்சங்களை இன்னும் சமயதத்துவங்களை, சமயம் பார்த்து மக்களுக்கு வெளிப்படுத்துவதும் அவசியமானதொன்றாகும். அவ்வாறானதொன்றை தமது கடமையாக இன்னும் இறைபணியாக மனதிலிருத்தி திருமதி.சரோஜினிதேவி சிவஞானம் அவர்கள் எழுத்துருவாக்கி நூலாக அனைவரதும் கைகளில் தவழவிட எடுத்த முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் சைவசமய அடியார்கள் அனைவரும் பாராட்டுவதுடன் இன்னும் அவரது முயற்சிகளுக்கு இறைவன் துணைநிற்க வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம். முயற்சி திருவினையாக்கும் என்பார்கள். அதனை அம்மையார் நிறைவேற்றிக் காட்டிய பாங்கினை அனைவரும் ஒரு பாடமாகக் கொண்டு இவ்வாறான நூல்கள் இன்னும் வெளிவர வேண்டுமெனவும் அதற்கான ஊக்கியாக இந்நூலாக்கத்தை குறிப்பிடலாம் எனவும் நாம் திடமாக நம்புகின்றோம்.

சக்தியின் பெயரை நாமமாக்கி அதற்கொரு அர்த்தத்தையும் செயலாக காட்டிய திருமதி சரோஜினிதேவி சிவஞானம் அவர்களை மேலும் மேலும் மனதார வாழ்த்துவதுடன் அவர்கள் சுகதேகியாக நீண்டநாள் அவரது குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து இந்த பிறவிப்பயனை முழுமையாக அனுபவிக்கவேண்டும் என எல்வாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**பேராசிரியர் கு. மிகுந்தன்**
**பீடாதிபதி**
**உயர்பட்டப்படிப்புகள் பீடம்**
**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

திருக்கோணமலையச் சேர்ந்த அன்னை திருமதி சரோஜினிதேவி சிவஞானம் M.A. அவர்கள் எழுதிய "திருவாசகத்தில் சிவபுராணம்" என்னும் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகில் உள்ள எந்நாட்டவரும் இறைவன் என்று வணங்குபவரையே தென்னாட்டவர் சிவன் என்று வழிபடுகின்றனர். இத்தகைய சிவத்துடன் தொடர்புடையது சைவநெறியாகும். சைவநெறியை வளர்த்தெடுக்கும் ஞானக்கருவூலங்களுள் எட்டாந் திருமுறையாகிய மணிவாசகரின் திருவாசகத்திற்கு தனிச்சிறப்புண்டு. இத்திருவாசகத்திலும் "சிவபுராணம்" ஓர் ஆன்மீக அருளியல் பாடலாக விளங்குகின்றது. சிவபுராணத்தில் வரும் மணிவாசகர் கூறும் சிவானுபவம் சொல்லுக்கு அப்பாற்பட்டது. தமிழில் உள்ள பக்திப் பனுவல் உரைக்கும் பலவகைப்பட்ட பக்தி அனுபவங்கள் யாவற்றையும் ஒருங்கே கண்டு இன்புறுவதற்கு உரிய ஓர் அருளியல் பகுதியாக திருவாசகத்தில் சிவபுராணம் திகழ்கிறது.

பெருமதிப்பிற்குரிய எமது மாணவியாகிய அன்னை சரோஜினிதேவி சிவஞானம் என்பவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டம் படிப்புகள் பீடத்தில் சைவசித்தாந்த முதுகலைமாணியில் சிறப்புப்பட்டம் பெற்றவர். சிறந்த ஓர் ஆன்மீகச் சொற்பொழிவாளர். சைவசமய சமூகப் பணிகளில் முன்னின்று உழைப்பவர். எளிமையான தோற்றமும் முகமலர்ச்சியும் இனிய பேச்சும் கொண்ட அன்னையாக இந்நூலாசிரியர் விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாசிரியர் ஓர் அனுபூதியாளர். அனுபூதியில் நின்று சிவபுராணத்தை நுண்ணி ஆராய்ந்து இவ் ஆன்மீக நூலை சிறப்பாக வெளிக் கொணர்ந்துள்ளார். இவரின் இந்நூல் சிவானுபவத்தை தரும் என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற பயனள்ள பல நூல்களை இவர் எழுதி வெளியிட வேண்டுமென்று நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பாத கமலங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**சித்தாந்தரத்தினம்**
**பேராசியர் டாக்டர் மா. வேதநாதன்**
**தலைவர், இந்துநாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்ற சிவபெருமானின் பாதார விந்தங்களை பணிந்து திருமதி சரோஜினிதேவி சிவஞானம் அவர்கள் சமய வாழ்வியலில் தன்னை இணைத்துக்கொண்டு வாழ்ந்து வரும் பெருந்தகையாவார். இவர் தனது வாழ்க்கையில் பெற்ற சமய அனுபவங்களை முன்மாதிரியாக கொண்டு வாழ்ந்து வருகின்றார் என்பதனையிட்டு பெருமை கொள்ள வேண்டும்.

அம்மணி "திருவாசகத்தேன்" என்னும் விடயத்தை உள்ளடக்கிய வகையில் ஒரு பேச்சுப் பிரதியை ஆக்கியுள்ளார். அவரிடம் காணப்பட்ட சமய ஈடுபாடு காரணமாக சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், கலாபூசணம், திருமுறைநெறிசெல்வி ஆகிய பட்டங்களைப்பெற்று, முதுமைக்காலத்தில் பெற்றுக்கொண்ட தனது சமய தமிழ் அறிவை தமிழ் உலகிற்கு வழங்குவதில் மிக்க ஆர்வம் கொண்டவர். திருக்கோணமலை மாவட்டத்தில் சைவப்புலவர் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சங்கத்தின் பிரச்சாரச் செயலாளராக இருந்து செயற்பாடுகளை அதன் மூலம் சைவ சமய வளர்ச்சியினை ஏற்படுத்துவதில் அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கது.

இவர் இந்து நாகரீகத்துறையில் முதுகலைமாணி பட்டத்தை பெற்றுள்ளார். வயது முதிர்ந்த காலத்திலும் கல்விக்கு வயது தடை இல்லை என்ற வகையில் முன் உதாரணமாக பட்ட மேற்படிப்பான முதுகலைமாணீப்படிப்பை பூர்த்தி செய்துள்ளார்.

திருவாசகம் என்பது பலரது ஆய்வுக்குட்பட்டதாக இருந்த போதிலும் திருவாசகத்தில் சிவபுராணம் என்னும் விடயத்தில் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிகளுக்கும் விளக்கத்தை இலகு தமிழிலில் வெளிப்படுத்தியுள்ளார். இதன் மூலம் சிவபுராணத்தின் செழுமையினையும் கருத்துக்களையும் பாமரமக்களும் இலகுவாக கற்று பொருள் விளங்கி அதன் பயனை அடைய வேண்டும் என்ற சிந்தனையை அம்மணி மனதில் கொண்டு இந்நூலை ஆக்கியமை போற்றுதற்குரியது.


நவீன உலகின்பால் இலத்திரனியல் சாதனைங்களினதும் விஞ்ஞான வளர்ச்சி எழுச்சி பெற்ற காலத்திலும் மனித வாழ்க்கையில் உண்மை இறைவனது சிறப்புக்கள் உயிர்களின் சிறப்பு, இறப்பு, பிறப்பு, முத்தி ஆகிய விடயங்களை இலகுவாக பலரும் புரிந்துகொண்டு சிவபுராணத்தை கற்க வேண்டுமென்பதில் நூலாசிரியர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் போற்றுதற்குரியது. அம்மணியின் சமயப்பணி தொடர்ந்து இடம்பெற இறைவனை பிராத்திப்பதுடன் நல்ல சுக ஆரோக்கியத்துடன் இருந்து இவ்வாறான நூல்களை எழுத வேண்டுமென்று பிராத்திப்பதுடன் திருக்கோணசப்பெருமானின் அருளும் ஆசியும் கிடைக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. செல்வரெட்ணம் பத்மசீலன்**
**அதிபர்**
**தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)**
**திருக்கோணமலை**

கொக்குவில் பொது நூலகம்
சனசமூக நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

"திருவாசகம்" சைவத்திருமுறையாம் தெய்வத்திருமுறை என்பது ஆன்றோர் கருத்து. இதுசைவத் திருமுறைகளுள் தலைமணியாக விளங்குவது மாசின் மணி வார்த்தைகளால் ஆக்கம் பெற்றுள்ளது. இதனை ஞானக் கருவூலம் என்றும் சொல்லலாம். அருமருந்தான இந்நூல் திருமுறைகளுள் எட்டாந் திருமுறையாக அமைந்து விளங்குகின்றது. இந்நூலைப் படிப்போர் தமை மறந்து ஆனந்தக் களிப்படைவர். அளப்பரிய பொருளுடைய இந்நூலை ஆரா அன்புடன், உள்ளம் உருகி உள்கலந்து உணர்ந்து ஓதுவோர் உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தத்தேன் அமுதம் உண்டு மகிழ்வர்.

திருவாசகம் உள்ளத்திலே பதிந்து நிறைந்த அன்பிலே ஊறி, வெளிப்போந்து அமுதவாக்கியங்களால் ஆக்கப்பெற்றிருப்பதால், இன்றைக்கும் இதனைப் படிப்போரை, பாராயணஞ் செய்வோரை மனங்கரைத்து மலங்கெடுத்து உயர்நிலையடையச் செய்யும் தன்மைவாய்ந்து விளங்குகின்றது.

பண்பட்ட உள்ளம் உடைய எவரும் இத்தெய்வீகப் பாடல்களின் பொருள் உணர்ந்து ஓதுவார்களாயின் தம் உயிர்க்கு உறுதுணையாந்தன்மையை வாழ்வில் பெற்றுய்வார்கள் என்பதில் ஐயமில்லை.

வாசகத்தால் கருதப்படும் பொருள் வாச்சியம் என்று சொல்லப் பெறும். இத்திருவாசகத்திற்கு வாச்சியம் ஆவார் சிவபெருமானே என்பது தில்லைவாழ் அந்தணர் அத்திருமுறைக்குப் பொருள் கேட்டபோது இதற்குப் பொருளாவார் இவரே! என்று மணிவாசக சுவாமிகள் நடராஜப் பெருமானைக் காட்டியமையை அனைவரும் உணர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை, **"பெருந்துறைபுகுந்து பேரின்ப வெள்ள**
**மூழ்கிய புனிதன் மொழிந்தவாசகமே**
**வாசகம் அதற்கு வாச்சியம்**
**தூசகல் அல்குல் வேய்த்தோளிடத்தவனே"**

என்றுதுதித்துள்ளார் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். திருவாசகத் திருமுறையில் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக 51 பகுதிகள் உள மொத்தப் பாடல்கள் 658 ஆகும்.

திருவாசகத்தின் செம்பொருட்துணிவாக இறைவனே என உணர்த்தப்பட்டாலும் திருவாசகப்பாடல்களின் சொற்பொருள்களை உள்ளம் ஓர்ந்துணர்ந்து கொண்டால் மணிவாசகர் பெற்ற ஆனந்த அநுபவ நிலையின் ஒரு பகுதியை யாவது நாமும் உணர்ந்து அநுபவம் பெற இயலும். மணிவாசகப்பெருமானே தாம் பாடிய சிவபுராணத்தில்

**"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்**
**பல்லோரும் ஏத்தப்பணிந்து"**

என்று கூறியதைத் தலைமேற் கொண்டு, அறிஞர்பலர் தம் நுண்மாண் நுழைபுல அறிவினாலும் அநுபவத்தினாலும் திருவாசகப்பாடல்களுக்கு முழுமையாகவும், பகுதிபகுதியாகவும் செவ்விய உரைகண்டு தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் நற்பணி ஆற்றி உள்ளனர்.

முன்னோர்களாய மூதறிஞர்கள் கண்ட உரைகளை உளங்கொண்டு, தம் அறிவாற்றலாலும் அநுபவ முதிர்ச்சியினாலும் தான் பெற்ற திருவாசகத் தேனமுதத் திவ்விய இன்பானுபவத்தை. ஆனந்தமான மனோலயத்தை ஏனையோரும் பெற்றுத்திழைக்க வேண்டுமென பேரா இயற்கைப் பெருங்காதலால், ஆசையால் சைவப்புலவர், சித்தாந்தபண்டிதர், கலாபூஷணம் திருமதி சரோஜினிதேவி சிவஞானம் அவர்கள் மாதுமையாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமான் திருவருள் துணை கொண்டு திருவாசகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிவபுராணப் பகுதிக்குப் பன்னாட்பயின்று அனுபவித்து, ஆழ்ந்தகன்ற ஆய்வு நிலைத்தகைய விளக்கங்களை நூல்வடிவில் ஆக்கித்தந்துள்ளார்.

அன்னார் முன்னரும் சைவ உலகிற்குப் பல நூல்களை யாத்து வழங்கியமையை யாம் அனைவரும் அறிவோம். முதிர்ந்தவயதிலும்

**"என்கடன்பணிசெய்து கிடப்பதே"**
**"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"**
**"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"**

என்ற இலட்சியத்தோடு, பெருங்குடும்பக்கிளை செழிப்புடன் வாழ்வாங்குவாழ வழிகாட்டிக் கொண்டிருக்கும் அம்மையாரின் பணியை மனதாரப் பாராட்டி அவரின் இத்தகைய நற்பணிகள் மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம். மேலும்யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராக இருந்து சைவசித்தாந்தம் முதுகலைமாணி கற்பித்த காலத்தில் இவர் எனதுமாணவியாய் இருந்து கற்றுத் தேறியவர் என்பதை மனமகிழ்ச்சியுடன் கூறி மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**"திருவாசகமிங்கொருகால் ஓதின்**
**கருங்கல் மனமுங்கரைந்துருகக் கண்கள்**
**தொடுமணற்கேணியிற் சுரந்துநீர்பாய்**
**மெய்ம்மயிர் பொடிப்பு விதிர்விதிப்பெய்தி**
**அன்பராகு நரன்றி**
**மன்பதையுலகில் மற்றையரிலரே"**

**- ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள் -**

**சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர்**
**கலைஞானச்சுடர்**
**திரு.மு.திருஞானசம்பந்தபிள்ளை**
**தலைவர்.அகில இலங்கைச்சைவப்புலவர் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகரைப்பணிந்து தேவார திருப்புகழில் புகழ்பூத்து அருள் பூந்துக் கொண்டிருக்கும் மாதுமை அம்பாள் சமேத கோணேஸ்வரப்பெருமானின் தாள் பணிந்து என்னை அடிமை கொண்டு என்னுள் இருந்து இயக்கிக் கொண்டிருக்கும் பத்திரகாளித் தாயாரை நினைத்துருகி இந்நூல் முகம் எழுதுவதற்கு முனைகின்றேன். வாருங்கள் இந்நூலுக்குள் நுழைவோம் தெய்வத்திருநகராம் சிவபூமியில் சிவபூமியாம் திருக்கோணமலையில் அருளாட்சிபுரியும் கோணேசுவரப் பெருமானின் பத்திரகாளித்தாயாரின் திருஅருளே இந்நூலாகும்.

சைவம் சிவசம்பந்தமுடையது. சைவசமயத்தின் மேன்மையை சித்தாந்தசைவம் என்று திருமூலர் அன்றே மொழிந்தார். இலங்கை சிவபூமி என்று அவராலேயே போற்றப்பட்டது. சிவத்தை ஒளிபெறச் செய்யும் நமக்குரிய திருநூல்கள் வடமொழியில் வேதசிவாகமங்களும் தமிழ் மொழியில் தெய்வத்திருமுறைகளும் அவற்றின் சாரமாக அமைந்தெழுந்த நூல்களான மெய்கண்ட சாத்திரங்களுமாகும். பன்னிரு திருமுறைகளும், பதின்நான்கு மெய்கண்ட சாத்திரங்களும் சிவசம்பந்தம் நிரம்பிவழியும் அருளாளர்களால் அருளப்பட்டவையாகும். இவை சைவசமயத்தின் இரு கண்களாக விளங்குபவை என்பது வெளிப்படையான உண்மையாகும். இவை மெய்பொருள் உண்மையைத் துலங்கவைக்கும். இவற்றுள் எட்டாம் திருமுறை மிகவும் சிறப்புடைதாகும்.

எட்டாம் திருமுறை ஆன்றோரால் "தெய்வத்திருமுறை" என்று போற்றப்படுகிறது. மணிவாசகமாகத்தந்த மாணிக்கவாசக சுவாமிகளால் (1) திருவாசகம், (2) திருக்கோவையாரும் பாடப்பட்டது. திருவாசகமணிகள் 51 திருப்பதிகங்களும், 658 பாடல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவை. எட்டாம் திருமுறை முழுவதையும் சுவாமிகள் பாடப்பாட தில்லை அம்பலவன்! ஆம் கூத்தப்பெருமான் கைபடவே எழுதப்பட்டது. என்று வரலாறு உரைக்கின்றது. ஆகையால்திருவாசகம் முழுவதும் புனிதமுடையது, புண்ணியமுடையது அதி உன்னதமானது என்பதை சைவஉலகம் நன்கு உணரவேண்டும். எட்டாதது ஒன்றை எட்டவைப்பது குருவருளும் திருவருளும் என்பதை எட்டாம் திருமுறை நன்கு விளக்குகின்றது. இது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எமக்கு கற்றுக் களிப்பதற்கு உரியதாக எம் கண்முன்னே விளங்குகின்றது. இதனை சிவபுராணம் முழுவதிலும் நன்கு விளக்கியுள்ளார்கள் மாணிக்கவாசக சுவாமிகள். இதனால் மாணிக்கவாசக சுவாமிகள் இவ்உலகில் சிவம் என்றே போற்றப்பட்டவர்.

திருவாசகத்திலே முதல் நான்கு பகுதிகளும் பாயிரமாகும். அவற்றுள் சிவபுராணம் முதலாவதாக அமைந்துள்ளது இது கலிவெண்பா ஆகும். அகவல் யாப்பிலே அமைந்ததும் ஆகும். ஔவையார் தந்த விநாயகர் அகவலும் அகவல் யாப்பு ஆகும். அகவல் என்றால் அகவுதல் என்றும் மனம் ஒடுங்கிய நிலையில் ஓதுதல் என்றும் பொருள்படும். அகவல் யாப்பு என்றமரபு இறைவனைப் போற்றித் துதிப்பதற்கும் தெய்வத்தின் வல்லமையை வரிசையோடு கூறிவணங்குவதற்கும் புகழந்து பாடுவதற்கும் அமைந்ததாகும். அகவல் யாப்பானது ஞான அதிர்வைத் தருவது ஞானம் பயிலும் மாணவர்களுக்கு இது சிறந்த அனுபவத்தைக் கொடுக்கின்றது. மெய்ப்பொருளையும் உணரச் செய்கின்றது.

திருவாசகத்தில் சிவபுராணம் 95 வரிகளையும், சைவப் பாடசாலைகளில் வெள்ளிக்கிழமைகள் தோறும், பிள்ளைகள் பாடவேண்டும் மனனம் செய்ய வேண்டும், என்று நேர சூசி வகுத்தவர் நாவலர் பெருமான் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவை அகம் குழைப்பித்து இறையருளுக்கு ஆளாக்கும் இயல்புடையதிருவாசகத்தில், சிவபுராணம் நமச்சிவாயவாஅழ்க நாதன்தாள் வாழ்க என்ற தொடக்கத்தோடு நாதஒலியோடு தொடங்குகின்றது.

**பஞ்சாக்கரப் பரம் பொருளே வாழ்க!**

**ஆன்ம கோடிகளின் தலைவனே தேவரீருடைய திருவடிவாழ்க!**

நாம் பெறுதற்கரிய மானிடப் பிறப்பை அடைந்துள்ளோம்! இச்செய்தி சிவபுராணத்திலே புல்லாகி என்று தொடங்கி, எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் என்ற பகுதிவரை இவ் உலகில் பிறக்கும் ஒவ்வோர் பிறவிவரையும் உணர்த்தப்படுகின்றது. இவற்றை எல்லாம், இச்சிவபுராணத்திலே உணரும்போது நாம் இவ் உலகில் அடைவது சிறுவெளிச்சமேயாம். இச்சிறு வெளிச்சத்திலே தனு, கரன, புவன, போகங்களை யெல்லாம் நாமென்று கருதியே இறுமாந்துபோகின்றோம். அதுவே இவ் உலகமயக்கத்தை எமக்கு உண்டாக்குகின்றது. ஆனால் இறைவனை நாம் உணர்ந்தவுடன் இது பிறப்பு, ஒருமயக்கம் என்பதை உணரச்செய்கின்றது.

மாணிக்கவாசகசுவாமிகள் வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை என்றார் மலங்கபுலனைந்தும் வஞ்சனையைச் செய்ய என்றார். சிவபுராணம் முழுவதும் மாணிக்க வாசக சுவாமிகளின் அனுபவப்பிழிவு ஆகும். ஆன்மா மலவாசனையாலேயே பிறப்பெடுக்கின்றது. இந்தப் பிறப்பு மயக்கம் மலவாசனையாலேயே ஒரு உயிருக்கு உண்டாகின்றது. ஆன்மா தாரகமாகக் கொள்வது "சிவம்"! தாரகமாகக் கொள்ளவேண்டியதும் "சிவமேயாம்" ஆகவே ஆன்மாவானது மலநீக்கம் பெறும் போது அடைவதும் சிவம்!

சிவம் என்பது செம்பொருளையேயாகும். சிவன்போக்கும் வரவும் இல்லாப் புண்ணியன். பல்லோராலும் பணிந்து ஏற்றப்படுபவன். ஒவ்வொரு உயிரின் மேல் உள்ள கருணையினாலுமே தில்லைக்கூத்து இடைவிடாது திகழ்கின்றது. அல்லல் பிறவி அறுப்பவனை, சொல்லற்கரியானை சொல்லி திருவடிக்கீழ் என்றார் சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஆசாரியனுடைய தரிசனமும் தீஷ்சை உபதேசமும் பெறாமல் முத்தி சாதனம் கிட்டுதல் ஒருபோதும் இல்லை யென்றே எமது சமய நூல்கள் கூறுகின்றன. குருவருளும் திருவருளும் சிவபுராணத்திலே படித்தரளங்களாக வரிசையோடு உணர்த்தப்படுகின்றது.

ஆகவே சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் என்ற அடிகளார் பாடிவைத்த அடிகளை எண்ணி எண்ணிப் பார்க்கும் போது என் உள்ளத்தில் ஒரு எழுச்சி உண்டானது. அதாவது ஓதல், ஓதுவித்தல், கேட்டல் கேட்பித்தல், சிந்தித்தல் இவை ஐந்தும் சிவஞான சித்தியார் கூறும் எழில் ஞானபூசையாம். ஆனால் அடிகளார் உணர்வதையே மேலானது என்று உணர்சிபூர்வமாகக் கூறினார். சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து என்றார். ஒரே ஒரு பனுவலைப் பாடினாலும் அதன் பொருள் உணர்தலை தலைமேற் கொள்ளவேண்டும் என்பதே அவரின் திரு உள்ளக்கருத்தாகும். ஆகவே நாம் பொருள் உணர்ந்து பாடுவது சாலச்சிறந்தது என்றே கூறி சிவனடிகீழ்போய் சேரலாம் என்றும் உறுதி கூறியுள்ளார்.

எம்முன்னோர் ஆதியில் திருவாசகத்தைக் கேள்வி ஞானத்தாலேயே மனனம் செய்தனர். இன்று எம்மத்தியில் சமய விழுமியங்கள் அருகிப்போய் சமுதாய விழுமியங்கள் மாற்றமடைந்து கலாச்சாரவிழுமியங்கள் கலப்படமாகி பாரம்பரிய விழுமியங்கள் பாராமுகமாகிப் போகின்றது. பக்தி என்ற சொல் இன்றைய கால கட்டத்தில் மாறி! தான் தோன்றி தனமாக எம்சமுதாயத்தில் எமது சமய நிலையை இன்று பார்க்கும் போது கவலைகளே எழுகின்றது. எனவே சுவாமிகள் கூறிய பொருளுணர்ந்து என்பதை பாடசாலை மாணவர்களும் பாமரமக்களும் பக்தர்களும் பக்திநெறியில் ஆர்வமுள்ளவர்களும் ஆன்மீக வாதிகளும் மாணிக்க வாசகசுவாமிகள் கூறியது போன்று "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்ற திருவார்த்தைக்கு அமைந்ததாக பொருள் உணர்ந்து பாடம் செய்ய வேண்டும். மனனம் செய்யவெண்டும். என்பதே இந்நூலாசிரியரின் பேரவாவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இந்தகைங்கரியத்திற்கு திருவருள் தூண்டப்பட்டவளாக திருவருளின் செயலே இது என்று எண்ணி இந்த 95 வரிகளுக்கும் இலகுதமிழில் பொருள் எழுதுவதற்கு முற்பட்டேன் . அடியேன் ஒரு கருவியே என்பதை அனைத்து சைவமாந்தரிடமும் கற்றோரிடமும் கூறிவைக்க முற்படுகின்றேன். உலகம் இதை அனுமதித்து முன்னெடுக்கும் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

திருவாசகத்திற்கு எத்தனையோ பேர் விளக்கவுரை ஆராச்சிஉரை, விருத்தியுரைஎன்று எழுதியுள்ளார்கள். ஆனால் வளர்ந்து வரும் சிறார்களும் விளங்கிக் கொள்ளத்தக்கதாக இலகுதமிழில் எழுதுவது இன்றைய காலகட்டத்தில் பொருந்தும் என்பதே இந் நூலின் நோக்கமாக அமைந்தது எனலாம்.

இந்நூலிற்கு முதற்கண் ஆசியுரை வழங்கியவர் எனது குருவும் எனது தீஷ்சா குருவுமாகிய எனது வணக்கத்துக்குரிய வேதாகம மாமணி பிரமஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள் திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா அவர்கள். அடுத்து இந்நூலின் கணணிப்பிரதிகளை மேல்பார்வை செய்து வேண்டிய அறிவுரைகளை எனக்கு ஊட்டிய யாழ்பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் இலக்கியக்கலாநிதி ப.கோபாலக்கிருஷ்ண ஐயர் அவர்கள் இவர் யான் பல்கலைக் கழகத்தில் முதுகலைமாணி சைவசித்தாந்தம் பயின்ற காலத்தில் எனது குருவுமாவார் என்பது இங்கே நன்றியுடன் குறிப்பிடத்தக்கது. அடுத்து தெல்லிப்பழை துர்காதேவி அம்மன் தேவஸ்தானம் சிவபூமி அறக்கட்டளை தலைவரும் "செஞ்சொற்செல்வர்" கலாநிதிஆறு. திருமுருகன் அவர்களின் பிராத்தனை உரைக்கு அடியேன் பணிவோடு நன்றி கூறுகின்றேன். அடுத்து இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உமாமகேஸ்வரனின் வாழ்த்துச் செய்தியின் வாழ்த்தினை இந்நூல் பெறுகின்றது. அவருக்கு எந்நாளும் மாறாத நன்றியுடையவளாவேன். அடுத்து யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உயர்பட்டப் படிப்புகள் பீடம் பீடாதிபதியும் எனது குருவுமாகிய பேராசிரியர் கு.மிகுந்தன் அவர்களின் வாழ்த்துரை இந்நூலினை வாழ்த்தி நிற்கின்றது.
நன்றி நன்றி நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து யாழ் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்பு பீடம் காப்பாளர் சித்தாந்தரத்தினம் பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதனின் வாழ்த்துரை இடம் பெறுகிறது. இந்த நூலினை சரிபார்த்ததோடு இவர் எனது குருஎன்பதை பணிவோடு கூறுகின்றேன். அடுத்து யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வருகை விரிவுரையாளரும் எனது குருவுமாகிய அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தலைவர் சைவப்புலவர் சித்தாந்தப் பண்டிதர் கலைஞானச்சுடர் மு.திருஞான சம்பந்தபிள்ளை அவர்களின் வாழ்த்துரையும் அதனை அடுத்து தி/இ/கி/ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அதிபர் திரு.செ. பத்மசீலன் அவர்களின் அணிந்துரை இந்நூலை அணிசெய்கின்றது. அதிபர் அவர்களுக்கு என் நன்றிகள் அடுத்துவருவது சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ்பாணம் பல்கலை கழகம் ச.முகுந்தன் அவர்களும் இந்த நூலின் கணணி வடிவில் சரிபார்த்து: என்னை ஊக்குவித்த பேராசியராவார். இந்நூலினை நிறைவு செய்வதற்கு நான் சோர்ந்து போகாமல் அறிவுரை கூறியவர் என்பதை என் தலைமேல் கொண்டு அவருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். எனது அனைத்து ஆசான்களுக்கும் அன்பான பணிவான நன்றிகள்.

மேலும் இந்நூலினை செவ்வைப் பார்த்து உதவியதோடு என்னைச் சோர்ந்து போகாதபடி ஊக்குவித்த என் கணவருக்கும் சகல விதத்திலும் உதவிய என்பிள்ளைச் செல்வங்களுக்கும் மேலும் செவ்வைபார்த்து உதவிய என்பேரன் பொறியியல் பீடம் மொரட்டுவை பல்கலைக் கழகம் முதலாம் ஆண்டு மாணவன் செல்வன் கோ. பிருதுவிராஜனுக்கும், செவ்வை பார்த்து உதவிய என் பேத்தி மருத்துவ பீடம், யாழ்பல்கலைக்கழகம் முதலாம் ஆண்டு மாணவி செல்வி த.பிரகாஷினிக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் அத்தோடு திருக்கோணமலை திருஞானசம்பந்தர் வீதியிலுள்ள ஏ.ஆர்.டிரேடர்ஸ் அச்சகத்தினருக்கும் என்றும் மாறாத நன்றிகள் உருத்தாகுக. அவர்களின் தாராள மனமுடைய ஊக்கமே இந்நூல் சிறப்புற அமைவதற்குக் காரணமானது என்றால் அது மிகையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான்களும், கல்வி மான்களும் சிறந்த ஆன்மீகவாதிகளும், ஞானிகளும், புலவர்களும் முன்எடுக்க வேண்டிய விடயத்தை இந்தக்கைங்கரியத்தை ஒன்றுக்கும் பற்றாத சிறியேன் இதை செய்ய வேண்டும் என்று எம்பெருமான் திருஉளம் கொண்டான் போலும். யானொன்றும் அறியேன் நாயிற்கடையாம் நாயேனை நயந்து நீயே! அடியேன் ஒரு கருவிமட்டுமே. மேலும் எம்பெருமானின் திருவடிகளைப் பணிவது போல் இவ்வுலகுக்கு என்னை ஈன்று தந்த என்பெற்றோரைப் பணிவதும் எனது தலையாய கடனேயாம் தன் கருவிலே உருசுமந்தாள் என் அன்னை! என் தாய்க்கும் எனது முதல்க்குருமுதல்வர் என் தந்தைக்கும் என்னை பக்திநெறியிலே பண்படுத்தி வளர்த்த என் மூதாதையருக்கும் பணிந்து அவர்களுடைய பாதார விந்தங்களையும் வணங்கி இந்நூலானது அவர்கள் அனைவரினதும் அடிச்சுவடே என்று அவர்களின் பாதாரவிந்தங்களுக்கும் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.

**திருச்சிற்றம்பலம்**

**திருமதி சரோஜினிதேவி சிவஞானம்**

**"தேவிகடாட்சம்"**
**42B/1, தேன் தமிழ் வீதி,**
**உவர்மலை,**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

" மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

விநாயகர் துதி

ஓம் எனும் உருக்கொண்டாய் நீ ஐயா
உமையவள் புத்திரனே ஓங்காரதத்துவனே
ஆம் எனும் அனுமதியை களிகூர்ந்து தாருமையா!
நாம் பொருள் விரித்து தினம் தினம் சிவபுராணம் பாடிடவே!

# திருவாசகத்தில் சிவபுராணம்

தொல்லையிலும் பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும் தேன்

(நூல் சிறப்புப் பாயிரம்)

எல்லை மருவா நெறி, அதாவது முடிவு பெறாத நெறி, வீட்டு நெறி, வீட்டு நெறியைத் தருவது. திருவாதவூரில் திருஅவதாரம் செய்தருளிய எம் மாணிக்கவாசப்பெருமான் திருவாய் மலரில் தோன்றியருளிய "திருவாசகம் என்னும் தேன்" இது எல்லை மருவா நெறியளிப்பது என்பதும் உறுதி. வாதவூர் எம்கோன் அருளியது. வீட்டுநெறியாவது உலகிலுள்ள எல்லா உயிர்களையும் இனிப்பிறவியில்லாது பயனடையச் செய்வதாகும். இது மணிவாசகமாக மட்டுமன்றி மாணிக்க வாசகமாக மாணிக்க வாசக சுவாமிகளால் அருளப் பட்டதாகும்.

வாசகம் : மணிவாசகம், மாணிக்க வாசகம் ஆகும். தேன் உடல் நோயை, உடற் பிணியைத் தீர்க்கும் அத்தோடு உள்ளத்தில் தித்திக்கும் திறமுடையதுமாகும். **"திருவாசகம் என்னும் தேன்"** உள்ளத்தில் உள்ள பிணியைத் தீர்க்கும். அதாவது அறியாமை இருளைப் போக்கும், ஆணவ இருளை நீக்கும், உள்ளத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்படுத்திப் பிறவிப் பிணியைத் தீர்க்கும், வல்லமை கொண்டது திருவாசகம் என்னும் தேன். எனவே **"எல்லை மருவா** நெறியளிக்கும்**"** என்பது - **பிறவி எல்லைச் சேராத, பிறவி எல்லைக்குப் போகாத, இனிப் பிறவி நெறியைச் சாராத வீட்டு, நெறியைத் தரும் என்பதாகும். எனவே வீட்டு நெறி என்பது முடிவு படாத இன்பத்தினை உடையது என்பதே இதன் பொருள். ஆகையால் எல்லாவற்றிற்கும் முடிந்த நிலையாயுள்ள பிறவித்துன்பத்தை சாராத எல்லை மருவா நெறியளிப்பது திருவாசகம் என்னும் தேன்.** அதாவது பிறவிப் பிணியை இல்லாதொழிக்கும் என்பது திருவாசகத்தின் உள்கிடையாகும். இதன் பொருள் எம்பெருமானேயாம். திருவாசகத்தின் பொருள் முழுவதும் "சிவம்" "சிவம்" என்னும் மெய்பொருளையே எண்ணி, எண்ணி திருவாசகத்தைப்பாடுவோமாக.

அதாவது தொன்று தொட்டே தொடர்ந்து வரும் பிறவியை தொடர்ந்து தொடர்ந்து தொன்று தொட்டே வரும் பிறவியாகிய சூழும் தளையை, உயிரைச் சூழ்ந்துள்ள கட்டினை நீக்கி, அதாவது இல்லாதொழித்து ஒரு உயிர்படுகின்ற அல்லலை அறுத்து / அறியாமையை நீக்கி / ஆனந்தம் ஆக்கியதும் உயிரிற்கு இன்பத்தை விளைப்பதும் திருவாசகம் என்னும் தேன் ஆகும். **மும்மலங்களையும் முற்றாக ஒழிப்பது திருவாசகமாகும். திருவாசகம் திருமுறைகளிலே எட்டாவதாக அமைந்துள்ளது. வாதவூரர் சொல்லச் சொல்ல வாதவூரர் பாடப்பாட சிவபெருமானால் அதாவது அம்பலவாணனால் ஆம் கூத்தப் பெருமானால்! கூத்தப் பெருமான் கைப்படவே எழுதப்பட்டது. ஆகையால் பன்னிரு திருமுறைகளிலும் மிகவும் புனிதமுடையதும் என்பெருமானால் எழுதப்பட்டதால் மிகவும் மேன்மையுடையதும் மும்மலங்களையும் வலிகெடச் செய்ய வல்லதும் முற்றாக நீக்க வல்லதும்,** வலிமையுடைய தான பிறவியென்னும் கடலை கடக்க அருளை நல்குவதும் திருவாசகமே! என்பது உணராத உள்ளங்களுக்கும் உணர்த்தப்பட வேண்டியது அவசியமான ஒன்றாகும். உலகிலே மனிதப்பிறவி எடுத்த உயிரானது தான் சார்ந்ததன் வண்ணம் நிற்பதால் அது அறிவொளி யில் நிற்பதென்பதைக் கூறமுடியாது. ஆகவே மனிதவர்க்கத்திற்கு அறிவொளியை அறிந்து உணர்ந்து உற்றுணர்ந்து பாடுவோமாக. இதுதான் மனிதனாகப் பிறந்த பிறப்பின் மாண்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகத்திலே 51 பதிகங்கள் அமைந்துள்ளன. 51 பதிகங்களில் "சிவபுராணம்" முதலாவதாக அமைந்துள்ளது. சிவபுராணம் சிவபெருமானின் சிவபதம், சிவதத்துவம் உயிர்களின் பரத்துவம் அனைத்திற்குமே முதன்மையானது என்பதை மானிடராகப் பிறந்த நாம் உற்று உணர்ந்து சிந்திக்கவேண்டும்.

புராணம் என்பது : பழமை – புராதனம்! ஆகையால் அது புராணம். என்றுஅழைக்கப்படுகிறது சிவனின் பழமையான முறைமையையும், சிவபதத்தையும் சிவதத்துவத்தையும், ஓர் உயிர் அடையவேண்டிய பேறு முழுவதையும் ஒருங்கே அது கூறுவதால் அது திருவாசகத்தில் "சிவபுராணம்" என்று உன்னதமான மேன்மையான நிலையில் போற்றப்படுகின்றது. இது 95 வரிகளைக் கொண்டது. திருவடிப்பேறு முழுவதையும் ஒருங்கே கூறுவதால் முதலிடம் பெற்று போற்றப்படுகின்றது. திருவாசகத்தில் சிவபுராணம் "மகாமேரு" போன்றது மிகவும் மேன்மையை உயிர்வர்கத்திற்கு தருவது அதனைப் பூலோகத்தில்கையிலாயம்" எனக் கூறமுடியும். கூறிப் போற்றமுடியும். சிவபுராணத்தை பாராயணம் செய்வதாலும், சிவபுராணத்தை நித்திய ஒழுங்குடன் படிக்கும் முறைமையைக் கைக்கொள்வதாலும், பூலோகத்திலேயே கைலாயம் பெற்ற மாதிரி நிலைமைய ஓர் உயிர் பெற்றுவிடும் அடைந்துவிடும் என்பதும் உறுதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருந்தமர நிழலிலே மாணிக்கவாசகசுவாமிகள்

கண்ட சிவஞானயோகக் காட்சியும்

ஞானாசிரியனாகிய சிவபெருமானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1 - நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!**

| | |
|---|---|
| நமசிவாய என்பது | - இறைவனது ஐந்தெழுத்து மகாமந்திரம் |
| "நமசிவாய"இதற்கு | - வணக்கம் சிவனுக்கு என்று பொருள் |
| நமசிவாய என்பது | - தூலபஞ்சாட்சரம் |
| நாதன் | - தலைவன், |
| தாள் | - திருவடி, திருவடி என்பது திருவருளைக் குறிக்கும் |
| வாழ்க | - வாழ்த்துதலாகும், போற்றுதலுமாகும். |

இறைவன் நாதத்துவத்தில் வெளிப்படுபவன். அவனது திருவடியே என்பது திருவருளே ஆகும். "நமசிவாய என்னும் திருவைந்தெழுந்து மந்திரம் வாழ்க!" எல்லாவற்றிற்கும் தலைவனாக விளங்குபனின் திருவருட்சக்தி வாழ்க. நாதனாகிய தலைவனின் திருவடி வாழ்க. இதிலே நமசியவாய என்னும் சொல்லின் நேர்பொருள் வணக்கம் என்பதாகும். "நம" - வணக்கம்! சிவனுக்கு வணக்கம் என்பதுவும் இது சிவனின் (தலைவன் விசுவநாதனின்) அவருடைய பெயராகவும் உள்ளது. "நமசிவாய" சிவனுக்கு வணக்கம் "நமசியவாய வாழ்க." "நாதன் தாள் வாழ்க" இதனையே நாம் வணங்கும் சிவனின் திருவடிக்கு வணக்கம் என்று பொருள் தருகின்றது. நமசிவாய என்பது உயிர் காக்கும் மந்திரமாகும்.

திருஞானசம்பந்தப் பெருமானின் குரலால் அவருடைய திருவாக்கையும் உயிர் காக்கும் மந்திரமாக அவருடைய திருப்பதிகங்களில் பார்க்கின்றோம். "நாதன் நாமம் நமசியவாயவே" என்று நமசிவாயப் பதிகத்திலே "நாமம் நமசிவாயவே" "நாமம் நமசிவாயவே" என்று நாதனையே போற்றுகின்றார். "நாமம் நமசிவாய" இதனையே! சிவபுராணத்திலும் "நமசிவாய" என்ற மந்திரத்தை மாணிக்கவாசக சுவாமிகள் முதலாவது தொடக்கமாக எடுத்துக் கையாளுகின்றார். மந்திரம் என்பது நினைப்பவரைக் காப்பது. **உலகிற் கெல்லாம் முதல் மந்திரமாக எடுத்தாளுகின்றார் என்பதையும் உன்னிப்பாக சிந்திக்கவேண்டும். இதுவே ஓங்கார மூலமந்திரம், என்பதையும் உணர்வோமாக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நமச்சிவாய மந்திரம் நினைப்பவரைக் காப்பது என்பதனை திருநாவுக்கரசு நாயனரும் உலகிற்குக் காட்டினார்.** கல்லிலே கட்டி கடலிலே விட்ட போது உலகினர்க்கு பக்திபூர்வமாகவும் எல்லோரும் கண்டு நேரேகண்டு வியக்கும் வண்ணமும் காட்டியே கரைக்கு மீண்டார் அவர். **அவர் சிவனை நினைத்து நமசிவாய மந்திரத்தை உச்சரிக்க கல் தெப்பமாகி (புணையாகி) அவரை அக்கரை சேர்த்தது என்பது எல்லாம் நாமறிந்த உண்மையாகும்.** "நற்றுணையாவது நமசிவாயவே" என்றார். இனி சுந்தரமூர்த்தி சுவாமிகள் கையாளுகின்ற நமசிவாய மந்திரத்தின் உன்னதத்ததைப் பார்ப்போம்.

"நற்றவா உனை நான் மறக்கினும்" "சொல்லும் நா" "நமசிவாயவே" என்று கூறி தான் தனது நினைப்பானது இறைவனை மறந்தாலும் "நா" வானது தன்னுடைய விருப்பத்தில் தானாகவே "நமசிவாய" என்று சொல்லும் என்றார்.

"நமசிவாய" என்ற ஐந்தெழுத்து மந்திரம் உச்சரிக்கும் பொழுது அது "நமச்சியவாய" என்றாகின்றது. **மந்திரங்கள் எல்லாவற்றிக்கும் தலையாய மந்திரமும் மூலமந்திரமும் பஞ்சாட்சரமும் இதுவாகும். எனவே மாணிக்கவாசக சுவாமிகள்** சிவபெருமானைக் குறித்து இம்மந்திரத்தைத் தொடங்கியதும் சிறப்பிற்குரியதாகும்! சிந்தனைக்குரியதேயாகும். எல்லோருடைய மனத்தையும் சிந்திக்கத் தூண்டுவதுமேயாகும்" **நமசிவாய என்னும் மந்திரத்தை இடையறாது உச்சரிப்பவர் சிவசொரூபமாகின்றார்.**

ஆத்ம சாதனங்களுள் நாமஜெபம் மிகச் சுலபமானது. ஆத்ம சாதகன் ஒருவன் : நாம ஜெபத்தை எப்பொழுது வேண்டுமானாலும் ஓதிக் கொண்டே இருக்கலாம். அகப்பூக்கள், அகமலர்கள் என்பன அன்பு, அறம், அருள், பொறுமை, வாய்மை, ஐம்பொறி அடங்கல், தவம், கொல்லாமை ஆகிய எட்டும். "சிவாய நம" என்று **சிந்திப்போருக்கு அபயாம் ஒரு நாளும் இல்லை** என்றார் ஔவையார். சிவமே அன்பு, அன்பே சிவம் என்றவர் திருமூலர். மேலும் அவர் "சிவ சிவ" என்கிலர் தீவினையாளர் சிவ சிவ என்றிடத் தீவனை மாளும் என்கிறார். எனவே "நமசிவாய" "சிவாயநம" என்ற "மூலமந்திரம்" நினைப்பவரை காப்பது என்ற நினைவே உன்னதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகும். யாவற்றிற்கும் மிகமேலானதும் ஒன்றாகும். **இறைவன் உலக ஆளுமை முழுவதிற்கும் உள்ப்பட்ட வனாதாலால் அவன் நாதன்.**

**“நாதன் நாமம் நமசிவாயவே” உயிர்க்கு வேண்டிய உன்னதமான நமசிவாய மந்திரத்திலும் நாதன் தாளிலும் உண்டு, என்னும் உண்மையினை உணர்ந்து உணர்ந்து நாமும் அதை எண்ணி எண்ணி நினைந்துருகி அருள் பெறுவோமாக**

**‘நமசிவாய’ என்பது சொல்லின் ஒலிவடிவம்.** இது ஆற்றலின் சேர்க்கையாகும். அங்கே ஒலிவடிவுக்கு ஆற்றலும் உண்டு, அதிர்வும் உண்டு. ஒவ்வொரு எழுத்திற்குமுள்ள அதிர்வுகளும் ஒவ்வோர் எழுத்தையும் உச்சரிக்கும் போது வெளிப்படுகின்றன. எல்லாவற்றையும் படைத்து, காத்து, அழித்து, அருளி, மறைக்கின்ற பரம்பொருள் தோற்றம், இறுதி இல்லாதது. அப்படிப்பட்ட பரம்பொருளை ‘வாழ்க’ என்று கூறுவது சரியா? ஆம் அவர் தானேதான் இறைவனை தனக்குள்ளே உருவகித்து உருவகித்து வாழ்த்துகின்றார். இதற்கு அடிகளாரே அனைவருக்கும் பதிலும் கூறுகின்றார். **உயிர்கள் இறைவனை வாழ்த்துவதால் இறைவனுக்கு எவ்வித நன்மையோ, தீமையோ இல்லை. வாழ்த்துகின்ற உயிர்கள் தாம் வாழவழி செய்து கொள்வதே இறைவனை வாழ்த்துவதாகும்.!**

**கூத்தப்பெருமானின் இடக்கையில் வைத்திருக்கும் டமாருகம்(உடுக்கை) ஒலியிலிருந்து தான் சகல படைப்புக்களும் நடைபெறுகின்றது. அது தத்துவப் பெரும் பேரொலித் தோற்றம் என்ற வகையில் அடிகளார் “நமசிவாய வாழ்க” என்று இறைவனுடைய ஆதிநாத சொரூபத்தையே கூறியுள்ளார்.** எனவே அவர் ஆதிநாத சொரூபத்தை தனது அகமனதின் ஆழத்தில் கண்டமையால்தான் ‘நமசிவாய வாழ்க’ என்றும் ‘நாதன் தாள் வாழ்க’ என்றும் கூறினார். நாத தத்துவத்தை வெளிப்படுத்தவே நாதன் தாழ் வாழ்க “நாதன்” யாவர்க்கும் தலைவன், “தாள்” திருவருள், திருவருள் செறியும் திருவருளையே திருவடி என்பது குறித்து நிற்பதாகும். **தனிப்பெரும் கடவுளான சிவனை ‘நமசிவாய’ வடிவத்தில் வணங்குவதே பக்தர்களின் அடிப்படையாகும். அதுவே உன்னதமானதொரு சிறப்பும் ஆகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலும் இது கூத்தப்பெருமானுடைய நடனத்தின் ஒலிவடிவம்! ஐந்தெழுத்து வடிவாகவே சிவமூர்த்தி தனது கூத்தை ஆம் நடனத்தை இயற்றுகின்றார் என்பதை நாம் இந்த முதலாவது வரிவடிவில் உள்ள வணக்கத்திலிருந்து உணரவேண்டும். அதுவே நாததத்துவம் ஐந்தெழுத்து மந்திரம் வேதத்திற்கு இருதயமாகின்றது.** உயிருடன் இலங்குகின்ற உடலின் நடுநாயகமும் இருதயமேயாம். அந்த இருதயம் வாழ்வுக்கு இன்றியமையாதது. ஐந்தெழுத்து மந்திரம் ஆன்மாவுக்கு இன்றியமையாதது என்பதை நாம் சிவபுராணத்தின் மூலம் "சிவ சிவ" என்று சிந்தித்து சிந்தித்து நன்கு உணர்வோமாக. இப்படி ஒரு சிவபுராணவரி முதல் வரியாகக்கிடைத்தது. வாழ்த்துதலும் போற்றுதலுமாகக்கிடைத்தது சைவ உலகத்திற்குக் கிடைத்த பெரும் பேறேயாம்.

**2 - இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க.**

| | |
|---|---|
| இமைப்பொழுது | - ஒருகணப்பொழுது |
| என் நெஞ்சில் | - என் இதயக்கமலத்தில் |
| நீங்காதவன் | - அகலாதவன் |
| தாள் | - திருவடி, |
| வாழ்க | - வாழ்த்துதலாகும், |

ஒரு கண்ணிமைப் பொழுதும் என் நெஞ்சை விட்டகலாதானின் திருவடி வாழ்க. அதாவது ஒரு நொடி பொழுதுகூட மாணிக்கவாசகசுவாமிகளின் நெஞ்சை விட்டு இறைவனுடைய நினைப்பு, இறைவனுடைய எண்ணம், எண்ணத்துடிப்பு அவர் மனதை விட்டு அகலக்கூடாது என்பது அவரது வேண்டுதலும் மனத்துடிப்பும் நினைப்பும் ஆகும். அதாவது இறைவனின் நினைவை மறந்தால் தானே! அவரை நினைப்பதற்கு என்றாகின்றது. அதே போன்றதே அவர் உள்ளத்தின் உள் உணர்வும் என்றே அவர் இவ்வுலகில் வாழ்ந்தார் அவருடைய நினைப்பும், அவரை விட்டு நீங்காதபடி அவர் நினைப்பதை நினைந்து நினைந்து நின்றார் என்பதும்! இறைவனுடைய பூங்கழல்களை பொன்னடிகளை மறவாத நெஞ்சத்தவராய் இருந்தே திருவாசகத்தைப் பாட முனைந்தார் என்பதும்! எமக்கு இதிலிருந்து நன்கு புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகத்தில் இந்த வரியானது எமது உள்ளுணர்விற்கு வழிகாட்டுகின்றது. அடிகளார் 'என்நெஞ்சு' எனக் கூறுவது தனது சித்தத்தின் ஆழத்தில் உள்ள பகுதியையாகும். ஒருவன் தன் வீட்டிலிருந்து நீங்கி எங்கோ பயணம் போய் மீண்டும் வருவது போல **இறைவன் எம்மை விட்டு ஒரு கணமும் நீங்கமாட்டான் என்பதே இதன் பாலுள்ள கருத்தாகும். இமைப்பொழுதும் நீங்காதவனுடைய வழிபாடு என்னவெனில் ஐந்து எழுத்து வழிபாடு ஆகும்.** "தாள்" என்பது "திருவடி," (திருவருள் என்பதும்) திருவடி என்பதும் ஐந்தெழுத்து என்பன ஆகும். இது இமைப்பொழுதும் நெஞ்சை விட்டு நீங்காததாகும். இதை இன்னும் ஆழமாகக் கூறுவதானால் மறதி என்னும் மறப்பிருந்தாலல்லவோ? நினைப்பதற்கு, நினைப்பும், மறப்பும், அற்ற நிலையில் அகமனத்தின் ஆழத்தில் நிற்கின்ற திருவடி என்று நாமும் விளங்கிக் கொள்வது பொருத்தம். சுத்தமான மனதோடு ஐந்தெழுத்தை உச்சரித்தால் மனத்திலேயே இமைப்பொழுதும் நீங்காத தன்மை எமக்கும் நன்கு தெரியும். இதனையே திருநாவுக்கரசு நாயனர் திருமுறையில் குறிப்பிட்டுள்ளார்.

**புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே,**
**வழுவாதிருக்க வரம்தர வேண்டும்.**

**(தி.மு. 4-94-8)**

இறைவன் தன்மனத்தை விட்டு நீங்காதிருக்கின்ற பொறுப்பை சுவாமிகள் இறைவன் இடத்திலேயே விட்டுவிடுகின்றார். ஞானிகளுக்கும், முனிவர்களுக்கும் இந்த "நீங்காத நிலை" என்பது தத் தம் மனத்தினுள்ளேயே எப்பொழுதும் தெரியும். என்பது எமக்கு தெற்றெனத்தெரிகின்றது. ஜி.யூ.போப் என்ற ஆங்கிலேய போதகர் தமது சமயத்தைப் பரப்புவதற்காகத் தமிழ் மொழியைக் கற்றார். அந்தத் தமிழ் மொழிமூலம் திருவாசகத்தைக்கற்று திருவாசகத்தின் இனிமையும் அதன் பொருளும் அவரைக்கவர்ந்தது உடனே திருவாசகம் முழுவதையும் ஆங்கில மொழியிலே மொழி பெயாதந்து மாணிக்கவாசக சுவாமிகளையும், திருவாசகத்தையும், மேலை நாட்டவர்கள் முன்னாலேயே கொண்டு போய் நிறுத்திவிட்டார். அது மட்டுமல்ல "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்ற வசனம் அவர் தான் திருவாசகத்தைப் படிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கண்ணீர் விட்டு அழுதே படிப்பது என்றும் கூறுவாராம். ஆகவே இந்த உலக நாடுகளிலுள்ள சகல மதக் கொள்கையையும் விடதிருவாசகமே அவரை உருக்கியது. இதனை ஜி.யூ.போப் 1900 என்ற தமிழ் நூல் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. உலகினர்க்கு என்பதை நாமும் உணர்ந்து திருவாசகத்தின் உன்னதத்தைப் போற்றுவோமாக!

**3 - கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க.**

| | | |
|---|---|---|
| கோ | - | அரசன் |
| கழி | - | கோல் |
| கோகழி | - | திருவாவடுதுறை |
| ஆண்ட | - | திருவாவடுதுறையை ஆட்சிசெய்த |
| குருமணி | - | ஆச்சரியாருள் மேம்பட்டவன், ஆச்சாரியன் |
| தன்தாள் | - | ஆச்சாரியராகிய அவரின் திருவடி |
| வாழ்க | - | வாழ்த்துதல், |

கோகழியிலே - திருவாவடுதுறையிலே தன்னை ஞானச்சாரியானாக தீட்சாகுருவாக ஒரு ஆச்சாரியனாக வந்து ஆண்டு கொண்ட குருமணியின் தாள் வாழ்க. இறைவனே! தானே வந்து திருவாவடுதுறையிலே காவல் இருந்து அதாவது ஒரு மானிட உருவில் வந்து அவரை ஆட்கொண்ட குருமணியாவார். இறைவன் மாணிக்கவாசக சுவாமிகளுக்காகவே மானிடக் கோலம் பூண்டு வந்து இந்த மண்மேல் மலரடி வைத்தார் என்பது அளப் பெரும் கைங்கரியம் அல்லவா? இதனை எம்மால் எண்ணிப் பார்க்கவும் முடியுமா? இதை அந்தண உருவாக அதாவது குருமணியாக ஆச்சாரியர்களுள் ஒருவனாக திருவாவடுதுறையிலே வந்து மாணிக்கவாசக சுவாமிகளை ஆட்கொண்டார் என்பதை சிவபுராணத்தில் மிகவும் மேம்பாடுடைய செயலாக மாணிக்கவாசக சுவாமிகள் போற்றுகின்றார் என்பதை மானிட ஜென்மம் எடுத்த யாவரும் உணர்வோமாக! குருமணிதன் தாள் வாழ்க. குருமணி தன் தாள் வாழ்க என்று உணர்ச்சி மேலீட்டால் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோ – அரசன், கழி – கோல், குருமணி – ஒளிவிட்டு நிற்பவன். ஒளி தரும்குரு இறைவன். ஆன்மாவின் தலைவன், உடலின் தலைவன்- ஆன்மா - ஆன்மாக்களை செலுத்துபவன் இறைவன். தனது திருவருளால் ஆன்மாக்களைச் செலுத்துகின்றான். எப்படி எனின் ஆன்மாக்கள் எழுந்து நடமாடக் கோலாக அமைவதான மூலாதாரத்தையும் சகதளத்தையும் இணைத்து நிற்பதும் முதுகந்தண்டாகும் இது தான் கோல். இறைவன் செலுத்துகின்ற ஆன்மாக்களின் கோல் முதுகந்தண்டாகும். இதுவே முள்ளந்தண்டு. கோகழி ஆண்ட - இந்த முதுகம் தண்டினாலேயே ஆன்மாக்கள் எழுந்து நடமாடுகின்றன. இறைவனும் அவற்றைச் செலுத்துகின்றான். ஆகையினாலேயே "கோகழி" ஆண்ட (என்பதை நாம் எப்படிக்காண வேண்டுமென்றால்) குருமணிதன் தாள் வாழ்க என்றார். எமது முதுகம் தண்டோடுகூடிய உடலையும் உயிரையும் இறைவனே ஆளுகின்றான். இறைவனே செலுத்துகின்றான். இதுவே சித்தர்கள் கூறும் அதன் பொருள். திருவாவடுதுறையில் ஆட்சிபுரிபவரும் அவரே. திருவாவடுதுறையிலே தனக்குக் குருவாக வந்து ஆட்சி செய்து தன்னை ஆண்டு கொண்டவரும் அவரே! என்று ஒரே வசனத்தில் கூறி விட்டார். எப்படி இருக்கின்றது. மாணிக்கவாசசுவாமிகளின் யுக்தியும் பக்தியும். பக்திக்குள்ளேயும் யுக்தியையும் பாவித்துள்ளார். என்பது நமக்குள்ளே நன்கு புலனாகின்றது.

**4 - ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க.**

ஆகமம் - இறைவனிடத்திலிருந்து வந்த நூல் ஆகமம்
ஆகி - ஆகமமாகி நிற்பவனும் இறைவனேயாம்,
அண்ணிப்பான் - அண்ணிவித்தல்,
தாள் - இறைவனுடைய திருவடி
வாழ்க - போற்றுதல்

**உயிர்கள் தன்னை அணுகி தனக்கு அண்மையில் தன்னிடம் சென்று ஆறுதல்** பெற்று விடுதலையடையும்படி செய்பவன் இறைவன். இறைவன் ஒருவனே ஆகமப்பொருளாகவும் எமக்கு ஆறுதலுக்குரிய நிலைக்கழனாகவும் இருப்பவன். திருவருளாய் இருப்பவனும் அவனேதான். இறைவன் ஆகமமாகி இருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் மெய்யறிவாகி இருக்கிறான். ஆகமம் பொருளாகவே நின்று எமக்குத் தித்திப்பவனின் திருவடி வாழ்க. உயிர்கள் தன்னை அடையும்படி செய்து உயிர்களை தன்னிடத்தில் அணுகிவிப்பவன் அவனேயாம். ஆகவே அவன் ஆகமமும் ஆகிநிற்பான். உயிர்களை தன்னிடத்தில் அணுகும்படியும் செய்விப்பான்.

"ஆகமம்" இறைவனிடமிருந்து வந்தது என்ற நிலையிலும் பொருள் கொள்ளப்படுகின்றது. ஆகமத்தை அருளிச் செய்தவனும் இறைவன். 'ஆகம வடிவினனாகவும் இறைவனுள்ளான் என்பது வேறெங்கும் காணப்படாத அதிசயமான பொருள் பொதிந்த ஒன்றாகும். அது நம்பிக்கையும், புதுமையும் நிறைந்த ஒன்றும் ஆகும். அதாவது ஒருஆலயத்திலிருந்து கோபுரத்தில் இருந்து சுற்றுமதில் வரை எல்லாம் 'சிவவடிவமே' என்பதாகும் என்ற கருத்தை இதன் மூலம் தெளிய வைக்கின்றார். இதனைக் கீர்த்தித்திரு அகவலிலே

மன்னுமா மலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும் (என்றார்) அண்ணித்தல் என்பது? இறைவன் எமக்கு அதாவது, ஆன்மாக்களுக்கு அண்மையாக இருத்தலாகும். எமக்கு அணியனாக இருத்தல் என்பதுவும் இறைவனின் அருள் ஆகும். நமது உள்ளம் என்னும் கோயிலில் இறைவன் அமர்தலாகும் என்பதை எண்ணி எண்ணி அவனை எம் அகமனதில் இருத்திக் கொண்டால் போதும் திருவருள் தானே எம்மை வழிநடத்தும் வாழவைக்கும்

**5 - ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க.**

ஏகன் - ஒருவன்
அனேகன் - பல உருவானவன்
இறைவன் - சிவபெருமான்
அடி - திருவடி, திரு அருள்
வாழ்க - வாழ்த்துதல்.

ஒன்றாய் இருப்பவனும் பலவாய் இருப்பவனுமாகிய அதாவது ஒருவனாக இருந்து கொண்டே பல உருவங்களைக் கொள்பவனாகிய முழுமுதலின் திருவடி வாழ்க. அதாவது எப்பொருளிலும் துலங்குபவனது திருவடி வாழ்க. அதுவும் ஒருவனாக இருந்தே பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவங்களைக் கொள்பவனாகிய சிவபெருமானுடைய திருவடி வாழ்க. **சிவபெருமானுடைய திருமூர்த்தங்களை நாம் என்றும் போற்ற வேண்டும். அவன் ஒரே நேரத்தில் ஏகனாகவும் இருப்பான். அதே நேரம் பலவனாகவும் இருப்பான்.** நாம் ஒன்றை உற்று உணர வேண்டும். மாணிக்கவாசகசுவாமிகள் சிவபுராணத்தினுள்ளே முதல் 18 வரிகளிலே உள்ளடங்கலாக உள்ள வரிகளில் 17 இடங்களில் தாள் அடி, கழல் என்று இறைவனின் திருவடிகளை ஏற்றிப் போற்றியிருக்கிறார். மொத்தமாகச் சிவபுராணத்திலேயே 22 இடத்தில் திருவடி வணக்கம் வருகின்றது. ஆணவமலம் (யான்எனது) என்ற ஆணவ முனைப்பு ஆணவத்தின் வெம்மை இந்த திருவடி வணக்கத்தால் தணிகின்றது. மேலும் அதன் பேறு என்னவெனில் ஆணவத்தின் வெம்மை முற்றாக தணிவதாகும். **திருவடியை வணங்குவதும், திருவடியைப் பணிவதும், திருவடியைப்போற்றுவதும், திருவடியைச் சேர்வதும் எப்படி என்பதை "சிவபுராணம்" எமக்கு முற்றுமுழுதாகக் கூறுகின்றது என்பதை நாம் முற்றுமுழுதாக முழுமையாக அதன் உள்ளிடைமுழுவதையும் உணர்வோமாக. இப்படி உணர்வது என்பது ஆணவமுனைப்பு விலகுவதற்கு வழிவகுக்கின்றது. அது திருவடி வணக்கத்தின் மேன்மையாகும். ஆகையாலேயே தான்போலும் உள்உணர்வு நெகிழ்ச்சியினால் "நாதனுடைய தாள்களை" மென்மேலும் போற்றுகிறார், என்பது மேன்மையுடைய ஒன்றாக "சிவபுராணத்திலே" முற்று முழுதாகக் கூறப்பட்டுள்ளது.**

ஏகன் - ஒரு பெயருக்குரியவனாக ஒருவனாக அவன் உள்ளான். அனேகன் - சொற்கள் பலவாயினும், பொருட்கள், வடிவங்கள் பலவாயினும் அனேகமானவை எல்லாவற்றிற்குள்ளும் இருப்பான் அவன் ஒருவனே! இதனை உள்ளூரச் சிந்திக்கின்ற போது ஏகனாகவும் அனேகனாகவும் இருக்கும் இறைத் தன்மையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஏகன் அனேகன் இறைவனடி என்பதிலிருந்து ஏகனும் இறைவன் தான், அனேகனும் இறைவன் தான். **இறை என்பதற்கு எல்லாவற்றிலும் தங்குதல் என்பது பொருளாகும்.** இங்கே அது விளங்கப்படுத்தப்படுகின்றது. எல்லாவற்றிலும் தங்குதல், எல்லாவற்றிற்கும் தலைவன் என்ற பொருளையும் தரும். இறைவன் தான் அநாதியான மூலப்பொருள். அதே நேரத்தில் அவன் ஒவ்வோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரிடத்திலும் உறைகின்றான். ஆகவே அவனின் திருவடியை ஒவ்வோர் உயிர்களும் வணங்க வேண்டும் என்பதனை திருமூலர், விடம் கொண்ட கண்டனும் மேவியகாயத்து தடங்கிடநிற்பது அப்பரிசாமே (என்றார்) எல்லா உயிர்களிடத்திலும் உயிருக்குயிராக உணர்வுக்குணர்வாக நிற்கிறான் இறைவன் என்பது இங்கு விளங்குகின்றது.

**6 - வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க.**

| | |
|---|---|
| வேகம் | - மனவேகம், மன ஓட்டம், |
| கெடுத்து | - இல்லாமல்ச் செய்து |
| ஆண்ட | - ஆளாக்கிய |
| வேந்தன் | - அரசன், மன்னன் |
| அடி வெல்க | - திருவடி வெல்க, |

வெற்றிபெறுக என்பதும் இறைவனையேயாம் திருவடியை ஏற்றிப் போற்றுவதாகும். எண்ணங்கள் என்னும் கொதிப்பு! இந்த கொதிப்பு! என்னும் மன ஓட்டம் பொல்லாதது. எமது எண்ணங்கள் என்பது மனத்திலுள்ள ஆசையேயாம். வேகம் ஆசையின் அடித்தளம், அதுதான் எமக்குள் இருக்கும் அறியாமை ஆகும், அருள் கிடைக்குமிடத்தில் அருள் மேலோங்கும் இடத்தில் அறியாமை அகலும், ஆசை அகலும். பேராசானின் திருவடிகளை அவருக்கு உள்ளேயே அவர் உணர்ந்ததாக அவர் மனதில் விளங்கியது. ஆகவே தான் மாணிக்கவாசக சுவாமிகள் தன்னையும் தன்னிலையையும் உணரும்போது தனது வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி என்கிறார் இது இறைவனின் திருவடிமலரையே என்பதேயாகும்.

வேகம், ஆசை, உலக ஆசை, அறியாமை இவ்வளவும்! அருளை உணராத வேகம் என்பது ஆகும். அது அருளை உணரவிடாது என்பதே அவர் தன் அளவில் யாவருக்கும் கூறும் கூற்றாகும். அந்த வேகத்தைத் தனக்கு கெடுத்து தம்மை ஆண்டு கொண்டான் இறைவன் என்று அன்றே பாடினார். (அன்றே இறைவனின் அருளுக்குத் தன்னை அர்ப்பணித்தார்) எம்மையும் அதாவது உலகிலுள்ள உயிர்களையும், மானிடராகப் பிறந்தவர்களையும் இறைவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி முத்தியின்பம் பெற வேண்டுமானால்? மனத்தின் வேகத்தை கெடுப்பதற்கும் (ஆசையைத் தணிப்பதற்கும் அறியாமையை அகற்றுவதற்கும் என்று கருதியே எமக்கு சிவபுராணத்தைத் தந்தார்) **இது சிவபெருமான் அருளால் மக்கள் பெற்ற பேறேயெனலாம்.** ஆதலால்தான் எமக்கும் அப்படிப் பாடி அளித்துள்ளார், என்பதைப் போற்றி மாணிக்கவாசக சுவாமிகளையும் அவர் திருவடிகளையும் என்றென்றும் அவ்வாறு போற்றுவோமாக. கூர்மதியும், கூரிய இறைபக்தியும், மனத் தூய்மையான பக்தியும், உலக ஆசைகளையடக்கும் என்பது உறுதி.

**வேகம்கெடுத்தாண்ட புலன் வழி செல்லும் மனத்தை, பலதிசைகளிலும் வேகமாக செல்வதை அடக்கினால் ஒழிய மனஒருமைப்பாடு என்பது கிடைக்காததொன்றாகும். மனதைப் பொறி வழிப்போகாமல் இருக்கச் செய்வதையும்! அடக்குவதையுமே! வேகம் கெடுத்தாண்ட என்கின்றார்.** இறைவனை வேண்டி மெய்யுணர்வு பெறுவதற்கு மனதை அடக்குதலையே சுவாமிகள் வேகம்கெடுத்தாண்ட என்றார், என்பதை நாம் நன்கு உணர்வோமாக இறைவனை அடைய வேண்டுமானால் வேகம் கெட்டு மனம் ஒருமைப்பட வேண்டும். அவன் நம்மை ஆளுகின்ற வேந்தன். **"வேந்தன் ஆணை" என்றால் ஏனையோர் எல்லாம் ஏனென்றுகேளாமலே கீழ்ப்படிதல் வேண்டும். இறைவனை அடைய வேண்டுமானால் புலன்வழி செல்கின்ற வேகத்தை (மன ஓட்டங்களை) அடக்கி இறைவன் வழி நிற்போமேயானால் எமக்கு கிடைக்கும் பேறு அளவிடற்கரியதாகும். திருவருளாகிய கருணையே திருவடியாகும். அந்த வேந்தன் அடியே மும்மல இருளைக் கெடுத்து பேரின்பப் பெருவாழ்வாகிய திருவடிப்பேற்றை நல்கின்றது. வேகம் கெடுத்தாளும் திருவடியின் பேறும் இதுவாகும். அண்டசராசரங்களில் உள்ள அனைத்து இயங்கியற் பொருட்களின் வேகநியதியைக் கட்டுப்படுத்தி ஒரு ஒழுங்குப்பாட்டிற்கு ஒழுங்கு செய்பவனும் இறைவனேயாம். என்பதனையும் நாம் விளங்கிக் கொள்ள முடியும்.** சைவசமயத்தவர்களுக்கு சிவபுராணம் என்பது ஒரு வரப்பிரசாதமேயாகும் என்பதையுணர்த்து தினமும் "திருவாசகத்தில் சிவபுராணம்" என்ற பகுதியைப் பொருள் உணர்ந்து உணர்ந்து படிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7 - பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க.**

பிறப்பறுக்கும் - பிறவியை அறுப்பது
பிஞ்ஞகன்றன் - தலை கோலம் உடையவன் எம்பெருமான்
பெய்கழல் - வீரக்கழல்,
வெல்க - வெற்றி பெறுக

சீறிப்பாயும் குளிர்ந்த கங்கையின் சீற்றம் அடக்கப்பட்டே! கங்கையின் வேகம் குறைக்கப்பட்டே சிவனின் சடாமுடியில் அது பாய்கின்றது. மேலும் சீறிப்பாயும் பாம்பு, குளிர்மதியமான பிறைச்சந்திரன் இவையெல்லாம் சடாமுடியில் அடக்கம். எனவே எல்லா உயிர்களுக்கும் அடைக்கலம் கொடுப்பவன் எம்பெருமான்! என்பதை நாம் நன்கு பக்திபூர்வமாக விளங்கிக் கொள்ளவேண்டும். பிறவியாகிய மரத்தை வேரோடறுக்கும் வல்லமை படைத்த அவன் சடாமுடியாகிய தலைக்கோலத்தை உடையவனின் திருவடிகள் வெற்றி பெறுக. இந்த தலைக்கோலமானது காட்டும் அர்த்தமென்னவெனில்? உலகிலுள்ள எல்லா உயிர்களும் எப்படிப்பட்ட கொடுமை நிறைந்த உயிராயினும், நன்மை நிறைந்த உயிராயினும், அவன் சடாமுடியில் தஞ்சம் என்பதனை விளக்கிக் காட்டுகின்றது! என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள்:- பிறவியாகிய துன்பத்தை, பிறவியாகிய வேரை வேரோடு அறுப்பவர்! இனிமேல் இல்லாமல் அறுப்பது எம்பெருமான்!

பிஞ்ஞகன்றன் என்றால் சிவபெருமானுடைய தலைக்கோலம் அது வித்தியசமான தனித்தன்மையுடன் விளங்குகின்றது. அதாவது 1 நீண்ட சடைமுடி, 2 பிறைமதி, 3 கங்கை, 4 பாம்பு என வேறுபட்ட குணம் குறிகளைக் கொண்ட அணிகளைக் கொண்டு தனித்தன்மையுடன் விளங்குவது அவனது சடாமுடி. இதனால் சிவனுக்கு பிஞ்ஞகன்றன்.! பிஞ்ஞகன்! என்ற பெயர் சிறப்பாய் அமைந்தது. இந்தத் தலைமுடி அமைப்பினை நாம் நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும். எப்படி எனின் எல்லா உயிரையும் காப்பவரும் கழிவிரக்கம் கொண்டவரும் சிவபெருமானேயாம்.! ஆகவே அவருடைய கழலாகிய தாள் யாவருக்கும் வெற்றியை தரும். நாமும் எம் வாழ்நாளில் அவ் வெற்றிகளைப் பெறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிஞ்ஞும்" என்ற சொல் ஒருவகைச் சடையையுடையவன் என்பதாகும். பிஞ்ஞகன்றனின் பெய்கழல்கள் ஆம்! அந்த தூக்கிய திருவடியே பிறப்பை அறுக்கும் என்பதைக் கூறுகின்றன. தூக்கியத் திருவடியே – பெய்கழல், பிறப்பை அறுப்பதுவும் அதுவே, இந்நிலையில் நடராஜர் உருவத்தை நாம் சிந்திப்போமேயானால் அந்த உண்மை எமக்கு நன்கு விளங்கும். பிஞ்ஞகன் - தலையும் சடாமுடியும், தலையில் அமைந்துள்ளனவற்றால் அமைந்த உன்னதமான கோலங்களுமாகும். அபயகரம் - அஞ்சல் என்ற மனத்திடத்தைத் தருவது. வரதம் - வேண்டிய வரத்தையும் பொருளையும் தருவது. கருணைபொங்கும் கண்கள் - மன அமைதியைத் தருவது. ஊன்றியத் திருவடி – உயிர்களின் ஆணவமலத்தை அடக்குவது. **இவையெல்லாம் பிறப்பை அறுக்காது ஆனால் பிறப்பை அறுப்பது மட்டும் தூக்கியத் திருவடியே, அதனாலேயே அது பெய்கழல் என்றார்.** ஆகவே 'பிறப்பறுக்கும் பெய்கழல்' என்பதைவிட... பிறப்பை அறுப்பது பெய்கழல்கள் என்பது விசேடித்து நிற்கும் திருவடியாகும் என்பதை இங்கு நன்கு உணர்த்துகின்றார். பெய்கழல்கள் வீரக்கழல்கள் வெல்க?

**8 - புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க.**

புறந்தார் - தூரத்திலிருப்பவர்கள்
சேயோன் - தூரத்திலிருப்பவன்
பூங்கழல்கள் - பூப்போன்ற திருவடிகள்
வெல்க - வெற்றி பெறுக.

"அன்பரன்றி அறிய ஒண்ணா மலர்சோதியான்" (சென்னிப்பத்து). வணங்காதவர்களுக்கு அவர் தூரத்தே இருப்பவர். ஆனாலும் அவரின் பாதங்கள் பூப்போன்ற பாதங்கள், பூப்போன்ற பாதங்களாயினும் "அட்டவீரட்ட செயல்களை"யும் புரிந்தகழலாகும். வீரக்கழலாகும் ஆனாலும் அவன் ஈற்றில் எல்லோருக்கும் அருள் கொடுத்து யாவரையும் புறத்தார் என்று விட்டெறியாமல் ஆள்பவனேயாம். ஆனால் வணங்காது வேற்றராகி இருப்பவர்களுக்கும் அவன் அருளும் தூரத்திலேயாம் (சிவபெருமானின் பெருமையை உணராது அவன் திருவருளுக்கு பாத்திரமில்லாதவர்கள்) சேயோன் - தூரத்திலிருப்பவன் அவன். பூங்கழல் - பொலிவுடைய கழல் இந்த பொலிவுடய கழலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் போற்றிப் போற்றி அண்மிக்கவேண்டும். இறைவனை நினைவுற நினைந்தால் அதாவது மறவாது நினைத்தால் அண்மையாக்கிக் கொள்ளலாம். இறைவனை நெருக்கமாக்கிக் கொள்ளலாம். இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதவனாக அவன் எம் உள்ளேயே இருப்பான் என்பது திண்ணம்.

"புறத்தார்" என்பது? இறைவன் திருவருளில் ஈடுபடாமல், திருவடிபேற்றை உணராமல் இருப்பவர்கள் என்பதை எடுத்துக்காட்டுவது. ஆனால் இதன் உள்கருத்தை நாமெல்லாம் உணர்ந்து பார்ப்பது நல்லது. இறைவன் சேயோனாகப் போகவில்லை, நாம் தான் இறைவனை விட்டு தூரமாகப் போய்விட்டோம். **இது மாணிக்கவாசக சுவாமிகள் உலகியலைப் பற்றிக் கொண்டு வாழும் மனித இனத்திற்குவிடும் எச்சரிக்கையாகும்.**! இறைவனோடு நெருங்கியிருப்பதற்குத் தடையாக இருப்பது முதலில் இந்த ஐம்பொறிகளேயாகும். இதனை திருஞானசம்பந்தர்ப் பெருமான் திருவலி வலப்பதிகத்திலே,

**ஆயமாய காயம் தன்னுள்ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்**
**மாயமேயென்று அஞ்சுகின்றேன் வலிவல மேயவனே**
**(திருமுறை 1 - 50 - 7)**

ஒன்றியபோது திருவடி நிழலிற் தங்கும் சிறப்பும்! நாம் இறைவனேடு ஒன்றாதபோது புறத்தே போகும் கொடுமையும் இப்படி அமைந்து விடுகின்றது. இவையெல்லாம் பொறிபுலன்களால் நிகழ்பவை. இதனையே இங்கே புறத்தார் என்று குறிப்பிட்டுள்ளார். ஞானியர்க்கு இறைவன் அண்மையிலும் அண்மையாகின்றான். இறைவனை, ஞானியர் பேரறிவின் துணை கொண்டு அருவநிலையில் அருள்நிலையில் வழிபடுபவர்கள் என்பதே இதன் பொருளாகும். அவர்கள் ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் பக்தியும் சக்தியும் உணர்வுமிக்கவர்கள் மெய்யன்பினால் சிவனைப் போற்றுபவர்கள் சிவநெறிவழுவாது நின்று சிவனுடன் நெருங்கி இருப்பவர்கள் என்பது இங்கே புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9 -கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க.**

| | |
|---|---|
| கரம் குவிவார் | - கரத்தை குவிப்பவர்கள் |
| உள் மகிழும் | - ஆனந்தமடையும் |
| கோன் | - அரசன், மன்னன் |
| கழல்கள் | - திருவடிகள் |
| வெல்க | - வெற்றி பெறுக |

எந்த நேரமும் இறைவனையே சிந்திப்பவர்களுக்கு! உள்ளம் மகிழும் தலையின்மேல் கைகூப்பி வணங்குவதால் மயிர் சிலிர்க்கும் மேனிபுல்லரிக்கும் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம் உருகும். இது இறைவனை உள்ளன்போடு வணங்குவதால் ஏற்படும் மெய்பாடுகள் ஆகும், இறைவன் கரம் குவிவானது உள்ளத்தை மகிழ்விப்பான். உள்ளம் சுத்தமாக இருந்து திரிகரணசுத்தியோடு கரம் தலைமேல் கூப்பி வணங்க வேண்டும். அப்பொழுதுதான் இறைவனை மகிழ்வித்து எம் பாவத்தைக் கழித்து எம் பாவங்களைக் கழுவி நாம் கோன்கழலை அடைய முடியும். கைகூப்பி வணங்குபவர்களுக்கு இன்பமளிப்பவனான இறைவனின் திருவடிகள் வெற்றி பெறுக. சிரத்தின் மேல் கைகூப்பி வணங்குபவர்களின் இறை நம்பிக்கையிலும், ஆன்மபலத்தினாலும் நலம் தரும் தாள்களை சுலபமாக அடையமுடியும். இது தாள்களுக்கு அதாவது திருவடிகளுக்கு இணையான வணக்கம் ஆகையால் உள் அன்போடு வழிபடுபவர்களுக்கு நலமெலாம் தானே கிடைக்கும், என்பதை சுவாமிகள் தானே நன்கு தெளிவாகக் கூறிவைத்துள்ளார்.

கரங்குவிவார் - கரமானது குவிக்காமலே தானாகவே சென்று ஒன்றாகிக் கரம் குவிகின்றது. இந்நிகழ்வோடு ஒருவகை ஆனந்தம் உள்ளத்துக்குள்ளே உண்டாகின்றது. **அதாவது நமது சிந்தனையின் உணர்ச்சியே கரம் குவித்தலாகிய செயலாம்! இது உள்ளத்தின் உள்ளே ஆனந்தத்தை உண்டாக்குன்றது.** கரங்குவிவார் உள்மகிழும் என்று கூறுகின்ற இடத்தில் வெளிமகிழ்ச்சியும் உண்டு, அகம் ஆம் உள்ளம் மகிழும் ஆனந்தமும் உண்டு. கரம் குவிவார் உள்மகிழும் என்பதை நாம் உணர்ந்து பார்த்தால் **கரம் என்பதை :- நாடிக்கும் மூச்சுக்குமாகக் கொண்டு செல்லும் யோகப் பயிற்சியையும் ஞானப் பயிற்சியையும் என்றே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்குகின்றார்.** இதனை மாணிக்கவாசக சுவாமிகள் முற்றிய ஞானநிலையில் நின்றே! இவ்வுலகிற்குத் தந்தார்கள், விளக்கினார்கள் என்பதை நாம் உற்றுணர்ந்து படிப்பது பெரும் நன்மை பயக்கும். கோன்கழல் - அவனுக்கு மிஞ்சிய அரசனில்லாத முதல்வனது பாதம் என்பதே இங்கே குறிக்கப்படுகின்றது. அவர் இவற்றை யெல்லாம் சிறந்த ஞானப்பயிற்சியினாலும்! யோகப் பயிற்சியினாலுமேயே? எமக்கு தந்துள்ளார் என்பதை எண்ணி எண்ணி நாம் அவரைப் போற்ற வேண்டும். நம் நன்மைகளை பெறுவதற்கென்றே கரம்குவியும் மேன்மையை இங்கேகுறிப்பிட்டுள்ளார்.

**10 - சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க.**

சிரம் - தலை
குவிவார் - சிரத்தின்மேல்க்கை குவிப்பவர்கள்
ஓங்குவிக்கும் - ஓங்கச் செய்யும்
சீரோன் - யாவற்றையும் தருபவன்.
கழல் - திருவடி
வெல்க - வெற்றி பெறுக.

சகல ஆற்றலும் ஒருங்கே அமைந்தவன். சீர்கள் பொருந்தியவன் சிறப்புகள் எல்லாம் பொருந்தியவன் இறைவன். அதாவது புகழ், அழகு,செல்வம், கல்வி உள்ளமகான்களானாலும் அவனை அந்தக் கரண சுத்தியோடு வணங்கவேண்டும். சகலரும் சகல அருள்நிறைவையும் யாவற்றையும் தருபவனை சிரத்தின்மேல் கைகுவித்து வணங்குவோமாக! திரிகரண சுத்தியோடு வணங்குபவர்களை! சிரத்தின் மேல்க்கைகுவிப்பவர்களை இறைவன் ஓங்குவிப்பவன். அதாவது அந்தக் கரண சுத்தியோடு – அந்தக் கரணங்கள் என்பது? முக்கரங்கள் - முக்கரண சுத்தியோடு வணங்குபவர்கள்! முக்கரணங்கள் - மனம், புத்தி, சித்தம் (திரிகரணம்) சிரத்தின் மேல்க்கை கூப்பி வணங்குபவர்களை ஓங்குவிப்பவன் முழுமுதலாகிய சிவன் ஒருவனேயாம். உயிர்களில் படிந்துள்ள மலத்தின் ஆற்றலை வலிகெடச் செய்வது தான் அவன் கழல்கள்! இந்தக்கழலே சிரத்தின் மேல் கைகுவிப்பவரை ஓங்கச் செய்யும். உயர்வடையச் செய்விப்பவன் இறைவனேயாம். அவன் சீரோன் - சிறப்புக்கள் சீர்கள் யாவற்றிலுமே மேலோங்கியவன் என்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருப்பெருந் துறை என்கின்ற ஆவுடையார் கோயில்

இந்திய மாநிலமான தமிழ் நாடு புதுக்கோட்டை

மாவட்டத்திலுள்ள தேவாரப் பாடல்பெற்ற

சிவன் கோயில் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைகளான சிவனின் சீரோனின் வெற்றியான பொற்றகமலங்களின் மேன்மைகளாகும். இவையெல்லாம் யாருக்கும் இல்லாத தனி மேன்மையும் புனிதமுமாகும் என்பதை உணர்ந்து சீரோன் என்றார். சீரோனை நாம் சீர்பெற ஏற்றிப்போற்றுவோமாக. என்பதையே இங்கே சீரோனை ஏற்றிப் போற்றுவதால் சிரம்குவிவதால் சீர்எல்லாம் கிடைக்கும் என்கிறார்.

சிரங்குவிவார் - இறைவனை வணங்கும் போது தற்போதம் **(தன்இச்சை)** இல்லாது நீங்கி, அதாவது பொறி புலன்களின் சிந்தனைக்கும் இடம்கொடாமல் சிவபோதத்தில் நின்றே **(அதாவது அகமனம் முழுக்கவே இறை சிந்தனையாகவே)** வழிபடவேண்டும். அப்படியானால் தன்முயற்சி இல்லாமலே கைகள் சிரத்தின் மேல் தானே குவியும். கைகள் சிரத்தின் மேல் குவிவதை சீதாகாசம் என்கின்றார்கள். **(இங்கே சிரங்குவிவார் என்பது பக்குவமடைந்த ஆன்மாக்களாகும்.) சிரத்தின் மேல் கையை உயர்த்த உயர்த்த மனப்பக்குவம் என்பதுதானே வரும்.**

**இதனை ஓர் உதாரணத்தினால் பார்ப்போம்.**!

கடலில் மூழ்கியவன் - கையை உயர்த்தும் போது அதை கண்ணுற்றவன் ஓடிச்சென்றுக் காப்பாற்றுவான். அதே போல் பிறவி எனும் பெருங்கடலிலிருந்து காப்பாற்றுபவனும் இறைவனே. **அவன் பிறவி என்னும் பெரும் கடலிலிருந்து நம்மைக் காப்பாற்றி தன்திருவடி** நிழலில் ஏற்றுவிப்பதையே, "ஓங்குவித்தல்" என்பதாகும். எனவே ஓங்குவித்தல் என்பதுவும் திருவருளால் தான் என்பதை இங்கே சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். சீரோன் சிறப்புக்கள் யாவும் பொருத்தியவன் **அவன்** ஒலிக்குத் தலைவன் என்பதும் பொருள். நாதத்தின் தலைவனென்பதும் இதன் பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11 - ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி**

ஈசன் – எப்பொருளையும் ஆள்பவன்
ஈசன் – ஐஸ்வர்யம் உடையவன்
எந்தை – என் தந்தையை
அடி போற்றி – திருவடிகளுக்கு வணக்கம்
போற்றி – போற்றி போற்றி

மீண்டும் மீண்டும் வணங்கி, வணங்கி போற்றுவது ஈசனுடைய திருவடியை. அந்த திருவடிக்குப்போற்றி என்று என்று நாம் வணங்கும் ஈசனின் திருவடிகளை மேலும் மேலும் போற்றிப் போற்றியும் வணங்குவோமாக. ஈசன் : எப்பொருளையும், அண்டங்கள், யாவற்றையும், தோற்றுவிப்பவனும் ஆள்வோனும் முறையாக இயக்குபவனும் ஆவான். எப்பொருளையும் ஆள்பவன். ஆகவே ஆள்வோனின் திருவடிகளுக்கு வணக்கம். அத்தோடு சகல உயிர்களின் தோற்றத்திற்கும் மூலப்பொருளாய் இருக்கின்றவனாகையால் என்தந்தை என்றும் எந்தையென்றும் அவன் யாவராலும் போற்றப்படுகின்றான். அண்டங்கள் யாவையும் அவர் தம்மிடத்திலிருந்து தோற்றுவித்தும் முறையாகவும் இயக்கியும் வருவதால் அவர் ஈசன் எனப்படுகிறார். அலைகளுக்கு மூலப்பொருள் கடல், கடல் இல்லையேல் அலைகள் இல்லை. அங்ஙனம் உயிர்களுக்கு மூலப்பொருள் - ஈசன். கடல்கள் மூலமாகிய அலைகள் கடலிலிருந்து எழுதுவது போல உலகிற்கும் உயிர்களுக்கும் மூலமாகிய இறைவனே மூலப் பொருள். ஆகவே அவன் ஈசன் எனப்பட்டான். ஈசன் அடியினை போற்றிப் போற்றி, எந்தை அடியினைப் போற்றிப் போற்றி வாழ்வோமாக. இவ்வுலகில் நயம் பெறுவோமாக. திருவடியைப் போற்றுவதால் இறிதிப்பேறாகிய திருவடிப்பேறும் எமக்குக் கிட்டிவிடும், என்பதுவும் சிவபுராணம் கூறும் உண்மையாகும்.

ஈசனடியானது - நாதன்தாள் வாழ்க தொடங்கி "அருளுமலை போற்றி" என்பது வரைக்கும் 1-17 வரிகளிலே திருவடியையே குறிக்கின்றார். "திருவடி" என்பதும் வழங்கப் பெற்றுவரும் "திருவருள் பேறாகவே" சைவத் தமிழர்களுக்கு அது அமைகின்றது. எனவே இவ்வுலகியலில் துயரத்தைப் போக்குவதற்கும், அமைதியைத் தருவதற்கும் காரணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது இறைவன் திருவருள் ஒன்றேயாம். ஆகவேதான் மாணிக்கவாசகசுவாமிகள் ஈசன் - பெரியோன், மகாபெரியோன் ஏன்றும் கூறி எந்தை —என்தந்தை என்கிறார். தந்தை என்றால்? தந்தைக்கு ஈடுஇணையானவன் இவ்வுலகில் யாருமில்லை என்பதுவே பொருளாகும். ஈசனடி எந்தையடி என்பதைத் தனக்கு புறப் பொருளாகவும் அகப் பொருளாகவும் கொள்ளும் ஞானநிலையில் நின்றுகொண்டே சுவாமிகள் இதனைக் கூறியுள்ளார். என்பது நமக்கெல்லாம் பக்தியைப் பெருக்கும் கவனத்தை ஈர்க்கும் ஒரு விடயமாகும். இந்த வசனத்தை நாம் முழுக்கவனத்தோடும் உணர்வோமாக.

**12 - தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி**

| | |
|---|---|
| தேசன் | - ஒளி நிறைந்தவன் |
| தேசஸ் | - சூரியன், தேசன் தேசன் என்பது இது பொது ஒளியாகும். |
| சிவன் சேவடி | - சிவபெருமானுடைய சிவந்ததிருவடி |
| போற்றி | - வணக்கம். |

செம்மையும் மேன்மையும் பொருந்திய செம்மையான திருவடிகட்கு வணக்கம். செம்மேனி எம்மானின் திருவடிக்கு வணக்கம்! சிவன் திருவடியை இடையறாது வணங்கி நாம் முத்திப் பேறினுக்கும் முனைவதே நம்பிறவிக்குக் கிடைக்கும் மேன்மையாகும். சூரியஒளி போன்றவனினதும், ஞானப்பிரகாசமுடையவனினதும், பாதங்களுக்கும் ஒளி நிறைந்தவனுக்கும் நமஸ்காரம். செந்தாமரை போன்று சிவந்த திருவடிக்கு வணக்கம். ஜோதி மயமான ஒளியும் செம்மையும் நிறைந்த திருவருளும் சேர்ந்த சிவன் சேவடிக்கு வணக்கம். சூரியஒளிப் பிரகாசம் நிறைந்த சிவன் சேவடியைப் போற்றி அருள்பெற்று என்றும் ஒளிபெறுவோமாக.

தேசனடிபோற்றி - இறைவனின் திருவடியை வாழ்க: வெல்க என்று போற்றி "ஓங்குவித்தல்" என்று கூறுவதில் வியப்பு ஒன்றுமில்லை.! சமய உலகிலே ஞானிகள் கூறுவது "தேசன்" என்பது "பொதுத் தன்மையும்" சிவன்என்பது? தனித்தன்மையையும் குறிப்பதென்பதாகும். என்பதேயாம். எனவே தேசனடி? பொதுத் தன்மையும், சிவன் சேவடி என்றது? சிவனின் சேவடியின் தனித்தன்மையுமாகும். இவ்வுலகிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு உயிரிலும் ஒளியானது நிலைபெறுவதற்கு பரம்பொருளின் ஒளியானது ஒவ்வொரு உயிர்கள் தோறும் கலக்க வேண்டும். கலந்துள்ளது. உயிரின் இருளைப் போக்கி அதனை ஒளி மயமாக்குவது இந்தப் பரம்பொருளின் பேரொளியேயாகும். அப்போது அந்தப் பேர் ஒளியை தனியொளியாக வணங்கிப் போற்றுகின்றோம். அகண்டாசாரத்தில் பேரொளியாக விளங்குகின்ற ஒளியானது பரம்பொருளின் ஒளியேயாகும். எம் உடம்புக்குள்ளேயும் உள்ளொளியாக செயல்படுகின்றான். அவன் சேவடியை 'சிவன் சேவடி' என்று தனியொளியாகவும், சிறப்பு ஒளியாகவும் போற்றுகின்றோம். என்றும் போற்றி வணங்குவோம், வாழ்த்துவோம் சிவன் சேவடியைப் போற்றிப் போற்றி வணங்கி முத்தி நிலையினைப் பெறுவோமாக! எம் உள்ளத்திலும் "சிவஒளி பிரகாசிக்க" வேண்டும். அது தனி ஒளியாக எம்மை வாழவைக்கும் என்பதை சிவபுராணத்தின் இந்த வரிகள் மூலம் எம் மனதிருத்துவோமாக.

**13 - நேயத்தே நின்ற நிமலன்அடி போற்றி**

| | |
|---|---|
| நேயம் | - அன்பு |
| நின்ற | - அன்புக்குள் நிற்பவன் |
| நிமலன் | - மலமற்றவன் |
| அடி | - திருவடி |
| போற்றி | - போற்றுதல் |

அன்பில் ஊறியுள்ளவன் அவன் அந்த தூயவனது திருவடிக்கு வணக்கம். அவன் அன்பு நிறைந்தவன் அழுக்கில்லாதவன் ஆகையால் எமக்கு அருள் எல்லாம் தந்து அருள்வான். அன்பு நிறைந்த, அருள் நிறைந்த, நேயம் நிறைந்த திருவடிக்கு வணக்கம். நேயம் நிறைந்த நிர்மலன் அவன். என்றும் அவன் நேயம் நிறைந்தவர்களாக அன்பு நிறைந்தவர்களாக உள்ள எம்மை வழிநடாத்துவான் என்பதும் என்றும் அன்பு நிறைந்த உறுதியான உண்மையாகும்.

ஒரு ஜீவனுக்கு அன்னியமாய் அண்மித்து இருப்பதே மலம், அழுக்கு, ஆனால் அழுக்கு என்று இங்கு இறைவனாருக்கு ஒன்றுமில்லை. அன்னியம் என்றோ வேண்டப்படாதது என்றோ தேவை என்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு எதுவுமில்லை. ஆகவே இறைவன் நிமலன் எனப்படுகின்றான். அத்தோடு அன்போடு (நேயத்தோடு) நிற்பவன். அழுக்கெதுவுமில்லாத நிமலனுடைய திருவடிகளுக்கு வணக்கம், என்று தூயமனத்தோடு போற்றி நிற்கின்றார். இறைவனுடைய நேயம், நேயம் நிறைந்த அன்பு, நேயம் நிறைந்த உள்ளத்து உருக்கம் இவையாவும் என்றும் மாணிக்கவாசகரது மனதை விட்டகலாதது ஆகும். இறைவன் நேயம் நிறைந்த உள்ளமுடையவர்களைக் கைவிடமாட்டான் என்பது இங்கே நன்கு தெளிவாகும் உண்மையாகும்.

நேயத்தே நின்ற – பக்தர்கள் தங்கள் அன்பிற்கும், வழிபாட்டிற்கும் மாசற்ற இறைவனை நேயத்தே நின்ற நிமலன் என்பர். ஒரேயொரு உபகாரம் செய்தவர்களைக் கூட மறக்கக் கூடாதுஎன்கிறது திருக்குறள்! மறப்பது பெரும் பாதகமாகும். அதே போன்று நாம் எடுத்த பிறவிதோறும் இறைவனே எம்மைக் காப்பாற்றி அந்தப் பிறவிகளிலே அருளைத் தந்து இறுதியிலே வீடுபேற்றையும் தருபவன் அவனே.

**அன்போடியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என் போடியைந்த தொடர்பு**

**(திருவள்ளுவரின் அரிய குறள்)**

எலும்புக் கூட்டுக்குள் உயிர் புகுவதும், பேருயிராகிய பரம்பொருள் உயிருக்குயிராக உள் இருந்து தொழிற்படுவதும், உயிர் உடலோடு பொருந்துவதும் இறைவனின் அன்பின் பிணைப்பே. அது நேயத்தே நின்ற நிமலனின் அருளின் பிணைப்பேயாகும். இறைவனின் தொடர்பை இனிதாக விளக்குகின்றார் சுவாமிகள். "அன்பினால் தோய்ந்து நம் அகத்திலே அவன் வந்தபோதிலும்" நாம் மாசு உள்ளவர்கள் ஆதலால் அவன் அருளை எண்ணிப்பார்பதில்லை, உணர்ந்து பார்ப்பதுவுமில்லை ஆனால் சிவனை எமது எந்த மாசுக்களும் தீண்டுவதில்லை. அவன் நிமலன் - ஞானச் செம்பொருளேயாவான். பேரருளாகிய பரம்பொருள் உயிருக்குயிராய் எம்முள் புகுந்து தொழிற்படுவது அன்பின் இயக்கம் தான் என்பதை நேயத்தே நின்ற நிமலன் என்பதிலிருந்து எமக்கெல்லாம் விளக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14 - மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி**

| | | |
|---|---|---|
| மாயம் | - | மாறியமையும் தன்மையுடையது |
| பிறப்பறுப்பவன் | - | பிறவியை இல்லாமல் செய்பவன். |
| மன்னன் | - | யாவருக்கும் மன்னன் |
| அடி | - | திருவடி |
| போற்றி | - | போற்றுதல் |

பிறப்பு, இறப்பு என்றும் மாறுபாட்டை உடையது. இவ் உலகம். உயிர்களும் அதுவும் உலகமும் மாறி மாறியமையும் தன்மையுடையது. அந்த மாறுபாட்டுக்குள் அமைவது தான் ஒரு ஜீவன். ஒரு ஜீவன் இந்த மாறுபாட்டுக்குள் அகப்பட்டுச்சுழல்கின்றது . ஒரு ஜீவனை இந்த **பிறப்பு இறப்பு என்னும் மாறுபாட்டுக்குள் அகப்படாமல் காக்கின்ற இறைவனுக்கு வணக்கம். மாயமாம் பிறப்பை அறுக்கும் "மன்னனின் திருவடி சிவபெருமானுடைய திருவடியேயாம்." என்பதை எம் உள்ளத்தில் நாம் என்றுமே எண்ணி, எண்ணி அவன் திருவடியை மறவாதிருக்க வேண்டும். அவனே! மாயமான பிறப்பை அறுத்து இல்லாதொழித்து ஒரு சீவனுக்கு நல்ல கதியைக் கொடுப்பவன் ஆவான்.** அவனது இயக்கமாக உள்ளது இவ்வுலகம் அது மாறும் அதுவும் பல மாறுபாடுடையது. நிமிஷத்துக்கு நிமிஷம் இவ்வுலகம் மாறும். மாயையாகிய இவ்வுலகிற்கும், இப்பிரபஞ்சத்திற்கும் அது நிமிஷத்திற்கு நிமிஷம் மாறுவதால் மாயை என்று பெயரும் உண்டு? மாற்றமடைவது எதுவோ? அது மாயை. இந்த மாயைகளுக்கெல்லாம் அவனே காரணகர்த்தா அவனுக்கு மாறாத தன்மையுண்டு இவ்வுலகில் மாற்றமடையாதவனாய் இருப்பவனும் அவன் ஒருவனே! தான்! அவனது திரு அடிகளுக்கு வணக்கம். பிறப்பு இறப்பு என்பதை மேலும் மேலும் தொடர விடாது ஒரு சீவனைப் பிறவி சுழியில் இருந்து காப்பவன் சிவபெருமானேயாம். ஆகவே அவனது திருவடிகளுக்கு வணக்கம். நமது வாழ்நாளில் எம்மன்னனைப் போற்றிப் போற்றி வணங்கப் போதாது வாழ்நாள் என்பதையும் நாம் உணர்வோமாக.

மாயப்பிறப்பு – பிறவித் துன்பங்களைக் கடப்பதற்கும் இப்பிரபஞ்சத்திற்கும் எம்பெருமானுடைய திருவடிகளே துணை, ஒரு உயிருக்கு மாணிக்கவாசக சுவாமிகள் குறிப்பிட்டது 14 பிறப்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும் எல்லோரும் பிறவி வேர் அறுக்க மிகவும் முயல்வது போல் நாமும் 14 பிறப்பும் அறுக்க முயல்வோம் என்கிறார். ஆனால் "சைவசித்தாந்தம்" குறிப்பிடுவது ஏழுபிறப்பு மட்டுமேயாம். ஆனால் இவரோ எல்லோரும் மாயப்பிறப்பே பிறந்து பிறந்து உழல்வது என்பது உண்மை என்பதையும் இங்கே உறுதிப்படுத்துகிறார். அவரும் இந்த மாய உலகிலே! தான் பிறந்த பிறவி என்பது மாயப்பிறப்பாகும் 14 பிறவியையும் மிகவும் கவலையுடன் உண்டு என்கிறார். வீடுபேறே பிறப்பின் எல்லையாகும். என்றும் சிவப்புராணத்திலே கூறிவைத்துள்ளார். சிவனருளைப் பெறுவதற்கு ஒரு ஆன்மாவானது தன்னை நன்கு தயார்படுத்த வேண்டும்.! இறை பக்தியுடன் முயன்றால் தான் பிறவிவேர் அறுக்க முடியும். மன்னன் - அவன். சிவன் அவன் பிறவிக்கும் மன்னன் எனக் கூறுகின்றார். உயிர்களைக் காப்பதிலும் மன்னன்! அழிப்பதிலும் அவனே மன்னன்,! வீடுபேறு தருவதிலும் அவனே மன்னன்.! ஆகவே எதைப் பெற வேண்டுமானாலும் "மன்னனைப் போற்ற" வேண்டும். மேலும் மேலும் ஆன்மாவை உயர்த்திச் செல்பவன், உயர்த்தி உயர்த்திச் சென்று மாயப் பிறப்பு நீக்கி வீடுபேற்றை அடையச் செய்பவனும் இறைவனான மன்னனேயாம். ஆகவே மன்னனடி போற்றி என்றார். ஆம் மாயப் பிறப்பறுக்கும் மன்னனடிப் போற்றி என்று உலகோருக்காவே போற்றி போற்றி என்று போற்றுகின்றார்.

**15 - சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி!**

| | |
|---|---|
| சீரார் | - சீரினை உள்ளவர், ஒளியுடையவர் |
| பெருந்துறை | - திருபெருந்துறை, |
| நம் தேவன் | - நம் இறைவன், |
| அடி | - திருவடி |
| போற்றி | - போற்றுதல் |

சீரினை உடைய மேன்மை நிறைந்தவருடைய திருவடிகளுக்கு வணக்கம். அவனது திருவடியை என்றும் நினைத்து போற்றி செய்வோம். மேன்மை பொருந்திய திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் நம் இறைவனின் திருவடிக்கு என்றும் எம்மனம் மாறாத வணக்கம். வணக்கம் என்று நம் தேவனாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானைப் போற்றுவோம். எம்மனதில் ஏற்றுவோம். திருப்பெரும் துறையில் உள்ளவரை நம் தேவனைப் என்றும் ஏற்றிப் போற்றுவோம். திருப்பெருந்துறையும், மாணிக்கவாசகசுவாமிகளும், சிவபுராணமும் நெருங்கிய தொடர்புகளோடு கூடியவை என்பதை நாம் உணர வேண்டும். இந்த உணர்வினைச் சிந்திக்கவேண்டும். எம்பெருமான் மாணிக்கவாசகரை திருவடித் தீட்சை கொடுத்து ஆட்கொண்டது திருப்பெருந்துறையிலேயாம். அத்தோடு "சிவபுராணம்" பிறந்ததும் திருப்பெருந்துறையிலேயாம் **ஆகவே திருப்பெருந்துறை மிகவும் உன்னதமான இடத்தில் இருக்கின்றது என்பது உண்மையாகும். மாணிக்கவாசகசுவாமிகள் உள்உணர்வு மேலீட்டினால் "பெரும் துறைப் பெருவெள்ளமே" என ஓர் இடத்தில் எம்பெருமானை அழைத்தார் என்பதையும் இங்கே நாம் நினைவு கூர்வது சாலப்பொருந்தும்.**

'சீரார் பெரும்துறை நம் தேவனடி போற்றி' (சீர் - ஒளி, ஆர் - அகத்திலுள்ள மனத்தில் உள்ள ஒளி) எமது தூல சூக்கும உடல்களில் ஒளியாக விளங்கும் ஒளியும் இறைவனே தான் அவன் நமக்கு அகவொளியாகவும் புற ஒளியாகவும் விளங்குகின்றான். ஆகயால் தான் சீரார் பெருந்துறை நம் தேவன் என்றார் - பெருந்துறைத்தேவன் நமக்கு அருள் பாலிக்க வேண்டும். அந்த அருள் எப்பொழுதும் எமக்கு வேண்டுமனாலும் நாம் எமக்கு என்றே சிவமுயற்சி செய்ய வேண்டும். எமது வாழ்வில் சிவமுயற்சி பூர்த்தியாகச் சிவனின் அருள் வேண்டும். இவை இரண்டையும் அடையவே "சைவசமயம்" பலபடித் தரளங்களை நமக்குக் கூறுகின்றது. நம் தேவன்! சகல மக்களுக்கும், எல்லோருக்கும் உரிமையுடையவன் என்பதைக் கீழ் கண்ட வரிகளிலே கண்டப்பத்திலே விளங்கவைக்கிறார்கள் சுவாமிகள்

**எல்லோரும் இறைஞ்சு தில்லை**
**அம்பலத்தே கண்டேனே**

**(திருவாசகம் கண்டப்பத்து)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16 - ஆராத இன்பம் அருளும் மலை போற்றி**

| | | |
|---|---|---|
| ஆராத இன்பம் | - | தெவிட்டாத இன்பம் |
| அருளும் | - | அருள் சுரக்கும் |
| மலை | - | அருள் அருவியைத் தரும் மலை |
| போற்றி | - | அந்த மலையை நாம் போற்றி வணங்குகிறோம். |

தெவிட்டாத ஆனந்தத்தை ஊட்டியருளுகிறவனும், மலைக்கு ஒப்பானவனுமாகிய, சிவனுக்கு வணக்கம். சிவனுடைய அருள் அன்பருக்குத் தித்திக்கும். தெவிட்டாது தித்திக்கும் அவனது அருளை சிவபெருமான் யாவருக்கும் தாராளமாக அருளுகின்ற மலைபோன்று இருக்கின்றான். அவனைப் போற்றுவோம். அவனது இன்பத்தினால் தீராத துன்பமெல்லாம் தீரப் பெறுவோமாக அதுவே எமக்கு கிடைத்த பேரன்பின் வழியாகும் என்பதிலிருந்து "ஆராத இன்பம் அருளும்மலையைப் போற்றுவோம்" என்கிறார்.

அருள்நிறைவினால் தித்திக்கும் ஆனந்தத்தைத் தருபவராதலால் அவர் அடிகளுக்கு வணக்கம். மலை போன்றவர் அவர். அவருக்கு வணக்கம். "மலையிலிருந்து அருவி பாய்வது போல பாயும் அருளானது என்றும் வற்றாதது." இறைவனால் என்றும் எமக்கு உண்டாகும் இன்பமும் அருளும் அருவி போன்று என்றுமே வற்றாதது ஆகும். இறைவனுடைய அருளின் இன்பமானது என்றுமே வற்றாது யாவருக்கும் சுரந்து கொண்டே இருக்கும் என்பதை நாம் என்றென்றும் மறந்துவிடக்கூடாது. அவன் திருவடியைப்பெற என்று அன்பு செய்பவர்கள் அவன் அருளைப்பெற்றவர்களாவர்கள், என்பது அருளும் மலையின் அன்பினால் நமக்கு விளங்கும். அதுகுறையாது கிடைக்கும் அதுவே எம்மை வழிநடத்தும்.

**ஆராத இன்பம் - சுவாமிகள் தன்னுடைய தகுதியைக் கூடப்பாராமல் தனக்கு தெவிட்டாத இன்பத்தை இறைவன் தன் பொருட்டு தனக்கு அருளுகின்றான் என்று கூறுகின்றார். இன்பமும், துன்பமும் இரண்டுமே ஒவ்வொரு வகை இயல்புடையனவே யாகும் இவற்றை இறைவன் தனக்கு அருளுகின்றான். ஆனால் அதுவும் தனக்கு மிகவும் உயர்வான ஆராத இன்பத்தை அருளுகின்றான் என்று கூறியுள்ளார். இவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்லாவற்றையும் நாமும் தெளிவாக உணரவேண்டும் என்று எம் யாவருக்கும் கூறியுள்ளார்.** புவனம் - உலகம், போகம் நாம் இவ்வுலகில் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் - உயிர்கள் இவ்வுலகில் வாழுகின்றன! அந்த உயிர்களுக்கு இன்பதுன்பங்கள், ஒரு அளவிற்குப் பின் இன்பமும் சலித்துவிடும், துன்பமும் சலித்துவிடும். ஆனால் இறைவன் தருகின்ற இன்பம் "ஆராத இன்பம்" "இறை இன்பம்" மட்டும் "தெவிட்டாத இன்பம்" என்கின்றார். தன்னுடைய அனுபவத்தால்! அத்தோடு "அருளும் மலை" என்றால்? அருளிலும் அன்பிலும் "அதனிலும் மேலான அன்பிலும் உயர்ந்த அன்பையும்" மேம்பட்ட உயர்ந்த அருளையும் என்பதையும் நாம் நன்கு உணர்ந்து பார்க்க வேண்டும். உணர்ந்து பார்ப்பவர்கள் ஒருசில நேரம் இது இறைவன் அருளாம் ஆகவே அவன் தந்த அருளினாலேயே இந்த தனு கரண புவன போகங்கள் படைக்கப் பட்டிருக்கின்றன. என்பதை உள் உணர்வில் உணரவேண்டும். இவற்றை உலகிலுள்ளோர் யாராவது உணர்கிறார்களா??

தனு – உடம்பு, கரணம் - உடலின் கருவிகள் புவனம் - உலகம், போகம் - நாம் அனுபவிப்பவை இவை எல்லாம் இறைவன் தந்ததே! ஆனால் சிலர் ஏதோ தாமே தம் முயற்சியால்.... தமது அறிவின் திறத்தால்.... இவ் உலகிலுள்ள எல்லாவற்றையும் படைத்துக் கொண்டதாகவும் இங்கே அவற்றை எல்லாம் அனுபவிப்பவர்களாகவும் எண்ணுபவர்களும் உண்டு. இங்கே மனிதர்கள் இறைவனை உணராத தன்மையே தெரிகின்றது. எவ்வாறாயினும் எல்லாப்புகழும் அவனுக்கே இறைவனே இவற்றை எல்லாம் அருளியிருப்பதாலும், அவன் உயிர்களுக்கு எல்லையில்லாத அருள்புரிவதாலும் "மலை" என்றார். "அருளும் மலை" இப்போது இவ்வுலகில் எமக்கு அருளுவதைவிட அதிகமான இன்பமானது வீட்டின்பம் ஆகும். அதுவே முத்திப்பேறு!! அது மறுமை இன்பம். விடுதலை தந்த பேறாகிய பேரின்பம்.அதுவே உயிர்களுக்கு எல்லாம் பேரின்பமும் ஆகும். இவ்வுலகில் பெறுகின்ற இன்பம் '1/4 பங்கு' என எண்ணி எண்ணி நாம் மறுமை இன்பத்திற்கு முயலவேண்டும்.நாம் முயன்றால் "மலை எமக்கு அருளும்" ஆகவே, மேலே கூறிய ஒவ்வொருவரிகளிலும் இறைவனை வரவேற்று இறைவனோடு ஒன்றுகின்றார்! இறைவனோடு இணங்குகின்றார். மேலும் மறுமையில் நாம் வீடுபேறு பெறுவதற்கும் எமக்கும் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிசமைத்தும் தந்துள்ளார். **இந்த 16 வரிகளும் இறைவனை வரவேற்று, உபசரித்து முகமன் கூறிஅமைகின்ற அவையடக்கமும் வரவேற்புமாகும். ஆகவே மறுமை இன்பத்திற்கு நாம் முயல்வோமாக. இவ்வுலகில் பெறுகின்ற இன்பத்தைவிட மறுமையில் பெறுகின்ற இன்பம் ¾ பங்காகும் என்பதை எமக்கெல்லாம் நன்கு உணர்த்தியுள்ளார்.** அதனாலேயே ஆராத இன்பம் அருளும் மலை! மலை போற்றி என்றார் அவர் உள்ளத்திலிருந்து பிறந்த அருள் ஊற்றானது சொல்லி அளவிடமுடியாதது ஆகும்.

### 17 - சிவன் அவன் என் சிந்தனையுள் நின்ற அதனால்

சிவன் - சிவபெருமான்
அவன் - அவனே எம்பெருமான்
என் - அடியவனாகிய என்
சிந்தையுள் - எனது மனத்தில், எனது அகமனத்துள்
நின்ற அதனால் - நிறைந்து நின்ற அதனால்

சிவபெருமான் எந்நாளும் என் மனதினில் வீற்றிருப்பதனால்! என் நினைவினுள்ளே நிலைபெற்று இருக்கின்றான். அத்தன்மையினால் அவனது திருவருளை! பரிசுத்தமான அருளைத் துணையாகக் பெற்றுக் கொண்டு (துணையாகச் சேர்த்துக் கொண்டு) அவனது திருவடியைத் நாம் தொழமுடியும். என்பது "சிவனவன் என் சிந்தையுள்ளே" அருளிய அருளாகும். அவன் என் சிந்தையுள் நின்ற அதனாலேயே யானும் அவனை வணங்குகின்றேன். இவற்றை எல்லாம் பாடுகிறேன் என்கிறார், என்று நாமும் அவர் நிலையில் நின்று உணர்வோமாக. இவ்உலகிலுள்ள (யாவரும் அந்தத் துணையோடு தொழமுடியும்) சிவன் அவன் சிந்தையுள் எந்நேரமும் நிறைந்து நிற்பதனால் "சிவ சிவ" என்ற சிந்தனையோடு என்சிந்தையும் எந்நேரமும் நிறைந்திருக்கும், என்பதையே இங்கே கூறுகிறார். சிந்தைநிறைந்து "சிவ சிவ" என்ற எண்ணமும் சிவனும் நிறைந்திருந்தால் துன்பமே இல்லை. "எந்நாளும் இறையின்பமே" எம்மை வழிநடத்தும் என்ற நம்பிக்கை விலகாத நிலையாக நாம் இருக்க வேண்டும், என்பதையே கீழ் கண்ட இந்த நான்கு வரிகளிலும் இன்பமாக இன்னமுதமாகக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனவன் என் சிந்தனையுள்
அவனருளாலே
சிந்தை மகிழ
முந்தைவினை ஓய

இந்த சிவபுராணத்தில் இந்த நான்கு வரிகளிலும் ஆக்கத்தொழிற்பாடுகளைச் சொல்லிக் கொண்டு அவர் "இனித்தான் 17வது வரியிலேத் தான் தனது நூலைத் தொடங்க முயற்சிக்கின்றார்" என்பதனை இங்கே கவனத்தில் கொண்டு நன்கு உணர்வோமாக. சிவனவன் என் சிந்தனையுள் என்பதிலிருந்து அகமனத்தின் ஆழமான அடிப்பகுதியில் தான் சிவன் நிற்கின்றான் என்று தன்னைத் தானே தன்னுள் நினைக்கின்றார். அவரது இன்ப உணர்வை நாமும் அகலாத உணர்வோடு எண்ணிப்பார்ப்போம். ஆனால் இயல்பாகவே மிகமிக உயர்ந்தவன் எம்பெருமான். மேலும் தனது முயற்சி எல்லை மீறித்தாழ்ந்துள்ளது, என்று தன்னைத்தானே எண்ணுகிறார். இறைவனோடு ஒப்பிடும்போது மிகவும் தாழ்வானவர்களே மனிதர்கள். ஆகவேதான் தானும் தாழ்மையானவன் என்று எண்ணுகிறார் தம்மியல்பும், தம்முயற்சியும் தாழ்மையானது, அப்படிப்பட்ட தாழ்ந்துள்ள தனது அதிகார எல்லைக்குள்ளேயே இதுவரை தனது புறமனம், அகமனம் சித்தம் ஆகியவை இதுவரை திருவாசகம் பாடும் வரை செயற்பட்டன என்று எண்ணுகின்றார். ஆனால் இப்போது அகமனம், புறமனம், சித்தம் எல்லாம் இறைவனது அதிகாரத்துக்குள்ளே போய்விட்டது என்பதை நன்கு உணர்ந்து விட்டார். ஆகையால் தான் "சிவனவன் என் சிந்தனையுள்" நின்ற அதனால் என்று கூறுகின்றார். மேலும் இறைவன் என்றைக்குமே தன் அடிமனதுக்குள் நீங்காது, நின்றதனால்! நின்ற காரணத்தாலேயே சிவபுராணத்தை சொல்லப் போகின்றேன் என்கின்றார். **இது அவரின் மெய்ஞ்ஞான உணர்வேயாம். அவரின் சிந்தை முழுவதும் மெய்ஞ்ஞானமே" நிறைந்து விட்டது என்பது இங்கே நன்கு புலனாகின்றது.**

நான் சிவபுராணத்தைப் படிக்கப் படிக்க பாடப்பாட "சிந்தை மகிழும்" சிந்தையின் ஆழத்தில் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது, என்று தன் நிலையைத்தானே கூறுகிறார். அவன் சிந்தையுள் நிற்கின்றான் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கூறுவதால்.... சிந்தைக்குத் 'திருவடி சம்பந்தமும்' ஏற்படுகின்றது, ஏற்பட்டு விட்டது. என்பதுவே இங்கு அவர் நினைத்த எமக்கெல்லாம் கூறிவைத்த முடிவாகும் என்பது எமது சிந்தையுள்ளும் நாமும் தெளிவுறப்புரிய வேண்டும். புரிந்து கொள்வோமாக.

**18 - அவன் அருளாலே அவன் தாள் வணங்கி**

அவன் - சிவ பெருமான்
அருளாலே - திரு அருளாலே
அவன் தாள் - சிவபெருமானுடைய திருவடியை
வணங்கி - எந்நேரமும் வணங்கி

தூய்மையான திருவடியை எந்நேரமும் போற்றி போற்றி வணங்கியே அவன் தாள்களைப் பற்றிப்பிடிக்கவேண்டும். அது முடியும் என்பதும்வும் சிவபுராணம் கூறும் உண்மையாகும். அதற்கும் "அவன் அருளே" வேண்டும். **சிவபெருமானுடைய ஞானமும் திருவருள் நோக்கமும் எனக்குக் கிடைத்து, என்னை அவனை வணங்கச் செய்வித்தது என்கிறார் மாணிக்கவாசகர்சுவாமிகள். மேலும் மிகவும் தெளிந்தமனத்தோடு இதனைக் கூறுகின்றார். சூரியன் உதிக்கிறான். - சூரியன் உதித்த பின்பு சூரிய வெளிச்சத்தைக் கொண்டு தான் சூரியனை நாம் அறிகின்றோம். சூரிய வெளிச்சம் தோன்றாமல் இருக்கும் பொழுது சூரியனை அறிய முடியாது. அதேபோல் இறைவனுடைய அருளைக் கொண்டே இறைவனை அறிகின்றோம். பக்தி இல்லாவிட்டால் இறைவனை தேடவோ, அறியவோ, அடையவோ முடியாது. இறைவனை நாம் அறிய அறிய அவனுக்கு நாம் ஆள்படுகின்றோம். இதுவே "அவனருளாலே அவன்தாள் வணங்குவதின்" மகிமையாகும் என்பதை உணர்ந்து உணர்ந்து அவன் தாள்களை பற்றிப்பிடிப்போமாக.**

பாசஞானம், பசுஞானங்களுக்கு எட்டாத தூய திருவருளாகிய பதி ஞானம், பதிஞானத்தினாலேயே வசப்படும். "சிவன் அவன் என் சிந்தனையுள்" நிற்பதாலேயே பதிஞானம் நமக்குக் கிட்டுகின்றது. மனப்பக்குவம் ஏற்பட ஏற்பட "அவன் அருளால்" பிறவியிலிருந்து நாம் நீங்குவதற்கு அருள் கிடைக்கும். இறை சிந்தனையால் நாம் பிறவியிலிருந்து விடுதலை பெறமுடியும் என்பதும் உறுதி. இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாகவும் உறுதியாகவும் சுவாமிகள் கூறிவைத்துள்ளார். பதிஞானமானது இறைவன் திருவடியையே நினைத்து வாய்மையும் தூய்மையும் உள்ளவர்களாக எந்தவித தீமையும் செய்யாமல் வாழ்வதாகும். சத்திய வாழ்வை நித்தியம் வாழ்ந்தால் அதுவே மனிதம் தளைக்க மனிதன் வாழவேண்டிய வாழ்வாகும். சத்தியம், உண்மை, வாய்மை இவை எல்லாம் ஒரு பொருள் சொற்கள் சத்திய வாழ்வே தெய்வீக வாழ்வாகும். அப்போது தான் அவனருளாலே அவனை வணங்கும் தன்மை கிட்டும்.

"அவனருளாலே அவன்தாள்" – அதாவது இறைவனின் பேரருளாலேயே இறைவனின் (1) நயனதீட்சை, (2) ஸ்பரிசதீட்சை, (3) திருவடித்தீட்சை (4) வாசகதீட்சையாகிய (5)மந்திரதீட்சை என்பன அவருக்குக் கிடைத்தன. இவ்வாறு கிடைத்தது! இறைவன் குருந்த மரத்தடியில் குருபரனாக வந்திருந்து! ஒருமானிட வடிவம் தாங்கியவனாக வந்திருந்து தனக்கு அருளியதை எல்லாம் எண்ணி எண்ணி மெய்சிலிர்த்துப் போகிறார். இறைவனிடம் நாம் இந்த பக்தி கொள்வதற்கு "அவனருளே" நம்மைத் தூண்ட வேண்டியுள்ளது. திருவருளை உணர்ந்து நாம் உலகிலுள்ளோர், பண்பட வேண்டும் என்று எண்ணி எண்ணியே சுவாமிகள் உள் உணர்வோடு பாடுகின்றனர் எமக்காக ஆனால் மகான்கள், யோகிகள், ஞானிகள் ஆகியோர் மட்டுமே சிந்தனையைக் கட்டுப்படுத்தி ஆளும் வல்லமை படைத்தவர்களாகின்றார்கள். சைவசமயிகளாகிய நாம் கடவுளிடம் பக்தி கொள்வதற்கு அவனுடைய திருவருளே நம்மை தூண்ட வேண்டியுள்ளது என்பது நன்கு திருவாசகத்திலே வலியுறுத்தப் படுகின்றது. மேலும் சிவபுராணத்திலே உள்ளத்தை உள்ளபடி அவர் உலகோருக்கு கூறும் அரிய உண்மையாகும். **மனிதகுலத்தினை நல்லொளியால் வளப்படுத்தும் தன்மை சிவபுராணத்திலே முழுதுமாக நிறையவுண்டு. ஆக்கச் செயலானது அகஒளியாகி அகஉணர்வால் பரிணமிக்க வேண்டும். அப்போது தான் ஆக்கம் நடைபெறும். அவன் அருளும் நல்லொளியில் நமக்குக் கிடைக்கும்** என்பதை அவன் அருளினாலும் மனப்பக்குவத்தினாலும் சிந்திப்போமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19 - சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை**

சிந்தை - எமது சிந்தை,
மகிழ்தல் - ஆனந்தமுறுதல்,
சிவபுராணம் தன்னை - சிவபுராணத்தினை,

ஓதுதல், சிந்தை மகிழ, ஆம்! ஆனந்தமும் உண்டாக ஓதுதலாகும். எவ்வாறெனின் நாளும் நின்று நிலைத்து நிற்கும் சிவதத்துவங்களை உணர்ந்து ஓதுவேன், சிவனை நினைந்துருகி ஓதுவேன். நான் என்று கூறுகிறார். என்று எண்ணிப்பாடுகின்றார். சிவ சொரூபத்தில் ஊறியிருப்பதற்கு ஏற்ப எனக்கு துன்பம் கலவாத அருள் இன்பமான பேரின்பம் தழைத்தோங்குகின்றது. சிவபுராணம் தன்னை ஓதுவதனால் என்பதை நாம் மனதார எண்ணி எம் மனதில் சிந்திப்போமாக. இதனை மாணிக்கவாசக சுவாமிகளின் நிலையிலிருந்து நாம் பார்க்க வேண்டும். அவருடைய சிந்தனையானது துன்பம் கலவாத, துன்பமில்லாத உலக இன்பங்களில் வாஞ்சைப் படாத பக்தியாக மாறியது. அப்படி மாறியே **அவர் சிவசொரூபமாக இருந்து கொண்டே சிவபுராணத்தை ஓதுகின்றார். இந்த சிவபுராணம் ஆனது யாவரும் ஓதிப் பேரின்பவாழ்வு பெற துணைநிற்பதாகும். ஆகவே சிவபுராணத்தை நாம் போற்ற வேண்டும்.**

எப்படி எனின் சிந்தை மகிழ – முந்தை வினை ஓய சிவபுராணத்தை உரைப்பன்யான் - என்று உள்ளத்து உவகையோடு உள்ளம் நெகிழ்ந்து அவர் கூறுவதாகும், அவர் கூறிக் கூறித்துதிப்பதும், கூறிக்கூறி மனம் துடிப்பதுவும் அவருக்குக் குருந்த மர நிழலிலே கிடைத்த சிவஞானயோகக் காட்சியின் (சிவன் எடுத்த மானிட வடிவம்) பேரின்பமும் அனுபவமும் ஆகும். அந்த அனுபவத்தை இடையறாமல் நுகர்ந்து நுகர்ந்து அவர் சிந்தை மகிழ்ந்ததாலாம். சிந்தை மகிழ்ந்து சிவபுராணம் தன்னை உரைக்கின்றார். வாசனா மலமும், பிரார்த்த வினைப் பயனும் தன்னை வந்து தாக்காமல் ஓய்ந்து போகும்படி சிவபுராணத்தை உரைத்தார் என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். நாமும் நமது சிந்தை மகிழ்ந்து உவகை பூத்து உள்ளம்பூரிக்க உள்ளமானது உலக இன்பத்தை நாடாது இறைஇன்பத்தையே இடையறாது நாடி நிற்க சிவபுராணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுவோமாக. மாணிக்கவாசக சுவாமிகள் தானும் அப்படி உள் மனநிலையில் அகஉணர்வோடு நின்று ஓதியே எமக்கு அளித்துள்ளார் என்பது இங்கே நன்றாகத் தெளிவாகத்தெரிகின்றது.

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை அவர் ஓதும் போது அதாவது அகமனதில், ஆழ்மனதில், அடிமனதில் தோன்றும் உணர்ச்சியானது அவருக்கு இதைப்பாடும்போது இறையனுபவம் மட்டுமே! அவருக்கு முன் நின்றது என்று காணமுடிகின்றது. **இது அவர் உலக மாந்தர்க்குக் கூறும் சிந்தையின் செயற்பாடாகும். உள்ளத்தின் அறியாமை நீங்க அறிவொளி தானே பிறக்கும். இறை அனுபவத்தால் சிவபுராணத்தை உரைக்க வேண்டும் என்று கருதினேன்.** என்று உவகையுடன் கூறுகின்றார். உரைக்க உரைக்க எனது புறமனம், அகமனம், சித்தம், சித்தத்தின் அடிப்பகுதி எல்லாம் மகிழ்ந்து மகிழ்ச்சியின் மிகுதியால் கூறினேன் என்று தனக்குள்ளேயே தான் சிந்திக்கின்றார். அதாவது சிவபுராணத்தை உரைக்கும் அனுபவம் தனக்கு எப்படி வந்தது? அதற்கு விடையும் தானே கூறுகின்றார். ‘சிவன் அவன் என் சிந்தனையுள் நின்ற அதனால்’ சிவபுராணத்தை உணர்ந்தேன் என்று பதிலும் கூறிவிட்டார். இந்த அனுபவப் பிழிவே திருவாசகத்தில் சிவபுராணமாக முதலாவது அகவலாக அமைவதற்குக் காரணமாகும் என்பது யாவராலும் உற்று உணரக்கூடியதும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமாகும். என்பது திருவாசகத்தின் முதலாவது அகவலிலே நன்கு தெளிவாகின்றது. என்பதை யாவரும் தெரிந்து கொள்வதும் தெளிந்து கொள்வதும் நலம் மிகுந்தது ஆகும்.

### 20 - முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்

முந்தை வினை - பழவினை
முழுதும் - பூரணமாக
ஓய - அற்றுபோக
உரைப்பன்யான் - சிவபுராணத்தை ஓதுவேன் நான்

நான் ஆனந்தம் அடையும் வண்ணமும், முந்தை வினையான பழவினை (அதாவது சஞ்சிதவினை) யானது முற்றாக இல்லாதொழிந்து போகவும் சிவபுராணத்தை ஓதுவேன். என்று தன்னைத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுகிறார் எப்படி எனின் - முந்தை வினை முழுதும் ஓய்ந்து போகும் படி உரைப்பேன் யான் என்று பாடியிருப்பதையும் இங்கே உணரக் கூடியதாக உள்ளது. **எனவே சிவபுராணத்தினை மனமானது நிறைவோடு ஓதினால் உயிரும் உள்ளமும் ஒருமைப்படும் முந்தை வினை முழுவதும் முற்றுமுழுதான அற்றுப்போகும் என்பதே சிவபுராணத்தின் சீர்மையாகும்.** என உறுதியுடன் உரைக்கின்றார். இவ்வுலக மக்கள் அனைவருக்கும்.

**முந்தை வினை முழுதும் ஓய ஆம் சிவபுராணத்தை சொல்லச் சொல்ல ஆனந்தம் மேலிடுகின்றது. ஏன்? சிவபுராணமல்லவா? சிவனின் அநாதியான, பழமையான புராணம் எல்லாம் அதில் அடங்கியுள்ளது! ஆதலால் அது சிவபுராணம். அதுவுமல்லாமல் நீண்ட காலப் பலன் ஒன்று விளைகின்றது. அது என்ன? அது என்ன? அதற்குள்ளே அடங்கியது என்ன? என்று சிந்தித்தால் பயன் என்னவெனில்? முந்தை வினை முழுதும் ஓய்ந்ததாம். இறைவனுடைய பழமையான, புராதனமான பெருமையைக் கூறத் தொடங்கினால் "சிந்தை மகிழ்தல்" என்ற உடனடிப் பயனை அனுபவிக்கலாம். உடனே சிந்தை மகிழ்கின்றது. அத்தோடு வினைக்கழிவு அதாவது நாம் செய்த பிராரத்துவம், சஞ்சிதம் இரண்டுமே கழியுமாம். எனவே ஒரு மானிட உயிருக்கு "முந்தை வினைக்" கழிவு என்ற நீண்ட காலப் பயனும் கிடைக்குமாம். வினைகள் முழுவதும் கழியுமாம். அவர் உரைப் பன்யான் - என்றது தனது யான் என்ற ஆணவ அகங்காரத்தால் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. அவருக்கு ஆணவம் என்றோ அகங்காரம் என்றோ என்று எதுவும் இல்லை. சிவன் தானே வந்து என் உள்ளம் புகுந்து அங்கேயே தங்கி விட்ட காரணத்தால் தான் அவர் 'உரைப்பன்யான்' என்றார். ஆம் திருவாசகம் முழுவதையும் உரைத்தார் "முந்தை வினை முழுதும் ஓய்ந்து அவருக்கும் எமக்கும் இல்லாமல் போகவேண்டும் என்று சிவனை வேண்டி "சிவபுராணத்தை" உரையுங்கள், பாடுங்கள் என்று உலகோருக்கும் கூறுகின்றார். எனவே நாம் ஒவ்வொருவரும் "சிவனை நினைந்து வேண்டி தெய்வீக" அருளைப்பெற "திருவடிப் பேறுபெற" சிவபுராணத்தைப் பாடுவோமாக. இறைமை முழுவதும் நிறைந்தது சிவபுராணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின் கவனத்திற்கு

இந்தச் சிவபுராணத்திலேயே முதல் 20 வரிகளும் வாழ்த்தும் வணக்கமும் போற்றுதலும் வெற்றி முழக்கமும் ஆகும். ஆகவே ஒருவரை நாம் வரவேற்கும் போது பணிவதும், வணக்கம் கூறுவதும், வாழ்த்துக் கூறுவதும், முகமன் கூறுவதும், இன்முகம் காட்டி வரவேற்பதும் போலவே வரவேற்போம். அதன் பின்பு வரவேற்று ஆசனத்தில் இருத்துவோம். அதே போன்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணத்திலே முதல் 20 வரிகள் வரையிலும் வாழ்த்தும் வணக்கமும் போற்றுதலும் வரவேற்பும் கூறியுள்ளார். ஆகவே இந்த 20 வரிகளும் அவையடக்கமாகும். ஆம் வரவேற்பும் அவையடக்கமாகவுமே அமைந்துள்ளது என்பதுவும் கண்கூடு. இந்த 20 வரிகளுக்குள்ளும் தாள், கழல், அடி போற்றி (வீரக்கழல், பொற்சதங்கை, அணிந்த கழல் திருவடி) அடி என்று எம்பெருமான் 18 இடங்களிலே போற்றப்படுகின்றார். அவருடைய திருவடி (விடுதலை தரும் திருவடி) ஒரு சீவனுக்கு நற்பேறினைத் தரும் மேன்மை பொருந்திய அவரின் தாள் சிவபுராணத்திலே முதல் 20 அடிகளுக்குள்ளும் 18 இடங்களில் ஏற்றி ஏற்றி போற்றப்படுகின்றது. திருவடி வணக்கமும், திருவடியைப் போற்றுதலும் உயிர்களின் திருவடிப் பேறும் சிவபுராணத்திலே சிறப்பாக முதலிடம் பெறுகின்றது. முதலிடம் பெற்று போற்றப்பட்டுள்ளதை நாமும் உற்று உணர்ந்து சிவபுராணத்தை போற்ற வேண்டும். சிவபுராணத்தைப் போற்றிப் போற்றித் திருவடிப் பேறு பெற வேண்டும். எனவே "முந்தைவினை" இல்லாது ஒழிக்கப்படும். என்பதுவும். திருவடி வணக்கத்தால் உயிர்களுக்கு சிவபேறு கிடைக்கும் என்பதும் இங்கே உறுதியாக கூறப்படும் உண்மையான மகா வாக்கியமாக கருதப்பட்டே கூறப்படுகின்றது என்பதையும் நாம் ஆழமாகச் சிந்திப்போமாக.மாணவர்கள் மாணவப்பருவத்திலிருந்து சிவபுராணம் படித்துப் படித்து இதைக்கைக் கொள்ள வேண்டும். சிவபுராணம் படிக்கப் படிக்க மனம் பண்படுத்தப்படும். "அவனருளாலே அவனை வணங்கும் பேறுகிடைக்கும்" திருவடிப்பேறு என்று முத்திப் பேறும் கிடைக்கும் என்பது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 - கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி

கண்ணுதலான் - நெற்றிகண் உடையவன்
தன் கருணை - சிவபெருமானுடைய தனிக்கருணை
கண்காட்ட - கருணையைக் காட்ட
வந்தெய்தி - காட்ட வருபவன்,
நுதல் - நெற்றிக்கண்

நெற்றிகண்ணுடைய சிவபெருமான் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு தன் கருணையைக் காட்ட அவருடைய கண்முன்னாலேயே நேரேயே வந்தார். கண்நுதல் - நெற்றிக்கண் ("திரியம்பகன்" என்றால் மூன்று கண்ணையுடையவன்) சிவனார் முக்கண்ணன் ஆதலால் "திரியம்பகன்" என்று அழைக்கப்படுகின்றார். அவருடைய ஞானக்கண் அதாவது நெற்றிக் கண்ணாகிய மூன்றாவது கண்ணானது திருவருளாகிய கண் ஆகும். உயிர்வர்க்கங்களுக்கும் அது அருளைச் சொரிந்து அவர்கள் உய்வதற்கு உறுதுணையாக நிற்கின்றது. கண்காட்டல் - என்பது நயனதீட்சை செய்து உபதேசம் செய்தல், ஆகும். **நெற்றிக் கண்ணான ஞானக்கண் எனக்கு வழிகாட்ட நான் அவரை வந்தடைந்தேன். (எல்லாம் நடந்தது ஒரே நேரத்தில்)** ஆதலால் அவர் எய்தினேன் என்கிறார். கண்ணுதலால் கண்காட்ட வந்தெய்தி என்றார். ஒரே நேரத்தில் இறைவனும் வந்து எய்தினான். நெற்றிக்கண்ணும் காட்டப்பட்டது அவர் நேரே பார்த்த மாத்திரத்திலேயே நயனதீட்ஷை கண்ணால் கொடுக்கப்படும் தீட்ஷையும் பெறப்பட்டுவிட்டது.

**எனவே இங்கு "திருவருள் ஞானம்" எனப்படும் "சிவஞானத்தை" மாணிக்கவாசக சுவாமிகளுக்கு நேரே வந்து இருந்து அருளினன் இறைவன். இதனாலேயே அவர் எய்தினேன் என்றார். சிவனாரின் முக்கண்களும் ஏக காலத்தில் இகம் பரம் இரண்டையும் காண்கின்றன. முக்கண்ணின் முதன்மையும், ஞானக்கண்ணின் ஒளிவிடும் தனித்தன்மையையும், கருணையையும்,** ஒரே நேத்தில் கிடைக்கப்பெற்று இங்கே போற்றப்படுகின்றது. இது இறைவனின் தனிப்பெரும் கருணையாகும். இது கண்ணுதலானுடைய தனிபெரும் கருணை என்பதை நாம் என்றும் மனதில் இருத்தி கொள்ளவேண்டும். நெற்றிக் கண்ணையுடைய இறைவனின் தனிப்பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள்க்கருணையே அதுவாகும். கண்ணமைந்த நெற்றியையுடைய இறைவன்.கண்ணுதலான் என்று போற்றப் படுகின்றான்.

கண்ணுதலான் - நெற்றியிலே கண்ணினை உடையவன் கண்ணுதலான்! எந்தத் தகுதி காரணமாக எனக்கு தன்னையும் காட்டி தன்திருவடியைத் தொட்டு வணங்கும் பேறினையும் தனக்குத் தந்தான்! காட்சி தந்தது மட்டும் அல்ல அந்தத் திருவடிகளைத் தொட்டு வணங்கும், தொட்டு இறைஞ்சும் பேறும் வாய்ப்பும் தான் நேரே கண்டு தொழுவதற்கும் கிடைத்ததே! என்ற இந்த பெரும் அதிசயத்திற்கு உள்ளானார். இந்த அதிசயத்தையே "வந்து எய்தி" என்கிறார். இறைவனை அவர் பிரிந்த பின்பு தான் இப்படி அவர் வந்து தருவதற்கு தனக்கு என்ன தகுதி இருந்தது என்று சிந்திக்கின்றார். இறைவனின் பிரிவே அவரைச் சிந்திக்க வைக்கின்றது. தனது சிறுமையும் அந்தத் திருவடியின் பெருமையும் அவர் மனதில் எழுகின்றது. கண்ணுதலான் தன்மேல் உள்ள **கருணை காரணமாக குருவாக வந்து தம்முன் தோன்றிய காட்சியையும் தந்த ஞானசிரியனையும் நினைந்து நினைந்து பாடுகின்றார். கண்ணுதலான் - நெற்றிக் கண்ணையுடையவன், தன் கருணை - அவனது பேரருள் திறன், அவனது கருணையில் திறம், கண்காட்ட தனக்கு நேருக்குநேராக வந்தது! காட்டவந்து எய்தியவன் நேருக்கு நேரே வருவதன் கருணை என்பது - அவனது பேரருள் திறன் - கருணைக் கண்ணைக் காட்ட இறைவன் வந்து எய்தினான் என்றே கூறி வைத்துள்ளார். கண்ணுதலான் தன் கருணை கண்காட்டவந்தெய்தி, என்று வியப்போடு கூறுகின்றார்.**

**22 - எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி**

| | |
|---|---|
| எண்ணுதற்கு | - மனதுள் அடக்குவதற்கு |
| எட்டா | - எட்டுபவன் இல்லாதவன் |
| எழிலார் | - சிறந்த அழகுடையவன் |
| கழல் | - வீரக்கழல் |
| இறைஞ்சி | - வருந்தி வணங்கி |

மன்றாட்டமாக எம் மனதுக்குள்ளே வணங்குவது என்பது எண்ணிப்பார்க்க இயலாத இறைவனை எண்ணிப் பார்த்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றாட்டமாக இறைஞ்சுதல் எல்லாம் உயிர்களுக்கும் பெரும் கொடையே நம் சிந்தனை எல்லாம் புலன்வழிபோகாமல் இறைஞ்சுதல் என்பது ஆழமான பக்தியின் பெரும் கொடையேயாகும். இறைஞ்சுதல்-வணங்குதலும் இறைஞ்சுதலும் உள்ளத்தூய்மையோடும் நாம் இருந்தால் என்று நாமே நம்மை எண்ணும் போது எமக்கு எல்லாம் உள்ளத்தூய்மை ஏற்பட்டுவிட்டால் பக்தி நிலை முழுவதையும் ஊட்டக்ககூடியவரே இறைவன்.

அளவிட்டு கணக்கிட்டுக் கூறமுடியாத மகிமைகளையுடைய அவனது திருவடிகளை வணங்கி இறைஞ்சி, **மன்றாடி நிற்க** வேண்டும். இறைவனாரின் மகிமைகள் யாராலும் **கணக்கிட முடியாதவை.** அவருக்குள்ள மகிமைகள் அனந்தகல்யாண குணங்கள்! அவை அளவிட்டுக் கூற முடியாதவை. உன்னிப்பாகக் கூறுவதானால் சீவர்களால் (மனிதர்களால்) அளவிட்டுக் கூற முடியாதது ஆகும். ஆனால் சுவாமிகள் சிவஞான அருளும், முத்தியின் அனுபவ நெறியும் ஒன்றாகவே கைகூடப்பெற்றவராகயால் அதையே பின்பு தனக்கு தொட்டு வணங்க எட்டிய கழலாக எண்ணி கூறுகின்றார். எப்படி எனின் எண்ணியும் இறைஞ்சியும் எண்ணுதற்குக் கிடைத்தது என்று மாணிக்கவாசக சுவாமிகள் எண்ணுகின்றார்.உணர்கின்றார் பேரின்ப நிலை எய்துகின்றார். அவ் உணர்வே பேரின்ப உணர்வாகும்.

அதாவது காரண காரிய நிகழ்ச்சி ஒழுங்கானது! ஒருங்கு அமைய வணங்குதல், அதாவது கண்ணுதலான் கருணை காட்டுதல் காட்ட வணங்குதல் – வணங்கி எய்துதல், காரியம் காரணத்தை எய்தி எண்ணுதல், ஆகவே காரணமும் காரியமும் ஒன்றுபட இறைஞ்சி நின்று சிந்தை மகிழ்தலாம், காரணமும் காரியமும் இணைவதால் மகிழ்ச்சி உண்டாகின்றது. காரணமும் காரியமும் ஒன்றாக திகழ அவர் மகிழ்ந்து "முந்தை வினை ஓய்ந்து போகப் பெற்றவர்" ஓய்ந்த பின்பு "சிவபுராணந் தன்னை" உரைப்பன் யான் என்கிறார். இந்நிலையானது அவர் அச்சமயத்தில் தூய திருவருள் கைவரப்பட்டு பேரின்ப அனுபவம் பெறப்பட்டு பேரின்ப அனுபவத்தில் ஆழ்ந்துபோன ஆழமாகும். இந்த ஆழத்தில் அவர் அழுந்தித் திளைத்ததால் இப்படி ஒரு பேரின்ப நிலையை பெறவும் அவரால் முடிந்தது. கூறவும் முடிந்தது மற்ற உலகிலுள்ள உயிர்களும் பெறவும் பிறவா நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தவும் பிறவிப் பிணி தீர்ந்து விடுதலை பெறவும் பெற்றுய்யவும் என்றே எமக்கெல்லாம் சிவபுராணத்தைத் தந்தார். தந்துள்ளது என்பது இவ்வுலகிலுள்ள மாந்தர்களுக்கு பெரும் பேறேயாகும் என்று எண்ணி நாம் படிக்கவேண்டும் உணர வேண்டும் பக்திநிலையை நாடவேண்டும்.

கருணை காரணமாகவே எண்ணுதற்கு எட்டா எழிலாருடைய கழல் இரண்டும், அதாவது திருவடிகள் இரண்டும், தனக்குக் காட்டுவதற்காகவே இந்த மண்ணில் உடனே வந்து படிந்தன. திருப்பெருந்துறையில் குருவாக வந்து காட்டினான் இறைவன். அது கண்டு நான் இறைஞ்சி நின்றேன். அந்தப் பேறினைத் தந்ததுவும் அவன் காட்டிய கருணையே! ஆகும் ஓர் நாமமும், ஓர் ரூபமும் இல்லாதவன் எண்ணிறந்தவற்றை எல்லாம் கடந்த இறைவன் மானிட வடிவில் திருப்பெருந்துறையில் வந்து எய்தியதற்குக் காரணம்? **எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்களை அடிகளாரின் ஊனக் கண்ணுக்குக் காட்டவே வந்தார்.** வந்து எய்தினார் என்ற பொருள் விளக்கம் இங்கே நன்கு விளங்குகின்றது. எப்படி எனின் எண்ணிறந்து எல்லை இல்லாதவன் வந்து நேரே அடிகளாரின் முன்னே தோன்றினான். சுவாமிகள் மனதினால் கூட எண்ணிப்பார்க்க முடியாத திருவடிகளை நேரே தன் ஊனக்கண்களால் கண்டார். அந்தக் கழல்களை இறஞ்சினார். ஆகவே அவருக்கு வியப்பும், பக்தியும், மனப்பக்குவமும் மேம்பட்டது என்றே எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி என்றார்.

**23 - விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்குஒளியாய்**

| | |
|---|---|
| விண்ணிறைந்து | - வானுலகம் நிறைந்து |
| மண்ணிறைந்து | - மண்ணுலகம் நிறைந்து |
| மிக்காய் | - அப்பாலுள்ள இடமெல்லாம் நிறைந்தவனே |
| விளங்கு ஒளியாய் | - ஜோதிமயமானவன் அவனேயாம். |

விளங்குகின்ற ஜோதி மயமான ஒளிமயமானவன் எங்கும் நிறைந்து அப்பாலும் விளங்குபவன் அவனேயாம் விண்ணுகிலுள்ள விண்ணவர் உலகம் - வானுலகம் ஆகும். மண்உலகம் - நிலவுலகம் ஆகும். அதற்கு மேலோயும் நிறைந்து அதாவது மண்ணுலகிலும் நிறைந்து இவற்றிற்கும் மேலான வானுலகிற்கும் மேலும் மேம்பட்டு அப்பாலாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்தவனே. வான் உலகு, நிலவுலகு ஆகியவைகளை நிரப்பி அவைகளுக்கப்பாலும் இருக்கின்றாய் (அண்ட சராசரங்களுக்கும் ஈரேழுலகங்களுக்கும்) சூரிய ஒளிபோன்று கட்புலனாகின்ற ஜோதியாய் நீ இருக்கின்றாய். எப்படி எனின்? மாணிக்க வாசகருடைய ஞானக் கண்ணிற்கு ஜோதியாய்தான் மாத்திரமே தெரிகின்றான் இறைவன். ஆனால் இறைவனுடைய உருவம், மாணிக்கவாசகசுவாமிகளுடைய கண்ணிற்குத் தெரியவில்லை. இறைவன் எங்கும் நிறைந்த பரம்பொருள். ஓங் கொளியாக இருப்பவன் இறைவனேயாம் என்பதயே அவர் கண்டு கொண்டார். இங்கு விண்ணிறைந்து / மண்ணிறைந்து என்று ஏனைய யாவரையும் உணர வைக்கின்றார். ஆம் அவனின்றி ஓர் ஒளியும் இவ்வுலகில் பிரகாசிக்காது என்பதுவே இங்கே புலப்படுகின்ற உண்மையாகும். அவனே உலகிற்கு ஜோதி மயமானவனாம் என்பதே இதன் மூலம் விளங்கும் விளக்கமாகும் அவர் விளக்குவதும் அதுவே.

ஆனால் மெய் ஞானம் நிறைந்த மெய் ஞானியான அவர் மண் என்பது எமது இந்தப் பருவுடலையும் விண் என்பது எமது இந்த நுண்ணுடலையும் குறித்தே கூறியிருப்பார். இதுவே ஞானிகளின் கூற்றுமாகும். எமது தலைக்குமேல் நிலவும் ஒளியும், தலைக்குக் கீழுள்ள உடம்பில் உள்ள ஒளியும் இறைவனின் ஒளியான ஒரே ஒளியே பிரகாசிக்கும் என்பது என்றுமே? சித்தர்களின் கூற்றாகும். இவை இரண்டுமே விண்ணும், மண்ணும் இவற்றையே ஞானமுதிர்ச்சியால் ஞானம் மிகுந்த அடிகளார் விண்நிறைந்து மண்நிறைந்து என்று கூறியுள்ளார் என்பதுவும் சிந்திப்பதற்குரியது. **எமக்குள்ளேயே இறைவன் நிறைந்திருக்கின்றான் என்பது நாம் உணரத்தக்கதொன்றாகும்.** எனவே எமது உடம்பே விண்ணும் மண்ணுமாம் மண் என்பது வெளித் தோற்றமான பருவுடல் என்று கூறினார். விண் என்பது மனம், புத்தி, சித்தம் உள் உணர்வுகள் போன்ற நுண்ணுடல் ஆகும். பருவுடல் என்பது வெளியின் தோன்றும் பார்க்க கண்ணிற்கு தெரியும் உடலாகும் நுண்ணுடல் பார் வைக்கு எட்டாது. ஆனால் அவர் விளங்கொளியாய் உள்ளும் புறமும் இருக்கின்றார். இறைவனை எம் முள்ளேயே கண்டு நாம் தொழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் விண்ணுலகம் முழுவதிலும் நிறைந்து, மண்ணுலகம் முழுவதிலும் நிறைந்து, அண்டசராசரங்கள் முழுவதிலும் நிறைந்து இவ்விடங்களிலெல்லாம் நிறைவில் மிகுந்தவனாகவும் இவற்றிலெல்லாம் விளங்குகின்ற பேரொளியாகவும் இருக்கின்றான். அவன் பேரொளியை, விளங்கொளியை பேசவும் முடியாது பாடவும் முடியாது பொருள் எழுதவும் முடியாது என்பதே மாணிக்கவாசகப் பெருமானுடைய அதிசயக் குறிப்பாகும். ஆகையினாலே தானே மிக்காய் ஆம் அதிகப்படியான கூறமுடியாத விளங்கொளியாய் என்றார்.

## 24 - எண்இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்

| | |
|---|---|
| எண்ணிறந்து | - வரம்பிலான் |
| எல்லை | - சுட்டி உணரப்படாதவன் |
| எல்லை இல்லாதவன் | - உணரப்படாதவனும் எல்லையில்லாதவனும் |
| நின்பெரும் சீர் | - அடக்கிடமுடியாத பெரியபுகழ் |

எண்ணிப்பார்க்க முடியாத வரம் பின்றி விரிந்த எல்லையில்லாத அடக்கமுடியாத பெரும் புகழ் நிறைந்த அளவு கடந்தும் எங்கும் நிறைந்தும் இருக்கின்றாய் பெரும் சீர் உடையாய் உன்னைப் பாராட்டுகின்ற வழியை உனது பேரன்பைப்பைப் பாராட்டுகின்ற வழியை வினையில் கட்டுண்டு கிடக்கின்றவனாகிய யான் சிறிதேனும் அறிந்திலேன். எண்இறந்து - எண்ணிப்பார்க்கமுடியாத எல்லை இல்லாத எல்லாவற்றிலும் நிறைந்தவன் நீ. எல்லாவற்றையும் கடந்தவனும் நீயே இந்த அண்டப் பகிரண்டமாய் விரிந்திருப்பது பரம்பொருளாகிய நீயே? எனவேயாவையும் கடந்திருப்பதும் பரம்பொருளாகிய நீ! மாத்திரமேதான்! ஆதலால் கடவுள். வானவெளியில் கணக்கற்ற நட்சத்திரங்களாய் ஒளிர்பவையும் வெளிச்சம் யாவும் பரம்பொருளின் ஸ்தூல தோற்றங்களாகும். பரம்பொருளின் சூக்குமச் செய்கைகளே ஸ்தூல தோற்றங்களாக இருக்கின்றது. அவையாவையும் செயல்பட்டுக் கொண்டேயே இத்தனை அண்டங்களிலும் ஒழுங்குப் பாடான நடைமுறையாகி வியப்பிற்குரிய விடயங்களாகவும் அமைந்து செயல்படுகின்றன. தோற்றப்படுகின்றன. என்பது எல்லை இல்லாததாகும். எல்லை இட்டுக் கூற முடியாததாகும் என்பது இங்கே நன்கு விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதனை இங்கே ஒரு உதாரணத்தால் பார்ப்போம்.**

ஒரு பசு மாட்டை மேய்தலுக்கென்று ஒருமைதானத்திலே குறுகிய இடத்தில் கட்டப்பட்டிருந்ததால் இதற்கு மைதானம் முழுவதிலும் சுற்ற முடியுமா? இல்லை! அதற்கு அது உலவும் இடம் வரையும் தான் விளங்கும். அதற்கு அப்பால் என்ன ஏது என்று எதுவும் விளங்காது. நாம் ஒரு வினையின் விளைவினால் உடல் எடுத்துள்ளோம். ஐம்பொறிகளால் கட்டுண்டு கிடக்கின்றோம். ஆமாம் உண்மை உண்மை. இந்த அளவீட்டு அளவில் தான் மாணிக்கவாசக சுவாமிகள் தன்னையும் எண்ணிப் பாரக்கின்றார். அகிலப் பிரபஞ்சமாய் (இறைவன்) விளையாடுகின்றான். அப்படிப்பட்டவரை என்னால் எங்ஙனம் அறிந்து கொள்ள முடியும் என்று எண்ணிப்பார்க்கிறார் அதற்கு மேல் பெரியவனாக தன்னை அவர் நினைக்க வில்லை? பசுமாட்டிற்கு கயிறு எவ்வளவு தூரம் சுற்றுகிறது. அதே போன்று பிறவி எடுத்தநாமும் அந்தளவு எல்லையைத் தான் காணமுடியும் இறைவனை அப்படியேதான் ஓரளவுக்கு தான் உணரமுடியும். போற்ற முடியும் என்று கூறி இறைவனின் உயர்ச்சியை நன்றாக உயர்த்தி தன்னைத் தாழ்த்தி நிற்கின்றார் என்பது இங்கே காணக்கூடியதாக உள்ளது. அகிலம். - பிரபஞ்சம் **பட்டினத்தடிகள் கூறி வைத்ததையும் இந்தச் சந்தர்ப்பத்திலேயே சிந்திப்பது நன்று. நாம் எடுத்த பிறவியியோ, நாம் எடுத்த உடலோ நமது வினைப் போகம் தான். அதாவது நாம் செய்தவினைப் போகம் தான் என்று பட்டினத்தடிகள் கூறி வைத்துள்ளார்கள். இதனாலே மானிடப் பிறவியினரின் இடத்தினை சிறப்பிடமாக** எண்ணிப் பார்க்க வேண்டும் என்றால் மானிடப்பிறவி என்பது இது சகல உயிர் வர்க்கங்களிலும் விசேடித்த பிறவியாகும். எமக்கு இந்த மானிடப்பிறவி கிடைத்தது. இந்த மனித சரீரம் கிடைத்தது. இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்று நாவலர் பெருமான் கூறி வைத்துள்ளார். அதையும் மானிடப்பிறவி எடுத்த நாம் ஒரு முறை நன்கு சிந்திப்போமாக நற்சிந்தனை என்ற வகையிலே சிந்திப்பது நன்று.! சிந்திபோம்! மானிடப்பிறவியே இறைவனை நாம் உணர்ந்து உணர்ந்து சிந்திப்பதற்குரிய பிறவியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிறந்து -- இறைவன் இருக்கும் பரப்பளவையைக் கூட நம்மால் கூற இயலாதவன். எண்ணிறந்தெல்லையில்லாதான் - பரப்பளவையைக் கடந்தவன். எண் இறந்து, கூறமுடியாத எல்லையில்லாதானே. பரப்பளவை, எல்லையை கூறமுடியாதவனின் பெரும் சீர் என்பது என்னவென்றால் எம்மால் கூறமுடியுமா அவனது பெரும் பெருமைக்கும், பெருஞ்சீரிற்கும், அளவுமில்லை! அளவு கோலுமில்லை. அளவிட்டுக்கூறவும் முடியாது. அவ்வளவிற்கு அவ்வளவு அது பெரிய சீராகும். எம்மால் இன்னது என்று அளவிட்டுக் கூறமுடியாத சீர் உடையவன் என்றும் எல்லை இல்லாதவன் என்றும் சுவாமிகளே கூறுகின்றார். திருவாசகத்தில் திருஅண்டப்பகுதியிலே இந்த பேரண்டங்கள் யாவற்றையும்விட மிகப் பெரியவன் இறைவன் என்று சுட்டிக்காட்டியுள்ளார் இந்த மெய்ஞ்ஞானி என்பதை நாம் நின்று நிதானித்துப் பார்க்க வேண்டும். எண்ணிறந்து எல்லையில்லாத இறைவன் அவன். இதனை உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயனில்

**பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்**
**அருமைக்கும் ஒப்பின்மையான்.**

கருவிகளால் அளவிட முடியாத விஸ்வரூபம் உடையவன் அணுவிலும் சிறிய நுண்உருவம் உடையவன் கூறுதற் கரிய சீரிய பெரும் கருணையுள்ளவன்.

**25 - பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்**

| | | |
|---|---|---|
| பொல்லாதவினை | - | தான் செய்த பொல்லாதவினை |
| வினை | - | நல்வினை, தீவினை |
| புகழுமாறு | - | புகழ்தல், |
| ஒன்றறியேன் | - | ஒன்றுமேயறியேன் |

பொல்லதவினை என்றது மூன்று வகை வினைகளுமாகும். இந்த மூன்று வகை வினைகளும் தன்னைப் பீடித்துள்ளதாக சுவாமிகள் தானே எண்ணுகிறார். ஞானம் பெற்ற மாணிக்கவாசகரே! தன்னை வினைபீடித்துள்ளது என்று கூறுகிறார். தன்னால் இறைவனைப் போற்ற இயலாது என்று கவலையுறுகின்றார். இயற்கையாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாதவினையிலுள்ளவர்கள் மனிதப்பிறவியானாலும் இறைவனைப் போற்றுவதற்கு அவர்களுக்கு உள்ளத்தில் இடமிருக்காது என்பதும் உண்மையே. அவர்களது உள்ளத்தில் இறைவனைப் போற்ற இடம் இருக்காது. ஆகவே நாமும் நம் உள்ளத்தை திருத்த, திருத்தி அமைக்கப்பழக வேண்டும். அப்படியானால் தான் நாம் செய்த பொல்லாவினைகள் பாவங்கள் அகன்று போகுமென்பதே இங்கே கூறிய முடிவாகும். உன்னுடைய பெரும் சிறப்பைப் பொல்லாத வினையுடையவனாகிய யான் (தீவினை உடையவனாகிய யான்) புகழ்ந்து கூறும் முறை ஒன்றினையும் அறியாதவனாய் இருக்கின்றேன். எனவே பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன் என்று தனக்குள்ளேயே மிகவும் கவலையுறுகிறார்.

(பொல்லா வினையேனுக்கு - வந்தெய்திட) எது வந்து எய்திட உனது கண்ணுதல் - நெற்றிக் கண்ணுடய கடவுள் மண்மேல் எனக்கு நேரே வந்தெய்தியது. வந்து நேரே காட்சி தந்தது அந்நிகழ்வானது நான் எண்ணியும் பார்க்க முடியாதது. ஆனால் அது நான் என் கண்ணால் கண்ட அதிசயிக்கத்தக்க அற்புதம் நிறைந்த உனது கழல்கள் ஆகும். நீ வந்தெய்திட நான் பார்க்க எண்கண்முன் கிடைத்த திருவடிகள் ஆகும். அவை நான் இறைஞ்சும் தன்மை உடையவை என்பதை தானே உணர்ந்து தெளிவுபடுத்துகின்றார். எமக்கும் தெளியவைக்கின்றார் விண் நிறைந்து – விண் நிறைந்து, மண் நிறைந்து – மண்ணிறைந்து, எண்ணிறைந்து எண்ணிப் பார்க்கக் கூட எல்லை தெரியாதவனே நீ தான் ஐயா நின்பெரும்சீர் - உன்னுடைய பெரிய சீரை அளவிட முடியாதசீரை பெருமை பொருந்திய சீரை எப்படி கூறுவது என்று சிந்திக்கிறார், முற்பிறப்பு வினை, இப்பிறப்பு வினை, உடையவன் யான், கீழ்மை உடையவன், சிறுமையுடையவன், எப்படி நின் பெரும் சீரை எண்ணிப் பார்க்க முடியும். என்று நொந்து நொந்து சிந்திக்கிறார். அத்தோடு உம்மைப் புகழுமாறொன்றறியேன் - எப்படிப் புகழ்வேன்? புகழ்வதற்கும் நான் அறியேன்? என்று கூறினார். தன்னைத்தானே தாழ்த்தித் தாழ்த்தித் பணிவதில் எவ்வளவு பணிவுள்ளவர் சுவாமிகள்! பண்புள்ளவர் சுவாமிகள்! மேலும் சிவபுராணத்தின் இறுதி அடியிலும் "பணிந்து" என்றே கூறிமுடிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவபுராணத்திலே முன்பு 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்றவர் இங்கே "பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன் என்கிறார். இதிலிருந்து இந்த சிவபுராணதிலேயே எத்தனை இடங்களிலே அவருடைய சிறுமை அடக்கம் பணிவு என்பன தெரிகின்றது. எத்தனை இடங்களில் அவருடைய ஆணவமில்லாத தாழ்மைத் தெரிகின்றது. இப்படி ஒரு தாழ்மையையும் சிறுமையையும் கற்பதற்காகவே கற்றுணர்ந்து கடைப்பிடித்து ஒழுகுவதற்காகவே அவசியமாக நாம் சிவபுராணத்தைக் கற்கவேண்டும்.! படித்துப் பாராயணம் செய்ய வேண்டும். சிவபுராணத்தின் உள்ளிடை முழுவதும் அறிந்து கொள்ளுதல் அல்ல! அறிந்து! தெளிதலும் அல்ல, தெளிந்து உணர்தல் வேண்டும் என்பதேயாம். இந்த சிவபுராணம் கூறும் உள்ளிடை அதாவது பொருள் உணர்தல், "சொல்லிய பாட்டின் பொருள் உணர்தல்"அங்கே வலியுறுத்தப் படுகிறது!. பொருள் உணர்வதே பக்தி நெறிக்கு அவசியமாகும். நாம் நமது ஆன்மாவை வழிப்படுத்தலுமாகும்.** ஆன்ம விமோசனத்திற்கு அவனை ஏற்றுதலும் போற்றுதலும் பெரும் பேறன்றோ. இதை உணர்ந்தே ஒரேடியாக 16 வரிகளிலும் ஏற்றுதலும், போற்றுதலும் கூறியுள்ளார். வாழ்த்தியுள்ளார் வணங்கியுள்ளார்.

இதுவே அடிகளாரின் பெருவிருப்பமுமாகும். அடிகளாரின் பணிவு, பக்தி, அடக்கம் முழுமையாக சிவபுராணத்திலே தெரிகின்றது தெளிந்த உணர்வு முழுவதுமே ஞானநல் உணர்வாகத் தெரிகின்றது சிவபுராணம் இறைமைக் கொள்கை மட்டுமல்லாது திருவடிப் பேறை மட்டுமல்லாது பணிவையும் பக்தியையும் மட்டுமல்லாது ஒரு சைவசமயத்துக்கு இருக்கவேண்டிய வணங்குதல் வாழ்த்துதல், போற்றுதல் என்றும் ஒரு "சைவசமயியின்" வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த மனிதத்துவம் முழுவதையும் ஒருங்கமைப்புச் செய்து காட்டுகின்றது. சிவபுராணத்தின் 95 வரிகளிலும் என்பதைக் கற்று உணர்ந்து தெரிந்து கொண்டு தெளிந்து கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26 - புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்**

புல்லாகி — புல்லாகியும்
பூடாய் - பல்வகைப் பூண்டுகளாயும்
புழுவாய் - பல்வகைப் புழுவாகியும்
மரம் ஆகி - மரமாகியும்

அவரின் கூற்றுப்படி பதின்நான்கு பிறவியை எடுத்து எடுத்து இளைத்து விட்டேன் என்று மிகவும் கவலையுறுகிறார். ஏன் என்று அவர் சிந்திப்பதையும் கவலையுறுவதையும் உன்னிப்பாக பார்போம்! இதற்குமேல் நாமும் சிறிதளவாவது சிந்திப்போம். புல் - புல், பூடு — பூண்டு — சிறு செடியாகி பலவகைப்பட்ட மரங்களாயும் அப்படி ஒரு உயிரானது நாம் மனிதப்பிறவி எடுத்தது போன்றுபின்பும் எத்தனை பிறவி எடுக்குமோ? (அதன்பின் எப்படியோ? எப்பிறவி வாய்க்குமோ? எதனைப் போன்று அமைகின்றதோ?) புல்லாகியும், பூடாகியும், புழுவாகியும், மரமாகியும், இப்படிப்பல பிறவி எடுக்கின்றது. ஒரு உயிருக்கு சைவசித்தாந்தம் ஏழ்பிறவியையை மட்டும் தான் குறிப்பிடுகின்றது என்பதனையே நாம் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் மாணிக்கவாசக சுவாமிகளோ பதின்நான்கு பிறவியைக் குறிப்பிடுகின்றார். ஏன் அவ்வளவு நிலைக்கு அவர் இளைத்து விட்டார் களைத்துவிட்டார் என்பதையே இங்கு சிந்திக்கக் கூடியதாகவும் உள்ளது. பிறந்து இளைத்தேன் எம்பெருமான் என்று தன் இளைப்பைக் கூறுகிறார். பிறவியால் ஏற்பட்ட களைப்பைக் கூறுகிறார்.

புல்லாகிப் பூடாய் - உலகில் **தோன்றிய உயிர் வர்க்கங்களை ஆகக் குறைந்த நிலையில் நின்று உயர்ந்த நிலை வரை சிந்தித்தால்- அன்று அடிகளார் 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் விஞ்ஞானி என்றே அவரைக் கூறவேண்டும்.** அவர் அன்று கூறிய "வைப்பு முறையானது" இன்றைய காலக்கட்டத்தில் விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளும் சிறந்த வைப்பு முறையாகும். இதனை தொல்காப்பியரால் பாகுபடுத்தப்பட்டு! அடிகளாருக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே 'ஓரறிவதுவே, உற்றறிவதுவே, இரண்டறிவதுவே' என்று இப்படியாக உயிர்களின் பாகுபாடு தொல்காபியரால் வரையறை செய்யப்பட்டுஇருக்கின்றது. சுவாமிகள் கூறிவைத்த உண்மையையும் இங்கே உணரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாகவுள்ளது. இன்றைய விஞ்ஞானதின் உள்கருவை அறிவியலானது தாவரவியல், பறவையியல், விலங்கியல், மனிதவியல் என்று பலபெயர்களில் ஆங்கில நூல்களில் கிடைக்கப் பெறும் அறிவாக வெளிப்படுத்தி உள்ளது. **இந்த அறிவியலை நன்கு தேர்ந்த தமிழர்கள் இவற்றையெல்லாம் தாண்டி உளவியலையும், உயிரியலையும், ஆன்மவியலையும் எத்துணை ஆழ்ந்து கற்றுத்தேர்ந்துள்ளார்கள் என்பது இங்கே எமக்கு மாபெரும் வியப்பன்றோ! உயிர்களின் "கூர்தல்" அறத்தை சுவாமிகள் தனது காலத்திலேயே மிகவும் தெளிவாகக் கூறிவிட்டார்கள். இதுவும் ஒரு தெய்வீக வியப்பாகவே உள்ளது. எனவே அடிகளாரால் எட்டாம் நூற்றாண்டிலேயே கூறமுடிந்தது என்பது அதிசயமன்றோ! ஒரு அதிசயமானதொரு உண்மையாகும்.**

**27 - பல்விருகம்ஆகிப் பறவைஆய்ப் பாம்பாகி**

பல்விருகமாகி - பலதரப்பட்ட மிருகங்களாகி,
பறவையாகி - பல்வகைப்பட்ட பறவைகளாகி
பாம்பாகி - பல்வகைப்பட்ட பாம்புகளாகியும்

இப்படிப்பட்ட பிறவிகளெல்லாம் இதுவரைவாய்த்திருக்கலாம். எமக்கும்! இனிமேலும் வாய்க்கும் என்றும் "நாம் இந்த மானிடப் பிறவியிலாவது "சிந்திக்க வேண்டும்". சிந்தித்து சிந்தித்து இனியும் இப்படிப்பட்ட பிறவி ஒன்றும் வராதபடி எம் வாழ்வில் இறைவனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளத்தக்கதாகப் பற்றிக் கொள்வோமாக. மிருகம் - விலங்கு. விலங்கு என்று கூறும் போது பலவகை மிருக வகைகள், பறவை வகைகள் பல வகைப் பறவைகள் பாம்பாகி பலவகைப் பாம்பு வகைகள் என்று ஒரு உயிருக்கு பல பிறவிகள் வாய்க்கும் என்று நாம் எண்ணியாக வேண்டும். ஒரு உயிர்பிறவி எடுப்பதானால் இப்படியான பிறவிகளும் உயிர் பெறும் பிறவியிலடங்கும். என்பதுவும் இந்தப் பிறவிச் சூழ்ச்சியலே உண்டு என்பதை நாம் நன்கு சிந்திக்கவேண்டும். அனைத்துப் பிறவியையும் எண்ணி எண்ணிச் சிந்திக்க வேண்டும். இந்த மானிடப்பிறவியானது இவற்றையெல்லாம் சிந்தித்து சிந்தித்து விடுதலைப் பேறு கிடைக்கத்தக்கதாக பிரார்த்திக்கக் கூடிய பிறவியாகும் என்பதை உணர்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடப்பிறவியே இறைவனைப் பிரார்த்திக்கவும் இறையன்பைப் பெறவும் உகந்த பிறவியாகும். எனவே மானிடப்பிறவி என்பது எமக்குக் கிடைத்த பெரும் கொடையே. என்பதை சிந்தித்து இறையருளும் பெற முயற்சிப்போமாக.

**பல்மிருகம் ஆகிப் பறவையாய் - இதை மாவும் மாக்களும் ஐவறிவினவே என்று கூறுகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள். உயிர் வர்க்கங்களை வரிசைப் படுத்திக் காட்டுகிறார். அதாவது அழிவில்லாத உயிர் "கூர்தல்" முறையில் ஒவ்வொரு உடம்பினுள்ளும் புகுந்து தோன்றுகின்றது. இந்த உயிரினங்களுக்குள் "அந்தர்யாமியாய்" இறைவன் உறைகிறான் என்பதை சமயச்சான்றோர் என்றோ கண்டுவிட்டனர். எல்லோருக்கும் விளங்கும் வண்ணம் கூறியும் வைத்துவிட்டனர் அவர்கள் கண்டு கொண்ட அன்றே உயிர் வளர்ச்சி முறையை வரிசைப்படுத்தி நிற்பதையும் காணக்கூடியதாக உள்ளது.** இதனை நாம் ஆழ்ந்து சிந்தித்தால் இது இன்று விஞ்ஞானம் ஏற்றுக் கொள்கின்ற வைப்புமுறை என்பதையும் எம்மால் அறிய முடிகிறது. **இன்று விஞ்ஞானம் கண்டதை மாணிக்கவாசகரான மெய்ஞானி என்றோ கண்டு விட்டார் என்பது எமக்கு இங்கே நன்கு புலனாகின்றது.** இதுவும் அடுத்தவோர் அதிசயமான! அதிசயம் அன்றோ!

**28 - கல்ஆய் மனிதர்ஆய் பேய்ஆய் கணங்கள்ஆய்**

| | | |
|---|---|---|
| கல்லாய் | - | கல்லாகியும், சடப்பொருளாளாய் |
| மனிதராய் | - | ஆறு அறிவுடைய மனிதராய் |
| பேயாய் | - | பேய் உருவத்தோடு |
| கணங்கள் | - | பூதகணங்கள் |

கணங்களாய் - பூதகணங்களாய், அதாவது பூதகணங்கள் என்பது தேவருக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள உயிர்வாக்கங்கள் ஆகும். மனிதப் பிறவியானது- இந்தப் பிறவிகாளால் வரும் துன்பம் அனைத்தையும் உணரக்கூடியது. மனிதப் பிறவியில் எம் நிலையை உணர்ந்து மேலும் இறைவனை உணர்ந்து உணர்ந்து வணங்கி, வணங்கி, நாம் வணங்கும் வணக்கத்தாலேயே! இனிப்பிறவாத நிலையினை அடையமுடியும் என்பது இந்த மனிதப் பிறவியிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சிந்திக்கக்கூடிய தேடக்ககூடிய ஒன்றாகும். ஆகையால் தான் "ஔவைப் பிராட்டி" "அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் நாம் நல்லுணர்வோடு இறைவனை வணங்கினாலே நிச்சயம் பிறவிவேர் அறும் என்பது உறுதி. ஆமாம் உறுதி.

கல்லு – சடப்பொருள் பலவகைக் கற்பாறைகளாகியும் இருந்து பின்பு மனிதனாய் பிறப்பதும் உண்டு. அதாவது தன்னை (உணர்கின்றது) உணர்ந்தவன் மனிதன் என்ற நிலையிலேயே இருக்கின்ற நிலையில் மனிதப் பிறவியானது தன்னைத்தான் உணரக்கூடியது. பின்பு அதே மனிதன் பேயாய் கணங்களாய் ஆம்பூதகணங்களாம் (பூதகணங்கள் - தேவருக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள உயிர் வகைகள் ஆகும்) இவை பூதக் கூட்டங்களாகும். **மனிதப்பிறவியில்! மனிதன் தன்னைத் தான் உணர்ந்தால்? தன்னையே தான் நான் யார்? எங்கிருந்து வந்தேன்? என்ற கேள்வி கேட்டால்? மனிதப்பிறவியின் நிறைவான நிலையையும் குறைவான பின்தங்கிய நிலையையும் தானே உணரலாம். மனிதப்பிறவியில் வணங்கும் வணக்காதாலேயே! பிறவாத நிலை கிடைத்தும் விடும் என்பதும் திடமான உறுதிஆகும். எனவே உற்று உணர்ந்து பக்தியும் செய்யும் தன்மையும், உள்ளத்தையும் செம்மை செய்யும்** தன்மையும், விடுதலை பெறும் தன்மையும் மனிதப்பிறவிக்கு உண்டு என்பதை சற்று நிதானமாக உணர்வோமாக. கடவுளைசார்ந்து நின்று யாவரும் எம் சமயத்தைச்சார்ந்து நின்று உணர்வோமாக. தினம் தினம் இந்தப் பிறவியிலேயே பிறவிவேரையறுக்கும் படி இறைவனிடம் மன்றாடுவோமாக.

கல்லாய் மனிதராய் - கல்லிற்கும் உயிர்ப்பு உண்டு. சாதாரணமாக சிறந்த இன்னிசைக்கே கல் உருகும். உருகுகின்ற கற்களும் உண்டு. மகாகெட்டிக்காரரின் இசையால் கல்லு உருகும். ஆகவே கல்லிற்கு உயிருண்டா? என்பதை நம்முன்னோர்கள் அறிவு விருத்தியடையாத காலத்திலேயே இசையால் அறிந்தார்கள். எனவே இறைவன் கல்லாகவும் பிறக்கச் செய்தான். அவற்றிற்கும் உருகும் உயிரையும் கொடுத்தான். மரத்திலும் பார்க்க மிகமிகக் கீழான குறைந்த உணர்சியுடையது கல். **மேலும் இவ்வுலகில் சாதாரண மனித**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடம்போடு வாழுபவர்களே உருவம் மனித வடிவாக இருப்பினும் அசுரகுணம் படைத்தவர்களாக வாழ்கின்றார்கள். இவர்களே வல்லசுரர்கள் பின் இவர்களைப் போன்றோர் இறந்தாலும் வேறோர் உடல் எடுக்கும் வரை பேயாய் கணங்களாய் சூக்கும உடலோடு அலைகிறார்கள் இவர்களையே! பேயாய், கணங்களாய், என்றார். இவையெல்லாம் இறைவனின் படைப்பேயாம். இவையெல்லாம் மாணிக்கவாசகர் சுவாமிகளின் உள்ளத்தில் உள்ளூர உணர்கின்றது அவரின் உள்உணர்வுச் சிந்தனையேயாம்.**

**29 - வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்**

| | | |
|---|---|---|
| வல்லஅசுரர் ஆகி | - | வலிமை பொருத்திய அசுரர், கொடுமைகள் செய்கின்ற அசுரர்கள் |
| முனிவராய் | - | நல்ல தவமுனிவராயும் |
| தேவராய் | - | தேவராயும் |

இவ்வுலகில் இந்தப் பிரபஞ்சத்திலே எத்தனை பிறவி பிறக்க இயலுமோ அத்தனை பிறவியும் பிறந்துவிட்டதாகவே தன்னைத் தான் எண்ணுகின்றார் சுவாமிகள். இளைத்தேன், இளைத்தேன் என்று கூறுகின்றார். அவர் கூறும் இக்கூற்று என்னவெனில் தற்போது பிறந்தது மானிடப்பிறவி. இந்த மானிடப் பிறவியிலே தான் தன் பிறவிகளை உணர்ந்து பார்க்கிறேன். என்று மிகவும் ஆதங்கமாகக் கூறுகின்றார். இவரின் இக்கூற்றிலிருந்து நாம் படிக்கவேண்டியது என்னவெனில் நாமும் நம் மனதைத் திருத்தியமைத்து எம் பிறவிவேரறுக்கும் வழிமுறைக்கு நாமும் முயல முடியும். அப்படி முயலவும் வேண்டும் இந்த மானிடப் பிறவியானது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெற வாய்த்த ஒரு பிறவியாகும். என்றெண்ணி எம்மைத் தயார்ப்படுத்துவோமாக. வலியவலிமை மிக்க அசுரர்களாயும் தேவர்களாயும், இவ்வுலகில் எத்தனை பிறவி உண்டோ? அத்தனையும் பிறந்தது! எல்லாப் பிறவியும் பிறந்து பிறந்து இளைப்பு அடைந்து விட்டேன். மேலும் மேலும் இளைத்தேன் இளைத்தேன் என்கிறார். தான்முன்பெல்லாம் எந்தனையோ பிறவிகள் எடுத்திருப்பேன். இந்த மானிடப் பிறவியிலே இப்படியாக இதை உணர்ந்து பார்க்கிறேன் என்றும் கூறுகிறார் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லசுரராகி – மனிதருக்குள்ளேயே அசுரகுணம் இருப்பதாகப் பார்த்தோம் மேலும் இம்மண்ணில் பிறந்த சிலர் நல்ல புலனடக்கத்தோடும், நல்ல சீவகாருண்யத்தோடும்,மனிதாபிமானத்தைப் பேணி முனிவர்களாகவே வாழ்வதையும் காணமுடிகிறது. இப்படிப் பட்டவர்கள் இவ்உலகில் உடற்கூட்டைத் துறந்து திரும்பிப் பிறப்பு எடுக்கும் வரை தேவர்களாகவே வாழ்கின்றார்கள். எனவே இவற்றை எல்லாம் உள்ளடக்கியே மனிதராய், பேயாய், கணங்களாய், வல்லசுரராகி, முனிவராய், தேவராய், என்றார். என்பதையும் நாம் உணர்வோமாக இங்கே மற்றொரு சம்பவத்தைக் கொண்டு புலனடக்கம் பற்றிச் சிந்திப்போம்... மாபெரும் வல்லமையை தவத்தால் இராவணன் பெற்றிருந்தான்... மிகவல்லவனாகவும், சிறந்த சிவபக்தனாகவும் வாழ்ந்தான். ஆனால் புலனடக்கம் இல்லாத காரணத்தால் தான் அழிந்தான்... இராவணன் போன்றோர் இன்றும் இவ்வுலகில் இருக்கிறார்கள் என்பது கண்கூடு இது அவரவரின் புண்ணியப்பயனேயாம். எனவே இதிலிருந்து புலனடக்கம் என்பது மனிதர்களுக்கு மிகமிக அவசியம் என்று மிகவும் கூர்ந்த உள்ளத்தோடு நாமும் கூர்ந்து உணர்வோமாக. இந்த உலகில் ஒரு உயிர் எடுக்கும் பிறவிகளைப் பற்றி சுவாமிகள் கூர்ந்த உள்ளத்துனுடனேயே கூறியிருப்பார்கள் என்பது சிவபுராணத்தில் நன்கு புலனாகின்றது. இதுவே அவரின் கூர்த்த மெய்ஞ்ஞானமாகும்.

**30 - செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்**

| | |
|---|---|
| செல்லா நின்ற | - அசையாது நின்ற |
| தாவரம் | - தாவரம் (இயங்காத்திணை) |
| சங்கமம் | - இயங்கும் திணை |

அசையும் பொருளும், அசையாப் பொருள்களும் இருகூறின் அடங்கிய அடக்கமே இவ்வுலகம். செல்லா நின்ற இவ்வுலகம் இயங்காத்திணை என்ற தாவரவகையுள் கல், புல், பூண்டு, மரம் என்பனவாம். இயங்கும் திணை என்ற சங்கம வகையுள் புழு, பாம்பு, பறவை, பல்விருகம், மனிதர், அசுரர், முனிவர், பேய், கணங்கள், தேவர் என்ற பத்துமாம். தன்னை உணர்ந்து உணர்ந்து இத்தாவர சங்கம வாழ்வில் நொந்து போகிறார். என்பதை இங்கே சற்று உன்னிப்பாக நோக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவி வேரற நாமும் உணர்வோமாக. நாமும் உணர்ந்து கொண்டால்தான் இந்த மானிடப் பிறவியிலே எப்படிப்பட்ட நல்லனவற்றையெல்லாம் கடைப்பிடிக்கலாம் என்பது ஓரளவாவது விளங்கும்

தாவர சங்கமம் - அசையும் பொருளும் அசையாப் பொருளும் கூடிய இவைகளின் சேர்வே இவ்வுலகம் என்று கூறுகிறார். அவரின் நினைப்பு எப்படியிருக்கிறது எனில்! கல், புல் முதலிய பிறவிகளை எடுத்துத் தொடங்குகின்றது அவரது பிறவியின் தொடக்கம் அறிவற்ற கல், புல் போன்ற பிறவியிலேயே தொடங்கி பின்பு மானிடனாகும் பிறவி வரை 14 பிறவிகளை எடுத்துக் கூறி இளைப்படைந்து விட்டேன் என்றவர்! என்று எண்ணி எண்ணிப் பார்த்தவர் தனது மனநிலையில் அதாவது திருவாசகம் பாடும் போதிருந்த மனநிலையில் பலகோடி பிறவிகளை எடுத்து விட்டதாகவே எண்ணுகின்றார். எண்ணி எண்ணிக் கவலையுறுகின்றார் என்பது ஆறு அறிவோடு கூடிய மானிடப்பிறவிக்கு இங்கே எடுத்துக்காட்டப் படுகின்றது. என்பதை சிறிதளவிலாவது நாமும் சிந்திப்பது எம்மானிடப் பிறவிக்கு மிகவும் சிறந்ததாகும். இந்தக் கேள்வியால் எமக்கு பக்தி உணர்வும் என்பது தானே தான் உண்டாகிவிடும்.

செல்லாநின்ற – கல், மண் போன்ற நிலையற்றப் பொருட்கள் தாவரம் எனப்படும். புழுவாய், பாம்பாய், பல்மிருகமாய், மனிதராய் இருப்பவை சங்கமம் எனப்படும். இயங்கு நிலைப்பொருளாக ஒரு ஆன்மா புல்லில் தொடங்கி மனிதன் ஈறாக பிறந்து வருகின்றது. அவர் இவற்றை பாகுபடுத்தி "ஓறிவுஉயிர்" "ஈரறிவுஉயிர்" என்பதைச் சொல்லி வைத்துள்ளார். ஆகையினாலே மேலும் அவர் கூறுவது தாவர சங்கமமாக உள்ள இந்நிலவுலகில் எல்லாப் பிறப்பும், பிறந்து இளைத்து விட்டேன். இனி என்னால் இன்னொரு பிறவி எடுக்க முடியாது என்பதாகும். இதுவே இதன் கருத்தாகும். 26வரி – 31வரி வரை உயிரினத்தின் பிறவியின் வரலாறு தெளிவாகக் கூறப்படுகின்றது. மிகவும் தெளிவாக தாவரசங்கமத்தைப் பற்றி யாவரும் புரியக் கூடியதாக அன்று சிவபுராணத்திலே பாடிவைத்துள்ளார். இவையெல்லாம் நாமும் உணர்வதற்காகவே கூறிவைக்கப் பட்டவையாகும். என்று எண்ணி எண்ணி எம் மனதையும் எம் வாழ்நாளையும் நன்கு திருத்தி அமைத்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறியிலே வாழுகின்ற நல்ல நடத்தையெல்லாம். தெய்வநிலை எய்தும் தெய்வீக வழிகளெல்லாம் அடிகளார் இந்த சிவபுராணத்திலே எடுத்து காட்டியுள்ளார் என்பதை நாமும் எல்லோரும் அறிந்து கொள்வது சிறப்புடையதாகும்.

**31 - எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்**

| | |
|---|---|
| எல்லாப் பிறப்பும் | - பிறக்கவேண்டிய எல்லாப் பிறப்பும் |
| பிறந்து | - பிறந்து, பிறிவி எடுத்து |
| இளைத்தேன் | - களைப் படைத்துவிட்டேன் |
| எம் பொருமான் | - என் சிவபெருமானே! |

பிறந்து பிறந்து களைப்படைந்து விட்டேன். இந்தக் காரணத்தாலும் தான் உலகினையும் இனிப்பிறவியையும் வெறுத்ததையும் வெறுத்ததோடு களைப்படைந்ததையும் அவரே உற்று உணர்ந்து பார்க்கிறார். "எல்லை மருவா நெறியாகிய நெறியே வீட்டு நெறி", என்று அதனை, அதாவது வீட்டுநெறியைத் தரும் என்று எண்ணி இறைவனிடம் அந்த வீட்டு நெறியையே தரும்படி எண்ணி வேண்டுகிறார். இறைவனிடம் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் என்கின்றார். உலகவாழ்க்கையை வெறுத்து சலிப்படைந்து கூறுகிறார். இந்த உடலுக்குள் உயிர் இருப்பதால் சலிப்படைந்து வெறுத்து இப்படிக்கூறுகின்றார். ஏன் என்று சிந்தித்துப்பார்த்தால்.? இதுவரை எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்து விட்டேன் என்கிறார். பிறவிகளையும் ஒழிந்த நிலையிலேயே! ஒழிந்த நிலையை உணர்ந்து தான் இப்படித்தானே கூறினார் என்றால் கூட அது மிகையாகாது. ஏனெனில் அடுத்த அடியிலே கூறுவதையும் உற்று நோக்குவோம். இளைப்படைந்தவருக்கு "மெய்யான பொன்னடி" அதாவது "அருள் நிறைந்த திருவடியை இவ் உலகிலேயே தொட்டு வணங்கக் கிடைத்துள்ளது." இம் மண் உலகிலேயே கிடைத்துவிட்டது. ஆம் அவர் காண்பதற்கும் வீடு பேறு அடைவதற்கும் கிடைத்ததே ஆகும்.

எல்லாப்பிறப்பும் :- திருப்பெருந்துறையில் ஆசாரியருடைய (சிவபெருமானுடைய)கையினாலேயே தீட்சையும் பெற்று திருவடியை தொட்டு வணங்கும்போது பெற்ற ஞானப் பிறப்பெடுத்த திருவாதவூரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியக்கத்தக்க முறையில் தனது பழைய பிறப்புக்களை உணர்ந்து பார்த்தே இப்படிக் கூறுகிறார். மாறிமாறி பிறப்பெடுத்த உயிர் எதுவாக இருந்தாலும் தனது பழைய பிறப்பை உணர்வது மில்லை. இனி அடையப்போகும் பிறப்பை அறிந்து கொள்வதும் இல்லை. இதுதான் உலகியலில் வழமையான உண்மை ஆகும். ஆனால் அவருக்கு மட்டும் வியக்கத்தக்க வகையில், உணரத்தக்கவகையில் தனது பழைமையை இந்த மானிடப்பிறப்பில் காணமுடிகிறது. என்பது உலகோருக்கெல்லாம் பெரும் வியப்பன்றோ? அப்படிக் கண்ட காரணத்தால் தான் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் என்பதும் அவரால் கூறமுடிந்தது. **அவர் எம்பெருமானை நேரில் கண்டது கனவிலன்று? நனைவிலேயாம். அதாவது நேரேயே கண்ட சிவஞானப் பேறினால் பழைய பிறப்புக்களை அவரால் உணரமுடிந்தது. இனிப் பிறக்க வேண்டாத தன்மையையும் கூறி ஏனைய மானிட உயிர்களிற்கும் இனிப் பிறக்காமல் இருக்கும் வழியையும் கடைப்பிடிக்க வேண்டிய முறையையும் கூறி வைத்துள்ளார். என்பதையே இதிலிருந்து நாம் உணரவேண்டும். உணர்ந்து உணர்ந்து மெய்யான பொன்னடியில் போய் சேர முயற்சிசெய்யவேண்டும்.**

**32 - மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்**

| | |
|---|---|
| மெய்யே | - ஐயத்திற்கு இடமில்லாதது |
| உன் பொன்னடிகள் | - உன் அழகிய திருவடிகள் |
| கண்டு | - நான் நேரே கண்டேன் |
| இன்று | - திருவடிகளை கண்ட அன்று |
| வீடுற்றேன் | - வீடுபேறாகிய நிலை, பரமோட்சம் பெற்றேன். |

உனது **"<u>பொன்னடிகள் மெய்யானது ஐயத்துக்கு இடமில்லாது</u>"** அது ஒப்பற்றது. அப்படிப்பட்ட திருவடிகளைக் காணப் பெற்ற அன்றே அதாவது திருப்பெருந்துறையிலே உனது நேரடி தரிசனம் கிடைக்கப் பெற்ற அன்றே! ஆம்! அந்தத் திவ்விய தரிசனம் கிடைக்கப்பெற்ற நிலையிலேயே பாச நீக்கத்தினை பெற்றேன், என்ற உணர்வு அவருக்கு வந்துவிட்டது போலும், **"உலகியலை மறந்து தெய்வநிலை" எய்தினார் என்பதையே இந்த 32வது வரி எமக்கு உணர்த்துகிறது.** அவர்பொன்னடிகளின் அருளை நேரே தொட்டு உணர்ந்ததாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யே உன் பொன்னடிகள் என்றார் அத்தோடு அந்தக்கணமே அவரது மனத்துள் திருவாசகமும் பிறந்தது போலும், என்றே எண்ண வேண்டி உள்ளது.

நிலத்துள் தத்தளிக்கும் மீன் நீருக்குள் அதாவது ஏதாவதொரு நீர் நிலைக்குள் வந்தவுடன் தனக்குச் **சொந்தமான இருப்பிடத்திற்கு வந்து விட்டது போன்று உணர்வது போல உனது திருவடிகளைக் கண்டவுடன் அந்த மாத்திரத்திலேயே என் சொந்த இடத்திற்கு வந்தது போன்று உணர்ந்துவிட்டேன். ஐயம் திரிபு இன்றி சந்தேகமின்றி உணர்கின்றேன், என்றும் எண்ணிவிட்டார். உணர்ந்தும் விட்டார். உருக்கம் அது மிகுதியினால் அவர் மனதுக்குள்ளே திருவாசகம் பிறந்தது.**! என்றும் நாம் எண்ணி எண்ணிபார்க்கலாம். சிவபுராணமும் பிறந்தது. என்று எண்ணிப்பாத்தாலும் அது மிகையாகாது. உன்னதமான உன்னிடம் நிரந்தரமாய் அன்பு செய்ய எனக்கு அருளுவாய் என்கிறார். அதாவது அவரது உள்உணர்விலே எம் உள்ளத்தினாலேயே இறைவனில் மாத்திரம் நிரந்தரமான அன்பு பெற வேண்டும் என்பதே உலக மக்களுக்காகவும் அவரது வேண்டுதலாகும். அன்பினால் ஊனும் உயிரும் உருகும் வகையில் அழுது அழுது அடி அடைந்தவர் அவர். அழுதடி அடைந்த அண்ணல் மாணிக்கவாசகர் சுவாமிகள் அழுதால் உன்னைப் பெறலாமே என்பதுவும் திருவாசகம் கூறும் உயர்ந்தவழியாகும். மெய்யே உன்பொன்னடிகள் - அவர் பொன்னடிகளை நேரே தனது நனவிலே கண்முன்னாலேயே கண்டார். மனித வடிவில் குருவைக் கண்டார். மனிதனல்ல இறைவனே என்பதை உணர்ந்து கொண்டார். உண்மையுமதுவேயாம். ஆகவே அவர் கீழ் கண்ட வரிகளில்

**புவனியில் சேவடி தீண்டினன் காண்க**
**சிவனென யானும் தேறினேன் காண்க**
**(தி.வா.திருவண்டப்பகுதி)**

**அவர் இந்த வரிகளிலே இங்கே கூறுவது "மெய்யே உன்பொன்னடிகள்" என்பதைத் திருவண்டப் பகுதியிலே கூறுகிறார். அவர் நேரே கண்ட அன்றே! திருவடியை தீண்டிய அந்த வினாடியே! அவரின் "பசுகரணம்" முற்றாக நீங்கி "பதிகரணமாக" மாறி விட்டது. அவர் மெய்யாகவே கண்ட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு தரிசனத்தை சிவன் அவன் என்று கூறியதை எண்ணி எண்ணி தனது பிறவியில் தான் இனி அடைய வேண்டியது ஒன்றுமில்லை, ஆகவே வீடுற்றேன் என்று முடிந்த முடிவாகக் கூறுகிறார். இறைவனை நேரே கண்ட அந்தக் காட்சியானது! அவரது அகமனம், புறமனம் எல்லாவற்றையும் தாண்டி சித்தத்தில், புறப்பகுதியையும் தாண்டி, சித்தத்தின் உள்ளே என்பதைவிட சித்தத்தின் அடியில் போய்த்தங்கிவிடுகிறது. ஆகையாலேயே 'மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்' என்று திடமாகக்கூறி முடிந்த முடிவாகக் கூறுகிறார். ஆகவே அவரது தன் நிலையானது அவருக்கு ஏற்பட்ட ஞான அதிர்வால் ஞான உணர்வால் அவரை அப்படி உரைச் செய்கிறது. பிறவித் துன்பங்களிலிருந்து தம்மை ஈடேற்றிய குரு நாதனை தான் பிறவித்துன்பங்களிலிருந்து நீங்கிவிட்டேன் என்ற எண்ணத்தோடு கவியழகோடு வணங்கித் துதிப்பதை மேற் கண்ட ஏழு வரிகளும் உன்னிப்பாக உன்னதமான பக்திப் பரவசத்தை எடுத்தியம்புகின்றன. இதன் நுட்பம் என்னவென்றால் மனிதப் பிறவி ஒன்றே பிறவியிலிருந்து நாம் விடுபடுவதற்கும் உய்வதற்கும் உரிய பிறவியாகும். இதற்குக் காரணம் அறிவின் விரிவும் அறிவின் வீரியமும் பக்தியின் மேன்மையுமாகும். அவையாவற்றின் சிறப்புமேயாம். ஐம்புல அறிவைவிட ஆறாம் அறிவாகிய நுண்புல அறிவையும் மனிதன் பெற்றுள்ளான். மனம்! என்ற சொல்லின் அடியே மனிதன் என்று வரக்காரணமானது. இந்த ஆறாம் அறிவை மனிதனானவன் கண்டபடி புலன் நுகர்ச்சியில் வீணாக்குவது மடமை. ஆறாம் அறிவை, இந்த ஆறாம் அறிவு பெற்ற நாம் நன்கு பயன்படுத்த வேண்டும் இதை எமக்குத் தந்த இறைவனைப் போற்ற வேண்டும். இதுவே எம் ஆன்மாவுக்கு கிடைக்கும் ஆன்மலாபமாகும். "மெய்யான பொன்னடிகளை" "மெய்யர் மெய்யனை" நாம் மெய்யாகவே வணங்கவேண்டும் அப்பொழுது "மெய்யுணர்தல்" எம்முள்ளத்திலே தானே தலைப்பட்டுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**33 - உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற**

உய்ய - மேன்மையடைய
என் - எனது
உள்ளத்துள் - என் மனதுக்குள்
ஓங்காரமாய் - பிரணவ உருவாய்,

நான் உய்தியடைய அதாவது நான் ஈடேற **(கரைசேர) ஓம்** என்னும் வடிவமாய் மனமென்னும் தாமரையுள் நின்ற **மெய்ப்பொருளே!** என்று எண்ணுகிறார். இறைவனார் திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலிலே மனித வடிவத்தில் தான் இருந்தார். மாணிக்கவாசக சுவாமிகட்கு மட்டும் மனித வடிவில் காட்சி கொடுத்தார். அது மாணிக்கவாசக சுவாமிகள் நேரடியாகக் கண்ணால் கண்ட வடிவமாகும். இதுவடிவம். ஆனாலும் என்னுள் என் உணர்வுடன் என் உள்ளத்துடன் ஓங்காரமாக நீ ஒலித்துக் கொண்டிருப்பதை உள்ளத்துள் நான் உணரும் பொழுது உய்வடைகின்றேன். அதாவது ஊனக்கண்ணினால் வெளிப்பார்வைக்குரியகண்ணினால் இறைவனை நேரே காண்கிறார். அதேநேரம் ஞானக்கண்ணினால் உள்ளத்துக்குள்ளே ஓங்காரமாய்க் காண்கின்றார் உணருகிறார். கண்டு, கண்டு மனம் ஒன்றிய அவர் அதேநேரம் இந்தக் காட்சியை பக்தர்கள் ஆன்மவாதிகள் சற்று நினைத்துப் பார்க்கப் பார்க்க தாமும் உணர்வார்கள். என்றும் அவரே கூறிவைத்துள்ளார். பக்தர்களும் ஆன்மவாதிகளும் **உணர, உணர உணரும் உள் உணர்வும் மேலும் மேலும் அவர்களுக்கு அதிகரிக்கும் ஓங்கார உணர்வும் அதிகரிக்கும். ஓங்கார உணர்வும் தோன்றும் என்பதை ஞானியாகிய மாணிக்கவாசகரே தான் உணர்ந்து திருவாசகத்திலே கூறியது இது பல இடங்களில் தெரிகின்றது என்பது யாவருக்கும் கண்கூடு.**

அண்டம் முழுவதும் பஞ்ச பூதங்களால் ஆனது பஞ்ச பூதங்களின் இயக்கமே இவ் உலகம். இந்த பஞ்சபூதங்களின் ஒலிகளும் இறைவனின் ஓங்காரமேயாகும். இறைவன் பஞ்சபூத இயக்கங்களில் எல்லாம் நின்று இயங்குகின்றான். அவனின்றி ஓரணுவும் அசையாது. எனவே இறைவன் மானிட வடிவம் கொண்டால் மானிட வடிவம் பூண்டால் எப்படியிருக்கும். என்று அன்பு நிலையில் நின்று நாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திப்போமாக. ஆகவே மாணிக்கவாசகரே "சிவம்" என்று போற்றப்படுபவர். ஆகையாலே மாணிக்கவாசகர் தான் உய்ய என்றார். தான் உய்திபெற்றார் அவரது உள்ளம் உவகை அடைந்தது. உய்வடைந்த என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற என்கிறார் யார்? உய்ய இது பெரியதொரு வினா? யார் உய்ய? தான் உய்வு பெற்றார் நன்னிலையில் நின்று தானே உயர் பதம் அடைந்தார். அது இன்றும் உலகம் அறிந்து கொண்ட உண்மை, மானிட வடிவம் தாங்கி வந்ததும் சிவபெருமானும் அவருமே நேருக்கு நேர் கண்டு கொண்ட இந்த உண்மையாகும். அதன் மூலம் உலக உயிர்களையும் உய்தி பெற வைத்தார். அதாவது உலக மாந்தரையும் உய்தி பெற வைத்தார். "உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற!" "உய்ய என் உள்ளத்தினுள் ஓங்காரமாய் நின்ற!" என்று பாராயணம் செய்யும் பொழுதும், எண்ணி எண்ணிப் பார்க்கும் பொழுதும் ஒரு உயிரிற்கு உய்வு என்பது நிச்சயம் கிடைக்கும் என்பது இங்கே கூறிய உறுதியாகும். இப்படி ஒரு பாராயணத்தை யாவரும் கைகொள்ளவும் முடியும். உய்தி பெறவும் முடியும் என்பது உறுதியான உண்மையாக சிவபுராணத்திலே நன்கு சிறப்பாகத் தொனிக்கின்றது.

ஓங்காரமாய் உள்ளத்துள் அவன் நிற்கின்றான்! ஓங்காரமாய் இறைவன் உள்ளத்துக்குள் நிற்கின்றான். அப்படியானால் நிச்சயம் உய்வு உய்திபெறுதல் நிச்சயமாம். சிவபுராணம் படிப்பதனால் உய்வு பெறுதல் நிச்சயம் கைகூடும் என்பதை யாவரும் உணர்வோமாக. சிவபுராணம் பாடிப்பாடி, பொருளுணர்ந்து, பாடிப்பாடி உய்தி பெறுதல், சைவசமயத்து மக்களுக்கு ஒரு பெரும் கொடையாகும். உய்ய! நான் ஏன்? உள்ளத்துள் ஓங்காரமாய் இறைவன் நிற்கின்றான் என்று உணர்ந்தாலே போதும். நமக்கு சகல நிலை இம்மை மறுமை இன்பங்களும் கிடைக்கும்.

**இறைவன் இந்தப் பிரபஞ்சத்தில் இடையறாது "ஓங்காரமாக" ஒலித்துக் கொண்டிருக்கின்றான். இறைவனின் அந்த அண்டத்தில் ஆம் பேரண்டத்தின் ஒலிக்கின்ற ஒலி போன்றே பிண்டமாகி உடல் வாழ்வையும் ஒழுங்குபடுத்துவதற்கு "ஓம்" என்னும் அசைவே ஓசையே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளத்தினுள்ளேயும் நாம் கேட்பதாகும். யாவையுமாய் அல்லையுமாய் அவனே நின்று இயங்குகின்றான். அவனன்றி உலக இயக்கம் இல்லை. அதாவது நமது உள்ளமும் உடலும் ஒழுங்குப்பாடு அடைவதற்கு ஏற்ப ஓங்காரத்தை ஆத்ம சாதகன் தன்னுள்ளேயே கேட்கலாம். தன் மனத்தின் ஒழுங்கமைப்பால் ஆம் ஒருங்கமைப்பால் ஆத்ம சாதனம் நிச்சயம் கிட்டும் என்று சிவபுராணம் கூறுகின்றது.**

**நாம் உய்வு பெறும் காலம் அல்லது முத்தி அடைவதற்கான பரிபாகம் வந்து விட்டது என அந்த ஓங்கார ஓசை ஊர்ஜிதப்படுத்துகிறது.** இதை மானிடராகப் பிறந்த நாம் இந்தப் பிறவியை நன்கு பயன்படுத்தி உணர்ந்து, உய்தி பெறுவோமாக. மானிடப் பிறவியே கண்டும், கேட்டும், உய்தும், உணர்ந்தும், பரிபாகமடைந்தும், உயிர் திருவடியை அடைவதற்கும் உயர்ந்த உகந்த பிறவியாகும் என்பதை உணர்வோமாக.

உய்ய என் உள்ளத்துள் ஓம்காரமாய் நின்ற – எல்லா உயிர்களுக்கும் 'ஓம்' என்ற நாதம், ஆதிநாதம், ஆதிஒலி ஆகும். இது எல்லா ஒலிக்கும் மூலமாய் அமைந்தது. என்றுமே மறையாத, மாறாத ஒலியாகையால் இறைவனை 'ஓங்காரமாய்' நின்ற என்றார். அதாவது உயிருக்குள் ஓங்கார சொரூபமாக இறைவன் இருக்கின்றான், என்று தான் நேரே கண்ட அனுபவத்தை தான் நேரே பெற்ற அனுபவத்தை இங்கே சுவாமிகள் குறிப்பிடுகிறார்கள். இந்த ஓங்காரம் ஆனது ஒலிகளுக்கு முதலாய் மூலமாய் எங்கும் நிறைந்திருக்கும். ஓங்காரம் என்பது நமது சித்தத்தின் அடிதளத்தில், நமது சித்தத்தின் ஆழத்தில் உணரப்பட வேண்டுமே ஒழிய வேறுவழியில் காணவோ அனுமானிக்கவோ இயலாது. எனவே அவர் பெற்ற இந்த அனுபவம் யோகமார்க்கத்தின் அனுபவமாகும். "திருச்சிற்றம் பலம்" என்று சொல்லுவதும் ஓங்காரத்துக்குச் சமனான சொல்லே. இது "ஓம்" என்பதாகும். இந்த ஒலியின் நாதம் என்னுடைய உள்ளத்துக்குள், என்னுடைய உயிருக்குள் "ஓம்காரமாய்" "பிரணவ சொரூபமாய்" இறைவன் இருக்கின்றான் என்பதையே யாவருக்கும் விளக்குவதாகும், என்பதே இதன் பொருளாகும். எம்முடைய வாழ்வில் பொருளும் அருளும் நிறைந்த செல்வங்களாக பன்னிரு திருமுறைகளும், மெய்கண்ட சாத்திரங்களும் சமய இலக்கியங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறஇலக்கியங்களும் விளங்குகின்றன என்பது எமக்குக் கிடைத்த பெரும் பேறாகும். பெருமைமிக்க அருமை மிகுந்த கொடையாகும். இது சைவசமயத்தின் அருள் மிகுந்தபேறுமாகும்.

34 மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்

மெய்யா - மெய்பொருளே
விமலா - தூயவனே
விடைப்பாகா - ஏறுடைவாகனன்
வேதங்கள் - நால்வேதங்கள்

மெய்ப்பொருளாகிய மெய்யன் தூயவன், மெய்யனாகவும் தூயவனாகவும் விளங்குகின்றான் இறைவன். இடப (காளை) வாகனன் (விடைப்பாகன்) இடப வாகனம் - இது தர்மமே வடிவானது, இதுவே அவருடைய வாகனமாகும். எனவே விடைப்பாகா என்பது தர்மமே வடிவான வாகனமாகும். (வாகனத்தை உடையவன்) என்று நாம் எண்ண வேண்டும். அத்தோடு வேதங்களும் அவனைப் போற்றுகின்றன. வேதமயமானவனே இறைவன்தானே! இறைவன் வேதமே வடிவானவன் வேதங்களும் அவனைப் போற்றி நிற்கின்றன என்று இறைவனின் மேம்பட்ட நிலையைக் கூறுகின்றார் சுவாமிகள். மெய்ப்பொருளே - மெய்யனே, விமலனே ரிஷிப (காளை வாகனன்) வாகனனே/, வேதங்களால் அதாவது இருக்கு யசூர், சாமம், அதர்வணம் என்று அழைக்கப்படுகின்ற நான்கு வேதங்களால் நான்கு மறைகளாலும் இறைவன் பெரியவன் என்று நோக்கப்படுகின்றான் போற்றப்படுகின்றான். இறைவன் போற்றப்படுவதே! வேதங்களின் நோக்கமும் அதுவே. ஆகும். ஆன்றோரும் சான்றோரும், அத்தோடு மெய்யாகவே நான்மறைகளுக்கும் மேலானவன் என்று இறைவனைப் போற்றுகின்றார்கள். வேதங்களுக்குத் தலைவன் இறைவனே! என்று துதிக்கின்றனர். **காளை வாகனத்தை அவன் ஏன் ஊர்தியாகக் கொள்கின்றான். இதன் உட்பொருள் என்னவெனில் உலக உயிர்கள் அனைத்திலும் அவன் ஆரோகணம் செய்து இருப்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. ஆகவே தான் அவனை விடைப்பாகன், அவன் உயிர்களைச் செலுத்தும் பாகன் (சாரதி)** என்று இங்கே கூறியுள்ளார். ஆகவே தர்மமேவடிவான இடபவாகனத்தில் ஏறுதல் என்பது சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் மேலும் ஏறுதலாகும். 'மெய்யா விமலா விடைப்பாகா' மெய்யா – சத்தியமாக நீ இருக்கின்றாய், விமலன் - தூயவன், விடைப்பாகன் - ஏறுடைய வாகனத்தையுடையவன். சகல உயிர்களுக்குள்ளும் உறைபவன். இது சைவசமயத்தார் கூறுகின்ற உருவவழிபாடாகும். ஆனால் அவன் நாமம், ரூபம், கடந்தவன். பரம் பொருள் வேதங்களாலும் காணமுடியாதவன் அறியமுடியாதவன். எல்லைக்குள் அடக்கமுடியாதவன். சத்தியவடிவினன். அழிவில்லாத உண்மை வடிவினன் என்பதே இதன் உண்மையாகும். அண்டம் கடந்த பொருள் ஆனந்தவெள்ளப்பொருள் பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

**35 - ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே**

ஐயா - ஐயனே
என ஓங்கி - எட்டாது உயரமாகவும்
ஆழ்ந்து - ஆழமாகவும்
அகன்ற - அகலமாகவும்
நுண்ணியன் - பருப்பொருளாகவும்

நுண்ணியனை அடிமுடி தேடியவர்களாலும் காணமுடியவில்லை. **அரியோடு பிரமற்கு அளவறியாதவன்** (கீர்த்தித் திரு அகவல்) ஆனால் கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் கருத்தினில் மட்டுமே புலப்படக்கூடியவன். இந்த நுண்ணியன் என்பதைப் பக்தி செய்பவர்கள் உணர வேண்டும். **இறைவன் புடைபரந்தும் அமைந்த நுட்பமான நுண்ணியனாய் வியாபித்தும் விரிந்தும் பரந்தும் அத்தோடு தோன்றத்துணையாயும் உள்ளவன். என்பது ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே!** என்பதிலிருந்து புலனாகிறது. அதாவது நான்மறைகளும் உன்னை உயர்த்தி ஐயா என அழைக்கின்றது. மேல் உயர்ந்தும் கீழ் ஆழ்ந்தும் அவற்றிற்கும் எட்டாமலும் அகன்றும் நுண்ணியனாய் இருப்பவன் இறைவன். எனவே எங்கும் நிறைந்திருப்பவன் இறைவன். இறைவனை! அவனை நம் கட்புலனால் காணாமல் இருப்பதால் நுண்ணியன் என்றார். ஆம் கட்புலனால் யாருமே காணாத நுண்ணியனாகவும் இருப்பான்! இருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக இயக்கங்களைப் பஞ்ச பூதங்களால் உணர்கின்றோம். அதன் "ஓசைஒலியெலாம் ஆனாய் நீயே" என்பதையும் திருநாவுக்கரசருடைய திருத்தாண்டகத்திலே அவர் கூறியுள்ளார். நுண்ணியனே! என்பது அடிமுடி தேடியவர்களாலும் காணமுடியவில்லை என்பதை இங்கே **அரியொடு பிரமற்கு அளவறியாதவன்** என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். ஆனால் கூர்த்தமெய் ஞானத்தால் கொண்டுணர்வார்தம் தம் கருத்தில் மட்டும் உணரக்கூடியவன், புலப்படக் கூடியவன். இறைவன் புடைபடர்ந்து அமைந்த நுட்பமான நுணுதற்கு அரிய நுண்ணியன் ஆனால் தோன்றாத துணையாய் நிற்பவன் ஐயா என ஓங்கி! (i) ஓங்கி, (ii)ஆழ்ந்து (iii) அகன்று (iv) நுண்ணியனாய் அதாவது இந்த நான்கு பரிமாணங்களிலும் அவன் உயர்ந்தே நிற்பான். ஆகையால் ஐயா என ஓங்கி நிற்பவன்! என்றார். அவன் எங்கும் நிறைந்திருப்பவன் ஆனால் கட்புலனாலும் காணப்படாதவன். இந்த நான்கு பரிமாணங்களாலும் கூட அளக்கமுடியாதவன், அடக்க முடியாதவன்.

ஐயா என ஓங்கி – வேதங்கள் அவனுடைய தகமைகளை ஓங்கி ஒலிக்கின்றன. ஐயா என்று! ஆனாலும் அவை சிவபெருமானின் எல்லையைக் காணமுடியாமல் நிற்கின்றன. ஆகையால் ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே என்றும் கூறுகிறார். நான் நுணுகி ஆராய்ந்தும் ஓங்கி, ஆழ்ந்து அகன்றதையும் காணமுடியவில்லையே என்கின்றார். அவர். நுண்மைக்கும் பெரிய நுண்ணியன் அவனை மனித மனத்தின் பரிமாணங்களிலும் எல்லைக்குள்ளும் அகப்படுத்தவோ கண்டு பிடிக்கவோ முடியாது என்பதையே மேலேகூறிய இந்த நான்கு பரிமாணங்களிலும் காட்டுகிறார். எனவே அவன் ஓங்கி நிற்பதையோ, ஆழ்ந்து, அகன்று நிற்பதையோ அன்றேல் நுண்ணியனாக நிற்பதையோ உணரமுடியாது, யாராலும் இதுதான் என்று உணர்த்தவும் முடியாது என்பதே அவரின் கருத்தாகும். ஓங்கி ஆழ்ந்து அகன்று நுண்ணியனாகவும் இருப்பான் அவனை யாராலும் காணவோ காட்டவோ? இயலாது ஆனால் அவன் " பக்திவலையில் படுபவன்." பக்திக்குள் அகப்படுவான் என்று மாணிக்கவாசக சுவாமிகளே "பக்திவலையில் படுவோன் காண்க" என்று "திருவண்டப்பகுதி" நாற்பத்திரண்டாவது வரியிலே (42) மிகவும் உறுதியாகக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36 - வெய்யாய்த் தணியாய் இயமானன் ஆம்விமலா

| | | |
|---|---|---|
| வெய்யாய் | - | சூடு, காய்தல் |
| தணியாய் | - | குளிர்மை |
| இயமானன் | - | அட்டமூர்த்தி |
| விமலன் | - | மலமற்றவன், |
| வெம்மை | - | வெம்மையுடையவனே, குளிர்ச்சியுடையவனே |

இரு வகையுமுடையவன் வேள்வி வேட்கும் அந்தணனின் உள்ளத்தில் விளங்கும் தூயவனே? (வேள்வி வேட்கும் தலைவன் என்றால் - யாகம் செய்கின்ற தீ வளர்கின்ற அந்தணன்) அந்தணனது, அவனது உள்ளத்துள் வேள்வி வேட்கும் போது இறைவன் அவனுக்கு உள் நின்று உணர்த்துவான் மேலும் அவனது உள்ளத்தில் இருப்பான்.

பொய்யனைத்தும் அகன்று போகக் குரு வடிவில் வந்து அருள் செய்தாய் எனக்கு! அது உண்மை! தனித்து அறிவாகிய உயிருக்கு அறியாமையை அகற்றுகின்ற தனித்துவமாயும் இருக்கின்ற! திகழ்கின்ற! பேரொளியே! நீதானே! ஐயா! உஷ்ணமாகவும், தணிப்பாகவும் இருக்கின்றவனும் நீயே, அட்டமூர்த்தியும் நீயே மலமற்றவனும் நீயே! அப்படிப்பட்ட நீ எந்த வகையான அறிவுமில்லாத எளியேனுக்கு இன்பத்தைத் தந்தருளிய பெருமானே! நீ எனக்கு மெய்யறிவு தந்து என்மெய்யறிவாக விளங்குபவன் நீயேதான்! அறியாமையை நீங்கச் செய்கின்ற நீ எனக்கு நல்ல அறிவாக இருப்பவனே, நல் எஜமானாகவும் இருப்பவன் நீயேதான்.

இயமானன் - உயிருடன் அத்துவிதக்கலப்பாய் இருப்பவன் (அத்து விதம் என்பது - இரண்டறக் கலத்தல் என்ற பொருளாகும்) வியாபித்து நின்று, உயிருக்கு உயிராய் நின்று எம் கண்ணுக்குத் தெரியாமல் நின்று இறைவன் உயிர்த் தத்துவமாய் இருப்பவன் என்பதை அனைவரும் உணர வேண்டும். அப்படி இயக்கும் நின்மலன். மலமற்றவன். அவனுக்கு யாதொரு மலமும் யாதொரு அழுக்கு மில்லை என்பதையே இங்கே குறிப்பிட்டுள்ளார். வெம்மை- சூரியனுடைய வெப்பம் வெண்மை, தணிவு, தண்மை – சந்திரனுடைய குளிர்ச்சி பொருத்திய தன்மை. இப்படிப்பட்ட சிவபெருமான் சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களுக்கும் எஜமான். உயிருக்கு உயிராய் அத்துவிதமாய் அதாவது இரண்டறக் கலந்துள்ளவன் என்பதை இங்கு நன்கு விளக்குகிறார். அவன் உலக உயிர்களுடன் கலந்திருந்தாலும் மலமற்றவன் விமலன். உயிர்களிலும் படித்துள்ள மலம் அவனை ஒன்றும் செய்யாது என்பதும் இதனால் எமக்கு விளங்கவைக்கப் படுகின்றது

வெய்யாய் தணியாய் - சூடாகவும் இருப்பான் அது சூரியப் பிரகாசம், தண்மையாகவும் இருப்பான் அது சந்திரனின் குளிர்ச்சி. இயமானன் என்பது அட்ட மூர்த்திகளில் எட்டாவதாக கொள்ளப்படுவது. வெம்மை, தண்மை என்பன எல்லாம் பண்புகளே தவிர அது அததற்கும் உரிய குணா – குணி பாவம் என்பது போல உள்ள தனித்தன்மையல்ல? **எல்லாவற்றிற்கும் உலகிலுள்ள அனைத்திற்கும் எஜமானை! தனித்தலைமை ஏற்றிருப்பவனை என்ன குணம் என்று கூறுவது! அவன் எல்லாவற்றையும் கடந்தவன் என்பதை என்றோ தமிழர்கள் கண்டு கொண்டு இறைவனுக்கு கடவுள், கடஉள் என்று பெயரிட்டனர்.** வெய்யாய் - வெண்மை, தணியாய் - தண்மை இவை இரண்டும் இறைவன் தான் என்று சொல்லிய பெருமை சைவத்தமிழர்களுக்கே உண்டு. வைணவரும் இதை ஏற்பர். இதனை சைவத்தமிழரன்றி வெறெவரும் இப்படி உயர்ச்சியாகப் போற்றவில்லை.

**37 - பொய்ஆயின எல்லாம் போய் அகலவந்தருளி**

பொய்யாயின - பொய்யான தோற்றங்கள்
போயகல - போய்விலக
வந்தருளி - வந்தருளினான் இறைவன்.

எம் கண்முன்னே இறைவன் வந்தருளினான் என்னைப் பிடித்துள்ள பிடிக்குள் அன்னியமானவை எல்லாம் போய் அகலஎன்றே நிலையற்ற இந்த பிரபஞ்ச வாழ்வை அதாவது நிலையற்ற இந்த உலக வாழ்வை மண் உலக வாழ்வை புறக்கணிப்பதற்கு (நீக்குவதற்கு அருள் புரிந்த பரமன்) மாணிக்கவாசகருக்கு பரமன் (எம்பெருமான்) அருள் புரிந்தான். என்பதை **இறைவன் அருளாலே முற்றாக உலக மயக்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிந்தவர் போல் பூரணவிளிப்பினால் கூறுபவர் போல் கூறுகின்றார். எப்படி எனின் அன்னியமானவை எல்லாம் போய் விலகிப் போக என் கண்முன்னே வந்தருளினான் என்பதே அவர் கூற்றாகும்.

மாணிக்கவாசக சுவாமிகட்கு அருள்புரிந்த மாதிரியே ஆத்ம சாதகர்களுக்கும் அருள்புரிகின்றான் இறைவன் என்பதை நாம் நன்கு உணர்ந்து பார்க்க வேண்டும். அத்தோடு இறைவன் யாவருக்கும் அருள் புரிகின்றான் என்பதும் உண்மை அதையும் நாம் உணர வேண்டும். அதுவும் இங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்பதையும் நாம் உணரவேண்டும்.

உலக வாழ்க்கை பொய்யானது! ஆயுள் (உயிர்) நிலையற்றது! பொய்யானது செல்வம்! நிலையற்றது பொய்யானது இந்த பொய்யான புவன போகங்களெல்லாம், தன்னை விட்டுப்போய் அகல இறைவன் தன்னிடம் வந்தருளினான் என்பதை வியந்தும் விதந்தும் கூறினர். இதே போன்று ஒவ்வொருவரிடத்திலும் இறைவன் வருவான். இறைவன் எம்முடனேயே இருக்கின்றான் கடவுள் கடந்தும் எம் உள் இருக்கின்றான் என்பதை நாம் பரிபூரணமாக விளங்கிக் கொண்டால்தான்! பொய்யாயின எல்லாம் எம் மனத்தை விட்டு போய் யகலும் என்பது உண்மையயாகும் தனு, கரண, புவன போகங்கள் என்பன எல்லாம் இறைவன் உலக உயிர்கள் வாழ்தல் பொருட்டும் அனுபவிக்கும் பொருட்டுமே உண்டாக்கித்தந்தான். இவ்வுலகில் சகல உயிர்களையும் வாழ வழிவகுத்துள்ளான். இறைவன் ஆனால் இவையாவுமே அழியக்கூடிய பொய்யாயின ஆகும். இவற்றோடு உயிரும் பொய்யாயினதேயாம். அதுவும் ஒரு நாள் அழியும் என்பதை உணர்ந்து நிலையற்ற இவ்வுலக வாழ்வில் கவனத்தை விடுத்து நாம் இறையுணர்வில் எம் முக்கரணங்களையும் ஈடுபடுத்திக்கொள்ளச் செய்து இந்த பிறவி என்னும் பிறவிப் பிணியிலிருந்து விடுபட எண்ணுவோமாக. புவனபோகங்களில் வெறுப்பு உண்டாகும் போது இறைவனின் திருவடி நிழலையே நமது உள்ளமும் நாடும் என்பதையும் தெளிவாக கூறுகிறார்.

'பொய்யாயின எல்லாம் போயகல' பொய்யாயின என்பது எல்லாம்- அவையாவன காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சிரியம் இவையாவும் மனிதனுள் உள்இருந்து கடவுள் இயல்பை, கடவுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குள் இருந்து அருள்வதை எல்லாம் எமக்கு மறைப்பனவாகும். எமக்குள் இருக்கும் இந்த பொய்யாயின எல்லாம் போய் அகன்றால் தான் எமக்கு இறைவன் வெளிப்படுவான். இறைவன் எமக்கு வந்தருளிய காரணத்தால் உள்ளத்துள் இருந்து பொய் அகன்றது. அகமனதிலிருந்து இந்த குப்பைகள் நீங்க இறைவன் வெளிப்படுவான். இறைவனின் திருவடி அருள் கிடைத்தவுடன், திருவடி சம்பந்தத்தை நாம் உணர ஆரம்பித்தவுடன் பொய்யாயின எல்லாம் எம்மை விட்டுப் போய்அகலும். சொல்லாமற் கொள்ளாமற் தானே போய்விடும். நாம் உலகத்தில் உள்ள எமது இச்சைகளிலிருந்து விலகி இறைவனை நாடவழிவகுக்கும். இறைஒளி தானே பிறக்கும். பின்பு நல்லுனர்வுகள் நம்மை நல்வழியில் நடக்கவைக்கும் என்பதே உண்மையாகும்.

**38 - மெய்ஞானம் ஆகிமிளிர்கின்ற மெய்ச்சுடரே**

| | |
|---|---|
| மெய்ஞானம் | - நிறைஞான சொரூபம் |
| ஆகிமிளிர்கின்ற | - விளங்குகின்ற |
| மிளர்கின்ற | - ஒளிமங்காதது |
| மெய் சுடர் | - மெய்யான மங்காத சுடர் |

மிளிர்கின்றது, ஒளியை மங்காது தருகின்றது, என்றும் மறையாதது மாகிய சுடர் மெயச்சுடராகும். ஞானமும் ஜோதியும் சொரூபத்தில் ஒன்றே. (ரூபத்தில்) உருவத்தில் நிறைந்ததுமாம் (இறைவன்) நிறைஞான சொரூபமாய் இருக்கின்றான். ஆதலால் அவன் மெய்ஞானம் மெய்ஞானமாகி நின்று மிளிர்கின்ற மெய்ஞானம், ஒளிவிடுகின்ற மெய்சுடராக – மெய் ஒளியாகக் களங்கமற்ற ஒளியாக இருக்கின்றான். ஒரு சிறுகளங்கம் கூட இல்லாது மெய்ஞான மெய்சுடராக விளங்குகின்றான், மெய்ச்சுடரான இறைவன் என்பதை இங்கே ஜோதிச் சுடராக விளங்குகின்றான் என்பதை தெளிவாக கூறுகிறார். ஒரு விளக்கை ஏற்றி வைத்தால் அதன் பிரகாசம் தன்னையும் விளக்குகின்றது. தனக்குத்தானே ஒளியாய் இருக்கின்றது. தன்னைச் சூழவுள்ள இடத்தையும் விளக்குகின்றது! விளக்கு ஏற்றினால் தான் எரியும். அணைத்து விட்டால் அணைந்து அவ்விடமெல்லாம் இருளாக ஆகிவிடும். ஆனால் இறைவனோ மெய்ச்சுடர் ஒளிவிட்டு பிரகாசிக்கும் சுடர் என்றும் அணையாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் என்பதை நன்கு தான் உணர்ந்து கொண்டு ஏனையோருக்கும் உணர்த்துகின்றார். இயற்கையாகவே ஒளியுடனேயே இருக்கின்ற மெய்ச்சுடரும், மெய்ஞானமும் அவனேயாம். இறைவனை மெய்ஞான விளக்காக காண்கின்றார்கள் ஞானியர்கள் சைதன்யம் - எந்தநாளும் நிறைஞான சொரூபம் ஆதலால் அது மெய்ஞானம். அதுவே சைதன்யம்.

மிளிர்கின்ற சுடராக மெய்ஞான சுடரானசுடராக உள்ளான். சாதாரணமான சுடரில் திரிவேறு, எண்ணைவேறு, அகல்வேறாக இருக்கும். ஆனால் இறைவனோ எவ்வித பற்றுக்களும் இல்லாத மெய்சுடர், மெய்ஞானச்சுடர். இந்த தத்துவப் பொருளே சிவபுராணத்தில் முழுமையாக உள்ளடங்கிய மெய்ஞ்ஞானமாகிய – மெய்சோதியே மெய்விளக்கு என்றனர் சித்தர்கள். மெய்ஞானம் சுடராக மிளிரும் செம்பொருளாகும். உய்யவைப்பது, ஓங்காரமாய் நிற்பது, வேதங்களில் ஓங்கி நிற்பது, ஆழ்ந்து அகன்று நுண்ணிதாய் நிற்பது, அட்டமூர்த்தியாய் நிற்பது, பொய்யாயின எல்லாம் போயகல உள்ளத்துள் தோன்றி அகல்வது, உள்ளத்துள் ஒளி விடுவது எல்லாம் இந்த மெய்சுடரேயாம். ஆகவே மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்சுடராய்த் திகழ்வது எல்லாம் பரம்பொருளேயாம். இந்த சிவபுராணத்திலே சிவத்துடன் ஒன்றுபட வேண்டும் என்ற பேரறிவை இந்த ஆறுவரிகளும் எமக்கு உணர்த்துகின்றன. எல்லா உயிரகளிலும் மேலாக கருதப்படும் மனித உயிரையும் அறிவையும், அறிவின் விரிவையும் உணர்ந்து, மனிதன் தன் ஆற்றலை உணர்ந்து, மெய்ஞ்ஞானமாகிய மெய்ச்சுடரை தெளிவுற உணர்ந்து மேலான பிறவி வேரை அறுத்து பரம்பொருளைச் சேரமுயற்சிக்க வேண்டும். சிவபுராணத்தில் கூறப்பட்ட "உய்ய என்னுள்ளத்துள் - மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்சுடர்" என்ற இந்தவரிகள் மிகவும் உன்னதமானவை. மாணிக்கவாசகசுவாமிகள் இந்தமேலான நிலையில் தனது கரணங்களொடுங்கிய நிலையில் நின்று எப்படிக் கூறுகிறார், பாருங்கள் சோதிச்சுடர், மெய்சுடர் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார் என்பதையும் அவரது பக்தியின் உன்னதத்தையும் நாமும் சிறிது உணர்வோமாக. உணர்ந்து உணர்ந்துபார்ப்பதெல்லாம் உள்ளொளியையும் தந்து மனஒளியில் உன்னதமான நல்வழியையும் தரும் மனிதகுலத்திற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39 - எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே

எஞ்ஞானம் - எந்தவிதமான ஞானமும்
இல்லாதவன் - இல்லாதவன்
இன்பப் - என்றும் இன்பமுள்ளவன்
பெருமான் - சிவபெருமான்

தனக்கேயுரிய சுயப்பிரகாசம், ஞானமயம், ஜோதிமயம் எல்லாம் நிறைந்த பூரணமே சைதன்யம். இத்தனை பிரகாசத்திலும் ஒன்றாச்சேர்ந்து நீ எத்தனை பிராகாசத்திலும் நீ ஒளிமயமாகவே இருப்பாய் . உதாரணம் சந்திரனானவன் சூரியனிடமிருந்து பிரகாசத்தை வாங்கியே தான்பிரகாசம் கொடுப்பது போல மிளிர்கின்றது. இத்தன்மையாகவே சகல உலகுயிர்களும் இருக்கின்றன.! தானே பிரகாசிக்கும் பிரகாசமும் திறமையும், உலகுயிர்களுக்குமில்லை. சந்திரனுக்குமில்லை இறைவனிடமிருந்தே பிரகாசத்தைப் பெறுகின்றன என்பதுவே உண்மையாகும். ஆனால் நானோ? இல்லாதவன் அதாவது எஞ்ஞானமும் எவ்வித அறிவோ, ஒளியோ இல்லாதவன்! என்று தன்னைத் தான் தாழ்த்தியே சிந்திக்கின்றார் மாணிக்கவாசகசுவாமிகள் என்பதை நாமும் ஒரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படி சிந்திப்பவர்க்கு இறைவனே எல்லாம் நிறைந்தவன் என்பது மனக்கண் முன் பிரகாசத்தோடு கூடிய உணர்வாகவே தெரிகிறது.

ஆதலால் நீ இன்பப் பெருமான்! என்றும் நிறைவுகள் யாவும் நிறைந்த பெருமான்! என்றும் பூரணன்! என்றும் இறைவனை முதன்மைப் படுத்துகிறார். இதனுடைய உள்ளார்ந்த உள் உணர்வென்னவெனில், மறைமுகச் சிந்தனை என்னவெனில் அவனின்றி ஓரணுவும் அசையாது என்பதேயாம். இறைவன் பூரணன். எல்லாமாக எங்கும் நிறைந்தவன். எல்லாம் உலகமும் ஆனாய் நீயே என்பது இங்கே அறிவுறுத்தப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வகை ஞானமும் இல்லாத எனக்கு அறிவிலே முதிர்ந்த ஞானத்தின் மூலம் இறைவனை அறிவதைவிட **உணர்வையே துணையாகக் கொண்டு அவனை அனுபவிப்பது மிகச் சிறந்ததாகும். இது மாணிக்கவாசக சுவாமிகள் கூறும் கூற்றாகும். எஞ்ஞானம் இல்லாதோன் என்பது தனக்கு உலகியல் அறிவான அபரஞானமும் இல்லை. இறைவனைப் பற்றிய பரஞானமும் இல்லை.** ஆகவே தனக்கு எஞ்ஞானமும் இல்லை என்பதையே கூறுகின்றார். இறைவனே தூய அறிவுவடிவானவன். தான் எஞ்ஞானமும் இல்லாதவன் என்று மாணிக்கவாசகர் கூறுவதை நாவுக்கரசர்.

**ஞானத்தால் தொழுவார் சிவஞானிகள்**
**ஞானத்தால் தொழுவேன் உனை நானலேன்**

எனக்கு உன்னைஞானத்தால் தொழும் வல்லமை இல்லையென்று கூறி ஞானத்தால் உணர்வதை மனதிற்கொண்டு திருநாவுக்கரசு நாயனார் இப்படிக் கூறினார். மாணிக்கவாசக சுவாமிகள் எவ்வித ஞானமும் இல்லாத எனக்கு இன்பத்தை தரும் எம் பெருமானே! ஞானத்தைத் தந்த பெருமானே! என்று கூறி! மேலும் இறைவன் தானே நினைத்தால் எல்லோருக்கும் எல்லாம் அருள்வான் என்றும் அழுத்தம் திருத்தமாக கூறுகின்றார். எந்தஞானமும் இல்லாதவர்களுக்கு இறைஞானம் மதி ஞானம் என்ற ஞானம் மட்டும் இருந்தால் போதும் இந்தப் பிறவிஎன்னும் பொரும்கடலிலிருந்து நீங்கி விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 - அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

| | |
|---|---|
| அஞ்ஞானம் | - அறியாமை ஆணவம் |
| அஞ்ஞானம் தன்னை | - ஆணவ இருள் தன்னை |
| அகல்விக்கும் | - இல்லாமல் செய்யும் |
| நல்லறிவே | - நல்லறிவாக மிளிரும் இறைவன் |

இந்த **அறியாமையையும், ஆணவத்தையும்** அகற்றினால் தான் அது இல்லாதொழிந்தால் தான் அகன்று போனால் தான் நல்லறிவு பிறக்கும். இறைவன் இவற்றையெல்லாம் அகற்றுகின்ற, விலகச் செய்கின்றவனும் ஆவான். அவன் எல்லோருக்கும் நல்லறிவாகவுமேயாக விளங்குகின்றான். இறைவன் சகல பேருடைய அறியாமையையும் ஆணவத்தையும் போக்குகின்ற, அகற்றிவிடுகின்ற, நல்லறிவாளன். தூய அறிவாக இருந்து யாவரையும் தூய்மைப்படுத்தும் ஜோதியாகவும், தூய அறிவாகவும் ஜோதியாகவும் விளங்குபவன். ஆகவே அனைவருக்கும் நல்லறிவும் அவனேயாம் என்பதை எண்ணி இறைவனே ஒளியாவான் என்று எண்ணி போற்றுவோமாக. **அஞ்ஞானத்தை அகற்றுதல் என்பது:- ஆசை, இச்சை, அங்கலாய்ப்பு, மனவேகம் இவற்றையெல்லாம் தணித்துத் தணித்து இல்லாமலே செய்வதற்கு இறையருளை நாடி நிற்க வேண்டும் என்பதாகும்.** மேலும் பக்தியை நாடி நிற்பதற்கு முதலில் இறைவனை நம்பு என்றே சமயநூல்கள் கூறுகின்றன. இதை நன்றாக நாம் உணர வேண்டும். உணர்ந்து உணர்ந்து சிந்திக்க வேண்டும். நற்சிந்தனையால் நாம் தூய்மையடைய வேண்டும்.

**அஞ்ஞானமாகிய இவற்றையெல்லாவற்றையும் அகல்விக்கும் நல்லறிவுச் சுடராய் மிளிர்வது இறையருளே! என்பதையும் எம் மனதினுள் நிலைநிறுத்த வேண்டும். நல்ல இறை பக்தியோடு, நல்ல அன்பு நெறியோடும், நின்று ஒழுகினால், அன்பு நெறியானது நல்ல ஒழுக்கநெறியாக, பத்தி நெறியாக, சமயநெறியாக நின்று நல்லறிவுச்சுடரை உள்ளத்திலே ஏற்றும் என்பது உண்மை.** நல்லறிவுச்சுடர் உள்ளத்திலே ஏற்றப்பட்டால்தான் அஞ்ஞானத்தை எம்மால் அகல்விக்க முடியும் என்பதும் உண்மையாகும். இதனை உணர்வதே ஆன்மாவிற்கு விடிவாக அமைந்துவிடும். இதை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் ஆழ்ந்த சிந்தனையால் சிந்திக்க அஞ்ஞானம் தானே அகன்றுவிடும் என்பதை வலியுறுத்துகிறார். எப்படியிருக்கிறது ஞானியாகிய மெய்ஞானமான மாணிக்கவாசகருடைய வேண்டுதல்

அஞ்ஞானம் தன்னை நம் மனதிலிருந்து நாம் அகற்றினால் இறைவன் தூய அறிவானவன் அவனை அடையவும் அவனை உணரவும் அறிவு வழியைத் தவிர அன்பு வழியே போதுமானது ஆகும். **அன்பு வழியே போதுமானது என்பதற்கு எடுத்துக்காட்டு திண்ணனார். ஆறு நாளில் தீவிர அன்பினால் இறைவனுடன் இரண்டறக்கலந்தவர்.**

தன்பரிசும் வினை இரண்டும் சாரும் மலம் மூன்றும் அற
அதன் பிழம்பாய் திரிவார்

**அறிவு வழியைக்காட்டினும் இறைவனை அடைய அன்பு வழியே சிறந்தது. சிறந்த கற்றறிந்த கல்விமான்களுக்கெல்லாம் அஞ்ஞானம் (அறியாமை) நீங்குவதில்லை. ஆனால் மாணிக்கவாசக சுவாமிகள் தான் அனுபவித்து கண்ட உண்மை என்னவெனில் இறையருள் கைகூடினால் தான்** அஞ்ஞானம் அகலும் இது எவ்வளவு அருமை! அருமை! அஞ்ஞானம் தன்னை அகல்விப்பவன் இறைவனின் நல்லறிவுதான் என்பதை நன்கு விளக்குகின்றார். அகலும் என்பது காரியமாகும். ஆகையால் தான் 'அகல்விக்கும் நல்லறிவே' என்கிறார். மெய்ஞானக் காட்சியில் அறிவே சொரூபமான பரம்பொருளை இப்பூமியில் நேரே தன் கண்களினால்கண்டவருக்கு நேரே கண்டவருக்கு! வியப்பு மிகுதியால் நினைவு எப்படி தோன்றுகிறது!தான் நேரே கண்ட பரம்பொருள் ஒருநாள் தோன்றி ஒருநாள் மறையும் பொருளன்று. அப்படிப்பட்ட பரம்பொருளையே நேரே கண்டார் பரமகுருவாகிய பரம்பொருளையே தனது குருவாக பரமாச்சாரியராகக் கண்டு தெளிகின்றார். தெளிந்தவர் அஞ்ஞானம் தன்னை 'அகல்விக்கும் நல்லறிவே' என்றார். அவர் கண்ட நல்லறிவுச் சுடரை நாமும் சிறிது உணர்ந்து எம்மையும் இதம் செய்து இறையருளின் பேறினால் அஞ்ஞான இருளைப் போக்குவோமாக. நல்லறிவாகவும், மெய்யறிவாகவும் விளங்குபவன் இறைவன் ஒருவனேயென் றெண்ணினால் அறியாமையால் உழலுகின்ற கல்விமான்களெல்லாம் திருந்துவதற்கு வழியுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**41 - ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்**

| | |
|---|---|
| ஆக்கம் | - தோற்றம் |
| அளவு | - ஒருகால அளவு |
| இறுதி | - முடிவு |
| இல்லாய் | - இல்லாதவன் |
| அனைத்து உலகும் | - அனைத்து அண்டசராசரங்களும் |

இறைவன்! ஆக்கமும் அளவும் இறுதியும் இல்லாதவன், தோற்றமும் அதாவது ஆக்குதலும், ஒருகால அளவும், இறுதியும் முடிவும் இல்லாதவனே. எல்லா உலகங்கள் யாவற்றையும் படைப்பான், காப்பான், அழிப்பான் அருளின் உறைவிடமாய் நிலை நின்றும் அருள்முழுவதையும் உயிர்களுக்குத்தரும் உறைவிடமாயும் விளங்குபவனும் அவனேயாம்.

பரமாத்மன் தான் மட்டும் முத்தொழிலாலும் ஆனவனல்ல. அவனுக்கு படைப்புமில்லை, பிறப்புமில்லை, இறப்புமில்லை. ஆனால் அவன் அனைத்து உலகங்களையும் படைப்பான். ஐந்தொழிலையும் இடையறாது, இடைவெளியில்லாது செய்பவனும் உலக இயக்கமுமே அவனேயாம் அவன் முழுவதுமான இறைவன். இந்தப் பரந்து விரிந்த அண்டசராசரங்களும் அவனேதான். ஆகையால் ஆக்கம் அளவு இறுதி இல்லாதவன் அனைத்துலகிற்கும் அவனே பரம்பொருளாவான். இதனை மிகவும் சுருக்கமாக விளக்குகின்றார். இங்கே மிகவும் தெளிவாகவும் உன்னதமாகவும் அது நமக்கு விளங்குகின்றது. ஆகவே மனிதர்களாகப் பிறந்தநாம் இவற்றையெல்லாம் அளவுப் பிரமாணத்தில் விளங்கிக் கொள்வது மிகவும் சிறந்த ஒன்றாகும்.

ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும் - அனைத்துலகம் ஆக்கம் அளவு இறுதி இல்லாய் என்றார் இறைவனை. எனவே இறைவன் ஒருநாள் தோன்றி ஒருநாள் மறையும் பொருளன்று என கூறினார். அந்த அறிவுப் பிழம்பாகிய பரம்பொருள் இந்த பிரபஞ்சம் முழுவதையும் தோற்றுவித்து காத்து அழிக்கின்ற தொழிலையும் செய்கின்றது. அண்டசராசரங்கள் அனைத்து இயக்கமும் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளே தான் அவனருளாலேயே! அவனே தான்! அனைத்து உலகிலும் நிறைந்த பரம்பொருள். ஆகவே ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும் என்றார். நீக்கமற நிறைந்து நிற்கும் பரம்பொருளே ஆக்கம் அளவு இறுதி இல்லாது அனைத்து உலகுமாக நிற்கின்றது என்பதை யாம் புரியாத புதிராக எண்ணாமல் உண்மை எதுவோ? மெய்மை எதுவோ? அதை மெய்மையாகவே விளங்கிக்கொள்ள வேண்டும்.

**42 - ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்**

ஆக்குவாய் - படைப்பாய்
காப்பாய் - நிலைத்திருக்கச் செய்வாய்
அழிப்பாய் - அழித்து விடுவாய்
அருள் - திருவருள்
தருவாய் - தருபவன்

ஒழுக்கத்தை வெல்பவர்களுக்கு அருள் உருவாய் - உனது அருளினைத்தருவாய் பின்பு உயிர்களின் பொருட்டு, அதாவது உயிர்களின் பலவகைப் பிறவிகளின் பொருட்டும் தோற்றம், மறைவுகளைக் கொடுத்து நீயே முடிவில் உயிர்களுக்கு அருளையும் தருவாய். அதாவது உயிர்களுக்குக் கிடைக்க வேண்டிய வீடு பேறினையும் அருளுவாய். இதுவே வாழ்கைச்சுழற்சியாகும். இந்த மாயப் பிரபஞ்சத்தின் கண்ணே மூன்று விதமானதோற்றங்களையும் வருவிக்கும் வல்லமை அவனுக்குண்டு, முத்தொழிலையும் செய்து பின்பு அருள் தந்து, (அதாவது மலபரிபாகம் வரும் வரை அருள் தந்து) ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மலங்கள் வலிமை குறைந்து போகும் வரை உயிர்களைப் பல பிறவிகளிற்குள் செலுத்தி நீயே முடிவில் உனது திருவடித் தொண்டில் புகும்படி செய்வாய். செய்து விடுதலையும் கொடுப்பாய் என்பதுவும் உனது பஞ்சகிருத்தியத்தாலேயே விளங்குகின்றது. ஜீவன் உய்வு அடைவதற்கு அதுவே முதன்மையாகிறது. அருள் எனப்படுவதும் அதுவேயாகும். உனது பஞ்சகிருத்தியத்தாலேயே ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய் என்பதைக்கூறி உலகோருக்கு பஞ்சகிருத்தியங்களையும் விளங்கவைக்கிறார் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உயிரிற்கு! அதாவது மானிடனாகப் பிறந்த ஜீவனானவன் போகங்களை அனுபவித்து அதனால் வெறுப்பு உண்டாக, உண்டாக அதாவது அப்படி வெறுப்பை நீயே உண்டாக்குவாய்! அப்படி உண்டாக்க உண்டாக்க உனது திருவடித் தொண்டில் புகும்படி செய்வித்து அந்த சீவனுக்குப் பக்குவமுண்டான போது மலபந்தத்தைக் அதாவது உலகபாசத்தை இல்லாமல் செய்து கெடுத்து நித்தியபேரின்பத்தை அருளுவாய். அதுவே நினதருளின் சிறப்பாகும். அதுவே ஒரு ஆத்மாவிற்கு நீ விடுதலை தந்து உன் திருவடியில் சேர்வதற்குச் சேர்கும் அருளுமாகும்.

பூவில் மணம் போல் அன்பருள்ளத்தில் பிரியாது இசைந்திருப்பவனே. ஆக்கும் அருளும், காக்கும் அருளும், அழிக்கும் அருளும் உனதேயாம். அவனின்றி ஒரு அணுவும் அசையாது என்பதை நாம் நன்குபுரிந்து கொண்டால் சிறிதளவாவது இந்த பந்தபாசங்களில் இருந்து நாம் விடுபடலாம்.

ஆக்குவாய் காப்பாய் - ஆக்கப்பட்ட உலகத்தை காக்கின்றது, அதாவது காலநிர்ணயம் முடியும் வரை காக்கின்றது. பின்பு காலநிர்ணயம் முடிந்தவுடன் அழிக்கின்றான். மீண்டும் இந்த பிரபஞ்சத்தை உண்டாக்குகின்றான். இதை இறைவன் செய்வது உயிர்கள் மேலுள்ள பெரும் கருணையினால் இப்படி அருள்கின்றான். அதாவது இந்த பிரபஞ்சத்தை ஆக்கினால் தான் உயிர்கள் பிறந்து வாழமுடியும் . இங்கே பிறக்கின்ற உயிர்களின் பாவங்களைப் போக்க இறைவனை வணங்கி தொழுது மன்றாடி இறைவன் திருவடி நிழலில் போய் சேரமுடியும். இதற்கு உயிர்களுக்காக ஒரு உலகம் தேவை ஆகவே ஆக்குதல், காத்தல், அழித்தல் எல்லாம் இவ் உலகிலுள்ள உயிர்களின் நன்மை கருதியே அவன்செய்யும் அவனது அருள் செயலேயாகும். உலகிலுள்ள உயிர்களின் பொருட்டே என்பதை நாம் நன்கு உணர்ந்து இறைவனின் ஐந்தொழிலும் இந்த உயிர்களின் பொருட்டே என்று போற்றி போற்றி வணங்குவோமாக. இத்தனையும் நடைபெறுகின்றது என்பது உலக உயிர்களுக்காகவேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**43 - போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்**

| | |
|---|---|
| போக்குவிப்பாய் | - பிறவியிலிருந்து போக்குவிப்பாய் |
| புகுவிப்பாய் | - புகச் செய்வாய் |
| என்னை | - அடியேனை |
| நின்தொழும்பில் | - உன்னுடைய தொழும்பில் |

பிறவியிலிருந்து என்னை இனிப் பிறவா நிலைக்குப் போக்குவிப்பதும், உனது திருத்தொண்டில் புகும்படி செய்விப்பதும் சரியைத்தொண்டு செய்விப்பதும் நின்கருணையேயாகும். உன் கருணையால் பிறவியிலிருந்தும் நீங்கமுடியும். இப்பிறவியிலே உனது ஆலயத்தில் திருத்தொண்டு செய்வதற்கும், நின்தொழும்பு செய்வதற்கும், முற்படுவதற்கும் எம்மை திருவடித் தொண்டில் புகுவித்தல் என்பது உன்னதமான மேல் பொருளாகும். அருள் புரிந்ததற்கும், பக்குவம் ஏற்படுவதற்கும், இறைவன் அருள்புரிந்து விட்டார் என்பதற்கும் இது சமனாகின்றது. ஏதாவது ஒன்றில் அதாவது சரியைத் தொண்டில் நம்மைப் புகவைத்தாலே, அதுவாகிப் போக்குவிப்பாய் என்றதும் பிறவித்தளையிலிருந்து நீக்கிவிப்பது, என்பதற்கும் அது சமமானதும் ஆகும். அதாவது நாம் பல படித்தரளங்களால் தான் எம்மைத் தயார்ப்படுத்தவேண்டும். எம்மைப்பிறவித்தளையிலிருந்து நீக்கிவிப்பதற்கு ஆலயத்தொண்டுகள் சிறந்தவழியாகும்.

பிறவிப் பெருங்கடல் போய் அகல்வதற்கு சரியைநெறி, கிரியை நெறி, யோகநெறி, ஞானநெறி இவ் நால்வகை நெறியும் சைவசித்தாத்தில் வகுக்கப்பட்டுள்ளது. இதை வாழ்ந்துகாட்டி வழிவகுத்தும் காட்டியுள்ளனர் நாயன்மார்கள். சாமீப, சாலோப, சாரூப, சாயுச்சிய முத்தியும் அடைந்திருக்கின்றார்கள். இந்த நால் வகை சமயநெறிகளையும் நால் வகை முத்தியையும் சிவபுராண வரிகளையும் சிவனடியார்கள் சற்றே சிந்திக்க வேண்டும். சைவ சமயிகள் மிகவும் தெளிந்த மனத்தோடு சிந்திக்க வேண்டும். இதுவே போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின்தொழும்பில் என்பதாகும் என்பதை நன்கு விளங்கிக்கொள்ள முடியும். இவையெல்லாம் சிவபுராணம் உட்கருவாகக் கூறும் முத்திப்பேறுக்கு வழிவகுப்பன ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவாய் என்னை — **திருப்பெருந் துறையில் குருத்தமரநிழலில் வீற்றிருந்த குருநாதனின் திருவடிகளைத் தரிசித்தவுடனேயே அந்த மாத்திரத்திலேயே! பாண்டியனுடைய அமைச்சர் என்ற பெரும் பதவியும் திருவாதவூரர் என்ற பெயரும் எல்லாம் கரைந்துவிட்டது. இவ்வுலக இன்பங்களில் மூழ்கியிருந்த ஆசை முற்றுமுழுதாக நீங்கிவிட்டது. பசுகரணம் நீங்கி பதிகரணம் அவருக்கு வந்துவிட்டது. அதாவது இவ்வுலகில் உயிர்களுக்கு இயற்கையாகவே உயிரின் மேலுள்ள ஆசைகளும்! உலகியலின் பற்றுக் கோடுமே "பசுகரணமாகும்" அந்த 'பசுகரணம்' அவருக்கு** முற்றாகவே நீங்கி விட்டது. அதனையே போக்குவாய்? என்றார். எதைப் போக்குவாய்? இந்த உலகிலிட்ட பெயரையும் உலகஆசையையும் போக்குவாய் என்றார். இந்த உலகிலிட்ட பெயரைப் போக்குவாய்! பரம்பொருளே! குருநாதா! நீ எனக்கு நேரே வந்து தீட்சைதந்தாய்! நீ தந்த 'தீட்சையினால்' அடியார் கூட்டத்தோடு சேர்ந்து உன் தொழும்பு:- சரியை செய்ய என்னைப் புகுவிப்பாய் என்று கூறினார். தொழும்பு என்பது :- அடிமை என்ற பொதுப் பெயரைக் கொண்டதாகும். அது "பக்தி உலகிலே" இறைவனுக்கும் உயிரிற்குமுள்ள 'ஆண்டான் அடிமை' உறவை சிறப்பாகக் குறிப்பதாகும். நான் அடியார் கூட்டத்தோடு புகவேண்டும் என்று என்மனதில் இதுவரை எண்ணியதுமில்லை. தன்னை அடியாராக அடியார் கூட்டம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்குமில்லை அடியாருக்குமில்லை. இதுவரை எனக்கும் அடியார்களுக்கும் அதை எண்ணிப்பார்க்கும் எண்ணம் வரவுமில்லை இந்த வகையில், ஆனால் குருநாதரே "தன்தொழும்பு" செய்விக்க என்று அத்தொழும்பில் என்னை புகுவித்தவராவார். இறைவனே என்ற பற்றுணர்வே சுவாமிகளுக்கு நெஞ்சில் குடிகொண்டிருந்தது கண்கூடாகும். இவையெல்லாம் இறைவனின் நேரடித் தரிசனத்தாலேயே அவருக்கு கிடைத்த பேறுகளாகும். எனவே திருவாசகம் பிடித்தப்பத்து 9 என்ற பாடலிலே இறைவனே தன்னைமாற்றியமைப்பதற்கு வந்தார் என்கிறார்.

ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் திரிந்தவர்
சிவபெருமானேயாம்

என்பது அவரின் பாடல்மூலமாகக் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**44 - நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே**

| | |
|---|---|
| நாற்றம் | - மணம் |
| நேரியாய் | - நுட்பமாய் பொருந்தியவன் |
| சேயாய் | - தூரத்திலிருப்பவன் |
| நணியானே | - பக்கத்திலிருப்பவனே |

பூவின் மணம் போன்றவனே! பூவிலே மணம் மிக நுட்பமாகப் பொருந்தியது போன்று எம்மனத்தினுள் சேரவல்ல நுட்பமான மணம் பொருந்தியவனே! நீவணங்காதார்க்குத் தொலைவிலும் வணங்குபவர்களுக்குப் பக்கத்திலும் இருக்கின்றாய் என்று அடியார்களுக்கு மிகத்துல்லியமாக விளங்க வைக்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகள். பூவிற்குப் பக்கத்தில் வந்தால் அதன் மணம் நுகரப்படுகின்றது. எட்ட இருப்பவர்களுக்கு அது நுகர்வதற்கு பயன்படுவதில்லை, உண்மையாகவே அதன் நுண்ணிய நுகர்வு விளங்காது. நணியான் - பக்கத்திலிருப்பவன். பக்தர்களுக்கு பக்கத்தில் இருந்து அருள்புரிகின்றான். இறைவனை ஆராய முற்படாதவர்களுக்கு அவன் தூரத்திலிப்பவனாகின்றான். ஆமாம் தூரத்திலிருப்பவனாகவே இருப்பான். ஆனாலும் அவர்களையும் இறுதியில் அருள் புரிந்து ஆள்கொள்ளுவான். "புறந்தார்க்கு சேயோன்" என்று 8வது வரியிலே இறைவனைத் தேடாதவர்களுக்குத் தூரத்திலிருப்பவன் என்பதையும் முன்பும் பார்த்து உணர்ந்து கொண்டோம்.

நாற்றம் என்பது நறுமணம். நறுமணம் என்பது ஒரு உருவமோ வடிவமோ உடையது அன்று, ஆனால் சுவாமிகள் கூறிய நாற்றத்தின் நேரியாய் என்பதை பற்றி சிந்திப்போமானால் "நாற்றத்தின் நேரியாய்" என்பதும் அவருடைய மனத்திலே அவர் எண்ணுவது என்றும் தான் எண்ணுவது என்பதும், எனது சித்தத்தில் உள்ள உயர் கடமையான உயரிய தொழும்பின் முதிர்ச்சி என்றே தெரிகிறது அவருக்கு. ஆனால் **மாணிக்கவாசக சுவாமிகளின் நிலையில் நின்று பார்க்கும் போது: தனக்காகவே குருவடிவில் வந்து தனக்குக் காட்சியளித்ததையும் தான் தொட்டு வணங்கும் நிலைக்கும் உரியவனாக நின்று தொழுததையும் எண்ணும் போது அவருக்கும் அந்த நேரத்து உணர்வு என்பது மலரின் மணம் போல வெளிப்படுகின்றது எனலாம். அதாவது மலருக்குள் மணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நுட்பமானது தானே அது அவர் இறைவனை** நேரே கண்டதையும் அந்தக் காட்சி பிரிக்க முடியாது என்றே இங்கே கூறுகிறார். அரும்பு மொட்டாகியதை நேரே கண்ட உணர்வு என்பது மலர்ந்து விரியும் போது அதனுடைய பக்குவத்திற்கு ஏற்ப அதனுள் இருந்து மணம் கமழ்கின்றது. அதுபோலவே மனிதரின் உள்ளத்துக்குள் மறைந்து இருக்கும் மனத்தின் "ஓங்காரமும்" மனம் பக்குவமான நிலையில் அறியப்படுகிறது. ஓங்கார உணர்வு வெளிப்படுகின்றது. அவர் "நாற்றத்தின் நேரியாய்" என்று எண்ணிய போது மலரும் உள்ளந்துள் உள்ள இறைவனுக்கும் அடியார் கூட்டமும் ஒரே ஒரு பொருளாம் எனத் தோன்றியது. அடியார் கூட்டமும் இறைவனும் மறைந்து விட்டபின்பு: **ஐயா! எங்கே நீ போய்விட்டாய் என்று நினைத்து அழும் நிலையில் "சேயாய் நணியானே" என்றார். நணியானே** என்று எண்ணியது ஏன் எப்படி? எனச் சிந்திப்போம்? முதலில் தன் கண்ணால் சிவபெருமானை பார்த்தபோதும் பின்பு மறைந்த பின்பு தனக்கு புறத்தே காட்சியளித்த இறைவன் அவருக்கு இப்போது தன் மனதுக்குள்ளேயே மிளிர்கின்ற மெய்சுடராகக் காட்சியளிக்கின்றான் என்று எண்ணினார். மெய்ஞ்ஞானமே அவர் மனதுக்குள் மிளிர்கின்றது. **அவருடைய ஆழ்மனதுக்குள் இறைஅருளே காட்சி தந்தது எனலாம். இறைவனை ஆழ்மனதுக்குள்ளேயே இருத்தி வைத்துக் கொண்டு "அவனருளாலேயே திருவாசகம் முழுவதையும் பாடி முடித்தார்" என்று கூறவேண்டும். என்றுமுள்ளவனான, எங்கும் நிறைந்தவனான இறைவன் நம்முடைய அறிவிற்கோ, அனுபவத்திற்கோ, உணர்வுக்கோ, கற்பனைக்கோ அப்பாற்பட்டவன் அவன். சுவாமிகட்கு நேரே வந்து காட்சிகொடுத்து அவரது உணர்வில் பூவும் மணமும் போல இருந்தது. (பூவும் மணமும் என்றும் பிரியாதது)** இறைவன் தன் மானிட வடிவத்தை மறைத்து தானும் மறைந்த போது இறைவனை தனக்குள்ளேயே இருக்கின்றான் என்று உணர்ந்து உணர்ந்த பின்பே "சேய்யாய் நணியானே" என்றார். அவர் உணர்வலைகள் எப்படி இருக்கின்றது. இதனை மானிடரானநாம் சிந்தித்தால்! இப்படியாக பலதரப்பட்ட அணுகுமுறைகளைத் தெய்வீகக் காட்சியாகவே அவர் தனது அனுபவத்தில காண்கின்றார், என்பது எமக்கு நன்குபுலனாகும். இப்படியான சிந்தனையோடு சிவபுராணத்தைப் பாடப் பாட மனநெகிழ்ச்சியும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 - மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

மாற்றம் - மாறுபடுகின்ற நிலை
மனம் கழிய - மனதிலிருந்து அகன்று போகுமிடத்து
நின்ற - நமக்கு அந்தமனதில் மறைந்து நீ நிற்பாய்
மறையோனே - வேதியனே, நீ

மாற்றமடைகின்ற, மாறி மாறி விகாரப்படுகின்ற தன்மையுடையது மனம். அந்த மாறுகின்ற மனம் கழிய வேண்டும். அதாவது மாறுகின்ற மனநிலை இல்லாமல்ப் போகவேண்டும் உறுதியான நல்ல மனம் வரவேண்டும் என்பதுவும் உண்மையே. மனமானது விகாரமின்றி நேராய் இருக்கும் போது ஆத்மா செம்மை நிலையிலிருக்கும். ஆத்மா செம்மை நிலை இல்லாத போது தான் இறைவன் மறைபொருளாவான் செம்மை நிலை இல்லாதபோது இறைவன் தூரத்திலிருப்பவன் ஆவான் ஆத்மா விகாரமடைந்து மாறுபடும் போது இறைவன் தன்னைக் காட்டிக் கொள்ளமாட்டான். வெளிப்படவும் மாட்டான் இறைவன் வேதத்தின் பொருளுக்கும் வேதத்திற்கும் தலைவன், வேதப் பொருளாகவேமறை பொருளாகவே இருந்து கொள்ளுவான், நம்மை அருள் சுரந்து ஆட்கொள்ளவரமாட்டான். மாறுகின்ற மனம் கழியுமட்டும் உறுதியான மனம் வரும் வரைக்கும் மறைந்திருப்பான். மறைபொருளாகி மறைந்து கொள்ளுவான் வேதியன். (மறையோன்)

மாறுபடுகின்ற மனத்தில் எப்படியிருப்பான் என்பதை ஒரு உதாரணம் மூலம் பார்ப்போம். கண்ணாடி ஒன்றில் மேடுபள்ளம் என்னும் விகாரமிருந்தால் அதன் மூலம் பார்க்கும் பொருளை அது உள்ளபடி விளக்குவதில்லை. மேடுபள்ளமாகவே அந்தப்பொருள் தோன்றும் தூயதும் ஒப்பசெப்பமானதுமான கண்ணாடியின் மூலம் பொருள் ஒன்று உள்ளபடி ஒளிர்கிறது. அந்தப் பொருளைத் தெளிவாகக் காட்டி நிற்கிறது. மேடுபள்ளமற்ற கண்ணாடியில் உருவமும் மேடுபள்ளமற்றதாகவே இருக்கும். **தூயமனமே ஆத்மசாதனம் செய்ய சிறந்தநிலையைத் தரும். ஆத்ம சாதனமும் அப்போது தூய்மையுடையதாகவே இருக்கும்.** அலைகின்ற மாறுபடுகின்ற மனத்தினால் ஒன்றுமே செய்ய முடியாது. மனத்தினைப் பொறிவழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகாது தடுத்து நிறுத்தி ஒரு நிலைப்படுத்திக் கொள்ளப் பழக வேண்டும். மாறுகின்ற மனம் செம்மைப்படுத்தப்பட்டு ஐம்புலன்வழி அதாவது பொறிவழி போகாமல் நின்றால் மனிதனின் மனத்தின் மாறுகின்ற தன்மைமறையும். அப்பொழுது மறையோனாகிய வேதியன். வேதியனான எம் பெருமான் எம்மனதிலே நிற்பான் என்பதை நன்கு விளங்கவைத்துள்ளார், இந்த சிவபுராண வரிமூலம் இந்த வரிநாம் ஆழ்ந்த சிந்திக்கத்தக்கது.

மனத்துள்குள்ளேயே அமையாதவன்! மனமும் சொல்லும் எவ்வளவு உயரச் சென்றாலும் சென்ற மனமானது அவ்வளவிற்குக் கழிந்து போகுமாறும், (பின்னோக்கிப் போகுமாறு) மேல் நோக்கி நிற்பவன் இறைவன். எம்அகம் என்று சொல்லப்படுவது மனம்! மனத்திலிருந்து தோன்றுவது சொல், சொல்லின் வீச்சுக்கு எல்லையுண்டு, மனத்தின் வீச்சுக்கு எல்லை இல்லை. மனமானது, எங்கெல்லாமோ அலையும் ஆனால் அப்படிபட்ட மனத்தில்கூட இறைவனை எளிதில் காணவோ, நினைக்கவோ, சிந்திக்கவோ, சொல்லால் விளங்கவோ முடியவில்லை என்பதே இதன் பொருளாகும். சொல்லும் அடிமனமும் எவ்வளவு தூரத்திற்கும் எவரும் பரந்து விரிந்து தேடினாலும் பரம்பொருளை அறியவோ, தெரிந்து கொள்ளவோ முடியாது என்பதை உணர்த்தவே "மனம் கழிய" என்றார் நாம் எம்முடையதாக எமக்கு எளிதில் எட்டாத கேட்க முடியாத ஒன்றாகவே உயரத்தில் மேல்நோக்கியே அவன் இருப்பு இருக்கும். "மறையோன்" என்பது மறைந்து நிற்பவன் என்ற பொருளைத் தருவது, மிகநுண்ணியவன் என்றும் பொருளைத் தரும், வேதத்தை அதாவது மறைத்தலை அருளியவன் என்றும் பொருளையும்தரும் என்பதாகிறது. மறைகளுக்கும் மறைந்து நிற்கும் பரம்பொருளாவான் மறையோன் என்று எந்நாளும் போற்றப்பட்டான். இறைவனை எத்தனை பொருள்களால் எண்ணிப்பார்ப்பது. மறைகளில் மறைக்கப்பட்டுள்ளான் என்று எண்ணுவதா? மறைகளே வேதம் அவன்தான் என்று எண்ணிப் பார்ப்பதா மாறுபடுகின்ற மனம் இல்லாமல் போய் நிலையான ஒரு மனம் எமக்கு வந்த பின்பே! அவன் எமக்கு வெளிப்படுவான் அதுவரையிலும் கடவுள் என்ற உணர்வு எம்மனதில் இல்லை என்பதே சுவாமிகள் கூற்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**46 - கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போல**

| | |
|---|---|
| கறந்த பால் | - உடன் கறந்த ஆவின் (பசுவின்)பால் |
| கன்னல் | - கரும்பின் சாறு |
| நெய் | - பசுவின் நெய், |
| கலந்தாற் போல | - ஒன்றாகக் கலந்தாற் போல |

கறந்த பாலிலே சர்க்கரையும் தேனும் கலந்தாற் போல அன்பிற் சிறந்த அடியவர்களின் உள்ளத்தினுள் உள்ளே தேன் போல இனிமையாக ஊறி நிலைபேறாய் நிற்பாய், நீங்காதிருந்து நின் அருளாகிய இன்பத்தைக் கொடுப்பாய். என்பதை கறந்தபால், கன்னல்கருப்பம்சாறு நெய் யாவற்றையும் கலந்து பருகும் போது எப்படியிருக்குமோ, **அடிப்பிடியிருக்கும் இறையின்பம் என்று தெளிந்தமனத்தோடு கூறுகின்றார். இந்த இறை இன்பத்தைப் சுவைக்கவல்லவர்யாவர்? அவர் இறை இன்பத்தை சுவைத்து சுவைத்தே தன்னை மறந்து கூறியுள்ளார். என்றே சாதாரணமானவர்களாகிய நாம் எண்ண வேண்டும் உடனடியாக கறந்த பாலைக் காய்ச்சி அத்தோடு கறுப்பஞசாறும் நெய்யையும் கலந்து உண்ணும் பொழுது உண்டாகும் இன்பம் போன்றது. இறைவனிடத்திலிருந்து வரும் பேரின்பம், நல்ல அடியவர்கள் உள்ளத்திலே எப்படியிருக்குமென்றால் தேன் போன்று ஊறித் தெவிட்டாது தித்திக்கும் பேரின்பமாக அது மாறிவிடும்.** சுவை நிறைந்த உணவு இன்பந்தருவது போன்று இறைவனுடன் யோகம் பண்ணுவதும் சிறந்த இன்பத்தைத் தரும் என்பதனை கறந்த பாலும், கருப்பம் சாறும், நெய்யும் கலந்தால் போல சிறந்த பக்தியான உண்மையான நெஞ்சில் இறை இன்பம் தித்திக்கும். இனிக்கும் இறைவனும் அத்தோடு நீங்காது குடியிருப்பான், என்பதைத்தான் அனுபவித்தே உலகிற்குக் கூறியுள்ளார். எனவே என் மனது உள்ளத்தினுள் அனுபவித்துக் கூறியது எவ்வளவு புனிதமுடைய உண்மையாகும், எவ்வளவு சுவையுடைய உண்மையாகும், என்று சுவைத்துக்கொண்டே கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் கறக்கப்பட்ட பால் இயற்கையாகவே இனிப்புச் சுவையுடடையது. கறந்த பாலில் ஏற்கனவே நெய் இருக்கிறது. அத்தோடு சேர்ந்தே கருப்பஞ்சாறும் நெய்யும் கலந்து சுவைத்தால் சுவை மிகுதிப்படுகின்றது. இப்படியொரு மிகுதிப்பட்ட சுவையானது சிறந்தடியார் சிந்தையைப் போன்று இருப்பதாகும். சிறந்தடியார் சிந்தையில் இப்படி ஒரு அமிர்தச்சுவை எப்போதும் இருக்கும் என்பதை இந்த சுவையிலே ஒப்பிட்டுக் காட்டுகிறார். ஞானிகள் மனம் ஒருங்க ஒடுங்க (புலனறிவற்றவர்களாக ஓங்குவது) ஞானப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் போது கறந்த பாலையும் சக்கரையும் போன்ற இனிப்புச் சுவை சுரக்கும். இது அவர்களுடைய சிந்தனையில் தெரிகின்ற அரிய சுவையாகும். இப்படி **மெய்ஞ்ஞானியான மாணிக்கவாசக சுவாமிகட்கு சிவபுராணம் பாடும்போது! கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தால் போலச் சுவை வெளிப்படையாகத் தெரிக்கின்றது என்பது உண்மையான ஒன்றாகும்.**

**47 - சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று**

சிறந்தடியார் - மனத்தூய்மையுள்ள அடியார்
சிந்தையுள் - ஒருமைப்படுடைய மனத்தினுள்
தேனூறி - ஒரு வகை தித்திக்கும் மது
நின்று - மனதிற்குள்ளே நின்று

தேன் - ஒரு வகை மது தித்திக்கின்றதொரு இனிமையும் போதையாக மாற்றுவதுமான சிறந்த ஔடதமான நிலையிலுள்ளது. இறைவனைத் தேடும் பக்தியானது சிறந்தடியார் சிந்தனையுள் பக்குவமான பக்தியாகப் பர்ணமிக்கின்றது என்பது அனுபூதி உண்மையாகும். எமது தித்திக்கும் தேனான பக்தியானது பக்தியின் இனிமையைப் போன்று இன்று எமது சிந்தையில் பக்தியானது தேனாக ஊறவைக்கின்றது, என்பதை விளக்குகின்றார். மனதிலே சிறந்த அடியார்களுக்கு பக்தியானது நிற்கின்றது. இனிப்பு மேலீட்டினால் இன்பமேலீடு உண்டாகின்றது. நன்மை விளைவிப்பதில் தேன் ஒப்புயர்வற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் - யாவருக்கும் ஔடதமேயாம்.
பரஞானம் - அதாவது இறைவனைத் தேடும் ஞானம்
ஞானம் - பிரமவித்தை அல்லது மதுவித்தியா எனப்படுகின்றது.

இது அதி விருப்பமுடையது என்பதாகும். மதுவித்தியா அதிவிருப்பத்தோடு இறைவனைத் தேடி நிற்பது அதனையே **மதுவித்தியா பிரமவித்தியா என்று அழைக்கப்படுகின்றது. ஆகையால் தான் சிறந்தடியார் சிந்தையுள் தேனூறி நின்று என்று மிகத் தெட்டத்தெளிவாக தெய்வீக பக்தியோடும் தெளிந்த உணர்வோடும் கூறிநிற்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.** ஆனால் அவர் தன்னை மறந்த பக்தியுடையவர் என்பது திருவாசகத்திலே நன்கு புலனாகின்றது. அவருடைய பக்தி " பிரேமை" பக்தியாகும். யாவற்றையும் மறந்த நிலையிலேயே சிவபுராணத்தைப் பாடினார் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

இறையருள் மேலோங்கியே மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வளவு அரும்பெரும் பக்திமை கொண்ட திருவாசகத்தைத் நமக்குத் தந்தார்கள். சிறந்தடியார்களை சுவாமிகள் இரண்டு வகையாகப் பிரிக்கின்றார்கள். மாணிக்கவாசகப் பெருந்தகை உலகியல் வாழ்க்கையில் இவ்வுலகில் இருந்தாலும் முழுக்க முழுக்க இறையுணர்வோடு ஈடுபட்டே இருந்ததால், இந்நிலையில் அவர் குறிப்பிடுவது என்ன என்பதைப் பார்ப்போம். 'என்னை நான் என் பதறியேனன்.' பகலிரவாவதும் அறியேன் என்று (திருவாசகம் 34 இல்) குறிப்பிட்டுள்ளார். இது அவருடைய பக்தியின் நிலையின் உச்ச நிலை இது ஒருவகை நிலை. அடுத்தது மனம், புத்தி, சித்தம் என்கின்ற முக்கரணங்களையும் தம்முள் அடக்கி எந்நேரமும் இறையுணர்வோடு தம்மையே மறந்து இருப்பவர்கள் சிறந்த அடியார்கள். சேய் போலிருப்பார்கள் சிவஞானிகளே. சிறந்த அடியார்க்குள், இறையுணர்வு தேன்போலத் தித்திக்கும் என்பதை இறையுணர்வை நன்கு அனுபவித்துப் பார்த்தே அவர் கூறுகின்றார். **சிறந்த மேலான அவரது அன்றைய இறையுணர்வுதான் அவரை இவ்வுலகில் இன்றும் வாழச் செய்துகொண்டிருக்கின்றது என்பதை சற்று நாம் சிந்திப்போமாக. அவர் தந்த திருவாசகம் சைவசமயிகளுடைய ஆத்ம பயணத்திற்கு திறவுகோலாகும் என்பது நீங்காத உண்மையாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 48 - பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்

| | |
|---|---|
| பிறந்த பிறப்பு | - தற்போது பிறந்துள்ள பிறப்பாகும் |
| பிறப்பையறுக்கும் | - பிறப்பினை அறுக்கும், |
| எங்கள் | - எங்களுடைய |
| பெருமான் | - சிவபெருமான், |

இறைவா நீ என்னுள்ளே தேன் போல் நிலைபெற்று தங்கியிருந்து உள்ளாய் நிலை பெயரும் என்னுள்ளினுள்ளே உள்ள மனமுள்ள இந்த வாழ்வை ஒழித்து! இங்கே பிறந்த பிறப்பை அறுக்கும் எங்கள் பெருமானே. பிறவித்தளையை அறுக்காது விட்டால் மேலும் மேலும் தொடரும் பிறவி பிறந்து கொண்டே இருக்க வேண்டும். பிறவித்தொடர் தொடர்ந்தும் வருகின்றது. அந்தப் பிறவித் தொடர் தொடராமல் உயிருக்கு ஆறுதலைத் தருபவர் எங்கள் பெருமான். எனவே பிறவித் தொடரை அறுக்கும் எங்கள் பெருமானே (ஒழிக்கின்றவரே) என்பதை மறந்து விடாது அவரைப் பிறவித்தொடர் அற்றுப் போகவேண்டுமென்று பற்றிப் பிடிக்க வேண்டும். அப்போது தான் இறைவன் எமக்கிரங்கி, எம் வேண்டுதலுக்கிரங்கி அருள் சுரந்து அருள் நிலையால் எம்பிறவித்தொடரை அறுப்பான்........ நாம் இறைவனுடைய திருவடி நிழலில் போய்ச் சேரமுடியும். உள்ளத்தூய்மையும், சமயவாழ்வும், அன்புநெறியும் இறைவன் திருவடியில் சேர்ப்பிக்கும் என்பது உறுதியான உண்மையாகும்.

சிறந்த அடியார்களுக்கு இது கடைசிப் பிறப்பு. எனவே அவர்களுக்கு "பிறந்த பிறப்பை" இத்தோடு போக்குகின்றான் இறைவன். அவர்களுடைய "இறை இன்பம்" என்பது அவ்வளவு மேல் ஓங்குகின்றது. எனவே சிறந்த அடியார்களின் பிறப்பை அறுக்கின்றான். எனவே மனிதப் பிறவியாகிய இந்தப் பிறவியே இறைவனைப் பற்றி நன்கறிந்து கொண்டு அவனைப் போற்றித் துதிப்பதற்கும் ஏற்ற பிறவியாகும். பிறந்த பிறப்பை அறுப்பவன் எங்கள் பெருமான் மட்டுமேயாம். இறை இன்பத்தில் இறை நம்பிக்கையில் சிறந்தடியார்களின் முக்கரணங்களும் தம்மை மறந்து ஈடுபட்டால் அதுவே பிறந்த பிறப்பை அறுக்கும் பெற்றியாகும். எங்கள் பெருமானிடம் நாம் வைத்த பற்றினால் எம்பெருமானே அதைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வார் என்பது திண்ணம். எங்களுடைய பெருமானேயன்றி இப்பிறவி வேரை யறுப்பவர் யாருமேயில்லை. எனவே திருவடிப்பேறுதருபவரும் பிறப்பை யறுப்பவரும் எங்கள் பெருமானேயாம் என்பதை உணர்வோமாக

**49 - நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த**

நிறங்கள் - பல நிறங்கள்
ஐந்துடையாய் - ஐந்தும் அதற்குரிய தன்மையைக் காட்டி நிற்பதே,
விண்ணோர்கள் - தேவர்கள்
ஏத்துதல் - ஏற்றிப் போற்றுதல்

இப்படியாக இறைவனை ஏற்றிப் போற்றினால் தான் பிறந்த பிறப்பை அறுக்க முடியும் என்பதை ஏற்றிப் போற்றுதலின் மூலம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். உலகிலுள்ள உயிர்களும், தேவர்களும், நரகர்களும், பூதகணங்களும் (இந்திரியங்களும்) உன்னை பற்றி ஏற்றிப் போற்றுகின்றன. மனிதர் மட்டும் ஏற்றிப் போற்றவில்லை. இவையெல்லாம் ஏற்றிப் போற்றியே பயன்பெற வேண்டும். நாம் எல்லோரும் இறைவனை ஏற்றிப் போற்றியே பயன்பெற வேண்டும். பயன்பெறவும் முடியும்.

இவைகளுடன் இறைவா நீ அட்டமூர்த்தங்களையும் உடையவன் ! ஐயா உன்னை அட்டமூர்த்தமாகவே அண்டசராசரங்களும் வணங்குகின்றன.

மண், நீர், அனல், கால், வான்
பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்

மண் - பொன்மை, நீர் - வெண்மை, அனல் - செம்மை, கால், கருமை, வான், புகைமை ஐம்பூதங்களுடன் இரண்டறக் கலந்து நிற்பதால் ஐந்து நிறங்கள் உடையவராகின்றார்.
இவரை விண்ணோர்கள், நரகர், பூதகணங்கள் எல்லாம் ஏற்றிப் போற்றுகின்றன. மனிதர் மட்டும் ஏற்றிப் போற்றவில்லை. இவைகளெல்லாம் ஏற்றிப் போற்றுகின்றன. விண்ணோர்கள் ஏற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று விசேடித்துக் குறிப்பிடப்பட்டுள்ளார் சுவாமிகள். பஞ்ச பூதங்களும் இறைவனே பஞ்ச பூதங்களின் நிறங்களும் இறைவனே! இப்படி நிற்கும் இறைவனை விண்ணோர்கள் ஏற்றுகின்றார்கள் என்று இறைவனின் விசேடனம் முழுக்க இங்கே விசேடித்துக் கூறியுள்ளார். விண்ணோர்கள் : பிரமன் விஷ்ணு முதலியோரெல்லாம் ஏற்றித் தொழுகின்ற பெருமான் அவன். அவன் நிறங்கள் ஓர் ஐந்துடையவனாக நிறங்கள் ஐந்தும் உள்ளடக்கியவனாக இருக்கின்றான். **(இவ்வுலகிலுள்ள நிறங்களை விஞ்ஞான உலகம் நன்கு ஆராய்ந்து விரிவாகப் பேசுகின்றது).** இப்பிரபஞ்சத்தில் காணப்படும். நிறப்பண்புகள் ஒவ்வொரு நிறத்திற்கும், ஒவ்வொரு பண்பு உண்டு. இந்த நிறப்பண்புகள் மக்களுக்கு எவ்வளவுக் கெவ்வளவு உணர்வுகளைத் தோற்றுவிக்கிறது, என்பது இங்கே நன்கு புலனாகின்றது. ஐந்து நிறங்களில் சிவப்பும், நீலமும் இன்றியமையாதது ஆகும். ஆகையால்தான் இறைவனை "செம்மேனி அம்மான்" என்கிறது திருஅம்மானை. அம்மானை நீலமேனி வாலிழை என்கிறது. (ஐங்குறு நூறு) 'ஓர்" என்பது தனித்தன்மையைக் குறிப்பிடும் சொல்லாகும். ஆகவே **எம்பெருமானின் தனித்தன்மையே நிறங்கள் ஓர் ஐந்துமாகும். விஞ்ஞானம் இன்று தேடும் புதுமைகளை எல்லாம் மாணிக்கவாசகசுவாமி கட்கு பரம்பொருள் அன்றே நேரே வந்து ஞான அனுபவமாகப் புகட்டினார் என்பது நாமறிந்த பொருள் பொதிந்த பெரியதோர் உண்மையாகும். அவர் மனதில் இவை எல்லாம் மின்னலைப் போன்று உணர்வுகள் தோன்றியுள்ளமையுமாகும். அவர் மனதில் மின்னலைப் போன்று தோன்றியுள்ள மெய்ஞ்ஞான உணர்வுகள் இதற்குச் சான்று பகிர்கின்றன என்பதனைத் திருவாசகத்திலே நன்கு உணர்த்தியுள்ளார் சுவாமிகள். இது நாங்கள் அனைவரும் நீங்காத நினைவுகளாக எண்ணிப்பார்க்க வேண்டும். மெய்ஞான நிலை முழுவதும் ஓங்கி நிற்பதே திருவாசகம். மெய்ஞானச் செறிவு முழுவதும் பரந்து செறிந்து உள்ளதே சிவபுராணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**50 - மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை**

| | |
|---|---|
| மறைந்திருந்தாய் | - யாவருக்கும்,தெரியாது மறைந்திருந்தாய் |
| எம்பெருமான் | - சிவபெருமான் |
| வல்வினையேன் தன்னை | - இருவினையும் உடையவன், |
| தன்னை | - என்னை |

இறைவனின் தோற்றம் தேவர்களுக்கும் தெரியாது, எமது ஐம்பொறிகட்கும் விளங்காது, இப்படி நீ மறைந்திருக்கின்றாய். வினை சாதாரணமானதன்று வல்வினை. நான் வல்வினையேனுக்கு நீ மறைந்திருக்கின்றாய். எனது ஆணவம், கன்மம், மாயை என்ற இருளெல்லாம் சூழ்ந்ததே வல்வினையானது. அந்த வல்வினையானது அறிவற்ற தன்மை உடையது. என்னை உன் நினைவு இல்லாமல் மறக்கப் பண்ணியிருக்கின்றது. நீ மறைந்திருக்கின்றாய்! நீ எனக்கு இருக்கின்ற வல்வினை காரணமாக மறைந்து விடுவாய். என்று எண்ணுகின்றார். ஆம் ஆனால் அடிமுடி தேடிய தேவர்களுக்கும் நீ மறைந்திருந்தாய் அடிமுடிதேடிய படலம் தேவர்களாலும் காணமுடியவில்லை. என்பதேயாகும்.

**அலரவனும் மலரவனும் அறியாமே அழல் உருவாய்**
**நிலமுதற்கீழ் அண்ட முற நின்றதுதான் என்னேடி**
**(திருச்சாழல் 6)**

வல்வினை செய்தவர்க்கு இறைவன் மறைந்திருக்கின்றான், அஞ்ஞான (அறியாமை) இருளானது இறைவனை அறிய விடாமல் மூடிக் கொள்கின்றது. இது உன்னிப்பாகவே பல்வெறு இடங்களில் கூறப்பட்டது. இந்த சிவபுராணத்திலே என்பது கண்கூடாகும். நாம் இறைவணக்கத்தில் தொடர்ந்து ஈடுபட்டால் உள்ளம் இறைவனுடைய சிந்தையால் (இறைசிந்தையால்) தானாகத் தூய்மையடையும். அப்படியில்லாவிட்டால் அதாவது இறைவணக்கமும் பக்தியும் தூய்மையானதாக இல்லாவிட்டால் நாம் செய்த வினை மேல் எழுந்தவாரியாக திறமை வாய்ந்ததாகி எழுந்து விடும். பின்பு இறைவனின் அடிமையாக இல்லாமல் வினையின் அடிமையாளனாக நான்மாற, அப்படி மாறிய பின்பு நான் என்னையும் அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாதபடி அறியாமை என்னும் இருள் என்னை மூடிக் கொள்கின்றது. அப்போது வல்வினையேனுக்கு நீ மறைபொருளாகவே இருப்பாய், வல்வினை செய்தவர்கட்கும் நீ என்றும் மறைபொருளே! என்பதை இவ்வரிகளிலே மிகவும் துல்லியமாகச் சுட்டிக் காட்டுகின்றார். எனவே நாம் செய்த வல்வினைகளும் நாம் இறைவனை நம்பி நம்பி எம்மைத்திருத்திக் கொண்டால்தான் ஓரளவாவது எம்மை விட்டு நீங்கும் அப்படி நீங்குவதும் ஒரு பிறவியில் நீங்காது பல பிறவி எடுத்தே நீங்கும்.

விண்ணோர்கள் என்று இங்கே பேசப்படுவர்களெல்லோரும் எல்லாவரமும் பெற்றவர்களல்ல. விண்ணோர்கள் என்றாலும்கூடக் குறையுடையவர்களேதான்! என்பதை மண்ணில் உள்ளவர்களும் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே அவர்களுக்கும் எப்பொழுதும் இறைவன் மறைபொருளாகவே இருக்கின்றான். வினையின் பயனால் பிறப்பெடுத்த எனக்கும் நீ மறைந்திருக்கின்றாய். என்று மாணிக்க வாசக சுவாமிகள் நொந்து போகிறார்கள் வினை என்பது கொடியது ஆகையால் நான் செய்த வினையின் காரணமாகவே எனக்கும் நீ மறைந்துள்ளாய் என்று நினைந்து நினைந்து கவலை கொள்கிறார். வினையின் வலிமையானது மேலோங்கினால் இறைவனை நாம் உணரவோ,காணவோ முடியாது. இதுவும் அவரவர் வினைப்பயனேயாம். திருவாவடுதுறையிலே இறைவனை நேரே கண்டு திருவடித்தீட்சை பெற்றவரே இப்படிக் கூறுகிறார் என்றால் நாமெல்லாம் எம்மாத்திரம்

**51 - மறைந்திட மூடிய மாய இருளை**

மறைந்திட - வெளிக்காட்டாது இருப்பது,
மூடிய - மறைந்துள்ளது
மாய இருள் - அஞ்ஞான இருள்
இருள்மலம் - ஆணவமலம்

ஆணவம் ஆகிய இருள்மலத்தால் மூடப்பட்டிருக்கின்றது, என்பதும் உண்மை. இந்த வகை மாயைகள் இருட்டுக்கள் என்னுள் குடிகொண்டுள்ளது. இப்படிக்குடிகொண்டால் அறிவு செயல்படாது. என் அறிவு செயல்படாத படி அறிவு மறையும்படி மூடிய ஆணவமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் என்னும் கொடிய மலமானது உண்மையிலேயே அது இருளாகும். (அறியாமை) மாய இருளாகிய அது அஞ்ஞான இருள். அஞ்ஞானம் என்பது அதாவது அறியாமை எனப்படும். எமக்குள் உள்ள முழு ஆணவமலமும் அறிவை செயல்பட விடாது, என்பது பூரணமான உண்மையாகும். இவை இறைவனை உணர விடாது தடுக்கின்றன. இவற்றைப் பூரணமாக அறிந்த சுவாமிகள் அறியாமையாகிய ஆணவ மலத்தில் நின்றும் நீங்குவது எப்படி என்பதை சிந்திக்கிறார். மாயமாகி மூடி வைத்துள்ளது அறியாமை என்று கவலை கொள்கின்றார் சுவாமிகள். இவற்றைப் படித்து அறிந்து உணர்ந்து கொண்டு எம்மையே நாம் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். மாய இருளால் மறைப்பட்டுள்ளோம் என்பதை நாம் நன்கு உணர வேண்டும். உணர்ந்தால் தான் எம்அறியாமையும், ஆணவமமும், மாய இருளும், எம்மைவிட்டு விலகும் என்பதுவும் இறைவனை உணரமுடியும் என்பதனையும் தெளிவுபடுத்துகின்றார்.

உள்ளம் தெளிவுற்றால் மாயை இருள்மறையும் இவ்வுலகில் தோன்றிய உயிர்கள் மறைத்திட முடியமாயா இருளை சிந்திப்பதில்லை. அது அறியாமை காரணமாக, தங்களுடைய அறிவு மூடப்பட்டிருக்கின்றது என்பதையும் சிந்திப்பதில்லை இது ஒருவகை இருளாகும். இந்த மாய இருளை எப்படி விலக்கமுடியும்? அறியாமையை எப்படி விலக்க முடியும்? என்று அறிந்து! அதிலிருந்து விடுபடுவது எப்படி? என்று இந்த மனிதப் பிறவியிலேயே சிந்திக்க வேண்டும்! சகல ஐஸ்வரியங்களும் ஒருவருக்குக் கிடைத்தாலும் அந்த ஐஸ்வரிய சுகத்தில் மிதக்கும் உயிரிற்கு அறியாமை என்பது விளங்காது! மாயஇருள் எனப்படுவதும் அறியாமையே ஆகும். அகங்காரம், மமகாரம் என்பன எல்லாம் எம்முடனேயே கூடவே இருக்கும். இதற்கு அடிமுடி தேடிய புராணக்கதையின் அலவரனும், மலரவனுமே எடுத்துக்காட்டாகும். (அலரவனும், மலரவனும் இவற்றிற்குக் காரணம்) (நான் பெரிது என்ற அகங்காரத்தாலேயே?) எதனால் இறைவனின் அடியையும் முடியையும் தேடப் புறப்பட்டார்கள் என்பதும் நாம் கற்றுக்கொள்ளும் பாடமாக எமக்கு அறிவு புகட்டட்டும் என்பது நன்கு விளங்கும். ஆனால் அவர்கள் அகங்காரம், மமகாரத்தால் தோல்வியே கண்டனர், என்பதுவும் எமக்கு ஒரு படிப்பினையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**52 - அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி**

அறம் - நல்வினை
பாவம் - தீவினை
அருங்கயிறு - பாசக்கயிறு
கட்டி - கட்டுண்டஆன்மா

வலிமை நிரம்பியது பாசக்கயிறு, இந்த பாசக்கயிற்றால் ஏன் கட்டப்படுகின்றது என்றால்? அறம்பாவம் என்னும் நல்வினை தீவினைப் பயனால்தான் ஆன்மா கட்டப்படுகின்றது. இவற்றை நாம் எப்படி உணர வேண்டுமெனில் நாம் இருவினைப் பயனால் கட்டப்பட்டுள்ளோம் என்று எண்ணி எண்ணி உணரவேண்டும். நல்வினை, தீவினை என்று சொல்லப்படும் கட்டு அறுக்கமுடியாத கயிறு அது பாசக்கயிறாகும். அது என்னைக் கட்டிப்பிணித்து வைத்திருக்கின்றது. ஆகையால் யான் எதையும் சிந்திக்க முடியாது திணறுகின்றேன். இந்த உலக பாசங்களுக்குள் மூழ்கச்செய்து என்னை வைத்திருக்கிறது. எதையும் சிந்திக்க விடுவதில்லை. **நான் செய்த நல்வினையாலும், தீவினையாலும் எதையும் சிந்திக்க முடியாத நிலையில் பாசக்கயிறு கட்டிப்பிணித்து வைத்திருக்கின்றது. இவற்றை எல்லாம் விலக்க வேண்டுமானால் இறை சிந்தனையே வேண்டும். இறை சிந்தையால் நாம் கட்டுண்டால் எம்மை கட்டுண்டு கிடக்கின்ற பாசக்கயிற்றை நாம் அறுக்க முடியும். நாம் செய்த தீவினையையும் படிப்படியாக அறுக்க முடியும். அப்பொழுது எம் உயிர்க்கு நல்லவழி பிறக்கும். இறையருள் முன் நின்று எம்மை நல்லவழியில் வழிநடத்தி எம்பிறவியையும் நல்வழிப்படுத்தி எமது வழியை நல்வழியாக்கி அமைத்து வைப்பான் இறைவன். நல்வினை தீவினை என்னும் கயிறுகள் தாமே இறைவனருளால் அறுபட்டு போகும் என்பதை சிவபுராணத்திலே நன்கு தெளிய வைக்கிறார். அறம்பாவம் என்னும் அரும் கயிறால் கட்டப்பட்டிருக்கின்றோம். அந்த ஆன்மா கட்டுண்ட பாசக்கயிறு அறுபட்டுப் போகவே நாம் சிவபுராணத்தைப் பொருள் உணர்ந்து கற்றாலே போதும்.**

எமது சைவசமயம்! பிறவித் தொடரை நம்பும் சமயமாகும். ஆன்மாவைப் பற்றியிருக்கும் மலங்களினால் உயிர்கள் தம் தவறை உணர்வதில்லை. நல்வினையும், தீவினையும் அவர்கள் தொடர்ந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்டே இருக்கிறார்கள். இவை அடுத்த பிறப்பிலும் தொடரும் என்பதையும் அவர்கள் இன்னும் உணர்ந்தும் திருந்துவதில்லை. **மனிதன் தன்னை உணராமல்! கிடைத்ததைக் கொண்டு சுகமாக வாழ்பவன் தானே! நல்வினை, தீவினை என்கிற கயிற்றால் கட்டப்பட்டே இவ்வுடலும் உயிரும் நடமாடிக் கொண்டிருக்கின்றது. நல்வினையும் தீவினையும் கணப்போதும்** மாறாமல் இவ்வுடலாலும் உயிராலும் செய்யப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இதை சிந்தித்து திருந்துவதற்கும் சிந்தித்திப்பதற்கும் மானிடப் பிறவியே சிறந்த பிறவியாகும்.

**53 - புறத்தோல் போர்த்து எங்கும்புழுஅழுக்கு மூடி**

| | |
|---|---|
| புறத்தோல் போர்த்து | - வெளியே போர்க்கப்பட்ட தோல் |
| போர்த்து | - எங்கும் போர்த்து |
| எங்கும் | - உடல் எங்கும் |
| புழுவழுக்கு | - புழுவும் அழுக்குகளும் |
| மூடி | - உடலுக்குள்ளேயே மூடப்பட்டுள்ளது |

புழுவும் அழுக்குகளும் நிறைந்த உடம்பு புறத்தோலால் போர்க்கப்பட்டுள்ளது. எனது உடலுக்குள்ளே புழுவுக்கு ஒப்பான அழுக்குகள் நிறைந்திருக்கின்றது. அது மேலும் மேலும் ஓயாது அழுக்காகவும் மாறிக் கொண்டிருக்கின்றது. இது எமது உடம்பினுள்ளே இருக்க மேலே தோலைப் போட்டு மூடி வைக்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மையை புறத்தோல் போர்த்த எமது உடம்பு ஓயாது உள்ளுக்குள் அழுக்காகிக் கொள்ளுகின்றது என்பதைக் கூறி வைத்துள்ளார். எமது உள் உடம்பு புழுவுக்கு ஒப்பான தாதுக்களின் தத்துவம் நிறைந்தது. அது மேலும் ஓயாது அழுக்காகவும் மாறிக் கொண்டிருக்கின்றது. அப்படி புழுவும் அழுக்கும் நிறைந்த எமது உள்ளுடம்பை வெளியிற் தெரியாத வண்ணம் மிகவும் துல்லியமாக புறத்தோலைப் போட்டு மூடப்பட்டிருக்கின்றது. ஆம் இதுவும் இறைவனின் அதிசயங்களில் ஒன்று தானே! எனவே புல்லிய அமைப்பானது புறத்தில் தோலைப் போர்வையாகப் போட்டு மூடி வைக்கப்பட்டிருக்கின்றது. என்று மிகவும் துல்லியமாக மாணிக்கவாசகப் பெருமான், அகழ்ந்து, ஆழ்ந்து, சிந்தித்து, சிந்தித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றார். மானிடராகப் பிறந்த யாவரையும் சிந்தித்து உணரும்படியும் கூறுகின்றார். இதனை யாக்கை நிலையாமை என்னும் பகுதியிலே திருமூலநாயனார் 4 வரிகளில் கூறுவதைப் பார்ப்போம் இந்தப்பாடல் யாக்கை நிலைமை திருமூலர் 10 ம் திருமுறையிலே வருகின்றது.

**ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கி பிணமென்று பேரிட்டுச்**
**சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரிலே மூழ்கி நினைப்பொழிந் தார்களே**

**(யாக்கை நிலைமை திருமூலர்)**

நவதுவாரங்கள் என்று சொல்லப்படுகின்ற 9 துவாரங்களோடு சேர்ந்தது இந்த உடம்பு, எலும்பு, தசை முதலியவற்றால் நிரப்பப்பட்டு வெளியே தெரியாவண்ணம் இருக்கும் கூடாகும். புழு அழுக்குமூடி என்று சுவாமிகள் கூறுவது இறந்து போன உடம்பிலிருந்து வெளிப்படும் புழுக்களைப் பற்றியது அல்ல. உயிருள்ள உடம்பினுள்ளேயும் கூட்டுப் புழுவடிவிலும் கிருமிகள் வடிவிலும் கோடிக்கணக்கான உயிர்கள் இருக்கின்றன? இதை இன்றைய விஞ்ஞானம் பல பல பரிசோதனைகள் மூலம் இன்று கண்டுபிடித்தது என்பது உண்மையாகும். ஆனால் சுவாமிகள் அன்றே அறிந்து கூறிவிட்டாரகள். சுவாமிகள். அதனை திருவாசகம் 4 ல் ஈனம் இல் கிருமிச் செருவினில் பிழைத்தும் என்று கூறி வைத்துள்ளார். இன்றைய விஞ்ஞானம் கண்டறியுமுன்பே மெய்ஞ்ஞானி ஆகிய அவர் மெய்ஞ்ஞானத்தினாலே கண்டுவிட்டார் என்பதும் திருவாசகத்திலே கூறப்பட்ட உண்மையாகும்.

**54 - மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை**

| | | |
|---|---|---|
| மலம்சோரும் | - | மலம் ஒழுகிக் கொண்டிருத்தல் |
| ஒன்பது | - | ஒன்பதுவாயில் |
| குடில் | - | உடம்பென்னும் சிறுவீடு |

ஓயாது மலம் வெளியே கிளம்பிக் கொண்டிருக்கின்ற இந்த ஒன்பது வாயில் கொண்ட இச் சிறுவீட்டில் நான் அடைக்கப்பட்டிருக்கின்றேன், என்று இறைபக்தியின் உன்னதநிலையை அடைந்த சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலை கொள்ளுகின்றார்கள். ஏதோ 9 ஒன்பது வாயில் கொண்ட இச் சிறுவீட்டில் சரி, சிறுகுடில் தானே? போதாதா? அது மட்டுமல்ல மலம் வேறு தினமும் வெளியேறிக்கொண்டிருக்கின்றது. இந்த மலம் சோராது வெளியேறாது இறுக்கத்தன்மை அடைந்துவிட்டால் காற்றுப்பையிலிருந்து எல்லாப்பையும் அடைக்கப்பட்டு (காற்றறையிலிருந்து எல்லா அறையும் அடைத்து) விடும் வெளியேயும் உள்ளேயும் பூரணமாகவே குடில் அடைக்கப்பட்டு விடும்.

ஆம் அடைக்கப்பட்டு விடும் இனிமேற்கொண்டு அடுத்ததைப் பார்ப்போம். ஆகவே தான் இந்த ஒன்பது வாயில் கொண்ட குடியிலிருந்து அழுக்கும் வெளியேறச் செய்துள்ளான் இறைவன் எல்லாவாயில்களும் அடைக்கப்பட்டு இறுகி மூச்சு இறுகி அடைப்பட்டுப் போகாதபடிதான் இந்த வழிகளுள்ளன. இவ் அமைப்புகள் எல்லாம் இறைவன் செயலேயாம். ஆகையால் தான் 9 வாயில்கள் கொண்ட குடிலாக இந்த உடம்பைப் படைத்தான் இறைவன், என்று இங்கே சுட்டிக்காட்டுகின்றார்.

இந்த நவ துவாரங்கள் என்கிற ஒன்பது வாயில் கொண்ட குடிலினாலே தினமும் அழுக்குகள் எல்லாம் வெளியேறுகின்றன. மலமும் சலமும் வெளியேறுகின்றது. தினமும் மலம் வெளியேறுகின்ற தீவினையில் உள்ள ஒன்பது வாயிற்குடில்தான் இது. ஆனாலும் இந்த உடம்பானது நமது வல்வினைகளை நல்லமுறையில் கழித்து இவ்வுலகிலேயே திருந்தி பிறவியிலிருந்து விடுபடவும், மாயை இருளிலிருந்து விடுபட்டு, அறியாமையிலிருந்து விடுபட்டு, விடுதலை பெறுவதற்கு என்றே நாம் எமது அறிவைக்கொண்டு முயற்சிக்கவேண்டும். உயிர்கள் மேலுள்ள பேரருள் பெரும் கருணையினால்! இறைவன் இந்த மனித உடலைத் தந்துள்ளான். அவற்றை எல்லாம் இந்த சிவபுராணத்திலே ஐம்பத்தோராவது வரியிலிருந்து ஐம்பத்தி ஆறாவது வரி வரை மிகவும் கருத்தாழத்தோடு எடுத்துக் கூறுகின்றார் சுவாமிகள். எனவே உயிர்கள் பிறந்த பிறப்பை அறுத்து இறைவனுடைய திருவடி நிழலையடைய என்றே எமக்கு இந்த "மானிடர்" என்னும் பதம் தந்தான் இறைவன் என்பதை உணர்வோமாக. **இந்த நவதுவாரமுள்ள உடலும், மானிடம் என்னும் பிறவியும் இந்த உயிருமே இறைவனை வணங்கி முத்தியின்பம் பெற எமக்கு சிறந்த வரப்பிரசாதமாகும் என்பதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாம் உணர வேண்டும். இதனை நாவலர் பெருமான் இந்த சரீரம் நமக்கு கிடைத்தது. இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்று சைவ உலகினர்க்கு மிகவும் உருக்கமான எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார். இறைவனை இடையறாது வணங்குவதற்கும் முந்தியின்பம் பெற முயல்வதற்கும் இந்த மானிடப் பிறப்பு உயர்ந்த பிற்ப்பாகும் என்பதை ஒவ்வொருவரும் மிகவும் சிரத்தையோடு உணர்வோமாக.**

**55 - மலங்க புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய**

1 மலங்க - மயங்க
2 புலனைந்தும் - மெய், செவி, கண், மூக்கு, வாய் ஆகிய ஐந்து புலன்களும்
3 வஞ்சனை - தான் நினைத்த மாதிரியே செயல்படுகின்றன.
4 செய்ய - செய்கின்றன

புலன்களெல்லாம் பொறி வழிபோகாமால் நாம் நம் சித்தத்தையும் புலன்களையும் சிவன் வழியிலேயே செயல்படவிட வேண்டும். யான் மயங்கி வருந்தும்படி புலன்கள் ஐந்தும் மாயச் செயல்களைச் செய்கின்றமை எப்படி அவற்றை எதிர்த்துத் தடுப்பது என்று நினைப்பதற்கும் முடியவில்லை. மலங்க நான் வருந்தும்படி மயங்கும்படி புலன் - பொறிகளுடன் எனக்கு ஒன்பது வாயில்களுடைய குடிலைக் கொடுத்து உதவி செய்து விட்டவன் இறைவனே. தற்போது என்னை இம்மண்ணுலகில் வாழும்படி விட்டால் அதில் அமைந்துள்ள இந்த ஐந்து இந்திரியங்களும் என்னை ஏமாற்றி துன்புறுத்தும் படி செய்கின்றன. சரி! அதனால்தான் நான் வருந்துகின்றேன். எப்படியெனில் இந்த புலன்கள் ஐந்தும் ஐந்து புறத்தாலும் இந்த குடிலை இழுக்கின்றன. இத்தனையையும் எனக்குத் நீ தந்தாய் உன்னை நான் நினைக்க முடியவில்லை. நான் நினைப்பதற்கு புலன்களாகிய இந்திரியங்கள் விடுகிறதும் இல்லை. அதுமட்டுமல்ல புலன்கள் ஐந்தும் மாயச் செயல்களைச் செய்கின்றன. அவற்றை எதிர்த்துத் தடுக்கும் மனத்தோடு திண்ணமாகத் தடுத்து நிறுத்தி நான் உன்னிடத்து கலந்து கொள்ள வேண்டும். ஆனால் அன்புடையவனாகி நெகிழ்ந்து உள்ளே உருகும் நற்பண்பு எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதும் இல்லை. அந்த நற்பண்பு எனக்கு இல்லை? ஆதலால் மயங்கினேன். ஐந்து புலன்களும் - ஐந்து பொறிகளும் இவை என்றும் ஆன்ம ஈடேற்றத்திற்குத் எனக்கு தடையாக உள்ளன. வஞ்சனைச் செய்கின்றன. இதை நான் உணர்ந்ததால் தற்போது எதிர்கின்றேன். எதிர்த்து நல்நிலையடைந்த நிலையில் ஐந்து புலன்களும் உன் நினைவில் நிற்கப்பாடுபடுகின்றேன். அப்படிச் செய்தே சிவசிந்தனையை ஏற்படுத்தப்பாடுபடுகின்றேன். இந்த முயற்சியானது புலன்களைந்தும் தான் போன போக்கில் போகாமல் ஓரளவாவது ஒருநிலைப்பட அடக்கி பரம்பொருளின் பரந்த கருணையைப் பெற வேண்டும் என்பது பெருமுயற்சியாகும்.

புலன்கள் (ஐம்புலன்கள்) ஐந்தும் தாம் போன திசையிலே போகும் இயல்புடையன. எந்நேரமும் புலன்கள் எங்கோ சுற்றிக்கொண்டே இருக்கும். ஆனால் இந்த உடம்பின் துணையோடுதான் உயிர் செயல்பட வேண்டும். உடம்பிற்கும் உயிரிற்கும் பொறிபுலன்களின் உதவியும் வேண்டும். மனம் என்பதுதான் இந்த மலங்கப் புலன் ஐந்தினையும் இயக்கி வைக்கும் கருவியாகும். எனவே மனம் என்பது உடலையும் அதனோடு தொடர்புடைய பொறி புலன்களையும் ஆட்டிப்படைத்து தன் இச்சைப்படி ஏவல் கொள்ளும் இயல்புடையதாகும். **ஆனாலும் இறைவனிடத்தில் அன்புகொள்வதும் மனம் புத்தி சிந்தமேயாம். மனம் எதிலும் நிலையில்லாதது ஆயினும் அந்த மனமே இறைவனிடத்தில் அன்பு பிறப்பதற்கும் காரணியாகும் என்பதை நாம் உணர்ந்து உணர்ந்து மலங்கப்புலன்களையும் "மனம் புத்தி சித்தத்தையும்" ஒரு நிலைப்படுத்த வேண்டும். இதனை இறைவன் மேல் உள்ள பற்றினால் தான் நாம் செய்யமுடியும் என்பதை வலியுறுத்துகின்றார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**56 - விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்**

| | | |
|---|---|---|
| விலங்குமனம் | - | மனம், பொல்லாத விலங்கு போன்றது. |
| விமலன் | - | குற்றமற்றவன், தூயோன் |
| உனக்கு | - | இறைவா உனக்கு |

தூயோனான இறைவனை மிருகம் போன்ற விளங்கிக் கொள்ளாத விலங்கு மனத்தால் எப்படி விளங்கமுடியும். மனம் ஆனது தன்னளவில் விலங்கு போன்று கொடியது. ஆனால் அதைத்தெய்வத்திடம் அன்பு பூணும்படி செய்து விட்டால் அது நல்ல மனமாகின்றது. அப்போது உணரவும் தொடங்குகின்றது. இறைவன் வேறு, இயற்கை வேறல்ல, அது அவரவரும் காண்போன் தகைமைக்கு ஏற்ப (நல்ல மனமும் நல்லகாட்சியும் உடையோருக்கு நல்லனவே கிட்டும்) அது அப்படிக் காட்சி கொடுக்கின்றது. இறைவன் அட்டமூர்த்தி அட்ட மூர்த்தங்களிலும் இறைவனைக் காண முடியும். நல்ல மனத்தால் அப்படி தான் காண முடியும். விலங்கு போன்ற கொடிய மனத்தால் காணமுடியாது, என்று விலங்குமனத்தால் விமலா உனக்கு என்று கவலையடைகிறார் சுவாமிகள்.

அட்டமூர்த்தியாக நின்று இவ்வுலகை ஆள்பவனும் அருள்பவனும் அண்ட சராசரங்களையும் இவ்வுடம்பாகிய பிண்டத்தையும் உயிர் கொடுத்து இயக்குபவனும் இறைவனேயாம். படைத்தல், காத்தல், அழித்தல், என்ற முத்தொழிலையும், ஐந்தொழிலையும் செய்பவனும் விமலனே. இறைவன் அட்டமூர்த்தங்களிலும் அட்டமூர்த்தமாக விளங்குகின்றான். **அனைவரும் உய்வடைவதற்கு மூலப்பொருளும் முதற்பொருளுமாய் விளங்குகின்றான் ஆகவே. விமலனை தூயவனான இறைவனை விலங்கு போன்ற கொடிய மனத்தை நீக்கினால் அவனை நல்ல மனத்தோடு வழிபட்டால் அவன் அருளைப் பெறமுடியும் என்பது சிவபுராணம் கூறும் உண்மையாகும். விலங்கான மனதை நல்ல மனதாக மாற்றப் பழக வேண்டும். நல்ல மனதாக மாற்ற பக்தியால் தான் முடியும்.**

விலங்கு கொடியது எதையும் சிந்திக்காதது. **மலங்கப் புலனைந்தையும், மனம், புத்தி சித்தத்தையும் கட்டுப்படுத்தினால் எம்கட்டுப்பாட்டுக்குள் விலங்கு மனத்தை வைத்துக் கொண்டு விமலனை எண்ணி எண்ணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழலாம் என்பது துணிவான உண்மையாகும்.** மனமானது பொறிபுலன்களையும் ஆட்டிப்படைத்து ஏவல்கொள்ளக்கூடியது. மனம் இம்மையில் அவசியமானதொரு சிறப்பான உறுப்பாக இருந்தாலும் ஒன்றைப் பற்றி கொண்டு அதன் நினைவில் எங்கோ இருக்கும் தன்மையுடையதுமாகும். ஒன்றிலும் நிலைத்து நிற்காது. **ஆகையால்தான் விலங்குமனம் என்றார் போலும். பொறிகளின் வழிப்படாமலோ, பொறிகளின் உதவியில்லாமலோ, அதன் வழி இயக்கிவிக்காமலே மனமானது தாவிக் கொண்டே இருக்கும். ஆனால் எப்படித் தாவிக் கொண்டிருந்தாலும் அதனிடமுள்ள அடிமனத்திலிருந்து ஆழமான அகமனத்திலிருந்து, மனதின் ஆழத்திலிருந்தும் பிறக்கின்ற அன்பு என்னும் உணர்வை உணர்ந்து ஆன்மாவானது முன்னேற முடியும். நல்ல மேலான நிலையை தெய்வநிலையை காணமுடியும் என்பதும் சைவசமயத்தில் பொதிந்துள்ள பேருண்மையாகும். விலங்குமனத்தையும் விமலின் அருளால் மாற்ற இயலும் என்பது சைவசமயம் எடுத்துக்கூறும் உண்மையாகும்.**

**57 - கலந்த அன்பு ஆகிக் கசிந்து உள் உருகும்**

கலந்த அன்பு - இணைந்து சேர்ந்த அன்பு
கசிந்து - அன்பும் மேலீட்டால் கசியும்.
உள் உருகும் - உள்ளம் கசியும்

இறைவனுடன் இணைந்த அன்பு அது இறைவனை உணர்ந்து இசைவாக இறைவனுடன் ஒன்று சேரக் கிடைத்து விட்டால், இறைவனிடம் அன்பு பூண்டு விட்டால் எமது உள்ளமானது அன்பு நெகிழ்ச்சியினாலே உருகும். உள் உருகுகின்ற அந்த அன்பு நிலைக்கு நாம் வந்து விடுவோம். இறைவனின் மேலான அன்பை உணர்ந்து விடுவோம். எமது உள்ளம் இறைவனிடத்தில் உள்ள அன்பு மேலீட்டால் உருக உருக இறைவனின் அன்பும் அவனின் பரிவால் எம்மேல் அதிகப்படும். ஆகவே இறைவனின் அன்பு எம்முடன் இணைந்து சேர்ந்த அன்பாக மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகத்திற்கு ஒப்பான மனம் உருகி அன்பு பூணும்படியும், நல்ல மனமாகும் படியும், அருள் புரிந்துள்ளாய் இறைவா நீ என்கிறார் சுவாமிகள். மேலும் தெய்வத்திடம் அன்பு பூணும்படி செய்து விட்டால் அது நல்ல மனமாக இயற்கையாக நல்லமனமாக அமையப்பெற்றுவிடும் என்பது அவரின் அனுபவத் துணிவும் ஆகும். மனம் தூய்மையடைந்து விட்டால் இவ்வுலகிலேயே நிர்மலனுடைய காட்சியைக் காண முடியும். **உள்உருகி வழிபாடு செய்பவர்க்கு இறைபக்தியும் விடுதலைப் பேறும் கிடைப்பது நிச்சயம். கசிந்து உள் உருகுபவர்களுக்குக் கலந்த அன்பு உண்டாகி இறைவனுடன் கலக்கும் நிலை ஏற்பட்டுவிடும். அதேபோன்று கலந்த அன்பால் கலந்து நிற்பவர்க்கு கசிந்துள்ளம் உருகும் என்பதே கலந்த அன்பால் கிடைக்கும் பேறாகும் அது சிறந்த பரிசுமாகும். இவ்வுலகில் மானிடனாக பிறந்தவனின் மனம் தூய்மையடைந்து அந்த கரணங்கள் சுத்தமடைந்து கலந்த அன்பால் கசிந்து உள் நின்று உருகும். இது இறைவனை உணரும் அன்பாக நடைபெறும் என்ற உண்மையை விளக்குகிறார்.**

உடம்பிலும் உள்ளத்திலும் அன்புக் கசிவு ஏற்படுவது கலந்த அன்பினால் தான். இது அளவிற்கு அதிகமான மனித மனத்தின் செயலேதான். ஐந்தறிவுடைய விலங்குகள் தொடங்கி ஆறறிவுடைய மனிதர் வரை உணர்வுக்கு இடமாக இருக்கின்ற மனதை சுவாமிகள் தனக்கு இறைவன் நல்கினான் என்றார். **“நல்கி” என்பது இறைவன் அளித்த கொடை என்கிறார். அத்தோடு “அன்பு” என்னும் உணர்வை வைத்துக் கொண்டுதான். ஆன்மா முன்னேற முடியும். மனிதனுக்கு ஆறாம் அறிவு இருக்கின்றது. இந்த குடில், குடிலிலுள்ள பொறி புலன்கள், மனம், புத்தி சித்தம் செயல் என்பவற்றோடு தனது அனுபவத்தையும் குறிப்பிடுகின்றார்.** நலன்தான் என்பது? நலத்தைதான் தன்னளவில் தான் அறியாதவன்,? எண்ணாதவன்,? நல்லனவற்றையோ நலத்தையோ செய்யாதவன்? நலத்தை இன்னதென்று அறியாதவன் அப்படிப்பட்டவனே தான் என்று எண்ணுகிறார் அப்படிப்பட்ட எனக்கு! கசிந்து உள் உருகுகின்றதே என்று எண்ணுகிறார். உருகும் அன்புக்கு இடமான இந்த மனதைத் தந்தது! இறைவனுடைய திருவருளே என்று எண்ணுகின்றேன் என்று கூறுகின்றார். அதை நினைத்து வியப்புடன்! வியப்புடன்! சிந்தி்த்து சிந்தித்து தான் இதை அடைந்தது. இது “இறைவனின் கொடையை என்று எண்ணி இறைவனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுகின்றார், எம்மையும் சிவபுராணம் மூலம்'' உணரச் செய்தும் போற்றவும் செய்கின்றார். அதற்காகவே சிவபுராணத்தை தந்தார் என்று நாம் போற்றவேண்டும். போற்றி போற்றி அதனுள் கலந்து நற் பேறினை நாமும் பெற வேண்டும்.

**58 - நலம்தான் இல்லாத சிறியேற்கு நல்கி**

| | |
|---|---|
| நலம் | - நல்வினை (முற்பிறப்பில் செய்த நல்வினைனையும் இதற்குள் அடங்கும்) |
| நலம் தான் இல்லாத | - சிறிதும் நல்லவை அமையப் பெறாத |
| சிறியேற்கு | - ஒன்றுக்கும் பற்றாத சிறியேன். |
| நல்கி | - கொடுத்து |

நல்ல மனமாகும் படி நல்ல தன்மை இல்லாத என்னைப் பக்குவம் செய்து அன்புபூணச்செய்துவிட்டாய் (அதாவது உன்னிடம் அன்பு பூணும்படி செய்து விட்டாய்) தெய்வத்திடம், இறைவனிடம் அன்பு பூண்டால் எத்தனை கொடியவர்களையும், எத்தனை சிறியவர்களையும் இறைவன், ஆட்கொள்வான். சிறியவர்கள் என்று கூறும்போது மனிதத் தன்மையில்லாத சிறிய மனம் படைத்த சிறியோர். சிற்றுயிர்களுக்கு (புல், பூண்டு, புழு, கல், பறவை, பாம்பு, மிருகம் போன்ற சிற்றுயிர்களுக்கு) இந்திரிய வாழ்வைத் தவிர வேறொன்றையும் அறிய மாட்டா. அதாவது பாசம் போன்ற இந்திரிய வாழ்வு (அது ஐம்புலன் வழிச் செல்லும் வாழ்வு) இந்த வாழ்வில் வேறொன்றும் சிற்றுயிர்கட்கும் விளக்காது. ஆதலால் அவை பிறந்து இறந்து திரும்பத் திரும்ப பிறந்து இறந்தே படிப்படியாகத் தமது தீவினைப் பயனைப் பலபிறவியிலேயே கழிக்கின்றன. பின்பு அந்த உயிரானது இறுதியில் பெரு நிலைக்கு வருகின்றது. பல பிறவிகளில் தனது பாவங்களைக் கழித்தால் இறுதியில் வீடுபேறு என்னும் பெருநிலையை அடையமுடியும் என்பது எமது சமயநெறி காட்டும் உண்மையாகும். எனக்கு நேரேவந்து உன் தரிசனத்தையே கொடுத்தாய் இப்படி ஒரு தரிசனத்தை தனக்கு கிடைத்ததை மாணிக்கவாசகசுவாமிகள் வியந்தார். இப்படி தரிசனம் தூயமனம் படைத்தோருக்கு கிடைக்கும் என்பது அவரது நீங்காத எண்ணம் ஆகும். **ஆனால் அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிறியேன் நாயேன், நாயில் கடைப்பட்ட நாயேன் நான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்றே தன்னைக் கூறுகிறார். நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி என்று பணிந்து பணிந்தே இறைவனை ஏற்றி ஏற்றிப் போற்றுகின்றார்.**

ஆனால் மனிதனானவன் இனிப் பிறவாத நிலை எய்தி முத்தியின்பம் பெற வேண்டுமானால் ஆணவ நிலையை அகற்றி நான், எனது என்ற தன்மையிலிருந்து தன்னைத் திருத்தியமைத்து! ஆசைக்கு இடம் கொடாமல், போதும் என்ற மனத்தோடு வாழ்ந்து தன்னை விடுதலைப் பேறுக்கு தயார்படுத்த வேண்டும். நலந்தானிலாத என்று கூறும் போது புலன்களையும் நலமுடையதாக்க வேண்டும். நல்ல நிலைக்கு பயன்படுத்த வேண்டும். பஞ்சேந்திரிய உணர்வுகளை நாம் திருத்தியமைக்க வேண்டும். திருத்தியமைத்துக் கட்டுப்பாட்டுக்குள் பஞ்சபுலனைந்தையும் கொணர்ந்தால் தான் எமக்கு இறைஅருள் கிடைக்கும். சித்தாந்தம் இதை நன்கு சிந்தித்தே தெளிந்து முடிவாகக் கூறி வைத்துள்ளது என்பதையும் நாம் நன்றாக உணர வேண்டும்.

ஆகவேதான் நமக்கு இந்த மானிட சரீரம் கிடைத்தது!!!! இறைவனை வணங்குவதற்கே! இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்று நாவலர் பெருமான் நன்றாக நயந்துரைத்திருக்கின்றார். இந்த மானிட வாழ்வு கிடைத்தமையைப் பாராட்டிப் போற்றி பஞ்சமாபாதகங்கள் செய்வதற்கு எம்மனத்திற்கு இடம் கொடாது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுவோமாக. ஐம்பொறியாகிய ஐம்புலன்களோடு ஆறாம் அறிவாகிய பகுத்து அறியும் அறிவும், மனிதர்களுக்கே இறைவன் அருளியதாகும். ஆகவே மனிதனை இரட்சிக்க இறைவன் நல்கியதை நலமாக நல்லறிவாகச் சிந்திக்க வேண்டும். எம்மனதிலே நல்லறிவு சுடர்ஒளி விடவேண்டும். அந்த ஒளியில் எம்மனம் வாக்கு காயம் என்பவற்றைத் திருத்தியமைத்து நல்லருள் பெறுவோமாக.

இந்த உடம்பானது நமக்குக் கொடுக்கப்பட்டதன் பயன் என்ன? என்று சற்றுச் சிந்திப்போம். முதலில் இறையன்பை நாம் நம் நல் அறிவினால் உள் உணர்வால் புரிந்து கொள்ள வேண்டும். அந்த அன்பு மிகுதியால் இறைவனிடத்தில் தாம் அன்பு பூணவேண்டும். ஆனால் புலன்கள் இறையருளைச் சிந்தியாமல் வஞ்சனையைச் செய்கின்ற காரணத்தினால் மனமும் விலங்காகி விடுகின்றது. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமானது விலங்கானதால் இறைவனை நினைக்கத் தவறுவதால் சுவாமிகளுக்குப் பொறுக்க முடியவில்லை. ஆகையால் தான் **நலந்தான் இலாத சிறியேன் என்று தன்னைத்தானே கூறுகிறார். ஆனால் "நல்கி" என்பது இறைவன் கொடுத்த கொடையேயாகும் என்று நன்றி பாராட்டுகிறார். நல்கி என்பது கேட்காமலே கொடுத்தது என்றே உயிர் அறிவு நிலையில் இங்கு புலனாகும். இதனைச் சுவாமிகள் மிகுந்த வியப்போடும் சிந்திக்கின்றார் எம்மையும் ஆழ்ந்து** சிந்திக்கவைக்கிறார்.

**59 - நிலந்தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காஅட்டி**

| | |
|---|---|
| நிலந்தன் மேல் | - இந்த மண்ணின் மேல் |
| வந்தருளி | - மானுடக் கோலம் பூண்டு வந்து |
| நீள்கழல்கள் | - நீண்ட வீரக் கழல்களை அணிந்துள்ள திருவடி |
| காஅட்டி | - திருவடிகளைக்காட்டி |

இறைவன் நிலந்தன்மேல் வந்து மாணிக்கவாசக சுவாமிகளிற்கு அருளி! அதாவது நீண்ட வீரக்கழல்கள் அணிந்துள்ள திருவடிகளை அவருக்குக் காட்டினார் என்பது உண்மையும் ஆகும். இறைவன் திருவடிகளைக்காட்டியது அவரால் தன் கூற்றாகவே திருவாசகத்திலே பல இடங்களில் கூறப்பட்டுள்ளதையும். நாம் காணக்கூடிய ஒன்றாக இன்றும் இன்னும் கண்டு உணர்கிறோம். மாணிக்கவாசகசுவாமிகள் இப்பூவுலகிலே பிறந்தார். அவர் கல்வி, ஒழுக்கம், வீரம் தீரம், அறிவு, ஆற்றல், நற்பண்பு ஆகிய சிறப்புகளில் சிறந்து விளங்கினார். திறமை மிக்க அமைச்சராக பாண்டிய மன்னனுக்குச் சேவையாற்றினார். அவரது திறமையினாலேயே "தென்னவன் பிரமராஜன்" என்ற பட்டத்தையும் பாண்டிய மன்னனால் சூட்டப்பட்டவராகப் பெரும் மதிப்பிற்கு உரியவரானார். **அதன் பின்பு இறைவனின் திருவுள்ள நோக்கம் அவரை ஆட் கொள்ளும் படி அவர் மேல் பதிந்தது.** அவரை இவ்வுலகோருக்காக திருவாசகம் பாடவைக்கவேண்டும் என்ற எண்ணமும் திருவருளும் ஒருங்கே அவருக்கு அமையப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகவே இறைவன் நிலந்தன் மேல் மானிடக்கோலம் பூண்டு வந்து காத்து இருந்து அவருக்கு தனது வீரக்கழல்கள் அணிந்துள்ள திருவடிகளைக் காட்டி அருளினார்.** இங்கே நாம் மிகத்துல்லியமாக ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது இந்த மண்ணுலகிலேயே, கோகழியிலேயே, ஆம் திருப்பெருந்துறையிலேயே அவருக்குத் திருவடிப்பேறு கிடைத்து விட்டது. அதுவும் இறைவன் மானிடக்கோலம் பூண்டு வந்திருந்து கொடுத்தருளினான். அவருக்குக் கிடைக்க வேண்டும் என்பதுவும் இம் மண்ணுலகிலேயே, கிடைத்தததது **அந்த செம்மார்ந்த சிவதத்துவப் பேறினை எம்போன்றவர்களால் வாயால் கூற முடியுமா? இவற்றை எல்லாம் கூறுவதற்கு ஒரு வகை இறை அருள் கிடைத்திருக்கின்றதேயன்றி வேறொன்றுமில்லை** இவை எம்மால் இயலாத காரியம். முடியாத காரியமுமாகும். தனக்குக்கிடைத்த பெரும் பேறினை மாணிக்கவாசகரே போற்றித் திருஅகவலில் 75, 76வது வரியில் தன்பக்திப் பெருக்கால் கூறிவைத்திருப்பதை காண்கின்றோம்.

> **அருபரத்தொருவன் அவனியில் வந்து**
> **குருபரன் ஆகி அருளிய பெருமையும்**

**பிரபஞ்சத்திற்கு அப்பால் இருக்கின்றபரமன் பிரபஞ்சத்தின் ஒருபகுதியாகிய பூமியில் பரமகுருவாக வந்திருந்து என்னை ஆட்கொண்டார். இது ஒரு பேரருள் பெருமை ஆகும்.** அதாவது மாணிக்கவாசகருக்கும் இறைவனுக்குமே பெருமையானதொரு அருள்பிரவாகம் ஆகும். உலகவாழ்வு ஒழிந்து அவருக்கும் இவ் உலகியலிலேயே தெய்வீக வாழ்வு சுரந்தது. இவ்வுலகில் உள்ளோருக்கும் அது அருள்பிரகாசமாகச் சுரந்தது அவரது அருள் பிரகாசமே அவருக்கு முன் நின்ற அனைவரும் பார்த்து நிற்கத்தக்கதாக சாயுச்சிய முத்தியையும் அருளியது எனலாம். இவையெல்லாம் பெரும் வியப்பான செயல்களே

அன்பாக இருக்கவேண்டும் "அன்பு என்பதே இன்ப ஊற்று இதனை நன்றாக **மாணிக்கவாசகசுவாமிகள் நினைக்கின்றார் எப்படி எனில். பால் நினைந்தூட்டும் தாயை விட உயர்ந்து நிற்கின்ற இறைவனது கருணையை நினைக்கும் தோறும் வியப்பிலே ஆழ்ந்து போகிறார்.** இறைவனை அணுவிலும் அண்டத்திலும் கண்டுகொள்ளும் ஆற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பால் இல்லையாதலால் தம்முடைய குறையை நன்றாக அறிந்த இறைவன் அந்தக் கருணை காரணமாக இந்த மண்ணில் வந்து தன் திருவடியை அந்த மண்ணில் தோய வைத்து தனக்கு இரக்கம் காட்டினான். ஆகையினாலேதான் "நிலந்தன்மேல் வந்தருளி" நீள்கழல்கள் காட்டினார் என்கிறார். இதே போன்று சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் சித்தமடத்தில் அவர் தலை வைத்துப் படுத்த பல்வேறு பக்கமெல்லாம் அவர் முடிமேல் படும்படி பல்வேறு இடங்களிலும் தன் நீள்கழல்களை எம்பெருமான் வைத்தார், என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சரித்திரமும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

மேலும், நாவரசர் நனைந்தனைய திருவடி என்தலை மேல் வைத்தார் என்கிறார். எனவே தாள் தாமரையாகிய திருவடியை இப்படியாக இம்மண்மேல்க் காட்டியதை எண்ணி எண்ணி நினைதொறும் நினைதொறும் இறைவனின் கருணைக்கு நெஞ்சமே மேலிடுகின்றது. அவருக்கு ஞானசிரியனுடைய திருவடிஞானமும் நல்லருளும் தாயன்பினும் மிகுந்த அன்பாகத் துணை நிற்கின்றது. ஆதலால் அவரைத் தெய்வீகச் செயலுக்குத் தூண்டி நிற்கின்றது. அவரால் தெய்வீகச் செயல்கள் செய்ய முடிந்தது எப்படி எனின் ஞானசாரியனுடைய திருவடி ஞானம் துணை நிற்கின்றது. நிலந்தன் மேல் வந்து அருளிய நீழ்கழல்கள் காட்ட இறைவன் எம்சிவன் இம்மண் மேல் மலரடி வைத்தான். என்று உள்ளத்தால் உருகி நிற்கின்றார்.

**60 - நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு**

| | |
|---|---|
| நாய் | - ஒரு மிருகம் |
| கடை | - பின்தள்ளப்பட்ட நிலை |
| கிடந்த அடியேன் | - இழிவான எழியேன் |
| அடியேன் | - இறைவனுக்கு அடியவனாக இருப்பவன் |

நாயிலே நல்ல குணமுண்டு. அதாவது வளர்த்து தன்னை ஆளாக்கியவர்களை ஒரு போதும் மறவாதது. ஒருநாளும் விட்டுப்பிரியாதது அவர்களை விட்டுப் பிரிய நேர்ந்தால் அவர்களுடைய அடிச்சுவட்டைப் (பாத அடிச்சுவடு) பின்பற்றி அவர்களுடனேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்ச் சேர்ந்து கொள்ளும். அவர்களைப் பிரியாது! அப்படி தனது எஜமானை, எஜமானியைப் ஒரு மணி நேரம் பிரிந்திருந்து அவர்கள் திரும்ப வரும் போது காண நேர்ந்து விட்டால் அது வாலை ஆட்டுகின்ற நிலையையும் அது மகிழ்ந்து குதூகலிக்கும் குதூகலிப்பையும் வார்த்தைகளால் சொல்ல இயலாது. இத்தனை தன்மை மனிதர்களாகிய எம்மிடம் உண்டா? என்று மாணிக்கவாசகசுவாமிகள் கவலையடைகின்றார்கள். தன்னைத் தானே நாயினும் கடைய கடைப்பட்ட எளியேன் என்று தாழ்த்திக்கொள்கின்றார். தன்னைத் தான் தாழ்த்தித் தாழ்த்தி எண்ணி எண்ணிப்பார்ப்பது எவ்வளவு உயரியகுணம். இதுதான் உயர்ந்தோர் குணம். இதே மண்ணில் பிறந்த மனிதர்களாகிய யாம் இப்படி சிந்திக்கின்றோமா?

ஒவ்வொரு மனித சிந்தனையும் இப்படியமைந்தால் மனித மனத்தின் மாண்புகள் பெருகும். நாயினும் கடையேன் கடையேனான இழிந்த என்னை திருத்தியமை என்று தான் அவா் சிந்திக்கிறாா் இப்படி சிந்திக்கச் சிந்திக்க நான் இறைவனுக்கடியேன் என்ற எண்ணம் பெருகி பண்பும் பக்தியும் பெருகும். உயர்ந்த தன்மையொன்று உண்டாகும். எனவே மாணிக்கவாசகசுவாமிகள் தம்மைத் தாழ்த்தியே! தன்நிலையில் நன்கு உயர்ந்தார். இறைவனாலேயே உயர்நிலை பெற்று நல்ல உயர்வும் உய்தியும் எய்தினார்.

நாய் நன்றியுள்ள மிருகமேயானாலும், எஜமானை விட்டுப் பிரியாததாக இருந்தாலும், தன் வயிற்றிலிருந்து உணவைக் கக்கி அதை திருப்பி உண்ணும் விலங்கு நாய்தான். அப்படிப்பட்ட நாயை விட தன்னை கேவலமானவனாகவே மாணிக்கவாசகர் பெருமான் சிந்திக்கின்றார். மனிதனானவன் மண்ணில் பிறந்தால் உலகியல் ஆசைகளிலும், உலகியப் பொருள்களிலுமே மாறி மாறி அவன் ஆசைகளும் அவனதும் உள்ளமும் உணர்வுகளும் சுற்றிக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட ஒருவனுக்கு விண்ணிறைந்து மண்ணிறைந்து விளங்கொளியாய் நிற்பவன் அந்தப் பரம்பொருள். அவன் தன் நீள்கழல்களைக் காட்டினானே! என்று "நாயிற்கடையாய கிடந்த அடியேற்கு" என்று எண்ணிக் கவலையுறுகின்றார். இதனைமிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அதிசமான செயலாகவே சிந்திக்கின்றார். என்பது இந்த சிவபுராணத்திலே பல இடங்களில் நோக்கத்தக்கது ஒன்றாகும்.

**61 - தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே**

தாய் - அன்னை
சிறந்த - மேன்மையுடைய
தயாவானவன் - கருணாகரன்
தத்துவன் - உண்மைப் பொருள்

பொய் பொருளல்லாத மெய்ப்பொருள், உண்மைப் பொருள் ஆனவன் இறைவன் (தத்துவன்) தாயினும் சிறந்த கருணையுள்ளமே கொண்டவனாவான். தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே என்று கூறுகின்றார். தாயுள்ளத்துக் கருணையே இறைவனிடம் கண்டு பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து பாவியேயனுடைய ஊனினை உருக்கி உள் ஒளிபெருக்கி உலாப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து என கூறி உவகை உறுகின்றார். இப்படித் தாயிற் சிறந்த தயாவான தத்துவத்தை அவர் இறைவனில் கண்டார். (பிடித்தத பத்து 9) எனவே தாயாகவும் தாயின் சாலப் மிகுந்த பரிவுள்ளவனாகவும் இறைவனைக் காண்டு இன்புற்றார். கருணாகரனாகவே தயவுகள் செய்பவன்.

தாய் இன்றேல் இவ்வுலகில் எவ்வுயிரும் பிறந்து விட முடியாது, எவ்வுயிரும் பிறப்பதும் இல்லை. தாயே உலகிற்கு மூலம். தாய் கருணையின் வடிவம். அந்த தாயிலும் பார்க்க கருணையுள்ளம் கொண்டவன் இறைவன். கருணாகரன் தயாவானவன் - கருணையே வடிவானவன். கருணையின் மிகுதியால் தான் நமக்கு – (சகல உயிர்களுக்கும்) தனுகரண புவன போகங்களைப் படைத்தளித்து எம்மை வாழ வைத்துள்ளான். எமது கருமாக்களான நாம் செய்த வினைகளான நல்வினை, தீவினைப் பயன்களை அனுபவித்து பிறவியின் எல்லையைத் தந்து எம்மை மீண்டும் பிறவாநிலை யென்னும் வீடு பேற்றில் விடுகின்றான். இது இறைவனின் பரிவாகும். இறைவன் தயாளம் நிறைந்தவன் தயையுடையவன் கருணாகரன் தத்துவன் அவன் ஒருவனே அனைத்துப் பேறுகளுக்கும் அதிபதியாவான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை உணர்ந்து உணர்ந்து இறைவன் ஒருவனையே நம்புவோமாக. அவனின்றி ஒரு அணுவும் அசையாது. எமது பிறப்பு இறப்பு கன்மவினை எல்லாம் உணர்ந்து எம்மை வழிநடத்துபவன் இறைவனேயாம்.

நாயினும் கடைப்பட்ட ஒருவனுக்கு! அதாவது தனக்குத் தாயினும் சிறந்த பல் மடங்குகள் சிறந்த அன்பை மேலோங்கிதமாக தனக்கு அருளினானே! என்று கவலையுறுகின்றார். எனவே நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு தாயிற் சிறந்த தயாவான தத்துவனே என்கிறார். இப்படியாக மண்மேல் தனது மலரடிகளை வைத்து குருநாதர் ஒருதாயைப் போல் மனப்பக்குவதத்தை தனக்கு வளர்கிறார். ஆகவே மாணிக்கவாசக சுவாமிகளின் மனத்தில் இறைவன் தாயிற் சிறந்தவராகுகின்றான். இதை வியந்து பேசுகின்றார். இறைவனை தயவான தத்துவனாகவே காண்கின்றார். இறைவனின் அந்தக் கருணை தாயினும் பன்மடங்கு பரிவினைக் காட்டியுள்ளது என்பது எமக்கு நன்கு புலனாகின்றது.

**62 - மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே**

| | |
|---|---|
| மாசற்ற | - களங்கம் இல்லாதது |
| சோதி | - பிரகாசமான ஒளி, ஒளிவடிவம் |
| மலர்ந்த | - விரிந்த |
| சுடர் | - பிரகாசம் |

எந்நாளும் நிறைவாயிருக்கின்ற, எந்நாளும் பிரகாசிக்கின்ற, பழுதற்ற, களங்கம் இல்லாத சோதிமயமானவன் இறைவன், என்பதை இவ்வாக்கியம் மூலம் விளங்கவைக்கின்றார். அளவுக்கு மிஞ்சிப் பிரகாசிக்கின்ற சோதியானாலும் அதிலே ஒரு துளி ஒரு மயிர் எடையாவது அழுக்கு என்று சொல்லப்படுகின்ற மாசு இருக்கும். ஆனால் இறைவனோ ஒரு மாசு, களங்கம், அழுக்கு, மறுவற்ற, சோதியாக ஒளிவிடும் மலர்போன்று மலர்ந்த மலர்ச்சுடர். அதாவது சுருங்கி விரியாத எப்பொழுதும் மலர்ந்து கொண்டிருக்கின்ற விரிந்து ஒளிவிட்டுக் கொண்டே இருக்கின்ற மலர்ந்த மலர்ச்சுடர், மாசற்ற சோதி என்றே இறைவனை அகக்கண்ணாலும் புறக்கண்ணாலும் நேரே கண்டும் தரிசித்துள்ளார் மாணிக்கவாசகர் சுவாமிகள். நேரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு நயனதீட்சையை, ஸ்பரிச தீட்சை, வாசக தீட்சை, மந்திர தீட்சை, திருவடி தீட்சை, முதலியவற்றை மலர்ந்த மலர்ச்சுடர் என்கின்ற இறைவனிடம் நேரேயே பெற்றவர் - ஒளி போல பிரகாசித்து மலர்ந்து இருக்கிற மலரின் ஒளிபோன்றவன் இறைவன், என்று நேரேயே தான் கண்டதைக் கூறுகிறார். எல்லாம் ஒருங்கே ஒரே நேரத்தில் நேரடித் தரிசனத்தோடு பெற்றவர். ஆதலால் தான் கண்ட அந்தக் காட்சியையும் இறையின்பந்தையும் நேரடியாகவே கூறிவைத்துள்ளார்.

மாணிக்கவாசக சுவாமிகள் தன் மனநிலை பொறுக்க முடியாமல், ஆற்றாமையினால், இறைவன் புகழைப் பலவாறு போற்றுகின்றார். **மாசு மறுவில்லாத சோதி என்கிறார், மலர்ந்தமலர்ச் சுடர்" என்கிறார். மலர்ந்த மலர் சுடரே என்பதை? விரிந்து விளங்குகின்ற ஆயிரம் தாழ் தாமரையாகிய சகஸ்ர தளத்தில் சுடரும் ஒளியே என்று ஞானிகள் கூறுகின்றார்கள். மாசற்ற சோதி என்பதிலிருந்து - ஆரா அமுதே, அளவு இலாப் பெம்மானே என்பது வரை தனது ஆற்றாமை காரணமாக இறைவனைப் பலபடியாகக் கூறிப் புகழ்வதாக இது இருக்கின்றது. இது அவரின் உள்ளத்தின் விளைவாகும் பேரருளின் பெரும் கருணை வெள்ளமாகும், என்பதனை சிவபுராணம் படிப்பதனால் உணரமுடிகின்றது.**

**63 - தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரனே**

| | |
|---|---|
| தேசு | - ஒளி |
| தேஸஸ் | - சூரியன் |
| தேசன் | - தேஜன் |
| தேஆர் | - அமிழ்தினும் இனியது |
| அமுது | - கூடிய அமுது. |
| சிவபுரனே | - சிவ உலகம் |

சிவன் அமுது போன்றவன். அதிலும் அவன் அகில உலகங்கட்கும் அமுதாக இருப்பவன். அத்தோடு சிவபுரத்துக்கும் அமுதனாக இருப்பவனாக விளங்குகின்றான். சிவபுரத்தின் தலைவன் சுடர்ஒளி சூரியன் போன்ற பிரகாசமும் - விரிந்த ஒளியுடைய மலர்போன்றவனும் எக்காலமும் பூரணத்தன்மையும், நிறைவும் குன்றாமல் நிறைவாயிருந்து பிரகாசிக்கின்ற பழுதற்ற மாசுமறுவற்ற ஜோதி. தேஜோமயமானவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனினும் பார்க்க இனிமை பொருந்திய தேன்ஆர் அமுதன் சிவபுரத்தரசன். சிவபுரத்தின் தலைவன். **சிவபுரத்தின் தலைவன் ஈரேழு பதின்நான்கு உலகங்களுக்கும் அவனே ஒளியும் பிரகாசமும், தலைவனுமானவன் என்ற ஒன்றை மட்டும் உணர்ந்தாலே! எம்மை நாமே பண்படுத்திக்கொள்ள முடியும்.**

இயற்கைப் பொருள்களுள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மின்னல், தீ ஆகியவைகள் ஒளிர்கின்றன ஒளி விடுகின்றன. எனினும் அவை அழிந்து பட்டுப்போகும் தன்மையுடையன. ஒரு காலத்தில் அவை எல்லாம். அழிந்து பட்டுப் போகும். இத்தன்மை அவைகளுக்குண்டு. பிரளயகாலத்தில் அவை அமிழ்த்துப்பட்டுப் போகின்றன. மெய்ப்பொருளாகிய சிவப்பிரகாசமோ குற்றமற்றது. மெய்ப்பொருள் :- பூரணம் - அது சிவப்பிரகாசம் ஆகவே அது எக்காலமும் அழியாது. ஒளிமங்காது பிரகாசித்துக் கொண்டே இருக்கும். அத்தோடு அது தேனை ஒத்த தித்திப்பையும், மனப்பக்குவத்தையும், பரமானந்தத்தையும் எமக்கு தருகின்றது. தன் தனித்தன்மையும் தன்வயமும் குன்றாததால் அது மாசற்ற சோதி! சிவலோகமே சிவபுரம்! என இங்கே மாணிக்கவாசகரால் கூறப்பட்டது. சத்தியலோகம், பிரமலோகம் இவற்றிற்கெல்லாம் மேலானதே சிவலோகம் சிவபுரமும் சிவபெருமானும் அதி உன்னதமான உயர்ந்த மேலானவனேயாம் என்று சிறப்பான சிறப்புக்களையும் எல்லாம் எம்பெருமானினது சிறப்பாகவே கூறுகின்றார். சிறப்புக்களும் உயிர்கள் மேலுள்ள சான்னித்தியமும் ஒருங்கே அமையப் பெற்றவர் சிவபெருமானேயாம் என்பதனையும் எம் வணக்கமெல்லாம் சிவபெருமானிற்கும் சிவபுரத்திற்குமே உரிமையுடயது என்பதையும் நன்கு விளங்கும்படி இங்கே கூறிவைக்கின்றார்.

இதிலே தேசன் என்கிறார். தேனார் அமுது என்கிறார். சிவபுரன் என்கிறார். இவ்வாறு தாய் தன்மகவைத் தாயானவள், செல்வமே, கண்ணே, மணியே, கட்டிக்கரும்பே என்பது போல அவர் தேசன், தேன், தேனார் அமுது, சிவபுரன் என்றெல்லாம் அகமகிழந்து கூறி உள்ளம் பூரிக்கின்றார். அவருடைய பூரிப்பு அளவிடற்கரியதாகும். இவையெல்லாம் அவரின் பக்தி உள்ளத்தின் பரிணமிப்பாகும் என்பதே இங்கே நமக்கு நன்கு விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**64 - பாசம் ஆம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே**

| | |
|---|---|
| பாசம் | - கட்டுண்டு கட்டியவை. |
| பற்றுஅறுத்து | - கட்டிய பற்றைஅறுந்து |
| பாரித்தல் | - காப்பாற்றுதல் வளர்த்தல் |
| ஆரியன் | - நிறை மனிதன், |

இறைவன் நிறை மனிதனாக மேலோனான ஆசாரியனாக இருந்து அவன் பாரிக்கும் ஆரியன் - ஆவான் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் பிடியையும் கெடுத்து உயிர்களுக்கு மெய்யறிவினை வளர்க்கும் மேலோன். பாசமாகிய கட்டை அறுத்து என்னை உய்விக்கும் ஆசாரியன் மேலானவன் நீ! நீ பாரிக்கும் ஆரியன்! ஆகையால் எமக்கு தெய்வ சிந்தனையை வளர்க்கும் ஆசாரியன்! ஆகின்றான் என்றார். இறைவன் யாவற்றிற்குமே பெரியோன். ஆனால் எமது நிறை நிலைக்குத்தடையாய் இருப்பது! பாசம். சிறிய சிறிய வேட்கைகளில் (ஆசைகளில்) எல்லாம் உயிரைப் பிணைப்புண்டு கிடக்க வைப்பதும் இந்த உலக இச்சைகளில் தள்ளுவதும் பாசமாகும், ஆசையாகும் இந்த பாசத்தை விட்டெறிந்து நிறை நிலைக்கு இட்டுச்செல்பவன். (நிறை நிலைக்கு எம்மைத் தயார்படுத்துபவன்) ஆசிரியன் (ஆரியன்) ஆசாரியன், இந்த ஆசாரியன் தனக்கு சொரூபத்தில் தீட்ஷாகுரு மூலமும் இறை ஞானத்தின் மூலமும் எம்மை நெறிப்படுத்துகின்றான். இதனால் மும்மலங்கள் ஆகிய பாசங்களை ஆசிரியன் நீக்குகிறான். அவன் அறிவை வளர்க்கும் ஆசாரியனாகின்றான். அருளைத் தந்து, அருளைத் தந்து தெய்வ சிந்தனையை வளர்க்கும் பாரிக்கும் ஆரியனாகின்றான் இறைவன். இறைவனையே மானசீக குருவாகவும், மேலானவனாகவும் ஆசாரியனாகவும் நாம் எம்மனதில் இருத்திக் கொண்டாலே போதும் எல்லாம் இறைவன் காட்டிய வழியிலேயே நடக்கும் என்ற மன உந்துதலே சகல உயர்சிக்கும் வளர்ச்சிக்கும் காரணமாய் அமையும் என்று கூறி வைத்துள்ளார். பற்று இறுதியில் எம்மை தயார்படுத்தி பக்குவப்படுத்தி காப்பாற்றி பாசத்தையும் அறுக்கும் ஆசிரியனாகின்றான் இறைவன். **ஆணவம் அகன்றால் தான் ஆசிரியனை அணுக** முடியும் ஆசிரியனும் நம்மை அணுகுவான் என்பதனை எம் மனத்தில் இருத்திக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசப் பற்றுத்தான் ஆசைக்கும், ஆணவத்திற்கும், கன்மத்திற்கும், மாயைக்கும் காரணம் எனப்படும். அதாவது மும்மலங்களின் வீச்சுக்கும் எல்லாம் காரணமும் ஆகும். அகந்தையே உள்ளமாகக் கொண்ட இந்த மனிதவாழ்வில் திருத்தங்களைக் கண்டு நாமும் நமது சிந்தனையைத் திருத்தி சிந்தையே கோயிலாக சிவன்பால் சித்தத்தை செலுத்தி உணர்விலும் உள்ளத்திலும் இறை சிந்தையோடு எமது ஒவ்வொரு தினத்தின் பொழுதும் கழியுமானால் பாசமாகியதளையும் நீங்கி உலகப் பற்றாகிய சிந்தனை முழுதும் இறை சிந்தையாக, இறைவன் செயலாக மாறும் என்பது திண்ணம். இப்படிச் சிந்தனையும் செயலும், உணர்வும் எம்முள்ளுக்குள்ளேயே மலர மலர சிவம் மலரும். பாரிக்கும் ஆரியனாக அதாவது காப்பாற்றும் குருநாதனாக எம்முள்ளேயே இருந்து நேசஅருள் புரிவான் இறைவன் அவன் பாரிக்கும் ஆரியன் என்கிறார். இறைவனே எமக்கு முழுதுமானவன் என்பதை இங்கே நன்கு உணர்த்துகிறார்.

**65 - நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெட**

| | | |
|---|---|---|
| நேசம் | - | அன்பு |
| நேச அருள் புரிந்து | - | அன்பு செய்யும் திருவருள் |
| நெஞ்சில் வஞ்சம் | - | நெஞ்சில்கயமை இல்லாமல் போக அருள்பவன். |
| கெட | - | கயமை இல்லாது ஒழிய |

அன்பான நேசமான திருவருளினாலும் அன்பினாலும் நெஞ்சில் இருக்கின்ற வஞ்சனையெல்லாவற்றையும் கெடப்பண்ணுகின்றான் இறைவன் வஞ்சனைஎன்கின்ற கயமை என்கின்ற பொய் எல்லாவற்றையும் கெடப்பண்ணுகின்றான். மனிதர்களாகிய நாம் ஒன்றில் பற்று வைத்து மற்றொன்றை நாடாதிருப்பது மனம் போன போக்காகும். அதாவது உலக இச்சையை நாடுபவன், இறையருளின் அருமை, பெருமைகள் இல்லாதவனாய் இருப்பான். அதனால் இறையருளின் உணர்வினை உணராதவனாய் இருப்பான். இறையருளை! உலக இச்சை ஆசை காரணமாகவும் மனமானது உணர்ந்து கொள்ளமாட்டாது. பொறி வழிபோகும் தன்மையாலும் மனம் ஒரு நிலையில் இல்லாத கேட்டினாலும் தான் பண்ணுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடு **அறியாதவனாகின்றான் மனிதன். எனவே இறையருளே! யாவர்க்கும் மேலானது என்பதை மனிதர்களாகிய நாம் உணர வேண்டும். இறையருள் மட்டுமே எனது நேசம் நிறைந்த திருவருள் என்பதை உணர வேண்டும். உணராத இந்நிலை தான் மனித மனத்தைக் கெடுக்கின்றது. ஆனால் இறையருளேதான் அன்பின் சொரூபம். நேசம் நிறைந்த அன்பு, நேசம் நிறைந்த அருள்** அது உயிர்கள் செய்யும் குற்றங்களை நீக்கி இறையருளிலே உயிரை ஐக்கியப்படுத்தி இணைத்துக் கொள்ளும். அதற்கு நாம் அன்பின் சொரூபமாகிய இறையருளையே நெஞ்சைச் சுத்தப்படுத்தி நாட வேண்டும். அவனருளாலே அவன்தாள் வணங்கி என்று முன்னமே சிவபுராணத்தில் கூறிவிட்டதையும் நாம் உணர்ந்து பார்க்கமுடியும்.

இறைவனுடைய அருள் கிட்டினால் நெஞ்சில் வஞ்சகம், யாரையாவது மட்டம் தட்ட வேண்டும் என்ற வஞ்சகம் யாரையாவது கெடுக்க வேண்டும் என்ற வஞ்சகம் எல்லாம் மனதை விட்டுக் கெட்டுப்போகும். அகன்று போகும் அப்படிக் கெட்டபின் இறைவனுடைய நேசமான நிறைந்த அருள் பெருவிருப்போடு எம்மேல் வந்து சொரியும். அப்படிச் சொரிய வேண்டும். அப்படிச் சொரிந்தால் நெஞ்சில்க் குடிக்கொண்டுள்ள ஆறு துர்குணங்களும் அகன்று அதன் அடிச்சுவடே இல்லாமல் போனால்தான் இறைவனுடைய "தனிப்பிரியமான" "நேச அருள் எம்முள் பதியும் என்பது மாணிக்கவாசகப் பெருமானுடைய உளம் நிறைந்த நம்பிக்கையும் கருத்துமாகும். எனவே மாணிக்கவாசகருடைய பொறி புலன் முழுவதும், அருள் முழுவதும் ஆக்கையின் உடம்பின் எலும்புத்துவாரமும் என்புத்துளையும் இறை இன்பத்திலேயே திளைத்தது, என்பது எம்மால் உணரமுடிகின்றது. அவருக்கு புலக்காட்சிகள் எல்லாம் இறைக்காட்சியாகவும், இறை அறிவாகவுமே மிளிர்ந்தது. என்பது இந்த வரிகளிலே நன்கு புலனாகின்றது. இதனையே மானிடவர்கள் அடைய வேண்டுமென்று இறைவனின் திருவுள நோக்கம் மேலிட இறைவன் திருஅருளோடு அவர் திருவாசகத்தை எமக்குப் பாடித்தந்தார். புலனடக்கம் என்பது நெஞ்சில் வஞ்சனை எல்லாம் கெட்டு நேச அருள் கிடைப்பதற்கு என்றே அடிகோலும், அடிகோலாகும். ஏன்பதை நாம் உணர்வோமாக. புலனடக்கமே எல்லா முயற்சிக்கும் இறைவழிபாட்டிற்கும் மூலாதாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**66 - பேராது நின்ற பெரும் கருணைப் பேர் ஆறே**

| | |
|---|---|
| பேராது | - பெயர்த்தும் எடுக்கப்படாது, |
| நின்ற | - பெயர்ந்து எடுக்கப்படாது நின்ற |
| பெரும் கருணை | - இறைவன் பெரும் கருணை |
| பேர் ஆறும் | - பெரிய நதியே, ஞான நதி |

பெயர்த்து எடுக்கப்படாத பெரும்கருணை அதாவது பெருவெள்ளமான அருளைக் கொடுக்கின்ற கருணையுள்ள வள்ளல் நீ பெயராது நின்ற – பெயர்த்து எடுக்கப்படாது நின்ற பெரும் கருணைப் பேராறு ஆக கரைகாண முடியாத ஆறாக நின்கின்ற அருள் பொழிகின்ற இறைவன். ஆனால் என் நெஞ்சமானது குற்றம் நிறைந்தது. அதாவது இதுவரையில் என்மனதை யான் சீர்படுத்தப் பார்த்ததிலிருந்து குற்றங்களே அங்கே அதிகம். நிறைந்துள்ளது. என்ற என் மனதில் இருந்ததாகவே எனக்குத் தெரிகின்றது. நான் (1). அகம்பாவம் கொண்டவன். (2). மலம் ஒழுகுகின்ற குடிலையுடையவன், அறம் - நல்வினை, பாவம் - தீவினை. (3). புலன்கள் ஐந்தும் ஒரு நிலையில் நில்லாது வஞ்சனையே செய்யும். இதனால் பிரபஞ்சவாஞ்சையே எனக்குகூட அதிகரிக்கும். அப்படித்தான் அதிகரிக்கின்றது. இருவினை பாவங்களும் மென்மேலும் என்னை பீடிக்கின்றது. இவற்றால் இது இறைவனது பிழையோ என் பிழையோ நான் நினையாது இருக்கின்றேன். அப்படி இருக்க நீ அருள் சுரக்கின்ற கருணை வள்ளல். எனக்கு அருளையே சுரந்து தருகின்றாய்.

4 விலங்கு மனம், 5 நலம் சிறிதுமிலாத சிற்றறிவுடைய சிறியேன் 6 நாயினும் கடைப்பட்டவன். இப்படியான குற்றங்களையுடையது என்நெஞ்சமானது அப்படிப்பட்ட எனக்கு குற்றம் நிறைந்த என் நெஞ்சில் நின்று நீ பிரிந்து பேகாது (பெயர்த்து என் நெஞ்சின் நின்றும் எடுக்கப்படாது) நிலைத்திருந்து அருள் செய்கின்ற கருணைப் பெரு வள்ளல் நீ! கங்கா நதி ஒருநாளும் வற்றாதது அது. எந்நேரமும் சலசலத்துக் கொண்டு இனிமை குலையாது. ஓடிக்கொண்டே இருக்கும் இப்படிப்பட்டதே இறைவனின் கருணையும் ஆகும் **இந்தக் கங்கா நதியில் உலகினர்க்கு இருக்கின்ற பயன்பாடுகள் போன்றதே எந்நேரமும் அருள் சுரந்து கொண்டிருக்கின்ற இறைவனின் கருணையும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்தக்கருணையானது பேராது நின்ற பெரும் கருணைப் பேர் ஆறு ஆகும். என்பதைத் தானும் அனுபவித்து உலகோருக்கும் விளங்க வைக்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகள். இறைவனின் கருணை இன்னருள் இப்படிப்பட்டது** என்பதை உலகிலுள்ள ஒவ்வோர் உயிரும் உணர வேண்டும் பெரும் கருணைப் பேர்ஆற்றினை இறைவனின் பெரும் கருணை வெள்ளத்தை ஒவ்வொருவரும் உணர வேண்டும் என்பதனை திருவாசகத்திலே சிவபுராணத்தில் நன்கு உணரவைத்துள்ளார் சுவாமிகள். **இறைவனை உணர்ந்து உணர்ந்து இறைவன் கருணையை அனுபவித்து அனுபவித்து எமக்கும் சிவபுராணம் மூலம் இலகு தமிழில் நன்கு உணர்த்தியுள்ளார் இங்கே இறைவனின் கருணை வெள்ளப் பேராறாக ஓடுகின்றது என்பதை யார்தான் உணரவல்லார் உளரோ இவ்வுலகில்! உணர்பவர்கள் உணர்ந்தவர்கள் பாக்கியசாலிகள் என்றே சிவபுராணத்தை வைத்துக் கொணடு நாம் உணரவேண்டும். சிவபுராணத்தில் அப்படித்தான் கூறி வைத்துள்ளார் என்பதை உணர்பவர்கள் பாக்கியசாலிகளேயாம்.**

எம்மைவிட்டு நீங்காத பேராறே இறைவனின் கருணை ஆகும். ஆனால் மாணிக்கவாசகரின் அடிமனதிலும், அகமனதிலும் வரும் "பேராறு என்பது : ஞான நதி"! அதாவது இறைவனே "அறிவுச்சுடர் என்னும் ஞான நதியாக"! "ஞான நதி என்னும் அறிவாக"! ஞானத்தை சகலருக்கும் தரும் பேரறிவாளனாக விளங்குகின்றான். பேராது நின்ற அதாவது எம்மை விட்டு நீங்காதவனாக எப்பொழுதும் நிற்பான் பேரறிவாக என்று கூறி அத்தோடு "ஞான நதி என்பது அவன் நுண்பொருளாகவும் இருப்பான் என்பதே கருத்துமாகும். ஞானிஆன மாணிக்கவாசக சுவாமிகளின் ஞானநிலையின் கண்தோன்றிய கூற்றுமாகும். இதுவே "பேராது நின்ற பெரும் கருணைப் பேராறு" அவரை விட்டு நீங்காது நின்ற இறை ஒளி என்னும் "ஞானநதி" அவரை விட்டு என்றும் நீங்காமலே நின்றது எனலாம். ஆகையினாலேயே பெரும் கருணைப்பேராறு என்று இறைவனை அவர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**67 - ஆரா அமுதே அளவு இல்லாப் பெம்மானே**

| | | |
|---|---|---|
| ஆராஅமுது | - | தெவிட்டாத அமுதம் |
| அளவு இல்லாத | - | பரமபுருஷன். |
| அளவு | - | கூறமுடியாத |
| பெம்மான் | - | இணையில்லாத பெருமான் |

இறைவனின் கருணை அளவில்லாதது. ஆதலால் அளவிலாப் பெம்மான் என்றார். தெவிட்டாத அமுதம் நீ அனந்த கல்யான குணங்களையுடையவன். நீ பரமபுருஷன் அளவு இவ்வளவென்று இறைவனிடம் உள்ளன அனைத்தும் எம்மால் அளவிட்டுக் கூறமுடியாதவன் தானே! நீ. என்றே கூறிமுடித்துவிட்டார் அது ஆரா அமுது தெவிட்டாது தித்திக்கும் அதிமதுரம், அமுதம் அளவு கூறமுடியாத அமுதானவன் என்றே கூறமுனைகின்றார். கூறிமுடிக்கிறார். எனவே ஆரா அமுதமான இறைவனை நாம் அளவுக்குள் அடக்க முடியாத ஈடு இணையில்லாதவன் அவன் முழு நிறைவானவனேயாம். என்பதை நாம் நன்கு விளங்கிக் கொள்ளமுடியும்.

இறைவன் அளவிடற்கு அரியவன், அளவிட்டுக் கூற முடியாதவன் பரம புருஷன், பெம்மான் - ஈடு இணையில்லாதவன் அளவுக்குள் அடக்க முடியாத, (அளவுக்கடங்காத பெருமையுடையவன்) யாவையுமாக நின்ற முழு நிறைவானவன் இறைவன். – பெருமான் என்பதை இங்கே பெம்மான் என்றார். இறைவனின் அளவில்லாத கருணை தெவிட்டாத அமுதமானது ஆகும். இதனை யாரால் உணர முடியும். அதை உணர்த்தவே இவற்றையெல்லாம் அருள் வடிவாக எடுத்து விரித்து இயம்புகின்றார். சுவாமிகள் இவையெல்லாம் இவ்வுலகினரை உணர வைப்பதற்கும், பிறவிச்சுழியிலிருந்து மீட்பதற்குமாம். என்பதை சிவபுராணத்தினைப் பாராயணம் செய்வோரெல்லாம் உணர்வோமாக! **நாம் உணர்ந்து கொள்வதே எம் ஆத்மாவுக்குக் கிடைக்கும் உன்னதமான பேறாகும். இவற்றை எல்லாம் நாம் இப்படி உணரவே மானிடராக பிறந்தோம் என்பதே எமக்கு கிடைக்கும் இலாபமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஆரா அமுதன், ஆரா அமுதனை அழவிலாப் பெம்மானை, தெவிட்டாது **தித்திக்கும் சிவபதத்தை,** பெரும் கருணையை பேராறாகத் தருபவனை, ஞானஒளியை, ஞானவிளக்கை ஆராது போற்றினால்! அவன் அளவிலாத பெருமானாக எமக்கு இருப்பான். இதுவே நாம் பிறவி எடுத்ததன் பயனாகவும் அமையும் என்று கூறினார். எம் உள்ளத்துள்குள்ளே இருப்பான். அளவுகடந்த அருள்நிலையை அருளும் பெம்மானை எம்பிறவித் துயரெல்லாம் கெட அமுதமாக அவனை நினைத்து வணங்குவோம். அப்படி வணங்க வேண்டும் என்பதே அவருடைய அளவிட முயடிாத கருத்தாகும்.

**68 - ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே**

ஓராதார் - ஆராயாதவர்
உள்ளம் - எம்மனம்
ஒளிர்கும் - ஒளிவிடுகின்ற
ஒளியானே - நிரம்பிய ஒளி உடையவனே

சிவனின் இயல்பை! அத்தோடு அருளின் பெருமையும்! ஆராயதவராக ஆராயத்தெரியாதவர்களாக மனிதர்கள் மறந்து மனத்தாலும் நினையாதவர்களும் இருக்கிறார்கள். கடும் துன்பம் வந்தால் சிறிது சிறிதாக உணர்வார்கள் அப்படி உணர்பவர்களும். இருக்கின்றார்கள். **ஆராயாதவர் உள்ளத்திலும் சிவஒளி மறைந்திருப்பது போன்று சிவபோதத்தை வளர்க்காதவர்கள் சிவனைப் போற்றாதவரகள் உள்ளத்திலும் சிவ உணர்வு மறைந்திருக்கும் என்பது உண்மையே! இந்த சிவ ஒளியையும் சிவ அருளையும் ஆராய்ந்து அறிய வேண்டும்.** எனவே மறைந்திருக்கும் சிவ ஒளியானது எம்முள் இருந்து எம்மை வழிநடாத்திக் கொண்டிருக்கும் ஆனால் அது மறைந்திருக்கும் ஒளியாகவே உள்ளிருந்து வழி நடத்தும் என்பது உண்மை.! **உண்மையான தெளிந்த உண்மை. சக்கி முக்கிக் கல்லினுள்ளே ஒளியுண்டு அதைத் தட்டினால் தான் அதிலிருந்து ஒளி பிறக்கும் நெருப்புப் பிறக்கும் தட்டாவிட்டால் ஒளியுண்டாகாது** அதே போன்று சிவபோதமானது. சிவனை எண்ணி சிவனைப்பற்றி அறியும் நிலை உண்டாகினால் தான் சிவஒளி உள்ளத்திலிருந்து பிறக்கும். என்பதுவும் தெளிவாக வேண்டும். **"உள்ளூறும் அன்பர் தம் மனத்தார்" உள்ளிருப்பான்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளுவார் உள்ளத்தின் உள்ளொளி அவனேயாம். இதனை ஒவ்வொரு மனிதரும் உணர வேண்டும். தன் இயல்பை உணர்ந்து கடவுளின் இயல்பையும் உணர்ந்தார் கடவுள் எம் உள்ளத்துக்குள்ளே ஒளி விடுவான்.**

அண்டத்திலும், பிண்டத்திலும் கலந்தும், அவற்றைக் கடந்தும் நிற்கின்ற பரம்பொருள் அகத்தில் ஒளி பெறாதவர்களுக்குப் புலப்படுவதில்லை. அவர்களுடைய புலனுக்குப் புலனாகாத வகையில் அதாவது வெளிப்படாத வகையில் ஒளிக்கும் ஒளியாக அது நிற்கின்றது. ஓர்தல் என்பது - இடைவிடாது ஆழ்ந்த மனத்தோடு சிந்தனை செலுத்துதல். இறை ஒளியானதும் இடைவிடாது சிந்தனை செலுத்தினால் பிரகாசிக்கும் என்பதே இங்கே தெளிவாகும். இந்த ஒளியானதும் சிந்தை என்பதும் சீர் இல்லாவிட்டால் சிந்தனையை இறைவன் பால் செலுத்தாது விட்டால் எமது சிந்தை அறிந்து கொள்ளவில்லை என்பதே அர்த்தமாகும். (ஓர்தல் - சிந்தையைச் செலுத்துதல்) இங்கேயும் பொறி புலன்களும், புலக்காட்சிகளுமே எடுத்தாழப்படுகின்றன என்பதை மானிடராகிய நாம் உணர்தல் வேண்டும் என்றும் எம் சிந்தனையுள் நிற்பது சீராக மலர்ந்து நிற்பது சிவவழிபாடேயாகும் என்பதே எமது சிந்தையில் புகவேண்டும்.

**69 - நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே**

| | |
|---|---|
| நீராய் உருகி | - அன்பு நீராய் உருகவேண்டும் |
| என் ஆருயிர் | - என் இணைந்த உயிராவான். |
| நின்றானே | - துணையாக உள்ளவன் |

மனமும் செயல்களும் கல்லுப்போல இல்லாமல் உருக வேண்டும். எப்பொழுதும்மனம் நீராய் உருகும் தன்மை அன்பு மேலீட்டால் ஏற்படும். அன்பால் யான் இறைவனை நினைத்து உருக இறைவன் ஆருயிராய் அதாவது இணைந்த உயிராய் என்றும் பிரியாத உயிராய் அத்வைத்தம் எனப்படும் அத்துவிதம் என்ற அளவிற்கு இணைந்திருப்பான் (அத்துவிதம் என்பது - இரண்டற்ற நிலையாய்க் கலந்திருப்பான்). **எமது உயிருக்கு உயிராய் நின்று இயக்குகின்றவன். எம்மை நன்கு இயக்குவிப்பவன் இவ்வுலகில் நாம் நன்றாக இயங்குகின்ற இயக்கமே!** அதாவது மனத்திடமான அடிப்படை நம்பிக்கையே அன்பைப் பெருகச் செய்யும். இறைவனுடைய அருளும் நீராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகிச் சுரந்து நின்று பக்தனை வழிநடத்தும் என்பதை உணர்ந்தே பக்தி செய்ய வேண்டும் அப்போது அவன் துணையாக நிற்பான் ஆருயிராய் இணைபிரியாது எம்முடன் கூடவே நிற்பான். என்பதை சுவாமிகள் வெளிப்படையாகவே விளங்கவைத்துள்ளார்.

ஞானக் கல்வியினை! ஞானசிரியனான பரம்பொருள்! நேரே தோன்றி மாணிக்கவாசக சுவாமிகளுக்குக் கற்பித்தான். இந்த கல்வியை அவருக்கு இறைவன் நேரே வந்திருந்து பெரும் பேறாக அருளினான் இப்பெரும் பேறினாலே இறைவனால் நேரரே அருளப் பெற்றவர் சுவாமிகள் இந்தப் பேறினாலேதான் சுவாமிகள் இந்த வரியை "சிவபுராணத்திலே" பாடினார் இதனாலேயே இது அவர் பாடிய வரியாக அமைந்தது. ஏனெனில் நீராய் உருகி என் ஆருயிராய் நின்றானே என்கிறார் இறைவன் உயிருக்குள்ளே நீராய் உருகுகின்றான். உருகுகின்ற உயிருக்குள்ளே ஆருயிராய் நிற்கின்றான். என்றே தனது ஆருயிரும் நீராய் நின்று உருகுகின்றது என்றார்.

இதை ஆழ்ந்து சிந்தித்தால்! அத்தோடு திருமூலர் வாக்கையும் நோக்கினால்! எப்படி நீராய் உருகி இறைவன் உள்ளத்துக்குள்ளேயே நிற்பான் என்பது விளங்கும்.

**உள்ளத்துக்குள்ளே உளபல தீர்த்தங்கள்**
**மெல்ல குடைந்து நின்றார் வினைகெடப்**
**பள்ளமும் மேடும் பரந்து திரிவரே**
**கள்ளமனமுடைக் கல்வியுள்ளோரே**

**(திருமூலர்)**

உள்ளம் நீராய் உருகுவது போன்று அதனுள்ளே இறைவன் ஆருயிராய்த் தங்குவது என்பதனை திருமூலர் உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள் மெல்லக்குடைந்து நின்று ஆடுவர் என்கிறார். **எனவே ஆழ்ந்த அன்புள்ள மனத்தினுள் முதலில் ஒளியாய் நின்றவன். பின்பு நீராய் உருகி நின்றவன். பின்பு ஆருயிராய் விட்டான்.** ஆகவே இறைவன் தான் வலிய வந்து ஆருயிராய் கலந்து விட்டான் அதற்கே தன்னிடம் வந்தான். இதற்கு அவர் அதாவது மாணிக்கவாசகர் காரணமில்லை இறைவனே தான் காரணம் உள்ளத்துக்குள்ளேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தமுண்டு மெள்ளத்தம் உள்ளத்தை குடைந்தால் அங்கே காணலாம் என்பதே! அன்று சான்றோர் கூறியதாகும்.

**70 - இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே**

1. இன்பம் - மகிழ்ச்சி
2. துன்பம் - துன்பப்படல்
3. இல்லானே - இவை இரண்டும் இல்லானே
4. உள்ளளானே - அன்பர் பொருட்டு துன்பமுள்ளவன்

இவ்வுலக உயிர்களுக்கு இன்பமும் துன்பமும் உண்டு. இரவும் பகலும் போல இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். ஆனால் இறைவனுக்குகோ அப்படி எதுவுமே இல்லை. ஆனால் உயிர்கள் அனைத்திலுமாய் இறைவன் எல்லா உயிர் இயக்கங்களிலும் நின்று இயங்குவதாலும்!

அது எப்படி எனின்? இறைவனே அவ்வுயிர்கள் அனைத்தின் இன்பதுன்பங்களுக்கும் அத்தோடு மாற்றமுள்ள மாறுகின்ற அனைத்தும் இறைவனுடையதே! அவற்றிற்கெல்லாம் முடிவுமானவன், விடிவுமானவன் இறைவனேயாம். இறைவனுக்கு இருவினைப் பயனால் வரும் இன்ப துன்பங்களுமில்லை இறைவனுக்கு இருவினைப்பயன் என்பது கூட இல்லை என்பதே இங்கு கூறப்பட்ட கருத்தாகும்.

ஆனால் இறைவனுக்கு நல்வினைப்பயன், தீவினைப்பயன் என்ற இரண்டுமே இல்லை. ஆகவே இருவினைப் பயனால் வரும் துன்பமும் இல்லை. ஒரு மனிதனானவன் தன்னைத்தான் உணர்ந்து! தான் தனது ஒவ்வொரு அசைவும் இறைவன் செயலே! இறைவா நீயே! எல்லாம் என்று நம்பும் ஞானியர்க்கு அவர்களின் துன்பங்களை தனதாக்கிக் கொள்வான் **அதாவது அன்பு செய்வார்க்கு அவரவர் கருதும் அன்புருவாய் நின்று அருள் செய்வான் என்பதே திண்ணமான உண்மையாகும்.** ஞானசம்பந்தப் பெருமானுக்கு சிவனார் முத்துக்குடை முத்துப் பந்தல், தாளம் எல்லாம் அருளியவற்றையும்! அவற்றை அந்த அன்புருகும் செயல்களையும் யாம் எண்ணிப் பார்க்க வேண்டும் **தன்னடி போற்றும் அடியவர்க்குத் தானாக வந்தருள்வான என்பது உண்மையிலும் உண்மை. அவர்களுடைய இன்னல்களைப் பொறுக் கமாட்டான் அவர்களுடைய இன்னல்களைத் தனதாக்கிக் கொண்டு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருள்பவனாதலால் இன்பமும் துன்பமும் உள்ளான் என்றார்.** எம் உணர்வுகள் அனைத்திற்கும் வழிகாட்டியாய் இருப்பதும் அடிநாதமாய் இருப்பதும் இறையுணர்வேயாம் என்பது மட்டும் எம்மால் **கட்டாயமாக உணரப்பட வேண்டும்.**

இறைவனுக்கு இன்பமில்லை, துன்பமில்லை ஏனெனில் இறைவன் குணம், குறி கடந்தவன். ஆகையால் அவனை இன்பமும், துன்பமும் இல்லானே என்றார். ஆனால் அதை இறைவனுக்கு இன்பமும் துன்பமும் இல்லானே என்றவர். பின்பு உள்ளானே என்றும் கூறுகின்றார். எப்படி எனின்? உயிருக்குயிராக ஒவ்வொரு உயிரிலும் கலந்து நிற்கின்றான். ஒவ்வொரு உயிரினதும் இன்ப துன்பங்களிலும் ஒவ்வொரு உயிரிலும் கலந்து கொண்டு இறைவனும் பங்கு கொள்கின்றான் என்பதை உணர்த்தவே இன்பமும் துன்பமும் உள்ளானே என்றார். உயிர்களை நல் நிலையில் மீட்கும் பொருட்டு இறைவனே துன்பமடைகின்றான். ஆகவே இந்த வகையிலே தான் துன்பமும் இல்லானாகவும் உள்ளவனாகவும் ஆகின்றான் என்று இறைவனையே எண்ணுகிறார்.

**71 - அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்**

அன்பர் - மெய்யன்பர்,
அன்பனே - அன்பனாய் இருப்பவனே
யாவையுமாய் - எல்லாமாய்
அல்லையுமாய் - இல்லாதனவுமாய்

அன்பர்களுக்கும் மெய்யன்பர்களுக்கும் உண்மையாக இறைவனிடத்தில் அன்புள்ளவர்களுக்கும் அன்பன் நீ, உலகனைத்துமாய் இருக்கின்றவனே, அப்படி நீ உலகனைத்துமாய் இருந்தாலும் உன்னிலே எந்த மாற்றமும் தென்படவில்லை. ஒரு மாற்றமும் இல்லை. அன்புடையவர்களுக்கு அவர்கள் உன்னிடம் வைத்த அன்பிலும் பார்க்க அவர்களிலும் மிக்க அன்புடையவனாகவே நீ இருப்பாய். யாவையுமாய் எல்லாப்பொருளுமாய், அவை அல்லாததுமாயும், வேற்றுமையாயும் நிற்பவனே! நிற்கும் சோதி வடிவினனே. அன்பு செய்வார்க்கு அவர்கள் கருதும் அன்புருவாய் அருள் செய்பவனே. அப்படி! **யாவையுமாய் என்றது. இறைவனின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியாபத்துக்குள் முழுவதினுள்ளும் அடங்கும் இவ்வுலகம் என்பதாகும். இறைவனே பூரணசர்வவியாபகமாய் நின்று அன்பருக்கு அன்பனாய் விளங்குவான் உள்ளிருந்தும், உடனிருந்தும், பலநிலையிலும், தனது அருளைப் பகருவான் என்பதனாலேயே! யாவையுமாய், அல்லையுமாய், என்று கூறி! மேலும் அன்பருக்கன்பனே, என்றும் அன்புருவையும் கூறினார்.** எனவே யாவையுமாய், இல்லாதவனுமாய், அன்பருக்கு, அன்பனுமாய் விளங்குபவன். இவன்யாவர்க்கும், யாவற்றிக்கும் தலைவனேயாம்.

அன்பு செய்பவர்களையும்! இறைவனை அணுகியே! இருப்பவர்களையும் இறைவன்தன் அன்பை அணுகி இருக்கத்தக்கதாக அன்பனுக்கு அவனும் அணுகியே இருப்பான். இறைவனை நம்பி வாழாதவர்களுக்கும், அவன்மேல் அன்பு செய்யாதவர்களுக்கும் அவனின் அருள் விளக்கம் விளங்காது. இறைவனை அனுபவிக்கவோ, அவன்மேல் அன்பு செலுத்தவோ, இறைவனை விளங்கிக் கொள்ளவோ அவர்களால் முடிவதில்லை. ஆகையால்தான் அன்பருக்கு! அன்பனே! என்றார். ஆனால் இறைவனை நம்பாதவர்களுக்கு, இறைவனைப் பற்றிச் சிந்தியாதவர்களுக்கு, இறைவன் இல்லை என்பவர்களுக் கெல்லாம், இறைவன் அனைவருக்கும் அன்பாகத் தான் இருக்கின்றான். சற்று ஆழ்ந்து சிந்தித்தால் யாவையுமாம் அல்லையுமாம் என்றது யவாருக்கும் "சிவசொரூபமேயாகும். சிவசொரூபமாக" நின்று அன்பரல்லாதவர்கட்கும் அருள்வான் என்பதே இதன் கருத்தாகும்.

### 72 - சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே

சோதியன் - சோதிமயமானவன்
துன்னிருளே - செறிந்த இருள்,
தோன்றாய் - நீ தோன்றாத பெருமையுடயவன்
பெருமையனே - நீ வெளிப்படாத பெருமையுடையவன்

சோதியாக, இருளாக, இப்படியிருப்பதும், தோன்றாதிருப்பதும், இப்படி எல்லாம் முரண்படுகின்ற நிலையிலும் தோன்றுதலும், தோன்றாது நிற்கும் நிலையும் உடைய பெருமையே அது உனக்கேயுரியது. சோதி மயமாகவும் இருந்து கொண்டும், செறிந்த இருளாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து கொண்டும், எளிதில் விளங்காத பெருமையுடையவனாகவும், இருப்பாய். இவ்வகையில் மாறுபடுகின்ற இயல்பெல்லாம் உன் இயல்பேயாம். சோதியனே என்பது – மிக்கஒளி, அளவுகடந்தபிரகாசம் துன் இருள் - நெருங்கிய இருள், செறிந்த இருள், இவையெல்லாம் புலனாகாத உன்னுடைய பெருமை எனப்படுகின்ற தன்மைக்கு இதுஎல்லாம் உன்னுடயதேயாம். நீ மிகுந்த பிரகாசமாயும் இருப்பாய் அளவு கடந்த மிகுந்த இருட்டாயும் இருப்பாய் தோன்றாத அதாவது வெளியே தோன்றாத பெருமையுடயவனாக இருப்பதே இறைவனின் பெருமை என்று சுவாமிகள் கூறுகின்றார்

முரண்பாடுகள் எல்லாம் உன்னிடமே கூடுகின்றன. அதாவது சேர்கின்றன நீ தோன்றுவாய், தோன்றாதிருப்பாய் காட்டுவாய், காட்டாதிருப்பாய் இவற்றை உற்றுணர்ந்தால் ஆத்மயோதி நீ, கட்புலனுக்கு விளங்காத இருளும் நீ. தோன்றிய பெருமை, தோன்றாப் பெருமை எல்லாம் உனக்கே சொந்தம். **இந்த பிரபஞ்சத்திற்கு நீ இங்கு ஆதிமூலம், பின்பு பிரபஞ்சம் இறுதியில் உன்னிடத்திலேயே ஒடுங்குகின்றது. ஆனால் நீ எதற்கும் விகாரப்படுவதில்லை.** எப்படி எனின்? ஒரு உதாரணத்தால் நோக்குவோம் கடலில் கீழ்ப்பகுதி அதாவது அடிப்பகுதி என்றும் அசையாமல் இருந்தபடியே இருக்கின்றது. அடிப்பகுதிக்கு அசைவேயில்லை. ஆனால் மேல் பரப்பில் அசைவு, போக்குவரத்து அலைகளின் எழுச்சி, பேரெழிச்சி, அலை விளையாட்டு எல்லாம் நடைபெறுகின்றது. இதே போன்று பரமாத்மன் செயலற்றும் இருக்கிறார். செயல் உற்றும் இருக்கிறார். யாருக்குமே தோன்றாத பெருமையோடும் தோன்றிய உலகத்தை செயல்படுத்திக் கொண்டும் இருக்கின்றார். என்பது இந்த வரிகளிலேயே இருந்து நன்றாகவும் வியப்பாகவும் விளங்குகின்றது. இதனை திருப்பொற்சுண்ணத்திலேயே (20) சோதியுமாய் இருளனார்க்கு என்பதில் இருந்தும் அறியலாம்.

சோதியனே என்பது ஒளிவடிவானவனையே குறிக்கும். இவன் வடிவம் "அட்ட மூர்த்தமே" ஆனால் சூரியன், சந்திரனுள்ளே இருண்ட வடிங்கள் இருப்பதாக ஆராய்சியாளர் கூறுவர். ஆனால் இறைவன் மட்டும் முற்றுமுழுதாக அப்படி ஒரு கழங்கமும் இல்லாதவன். அத்தோடு இந்த பிரபஞ்சம் முழுவதும் இறைவனுடைய சொரூபமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெளிவாக விளங்க வைத்த சுவாமிகள் எம்மை எல்லாம் உணர்வதற்கும் நாம் உணர்ந்தபின்பு புரிந்து கொள்வதற்கும் இந்த சூரிய சந்திர அக்கினியைக் கூறாமல் இறைவனை மாத்திரம் தான் "சோதியனே என்றார். இறைவன் அழுக்கோ அழுக்கேதுமில்லாத முரண்படாத சோதியன் துன் இருளே (கொடிய கரிய இருள்) என்றதும் இருளும் அவனுடைய சொரூபம் என்று அதிலே முரண் பாட்டையும் காட்டுகின்றார். பெரும் மனத்தாலும், கற்பனையாலும், கண்டுபிடிக்க முடியாதவன். இறைவன் அளவிடமுடியாத பெருமையுள்ளவன் ஆகையால் "தோன்றாப் பெருமையனே என்றார். இறைவனின் அருமை, இறைவனின் பெருமை தெற்றென எவருக்கும் தோற்றாத ஒன்றாகும். ஆனால் "அன்பே சிவம் சிவமே அன்பு" என்று அன்புள்ளவரிடத்தில் பிரியாது நிற்பவனும் அவனேதான் என்பதையும் நாம் உணர்ந்து உணர்ந்து பார்ப்பது நல்லது.

**73 - ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே**

| | | |
|---|---|---|
| ஆதியனே | - | மூலமானவனே |
| அந்தம் | - | முடிவானனே |
| நடுவாகி | - | மத்தியிலும் |
| அல்லானே | - | இல்லைஎன்றானவன் |
| **ஆதி** | - | **எல்லாவற்றிற்கும் தொடக்கமான மூலமானவன்.** |
| **அந்தம்** | - | **எல்லாவற்றிற்கும் முடிவுமாகவும் இருப்பவன்.** |
| **நடு ஆகி** | - | **எல்லாவற்றிற்கும் நடுவாகியும் இருப்பவனும்** |
| **அல்லான்** | - | **தோன்றாமல் இல்லையென்றவனாகியுமுள்ளவன்.** |

அதாவது புலனாகாதவனாயும் இருப்பவன், ஆதியாயும், அந்தமாயும், நடுவாகியும் இருப்பவன். இப்படி இருப்பவனுமாகியே நீ இருப்பாய்! பின்பு இல்லாதவனாகி அதாவது வெளிப்படாது இருப்பதுவும் உனது சொந்த வேலையாகும். உனது அருள் வேலையுமாகும். ஆனால் இவை எல்லாவற்றாலும் நீ விகாரப்படுவதுமில்லை. விசனப்படுவதுமில்லை. உன்நிலையும், உன்தன்மையும் மாறாதவனாகவே எப்பவும் இருந்து கொண்டே இருக்கிறாய். எனவே இறைவன் ஆதியும், அந்தமும், நடுவும் அல்லாதவனுமாய் இருப்பவன். முன்னும் ஈறும் ஆதியும் அந்தமும் இல்லான் என்பதாலும் அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து நாம் புரிந்து கொள்வதும் அறிந்து கொள்வதும் என்னவெனில் தோன்றாத் துணையாக இறைவன் எப்போதும் இருப்பான் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். நன்றாகப் புரிந்து கொண்டு இறைவனை நாம் போற்றவேண்டும். இறைவனை வணங்குவதும், போற்றுவதும் எமது தலையாய கடமை அவன் தோன்றத் துணையாய் யாவையுமாய் அல்லையுமாய் இருப்பான்

உலகியலிலே : தோற்றம், நடுவு, அழிவு என்று மாறிமாறி வந்தாலும் மறையாத "ஒரு" பொருட்களும் இல்லை. இந்தப் பிரபஞ்சம் கூடப் பல்கோடி ஆண்டுகளில் அழிகின்றது. இவற்றை எல்லாம் தோற்றுவிப்பதற்கும், இவை தங்கி இருப்பதற்கும், அழிந்து போவதற்கும், அழிக்கின்ற ஒருவன் வேண்டும். அவன்தான் ஆதியன். இங்கே ஆதியன் என்பது முன்னே **தோன்றியவன் என்ற அர்த்தமில்லை.** இங்கு நாம் காணும் **ஆதியன் என்பது! என்றுமுள்ள பழமையானவன்** என்பதாகும். **அவனது பழமையை யாராலும் கண்டுபிடித்துக் கூறமுடியாதவனாகையால் தான் அவன் ஆதியனே மூலமானவனே என்றார். அந்தம் நடுவாகி அல்லானே: என்றதிலிருந்து தோற்றமும் முடிவுமில்லாதவன் என்பதே பொருள்.** ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே அவனுக்கு தொடக்கம் ஆதி எப்போது என்றோ (அந்தம்) முடிவு எப்போது என்றோ ஒன்றுமில்லை அவன் மாறாத பொருள். மாற்றம் ஒன்றும் அடையாத ஒரே பொருள் அவனேயாம் என்பதே! தெளிந்த தெளிவான ஒன்றாகும்.

**74 - ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே**

ஈர்த்து - வலிய இழுது
என்னை - என்னை திருப்பெரும் துறையிலே
ஆட்கொண்ட - ஆள்கொண்டவன் நீ யல்லவா?
என்தை - என் தந்தை
பெருமான் - எம்பெருமான்

என்னை திருப்பெரும் துறையிலே வந்து இருந்து வலிந்து இழுத்து ஆட்கொண்டவன் நீயல்லவா எம் பெருமானாகவும் என் தந்தையாகவும் இருக்கின்ற பெருமானே "ஈசா நீவலிய வந்து என்னை இழுத்து ஆள்கொண்டுள்ளாய்." நீ எனக்குத் தந்தையாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனாகவும் இருக்கின்றாய். ஈரத்தென்னை ஆட்கொண்ட எந்தைப் பெருமானே! என்று இங்கே இந்த இடத்தில் கூறுகின்றார். எப்படி எனின் இறைவன் தம்மை வலிய வந்து தடுத்து இழுத்து ஆட்கொண்டான். வலிய இழுத்து ஆட்கொண்டான்! தன் தந்தையாகிய சிவபெருமான் என்றே மொழிகின்றார். இந்த இடம் அருமையிலும் அருமை. அவர் கூறுவது ஒரு வகையில் பொருந்தும்! ஏனெனில்? அவரது உள்ளத்தைப் பொறுத்த மட்டில் உண்மையிலேயே ஈர்த்து எனை ஆள்கொண்ட எந்தை பெருமானாகவே எம்பெருமான் இருக்கின்றார். இது சுவாமிகளுடைய ஆழ்ந்த மனம் கூறுகின்றது என்பது வெளிப்படையான மேலான உண்மையான சான்றாகும்.

**"வலிய இழுத்து என்னை ஆட்கொண்ட எந்தை" என்று கூறுகின்றார். இப்படித்தான் பக்தர்கள் எல்லோரும் வலிய இழுத்து தம்மை பக்தி நிலைக்கு ஆளாக்கியோன். இறைவன்!** என்றே கருதுகின்றார்கள் அப்படிக் கருதுவதும் ஒரு வகையில் சிறந்ததே தான். ஏனெனில் இறைவன் "அன்பருக்கு அன்பன்" என்றும் கூறி வைத்துள்ளார் சுவாமிகள். ஆமாம், அன்பு செய்பவர்களுக்கே அன்பன் என்று இதற்கு முன்னேயும் பல இடங்களில் அடித்துக் கூறுகின்றார். ஈத்து வந்து கருணை செய்வான் எந்தை பெருமான் இவ்வருமையை மானிடராகப் பிறந்த நாம் உணர்வோமாக. ஆம் இவற்றை எல்லாம் உணர்வதற்கு மானிடப்பிறவி மகத்தான பிறவியாகும். திருவாசகம் என்னும் எட்டாம் திருமுறையே! அவர்வாழ்விற்கும் வாக்கிற்கும் அவர் பெற்ற பேறுக்கும், அகச்சான்றாகவும் எடுத்துக் காட்டாகவும் அமைந்துள்ளமையை நாம் தெளிவாகக் காண்கின்றோம். இதனைத் தெளிவாக உணர்ந்து பார்க்க வேண்டும். **காந்தத்தின் எதிரே வைக்கப்பட்டிருக்கும் இரும்பைக் காந்தம் கவர்கின்றது. காந்தம் கவர்வதை இரும்புக்கு நிறுத்திக் கொள்ளும் ஆற்றல் இல்லை. இதே போன்றதே மாணிக்கவாசக சுவாமிகளினதும் இறைவனினதும் காந்தம் இரும்பு நிலையாகும். காந்தம் இரும்பு என்ற பிணைப்பாகும். ஒரு சிறிது கூட தன்னிலும் துறவு என்ற எந்த எண்ணமுமில்லாத** வாதவூராரை "குரு" ஈர்த்து இழுக்கின்றார். காந்தம் இழுப்பது இரும்புக்குத் தெரியாது என்று முன்னரே பார்த்தோம். அதே போன்று மாணிக்கவாசக சுவாமிகளாகிய இரும்புக்கு இறைவன் காந்தமாக வந்து குருந்த மரத்தின் கீழ் இருந்து (காந்தம்) இழுப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சரான வாதவூரர் சிறிதும் அறியார். அவர் இறைவனால் எந்த வித அறிவுறுத்தலுக்கும் இதற்கு முன்பு ஆட்படவில்லை. பல்லாயிரக்கணக்கான உயிர்கள் வாழுகின்ற இவ்வுலகிலே! தாம் ஒருவரை மட்டும் இறைவன் ஈர்ந்து இழுத்ததனால் அவர் இறைவனை "எந்தை" என்கிறார். அத்தோடு அவன் கற்பனைக் கெட்டாது, கற்பனை கடந்து நிற்பவனாதலால் "பெருமானே" என்று விழித்து "பின்பு எந்தை பெருமானே" என்று விழிப்புக்குறியோடு விநயமாக அணிநயமாக விழிக்கின்றார். ஈர்த்து என்னை ஆள்கொண்ட எந்தை பெருமானே! என்றார். அவரை ஈர்த்து இழுத்து ஆட்கொண்டமையினால் அதிசயக்குறியோடு முதலில் எந்தை! என்கிறார். பின்பு என் தந்தை என்கிறார். பின்பு பெருமானே என்கிறார் பேரருள் பெற்றி எல்லாம் ஒருங்கே அமைந்தவன் "பெருமானே" "பெம்மான்" என்றார். இதுவும் அதிசயக் குறிபேயாம். நாம் இந்த 74வது வரியை மிகவும் கவனத்தில் எம் உள்ளார்ந்த உணர்வில்க் நாம் கொள்ள வேண்டும்.

**75 - கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்**

| | |
|---|---|
| கூர்த்தமெய்ஞானம் | - நுண்ணியதான மெய்யறிவு |
| ஞானத்தால் | - உள்ளங் கொண்டமெய்யுணர்வால் |
| கொண்டுணர்வார் | - ஞானத்தால் உணர்வதில் இருப்பான் |
| தம் | - உணர்பவர்களுடைய |
| கருத்தின் | - எண்ணத்தில் |

கூர்மையான மிகமிக நுண்ணறிவு (நுண்ணிய அறிவு) நுண்ணிய ஞானம் இந்த கூர்மையான நுண்ணறிவாக வெளிப்படுகின்ற கூர்மையான நுண்ணிய அறிவால் அந்த அறிவைக் கொண்டு சிந்திப்பவர்களின் நுண்ணறிவிலே தான் பரப்பிரமமான சிவனைக் கிரகிக்கும் அறிவுத்திறனும் இருக்கும். கிரகித்து அறியவும் முடியும். ஆனால் இறைவன் நுணுகி உணர்த்தற்கரிய நுண்ணிய உணர்வுப் பொருளாவான் அவர்கள் பற்றிப்பிடிக்கின்ற மனோதவத்தின் மூலமாகவும், பிரம்மச்சாரியம் மூலமாகவும் அவர்களுடைய அறிவு கூர்ந்த மெய்ஞானமாகின்றது. அதாவது தேர்ந்து தெளிந்த ஞானமாகிறது என்பதை நாம் வைத்துக் கொண்டால் இந்த கூர்த்த மெய்ஞானத்தாலேயே பரப்பிரமத்தை கிரகிக்கும் அறிவுத்திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. என்பதுவே உண்மையாகும். கூர்ந்த – மிகவும் கூர்மை பொருத்திய, மெய்ஞானமாகும். சற்றும் மழுங்காத மயங்காத தடுமாறாத உணர்வினால் வரும் மெய்ஞானமாகும். மனோதத்துவத்தில் மிகத்துல்லியமாக மிகவும் கூர்மையாக உணரப்படும் ஒன்றாகும்.

பரமஞானம் என்பது! இது இறைவனை அறியும் ஞானமாகும் இறை அறிவை விளங்கிக் கொள்வது. இது மெய்ஞ்ஞானம் என்றும் அழைக்கப்படுவது ஆகும். திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஒரே விநாடியில் "உள்ளுணர்வாக மெய்ஞ்ஞானம்" உண்டாயிற்று. மாணிக்கவாசக சுவாமிகளுக்கு குருதரிசனம் கிடைத்த உடனேயே "மெய்ஞ்ஞானம்" கிடைத்தது. இந்த மெய்ஞ்ஞானமானது அவருக்குக் கிடைக்க வேண்டிய தருணம் வரும் வரை, அனுபவம் வரும் வரை தனக்குள்ளேயே வளர்ந்து விட்ட இறையறிவாக மிளிர்ந்தது. இந்த இறையறிவே கூர்ந்த மெய்ஞ்ஞானமாகும். **இறைவன் ஈர்த்து இழுத்தவுடனேயே கூர்த்த மெய்ஞ்ஞானமும் அவர் உள்ளுணர்வில் பாய்ச்சப்பட்டுவிட்டது. "இப்படிப்பட்ட இறையறிவு" கூர்ந்த மெய்ஞானமாக அதாவது ஒளிபொருந்திய ஞானமாக உணரப்படும் வரை வெளிவராததாகும்.** அப்படித்தான் வெளிவராத இறையறிவு மாணிக்கவாசகருக்குள்ளே இருந்தது. இப்படியான கூர்ந்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வாருடைய தமது கருத்துக்குள்ளே! நுணுக்கரிய நுண்ணுணர்வாக இறைவனை நுணுகி நுணுகி அறியக்கூடியவனாக இறைவன் நிற்பான். இதை நன்கு அனுபவித்து உணர்ந்த மாணிக்கவாசகப் பெரும்தகைக்குள் பழுத்த அந்த இறைஞானம், இறையறிவு அவரை ஆட்கொண்டது. ஆகவே "கூர்ந்த மெய்ஞ்ஞானம்" என்னும் வடிவமாக அவரை அது மாற்றிவிடுகின்றது. கூர்ந்த மெய்ஞ்ஞானத்தைக் கொண்டு உணர்பவராகி விடுகிறார் சுவாமிகள். கூர்ந்த மெஞ்ஞானம், இறை அறிவால் அவருக்குள்ளேயே ஒளியாக மிளிர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 76 - நோக்கரிய நோக்கே நுணுக்அரிய நுண்ணுணர்வே

நோக்கரிய நோக்கே - கண்ணாலும் கருத்தினாலும் பார்க இயலாதவன்

நுணுக்கரிய - நுணுகுவதற்கும் எட்டாதவன்

நுண்ணுணர்வு - துல்லியமான உணர்வும் உடையவன்.

இறைவன் நோக்குவதற்கு அரிதானவன், நுணுகி உணர்தற்கும் அரிதானவரேயாம். கூரிய "சிவஞானம் தான் கூர்ந்த மெஞ்ஞானம்" ஆகும். அந்த கூர்த்த மெஞ்ஞானத்தால் நோக்குவதற்கு அரிதான நோக்கிற்குரிய சிவபெருமானை நுணுக்கி ஆராய்ந்து பக்தியோடு பார்த்தால் மிக புல்லியமான நுண்ணுணர்வினால் அவரை உணர முடியும். உணர்ந்து உணர்ந்து அதாவது உணர்ந்து பார்த்து பக்தியைப் பெறவும் மனபக்குவத்தைப் பெறவும் முடியும். மனப்பக்குவமும் எமக்குக்கிடைக்கும் அதாவது தமது மனத்திலே தற்போதய சுயசிந்தனையின் முனைப்பால் அறிதற்கரிய நேயம் (நெருக்கம் கிட்டாத) கிட்டாத பரம் பொருளே தான் இறைவன். எவ்வளவு தான் சிவனுடன் பற்றுடைய கூர்மையான கூரிய மெய்ஞானமானாலும் அறிவு தெளிவடைந்தாலும் பரிபாகம் அடைந்தவர்க்கே பரிபாக நிலை எய்தியவர்களுக்கே தான் பரப்பிரம்மத்தை கிரகிக்கவும் முடியும் உணரவும் முடியும். ஆனால் ஊனக்கண் கொண்டு உணரமுடியாது. ஆனால் தெளிந்த மனக்கண்கொண்டு உன்னைக் காணலாம். அந்தக்கரணம் நான்கும் அல்லது மனக்கண் பண்படுத்தற்கு ஏற்ப நீ நன்கு என்னுள் ஒன்றுபட்டு உணரப்படுகின்றாய். எமக்கு அந்தக்கரணங்கள் நான்கு, அவையாவன: மனம், புத்தி, சித்தம், அகங்காரம். ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். இரும்பு முதலிய உலோகங்கள் மரம், கண்ணாடி போன்றவை தூய்மையாக நன்கு செதுக்கப்பட்டு நுண்ணிய நிலையிலே வந்தவுடன் தான் அவைகளின் மீது முகத்தின் பிம்பத்தை நாம் பார்க்க முடியும் அதே போன்று மனத்திலிருந்து மாசு நீக்கி மனம் தூய்மையாகப் பண்படுத்தப்படும் போது மாசு நீங்கியதற்கு ஏற்ப மனதுக்குள் ஈசனது சான்னித்தியம் புலப்படும். ஆனாலும் எவ்வளவு தான் நுணுகி உணர்வதற்கும் ஆராய்வதற்கும் எட்டாததும் அரிதாகிய நுண்ணிய உணர்வுப் பொருளே இறைவன். இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதிற்கும் செயலிற்கும் எட்டாதவன். நோக்குதற்கும் அரிதானவன் நுணுகுவதற்கும் அரிதானவன், நோக்கரிய நோக்கோடு நுணுகிப்பார்த்தாலும் நுணுக்கரிதாக நுணுகி நுணுகிப் பார்த்தாலும் ஆராய்வதற்கும் முடியாத மிகமிக நுண்ணியவுணர்வுடையவன் தான் இறைவன். துல்லியமான உணர்வுடையவர்களுக்கும் அவன் எட்டாதவன்.

**கண்ணால் பார்ப்பதை மட்டுமல்ல மனதளவில் உள்நின்று அகமனத்தால் சிந்திப்பதையும் "நோக்கரியது நோக்கே" என்று கொள்ளவேண்டும். ஆகவே நோக்கரிய நோக்கு என்பது கண்வழி கிடைக்கும் ஆராய்சிக்கும் அப்பாற்பட்டது. கண்வழிப்பட்ட** ஆராய்சிக்கும் அப்பாற்பட்டு நிற்கும் அறிவானது அனுபவப்பட்ட பட்டறிவு ஆகும். இறை அனுபவம் என்பதும், இறைஞானம் என்பதும் மிக மிக நுண்ணியதாகையால் நுணுக்கரிய நுண்ணுணர்வே என்கிறார். ஒருவரின் கருத்துக்குட்படுத்தி, கருத்தளவிலும் அறிவோடும் ருசித்துப்பார்த்தும் முடிவுகாண முடியாத உணர்வே நுண்ணுணர்வு. அப்படிப்பட்ட நுண்ணுணர்வே இறை உணர்வு. ஆகவே 'நுணுக்கரிய நுண்ணுர்வே என்றார். இதுவே நுணுகிய இறை உணர்வு ஆகும். ஆகவே "நுணுக்கரிய நுண்ணுணர்வே" என்றார். **திருவாசகத்தில்! சிவபுராணத்திலே இந்த வரிகளைப் படிக்கும் அன்புக்குரியவர்களே! இவற்றையெல்லாம் நுண்ணுணர்வோடு படித்து இந்த விஞ்ஞானியின் இந்த மெய்ஞ்ஞானியின் இந்த மிகைஞானியின் உளவியல் உணர்வையும் உளவியல் ஞானத்தையும், உளவியல் அநுபூதியையும் உணர்ந்து பாருங்கள். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து என்ற உணர்விற்கு ஆளாகுவீர்கள்.** எம் மெய்ஞானி மிகையான மெய்ஞானத்தாலேயே இவற்றைஎல்லாம் எமக்குப் பாடித்தந்தருளினார் என்பதை சிறிதளவிலாவது நாம் உணர்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 77 - போக்கும் வரவும் புணர்வும் இல்லாப் புண்ணியனே

போக்கு - போக்கு இல்லாதவன்
வரவு - வரவு இல்லாதவன்
புணர்வும் - யாரோடும் அணைந்திருத்தல்
இல்லாதவன் - எந்த நிலையும் இல்லாதவன்
புண்ணியன் - கலப்பில்லாத புண்ணியன்

போக்குவரவில்லாத பூரணன் - இறைவன், புண்ணியன் - சுத்தமான கலப்பில்லாத சிவபெருமான். பூரணமாய் எங்கும் நிறைந்திருக்கும் புண்ணியன் இறப்பும், பிறப்பும் பொருந்தி வாழ்த்தலும் இல்லாதவனும் ஒன்றோடும் கலப்பில்லாதவனுமான புண்ணியனாய் தூயவனாய். இறப்பிலும் கலக்காது, பிறப்பிலும் கலக்காது, புணர்விலும் கலக்காது தூயவனான பூரணன். என்பதை யாவருக்கும் உணர்த்துகின்றார். பூரணமாகிய நீ எங்குமிருப்பதால் இறப்பு, பிறப்பு, வாழ்தல், என்ற நடைமுறைகளில்லாமல் தூய பரம்பொருளாய் இருப்பதனால் நீ பிறபொருளுடன் சேர்வதில்லை, கலப்பதில்லை. வேறு ஒரு பொருள்களின் கலப்புமில்லாததால் நீ புனிதன், பூரணன், புண்ணியன் என்றும் என்றென்றுமே குறைவிலாத நிறைவாய் இருப்பதால் நீ எந்த நாளுமே புனிதன்தான். ஆகவே நீ எந்நாளும் புனிதன், எந்நாளும் பூரணன் சுத்த சிவன் இறப்போடு பிறப்பிலான் (தே.நாவு 74.3) அடியார் வினை போக்கவல்ல புரிசடைப் புண்ணியன் (தே.திருநாவு 180.7) என்றெல்லாம் திருமுறைகளும் எடுத்துக் காட்டியுள்ளன. எங்கும் வியாபமான இறைவனை என்ன என்று எடுத்துக் கூறுவது? கூறவேமுடியாது.

இமைப்பொழுதும் கூட என்நெஞ்சை விட்டு நீங்காதவன் என்று கூறுகிறார் மாணிக்கவாசக சுவாமிகள். இதையே டாக்டர் ஜி.யு.போப் அவர்கள் எழுதித்தன் நாட்டுக்கு அனுப்பிய போது இந்தத் திருவாசகவரிகள் தன்னைக் கண்ணீர் சிந்தவைத்தது என்கிறார். இப்படி ஒருவரி அதாவது "இமைபொழுதும் எந்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்ற வரியையும் பொருளையும் எழுதி தன் நாட்டுக்கனுப்பும் போது கண்ணீர் சிந்தி கண்ணீரையும் சேர்த்து அடைத்து அனுப்புகிறேன் என்று கூறி அனுப்பினாராம். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப்பெயர்ப்பளரான ஆங்கிலேய "போப்" ஐயா அவர்கள். இந்த ஒரு வசனத்திற்கே உருகி அழுதிருக்கின்றார்.

"இமைப்பொழுதும் தன் நெஞ்சை விட்டு நீங்காதவனாகையால்" அவன் தன்னை விட்டு நீங்கிப் போகும் அளவிற்கு போக்கும், வரவும் புணர்வுமில்லாத புண்ணியன்! அதாவது போகின்ற வேலை, வருகின்ற வேலை, நீங்காது நிற்கின்ற வேலை என்று ஒன்றில்லாமல் நின்றருள் புரியும் நிலையிலேயே இறைவனுடைய பிணைப்புடன் தான் இணைந்துள்ளதை மிகத்துல்லியமாக அவர் கூறுகின்றார். கூறிவைத்துள்ளார் என்பதை நாமும் எம்மனதினுள் உறைப்போடு சிந்திக்க வேண்டும். இறைவன் போக்கும் வரவும் புணர்வுமில்லாத புண்ணியன் தனித்துவமானவன் என்பதே இங்கே தெளிவாகின்றது.

**78 - காக்கும் எம்காவலனே காண்பரிய பேர் ஒளியே**

| | |
|---|---|
| காக்கும் | - ஒவ்வொரு உயிரையும் காப்பவன் |
| எம்காவலன் | - எமக்குக் காவலாய் இருப்பவன் |
| காண்பரிய | - எல்லைக் காணமுடியாதவன் |
| பேர் ஒளி | - நிறை ஞானச்சுடர் |

நீ எந்நாளும் ஒரே நிலையாய் இருந்து என்னைக் காக்கின்ற வேந்தன், வெளிப்பார்வையாக உன்னைக் காண முடியாத பேரொளி (ஞானச்சுடர் நீ) கண்களால் கண்டாற்கரிய பேரொளியை உடைய வடிவினன் எத்தனை பிறவி எடுத்தேனோ? அத்தனை பிறவியிலும் நீ என்னைக் காப்பாற்றியுள்ளாய் ஆனால் அத்தனை பிறவியிலும் நான் என்னை உணரவில்லை. உன்னையும் உணரவில்லை. இத்தனை பிறவியிலும் என்னை காத்தாய் என்காவலனாக வேந்தனாக இருந்து ஐயா நீ காப்பாற்றி வந்துள்ளாய் என்பதை இப்போது உணர்கின்றேன். இங்கே மாணிக்கவாசகர் குறிப்பிடுவது 14 பிறவியை அவ்வளவுக்கவ்வளவு மனம் நொந்து இப் பிறப்புக்களை எண்ணிக் குறிப்பிட்டுள்ளார். என்பதை நாம் உணர வேண்டும். இத்தனை பிறவியிலும் தானாகவே தன்னைக் காக்கும் எம்காவலன் என்று வியப்பாகக் கூறியதோடு அவன் காவலனே என்பதையும் இந்த சிவபுராணத்தின் வாசகங்களூடாக நாம் சற்று சிறப்பாகக் சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றாகச் சிந்தித்து உணருவோமாக. இறைவன் சுடரொளியாயும் நுண்ணுணர்வாயும் இருப்பவன். அப்படி இருந்தாலும் இந்த நிலவுலகிலே மக்களுக்கும் ஒவ்வொரு உயிரின் அறிவு நிலைக்கேற்பவும் தனது அருளினை அருளுகிறான். மாற்றமாம் வையகத்தே வந்தருள்வாய். அவரவர் உயிரறிவுக்கு ஏற்ற மாற்றங்களோடு மாற்றமாம் வையகத்தே வந்துணர்வார் தம்கருத்தின் அவரவர் உணர்வுக்கு ஏற்பவும் அறிவுக் கேற்பவும் கருத்துக் கேற்பவும் வந்து அருள்வார். காக்கும் எம் காவலனாக இருந்து அருளுவான். இறைவன். எப்படி எனின் புல்லாகிப், பூடாகி, புழுவாய், மரமாகி, பல்விருகமாகி, பறவையாய், பாம்பாகிக், கல்லாய், மனிதராய், பேயாய்க், கணங்களாய், வல்லரசுராகி, முனிவராய், தேவராய், என்கின்ற பிறப்புக்கள் எல்லாவற்றிலும் அருள்பவரேயாகும். அவருடைய பேரொளியே எல்லாவற்றிற்கும் ஒளியுமாய் விளங்கும். என்பதை நன்கு தெளிந்து உணர்ந்து காக்கும் எம் காவலனைக் கணமும் பிரியாது நினைத்து நினைத்து அவனது பேரொளியின் துணையோடு வாழ்வோமாக. என்பதையே இங்கு கூறி! காக்கும் எம் காவலன் இல்லாமல் எதுவுமே நடக்காது என்பதை விளங்கவைத்துள்ளார்.

எமது உடம்பு உட்சுவாசம் நிற்சுவாசம் என்கின்ற (உள்சுவாசம் - உள்ளே இழுக்கும் மூச்சு) (நிற்சுவாசம் - வெளியே விடும் மூச்சு) மூச்சின் இயக்கத்திலிருந்துதான் இந்த உடம்பின் எல்லா இயக்கங்களையும் ஒருசட்டகப்படி நடைபெறச் செய்கின்றது. இது உடம்பினுள் உள்ள உணர்வின் (ஆன்மாவின்) ஆற்றலாகும். அந்த ஆற்றல் மிக்க தொழிலுக்குக் காவல் புரிவதும் அதனை வழிப்படுத்துவதும் ஞானச்சாரியானாகிய காவலனேயாம். ஆம் இறைவனேயாம்! ஆகவே நமக்குக் "காக்கும் காவலனாய்" இருப்பதும், படைத்தும், காத்தும், அழிக்கின்றதும் ஆதியான பரம்பொருளேயாம். பரம்பொருள் தோன்றாத் துணையாய் இருந்து உயிர்கள் மேலுள்ள கருணை காரணமாகவே இவற்றை எல்லாம் செய்கின்றான். "இறை சொரூபம்" கண்ணிற்கும் மனதிற்கும் அப்பாற்பட்டது. ஆகவே காண்பரிய பேரொளியே" என்று காணுவதற்கு அரியவனான பேரொளியை இறையருளை, காக்கும் காவலனின் ஆற்றலை எடுத்துக் கூறுகின்றார். இறையருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிட்டால் உலகில் எந்த இயக்கமில்லை. எம் உடம்பில் மூச்சுக்காற்றின் இயக்கமும் இல்லை. இது காக்கும் எம்காவலனாய் இருந்து எம் கண்முன் காணக்கிடைக்காத பேரொளியினுடைய வேலையாகும். காக்கும் எம்காவலன் பல உலகிற்கும் எல்லாம் காவலனேயாம்.

**79 - ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற**

ஆற்றின்ப வெள்ளம் - இன்பவெள்ளத்தையுடையவன்
அத்தாய் - அப்பனே
மிக்காய் நின்ற - எல்லாவற்றிக்கும் மிகையாய்
நின்ற - மேலாய் நின்ற

ஆற்றின்ப வெள்ளம் - நன்நெறி தழுவி நிற்கின்ற இன்பம்தான் இறைவனுடைய அருள் ஆகும் அது நன்னெறியினின்றும் உதிக்கின்ற பேரின்பப் பெருக்கு. அதுதான் ஆற்றின்ப வெள்ளமாம். ஒரு நெறியின்றும் வருகின்ற இன்பம், ஆறுபோல் பெருகிவரும் இன்பமாகும். இந்த இன்பப் பெருக்கத்தை தருபவன் இறைவன் இந்த கருணையாலேயே அவன் அப்பன். அப்பன் என்பதும் கருணையேயாம். எல்லாவற்றிற்கும் அவன் மேலானவனுமாம். என்று விளங்குகின்றான். நன்னெறியின் நின்று உதிக்கின்ற பேரின்பப் பெருக்கே நீ! என்று இறைவனின் அருள் அன்புப் பெருக்கை அருப்பிரவாகத்தைச் சுட்டுகின்றார் மாணிக்கவாசகசுவாமிகள்.

ஆற்றின்பம் - ஆறு இன்பம், ஒருதனி நெறியினின்றும் வருகிற இன்பம், பின்பு ஒரு நெறியை ஒரு கொள்கையைத் தழுவி நிற்கின்ற இன்பம் அது. அது ஆறு போலப் பெருகும் அன்பாகும். இன்பமாகிய வெள்ளமே நன்னெறி வழியில் உதிக்கின்ற பேரின்பப் பெருக்கு ஆகவே நீ (ஆற்றின்ப வெள்ளம்) எனக்குத் தந்தையாகவும் எங்கும் விரிந்து பரந்தவனும் அதற்கு மிகையாகவும் மேலாகவும் உள்ளவனும் அதற்கு மேம்பட்டும் இருக்கின்றாய். அத்தா – தந்தையே! மிக்காய் அதற்கு மேலானவனே என்று ஒவ்வொரு சீவனுக்கும் உலகத்திற்கும் அவனே முதல்வன். இறைவன். அப்படி அவன் முதற்காரணமும் மூலகாரணமுமாய் இருப்பதால் அவன் அத்தன்! அல்லது அப்பன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
... பிரதேச சபை

என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்றான். மாணிக்கவாசக சுவாமிகள் காணுகின்ற கூறுகின்ற கூற்றுப்படி அத்தன் - தந்தை, தந்தையை விட மேலானவனாகவும் அவருக்கு இறைவன் தெரிகின்றான். அவர் அநுபூதியிலே உள்ளவராதலால் இறைவன் அவருக்கு மிக்காய்த் தெரிகின்றான் தந்தையாக மட்டுமல்ல தந்தையை விட மேலானவனாகவும் அவருக்கு உலகம் எங்கும் இறைவனே தெரிகின்றான். அநுபூதிச் செல்வனான மாணிக்கவாசகருக்கு என்பதை இங்கே நாம் கண்கூடாகக் காண முடிகின்றது. அநுபூதியில் அவர் இறைவனோடு இணைந்து காணும் காட்சியே அத்தாய், மிக்காய் எனப்பட்டது ஆகும் அத்தாயும் மிக்காயும் என்றது ஆன்றின்ப வெள்ளமாகவும் அதாவது பேரின்பப் பெருக்கவே தெரிகின்றது என்பதை நாம் இந்த வரிகளைப் படித்து படித்து உணரமுடியும்.

ஆம் ''இறை இன்பம்'' ஆற்றின்ப வெள்ளமாகவே அவருக்குக் காட்சி தந்தது. ஏனெனில் தனியாய் பெருக்கெடுக்கின்ற ஆற்று வெள்ளம் அழிவையும் செய்யும், நன்மையும் செய்யும். ஆகையால் அது இறை **இன்பம் அளவு அற்ற வெள்ளம்** போலுள்ள இன்ப வெள்ளம் என்றார். இறைவனுடைய ஆற்று இன்பத்தை இறை அனுபவத்தை : ஆற்றின் கரையுடன் கூடிய வெள்ளம் என்பதோடு! ஆற்றின்ப வெள்ளமே என்கிறார். **இறைவனுக்கும் தனக்குமுள்ள அண்மையும், எளிமையும், உரிமையும் இறைவனுடன் குழைத்துப் பார்த்து குழைத்து எடுத்துக் கூறுகின்றார். இது இறைவனுக்கும் தனக்கும் உள்ள நெருக்கம் ஆம்! மிக! நெருங்கிய நெருக்கம் ஆகையால் 'அத்தா' என்கிறார். அதாவது 'தந்தையே' என்கிறார். ஆனால் இறைவன் பெரியவன்! "தோன்றாச் சுடரொளி" ஆகையால் தனக்கு நெருங்கிய அண்மையும் உரிமையும் கூறினாலும் பின்பு "மிக்காய்" என்கிறார். பின்பு கூறமுடியாத அளவு பெரியவனாய் நின்ற அத்தா! என்கிறார். மிக்காய்! நின்ற என்பதையும் இறைவன் ஈறிலாதவன் என்பதையும் திருவாசகத்திலே பல இடங்களிலே எடுத்துக்காட்டிக் கூறியுள்ளார். இங்கே ஆற்றின்ப வெள்ளம் என்றார்.**

**ஈறிலாத நீ எளியை ஆகிவந்து**
**ஒளி செய் மானிடம் ஆகநோக்கியும்**

**(திருவாசகம் - 5 - 91)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈறிலாத இறைவன் எளிய உருவாகிய இம் மானிட உருவமாகி வந்து மண்ணில் காலடி வைத்தான். இது தனக்காகவே என்று கூறினார். மிகவும் கவலை கொள்ளும் நிலையிலேயே இப்படிக் கூறினார். இறைவன் இன்பம் இன்பமாகவே அமையும் ஈடில்லாத இன்பமாகும். எனினும் இந்த இன்பம் அவர் நேரிலேயே அனுபவித்த இன்பமாகும் அவர் அனுபவித்து திளைத்த இன்பமாகும் என்பதைத் திருவாசகம் உள்ளவரை உலகோர் உணரவேண்டும்.

**80 - தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்**

| | |
|---|---|
| தோற்றுச்சுடர் ஒளி | - நிலையான சுடர்ஒளி |
| சொல்லாத | - கூறமுடியாத உணர்வாய் |
| நுண்ணுணர்வாய் | - துல்லியமான உணர்வாய் |

தோற்றச்சுடரொளி – அது பரமார்த்த ஜோதி, பரமார்த்த ஜோதி என்பது தன்னைத் தானே விளக்கிக் கொண்டிருப்பது. சொல்லாத - சொல்லமுடியாத நுண்ணுணர்வாய் - நுணுகி உணர்பவர்களின் உணர்வாய் இருப்பது. உணர்வார். உணர்வில் தன்னைத் தானே விளக்கிக் கொண்டிருப்பது. அது பரமார்த்த ஜோதி அது எப்படிப்பட்டதென்றால் மாறாத நிலை பெற்ற அழகு மிக்கதாகச் சுடரும் மாறாத ஒளியுமாய் இருப்பது. சொல்லுவதற்கும், வாயால் கூறுவதற்கும், இயலாத நுண்ணிய ஒளி உணர்வாய் நிற்பவனே. இறைவனின் நுண்ணிய நிலையானது. துல்லியமாக அறிவதற்கும் அரியதாகும். சுயமாகவே ஜோதிப் பிளம்பாயும் சொல்லிற்கு எட்டாத பேருணர்வுப் பரம்பொருளாயும் உள்ளது. நுண்ணுணர்வு - இது சூக்குமத்திலும் அதி சூக்குமமானது. மறைப் பெருளாய் மறைந்திருப்பது. நுண்ணுணர்வு என்பது சூக்குமத்திலும் சூக்குமம் என்பதை நாம் சற்று உள்ளாடி, உள்உணர்ந்து சிந்திக்க வேண்டும். அதி உன்னத பொருளாய் பெரிய பொருளாய், சுயமாகவே ஜோதியாய் மனதிற்கு எட்டாததாய் ஒளிர்வதும் ஒளி வீசுவதும் பிரமம். நுண்ணுணர்வு – அது சூக்குமத்தில் சூக்குமம். சூக்குமத்திலும் - அதி சூக்குமம் அதி தூரத்திலும் - அதி தூரமாக உள்ளது. எமது உடலின் உள்ளேயும் இருக்கின்றது. உள்ளத்தினுள்ளேயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. அப்படிப்பட்ட சூக்குமப் பொருளை இம்மனமானது உணரும். ஆனால் உணராது இருக்கின்றது. இவ்வுலகில் மனித வாழ்விலேயே மனமானது உணராததாக இருக்கின்றது. ஆனால் இவ்வுலகில் வாழும் பொழுது தமது வாழ்விலேயே சான்றோர்கள் காண்கிறார்கள். அது உன்னத களங்கமற்ற பக்தர்கள் அநுபூதியில் அறிகின்றனர். சுடரொளித் தோற்றத்தினுடைய விளங்குகின்ற பேரொளி உள்ளார்ந்து ஆராயும் நுண்ணுணர்வாயும் சொல்ல முடியாத, சொல்லுதற்கும் இயலாத நுண்ணுணர்வாயும் விளங்குபவன் இறைவன். இவற்றை எல்லாம் அநுபூதியில் கண்டே எமக்குப் பாடித் தந்துள்ளார் இந்த அநுபூதிச் செல்வர் என்பது மட்டும் தெற்றெனத் தெரிகின்றது.

நேரத்திற்கு நேரம் மாறி மாறி ஆச்சரியத்தோடு காட்சி தருவது இப்பிரபஞ்சம். இந்த மாறுபடுகின்ற காட்சிகளுக்கிடையே சுடரொளியாய் காட்சி தருபவன் "சுடரொளியாய்" நிற்பவன் இறைவன். இறைவனைச் சொல்லினால் வடித்து இத்தகையவன் இந்நிறத்தவன் இத்தன்மையான் என்று சொல்லமுடியாது. இதனாலேயே "சொல்லாத நுண் உணர்வு என்றார். வார்த்தையால் கூற முடியாத மிகமிக நுணுக்கமான நுண்ணுணர்வே இறைவன் என்பதை நன்றாகத் தெளிந்தும் உணர்ந்தும் கூறி வைத்துள்ளார் என்பதை நாம் இந்த சிவபுராணத்தின் பொருள் உணரும் போது உணரவேண்டும். இதுவே சிவபுராணம் மனனம் செய்யும் நமக்கு அதை உணர்ந்து கொண்டால் நல்லது நடக்கும். அத்தோடு இறையறிவும் பிறக்கும், இன்னல்களும் தீரும், என்பதற்கானதொரு பெரும் கொடையான வழி.இப்படி இது நடக்கும் என்பதை நாம் நற்குணத்தோடு உணரவேண்டும்.

**81 - மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்**

மாற்றமாம் - மாறுபட்டு வருகின்ற
வையகம் - உலகம்
வெவ்வேறே - வெஃவேறு நிலையில் இருப்தாகவும்
வந்தறிவாம் - வந்தறியப்படும்

உலகம் தொடர்ந்தும் மாறுபாடு அடைவதாகும். இதனை நாம் ஒவ்வொரு வேளையிலும் நாம் கண்முன்னே காண்கிறோம் அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபாடு அடைகின்ற உலகத்திலே அந்தந்த மாறுபாடுகளுக்கமைய இறைவனும் வெவ்வேறு வடிவங்களில் அறிவாக விளங்குகின்றான் என்பதையும் ஒவ்வொரு காட்சியாக காண்கிறோம். இடையறாது மாறுபாடடைவது இவ்வுலகம். ஆமாம் நாம் வாழும் இந்நிலவுலகம், ஒவ்வொரு வேளையும் ஒவ்வொரு விதமாக மாறுபாடு அடைகின்றது என்பதை ஒளி, இருள், தென்றல், காற்று, புயல், இடி மின்னல், மழை இப்படியான இயற்கையின் மாறுபாடான வடிவங்களில் காண்கின்றோம். இம் மாறுபாடுகளிலும் சகல மாறுபாடுகளிலும் இறைவனின் அருள்மட்டும் தெளிவாகச் செயல்படுகின்றது என்பதை தெளிவாக உணர்வோமாக. நித்தமும் எல்லா நிலையிலும் இறைவனின் அருள் தெளிந்த பொருளாய் வந்து விளங்குவது நம் கண்முன்னே நன்கு புலப்படுகின்றது. கண்முன்னே ஒவ்வொரு விநாடியும் காண்கின்றோம் இத்தனை விதமான பற்பல தோற்றங்களும் அண்டசராசரங்களில் எம்கண்முன்னே தோன்றும் தோற்றங்களாகும். இப் பிரபஞ்சத்தில் விளங்கும் அத்தனை செயல்களுக்கும் மாறுபடாதவனும் ஏகமாய் உள்ளவனும் இறைவன் ஒருவனே. ஈசன் இத்தனை வித வடிவங்கள் எடுத்து இத்தனைவித அறிவாக விளையாடுகிறான். எல்லோருக்கும் அவ்வவ் வேளையிலும் அந்த அந்தநிலையில் நின்றும் உலகிற்கும் அருளுகின்றான் என்பது மட்டும் தெளிவாகப் புலனாகின்றது.

நிமிடத்திற்கு நிமிடம் மாறிக் கொண்டிருப்பது இந்தப் பிரபஞ்சம். அணுவிற்குக் கூட மாறும் தன்மையுண்டு. உயிரணுக்களும் நொடிதோறும் மாறும் என்பது உண்மையாகும். இத்தனை மாறுபாடுகளுக்கு இடையிலும், மாறுபடாதது மட்டும் ஒன்றுண்டு அது என்ன? அதுவே இறைவன். இந்த மாறுபாடில்லாத இறைவனை சுவாமிகள் "ஆன்ம ஞானத்தால்" கண்டுகொண்டார். நாம் நம் அறிவால் கண்டு கொள்ளும் விஞ்ஞான பூர்வமானவை கூட ஒருநாள் மாறக்கூடும். நிச்சயம், மாறும். நமது தெளிவாலும், உணர்வாலும் காணப்படும் தெளிவுக்கும் உணர்விற்கும் காணப்படாத இறைவன் என்றுமே எப்பொழுதுமே மாறாதவன் என்று உறுதியாக உறுதிகூறுகிறார். **இந்த உறுதியும் ஆத்ம ஞானமும் அவருக்குப் பரம்பொருளாகிய பரம குருவாலேயே கிடைத்தது. நாம் "வார்த்தையாலும் எழுத்தாலும் எடுத்துக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூறமுடியாத நுண் உணர்வாலேயே அவருக்கு இந்த நன்மையானது கிடைத்தது எனலாம். அத்தகைய மிக மிக நுண்ணிய நுண்ணுணர்வு மாணிக்கவாசக சுவாமிகளுடைய நுண்ணுணர்வாகும் என்பதும் உண்மையான ஒன்றேயாம். உருக்கமானதொரு உணர்வேயாகும். இதை உணர்ந்து உணர்ந்து பார்ப்பவர்கட்கு இந்நிலையானது நன்கு** விளங்கும்.

**82 - தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்**

| | |
|---|---|
| தேற்றனே | - தெளிவாய் இருப்பவனே |
| தேற்றத்தெளிவே | - தெளிவினிற்தெளிவே |
| என்சிந்தையுள் | - எந்நேரமும் என் மனத்தினுள் இருப்பவனே |

தேற்றன் - தெளிவானவன், தேற்றத்தெளிவு – நிறைந்த தெளிவு என் சிந்தனையுள்:- என் சிந்தனையுள் என்று எண்ணும் பொழுது அதாவது சிந்திக்கின்ற சிந்தனையுள் தெளிவான தெளிவானது! அதாவது நிறைந்த தெளிவான சிந்தனையுள் நிற்பவன் என்பது பொருளாம். தெளிவாக நிற்பவன் அவனே! ஆகவே அவன் தெளிவானவன். உறக்கத்தில் - தன்னிலை மறந்த உறக்கத்தில் ஒருவன் ஜடவஸ்து நிலையில் இருக்கின்றான். அப்போது அவனுக்குதன்னையும் விளங்காது உலகத்தையும் விளங்காது எதையுமே விளங்காது அப்போதும் அவனை இறைவனே வழி நடத்துவான். எமக்கு உறக்கத்திலும் விழிப்பிலும் அவனே தான் அருள்பவன். இதில் தூங்குகின்றவனுக்கும் அதாவது தற்போது தூக்கத்திலுள்ளவனுக்கும் தூக்க நிலையில்லாமல் தெளிவுடன் இருப்பவனுக்கும் உள்ள வித்தியாசம் வெளிப்படையாகத் தெரியும் அது எப்படிப்பட்டதென்பதுவும் விளங்கும். எனவே உலகிலே ஜீவனுடன் வாழுகின்ற ஜீவர்கள் தெளிவுறுவதற்குப் பல படித்தரளங்கள் இருக்கின்றன. இவை ஏழு படித்தரளங்கள் ஏழு பிறவிகள் என வகுக்கப்பட்டுள்ளன. இந்த ஏழு படித்தரளங்களிலும் படிப்படியாக முன்னேறும் போது ஒரு ஜீவனுக்கு சிந்தையில்த் தெளிவு பிறக்கின்றது. இந்த தெளிவில் ஏழாவது படித்தரலம் ஞானபூமி "சுத்தசிவம்", எனவும் "சுத்தசைதன்யம்" எனவும் கூறப்படுகின்றது. அதாவது சாதனத்தின் மூலம் மனதில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசு நீங்கி தெளிவு பெற்று உள்உணர்வின் அமுதினை உணர்கின்ற நிலை உண்டாகும்.

எனவே தெளிவானவன் இறைவன்! பூரண தெளிவுள்ள இறைவன்! நிறைந்த நேரிய தெளிவான தெளிவினை என் சிந்தனையுள் எனக்குத் தந்தான், எப்படிப்பட்டதெனில் நிறைந்த தெளிவான தெளிவை என் சிந்தையுள் தந்தான் என்றே இங்கே கூறி நிற்கின்றார் சுவாமிகள். மனமாசு அற்று தெளிந்தார்க்கு உயிருக்குயிராய் நின்று உள்ளே நுகரப்படும் தெளிவும் சிந்தையுள் விளங்குவதும் சுத்த சிவம், அதாவது சாதனத்தின் மூலம் மனதின் உள்ள மாசு நீங்கி மனித மனத்திலே தெளிவு பிறக்கின்றது. தெளிவே சிந்தனையாகின்றது. சிந்தை தெளிந்தபின் உள்உணர்வு தெளிவாகின்றது. ஆகையால்தான் தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள் என்றார். தெளிந்த மனத்திற்கு இறைவனுடைய தரிசனமும் இறைவனுடைய உணர்வும் தெளிவாவே இருக்கும்.

மாணிக்கவாசகப் பெருமானுடைய சிந்தை மிகவும் தெளிந்தது. தெளிவானதொரு சிந்தை சலனமில்லாதது! ஆனால் சித்தனுடைய சிந்தையானது வேறொரு சிந்தனையுமில்லாமல் இருப்பது ஆகும். ஆகவே அவரது ஆழ்மனமும், அடிமனமும் இறைவனுடைய தெளிவால் நன்றாகவே நிரப்பப்பட்டிருந்தது. இறைவன் சிந்தனை ஊற்றாக தெளிந்த ஊற்றாக அவர் மனதுக்குள்ளே இருந்தவன். எப்படி எனின் நிலத்தைத் தோண்டும் போது அடி ஊற்றிலிருந்து தண்ணீர் வருதல் போல இறைவன் அவருடைய மனத்துள்ளேயே அமுதமாக அடியில் உள்ளான். “உண்ணாரமுதமாக” அவருக்கு உள்நின்று அவருடைய சிந்தனையையும் செம்மையாக்கியதும் தெளிய வைத்ததும் பாடவைத்ததும் இறைவனேயாம். இது இறைவனுக்கும் அவருக்கும் உள்ள நெருக்கமான தொடர்பின் தெளிவே எனலாம். இவை எமக்கு தெட்டத் தெளிய விளங்காததாகும். எப்படி விளங்கிக் கொள்ளமுடியும் எப்படி விளங்க வைக்க முடியும் என்பதே இன்னும் பல அறிஞர்களின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 83 - ஊற்று ஆன உண் ஆர் அமுதே உடையானே

| | |
|---|---|
| ஊற்றுஆன | - சுரங்கின்ற ஊற்றானது |
| உண்ஆர் அமுது | - உண்ணுதற்கரிய அமுதம் |
| உடையானே | - எவ்வுயிர்க்கும் உரியவன். |
| ஊற்று ஆன | - சுனையாகச் சுரக்கின்ற உண் ஆர் அமுது |

உண்ணுதற்கான அரிய அமிர்தமாக உடையான் - பிரபஞ்சம் அனைத்திற்கும் உரிய உயிர்கள் ஒவ்வொன்றிலும் எப்பொருளிலும் இருப்பவன். எனவே எப்பொருளிலும் எவ் உயிரிலும் உடையவன். அவனே உண்ணுதற்கரியதான அமிர்தமாக உடையவன் என உள்ளத்தினுள் ஊற்றெடுத்துப் பெருகி உண்பதற்கான அரிய அமிர்தனாய் என் உடமையாய் இருப்பவன் நீயே (என்னை உடையவனாய் இருப்பவன் நீயே) தெளிவான இறைவனை சுவாமிகள் தனக்கிருந்த நிறைந்த தெளிவுடன் உண்ணார் அரிய அமுதம் என கூறிவைத்துள்ளார். (அமுதத்தை உண்பதற்கு யார் பின்னிப்பர்) ஒவ்வொரு சீவனும் இவ்வுலகில் உணர்வதற்குரிய படித்தரளங்களே. சைவசமயத்தில் உண்டு: இறுதியாக "ஞானபூமி" இவற்றில் அமிர்த சொரூபமாய் உணரப்படும் நிலை ஏற்படும்! எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உரிய தலைவனே என்று உணர்ந்து உள்ளத்தால் உணரப்படும் நிலையும் ஏற்படும்.! என்னை நீ ஆளாக்க உடையானே என்று இங்கே கூறுகின்றார். ஊற்றாகவும் உண்ணார் அமுதமாகவும் விளங்குபவன் இறைவனேயாம். எமக்கு இறைவனுடைய அருள் ஊற்றாகவும் உண்ணுதற்கரிய அமுதமாகவும் விளங்குகின்றது வருகின்றது ஆகவே இவ்வருளை உணரவேண்டும். ஆம் இறைவனுடைய திருவருளை மானிடராகப் பிறந்தநாம் உண்ணாரமுதமாக உணரவேண்டும்.

தெளிந்த சிந்தையுள் அமுதாக உடையவன். அமுதமாக உறைபவன் இறைவன். நிலத்தை தோன்டியவன் தோண்டும் தோறும் தண்ணீர் ஊற்றுப்போல எழுவதுபோல அவரின் அடி ஆழ்மனத்தில் "ஊற்றான உண்ணார் அமுதமாகவும்" அவரின் "உடமையாகவும்" இருக்கின்றான். இறைவனும் இறைஇன்பம் என்பதுவும் கூடவே அவருடைய சிறந்த சிந்தையின் துணிவு ஆகும். அவரின் சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றிலிருந்தும் அடிமனத்தின் ஆழத்திலிருந்தும் சிவன் வெளிப்படுகிறான். அவருக்கு இறைவன் மனதில் ஊற்றாக இருந்தே திருவாசகம் திருக்கோவையாரையும் அருளி வைத்தான் என்பதில் மிகை ஒன்றுமில்லை. என்பதனை அருள் உள்ளத்தோடு நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

## 84 - வேற்றுவிகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப

வேற்று விகார - மாறுபாடு அடைகின்ற
விடக்குடம்பு - ஊன் உடம்பு
உள்கிடப்ப - ஊண் உடம்புக்குள்ளே உயிர்இருக்க,

மானிடப்பிறவி என்னும் ஒரு பிறவிஎடுத்தால் அந்தப் பிறவியிலே பாலன், இளைஞன், கிழவன் என்கின்ற வடிவங்களிலேயே எனது உடம்பு வந்து அந்த வடிவங்களினாலேயே விகாரப்பட்டு வருகின்றது. இப்படி விகாரப்பட்டு வருவதற்கு அந்த உடம்பினுள் ஒரு உயிர் குடியிருக்க வேண்டும். இந்த வேற்று, வேற்று வடிவங்களைக் கொண்ட தசையுடன் கூடிய உடம்பினுள் உள்ளே நான் இருக்கின்றேனே. ஊன் உடம்பானது ஒவ்வொரு வளர்ச்சிக்கும் ஒவ்வொரு விதமாக மாறுதல் அடைவது உலகியலில் கண்கூடாக யாவரும் காண்பது ஆகும்.

இவை நரைதிரை பிணி, மூப்பு, சாக்காடு என்பன ஆகும். நாம் அனைவரும் எம் கண்முன்னே காண்கின்றோம் ஏறத்தாழ தேகாத்ம புத்தியைத்தான் பாவிக்கின்றோம். அதாவது தேகாத்மபுத்தி என்பது உடலைத்தான் என்று எண்ணும் எண்ணம். நான் ஒருவன் தான் என்று உடலையே எண்ணுகின்றோம். எமது பகுத்தறிவதனால் இது எமக்குத் தெரியும். பகுத்தறிவை செயல்பட வைத்து பகுத்தறியும் போது சுயசிந்தனையாலும், பக்திச்சிந்தனையாலும், இறைச்சிந்தனையாலும் உணர்ந்து! நான் எனது உடல் என்று கருத்தில் கொண்டிருக்கும் சிந்தனையைத். தாண்டி நாம் சிந்தித்தோமானால்! ஆத்ம போதத்தை அதாவது ஜீவபோதத்தை உணரலாம் அப்போது ஜீவபோகத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் போய் விடும். போன பின்பு அவன் "சிவசொரூபமாகின்றான்" என்பதை உணர்வோமாக. ஜீவபோதம் என்பது ஆத்மாவால் அறிவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். சிவபோதம் என்பது இறைசிந்தனையை உணர்ந்து அதன்பின்பு உலகம் உயிர் உடல் எல்லாம் பொய் என்று உணர்வது எனவே இந்த உடம்பினுள் இருந்துகொண்டு உணரும் உணர்வெல்லாம் பொய் இந்த உடம்பு . உயிர் எல்லாம் பொய் என்று உணர்ந்து கொண்டால் சிவபோதமானது உயிரிற்குள் விளங்கும்.

மாறுதலடைகின்ற பல பருவங்களையுடடையது இந்த உடல் குழந்தை, பாலன், ஜவ்வனம், சிவனது முதுமை என்னும் வேற்று வேற்று விகாரமுடையதும், ஒரு சீவனது இவ்வுடம்பு இது மாறுபாடு அடைவது. இயற்கையாகவே இந்த உடம்பிற்கு உண்டு ஆகவே இனி இந்த உடம்புக்குள் இருக்கமாட்டேன் என்கிறார். அவர் எண்ணுகிறார் குருதரிசனம் நான் பெற்றுக் கொண்டேன் அத்தோடு இறைவனின் திருவடித் தீட்சை பெற்றும் தம்மை இறைவன் விட்டு நீங்கியதற்கும்,தாம் அடியார் கூட்டத்துடனும், பரமகுருவுடனும் பேரொளியில் கலக்காமல் இருந்ததற்கும் இந்த உடம்பே காரணம். என்றும் உடம்பை வெறுக்கிறார். இறைவனுடன் தான் இருந்த இன்பம் தம்மை விட்டு நீங்கியதற்கும் உடம்பே காரணம் என்று எண்ணுகிறார். ஞானிகள் இந்த உலகையும் உடம்பையும் வெறுத்தவர்களாகவே காணப்படுகின்றனர். அதேபோன்று அருணகிரி நாதர் இறந்து விட்டது இந்த உடம்பு என்று இந்த உடம்பை வெறுக்கிறார். "என்னை இழந்த நலம் சொல்லாய் சுரபூபதியே என்று உடம்பை வெறுக்கிறார். (கந்தர் அனுபூதி - 2) இதேபோன்றுதான் சுவாமிகளும் தன் உடம்பை வெறுக்கின்றார். ஏன்? இவ்வுலகில் இவ் உடம்பானது? பலமாறுதலடையும் அத்தோடு நிலையற்றதும் ஆகும். இவ்வுடம்பும் அது உயிர்போனபின்பும் பயனற்றதுமாகும். இவ்வுடம்பு பயனற்றசடம் யாவரும் இதை வெறுப்பது இயற்கையேயாம். என்பதை இங்கே தெளிவாகக் கூறி முடித்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 85 - ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்று என்று

ஆற்றேன் - இனி பொறுக்க மாட்டேன்
எம் ஐயா - எம் தந்தையே, எம் தலைவனே
அரன் - உயிர்க்கு காவலன்
ஓ என்று என்று- பலகால் ஓ என்று ஓலமிட்டு அழைத்து

அடியார்கள் இறைவனை அரன் என்றும்! ஐயனே என்றும்! உன்னைப் பாராட்டி உன்னை வாழ்த்தி வணங்கி வழுத்தி உன்மயமாகவேயானார்கள். உன்மயமாகவே ஆகின்றார்கள். இந்த மாறுபாடடைகின்ற பொய்யுடலை தவிர்த்து சிவசொரூபமானவர்கள் நிலை அவ்வாறானதே. ஆகவே நான் இந்த மானுடசரீரத்தில் இருக்க இனியும் சகியேன்? ஆற்றேன்? எம் ஐயா என்கிறார். அரனேயே ஓ என்கிறார். அலறி அழுகின்றார். தலைவனே எனக்கு இந்த மாறுபாடுஅடைகின்ற (பருவங்களால் மாற்றமடைகின்ற) இந்த உடல் வேண்டாம் என்கிறார். இது நரை திரை பிணி மூப்பு சாக்காடு என்று மாறுபாடு அடையும் உடம்பாகும். எனக்கு இந்த உடலால் பயனில்லை. இந்த உடம்பில் இருப்பதற்கு ஆற்றேன் என்று கூறி "அரனே ஓ" என்று அழுகிறார்.

ஆகையால் நானும் சிவசொருபத்திற்கு ஆளாக வேண்டும் அப்படி இல்லாவிட்டால் ஆற்றேன் இந்த வேற்றுவிகார உடம்பில் இருக்க யான் ஆற்றேன். சிவபெருமானே ஓ என்று யான் அலறி உன்னை அரனே என்று என்று போற்றிப் புகழ்ந்து இனிதாக வணங்கியும் இருக்கின்றேன் என்று கேட்கின்றார். மாறுபடுகின்ற ஊன் உடம்பினுள்ளே கிடக்கவும் அதனாலாகிய துன்பத்தினையும் பொறுக்கவும் மாட்டேன் எம்ஐயா – எம் தலைவனே ஓ என்று ஓலமிட்டழுதால் காப்பவன் அவனே, காத்து ஆட்கொள்பவனும் அவனே ஆகவே அவனிடமே தஞ்சம் புகவேண்டும் அவனே எல்லாம் அவனிடமே உணர்வுகளெல்லாம் செல்லவேண்டும் என்று ஓ என்று அலறுகிறார் மாணிக்கவாசகசுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகளுக்குக் குரு தரிசனம் எதிர்பாராத விதமாகக் கிடைத்தவுடன் குருதரிசனத்தின் பொருட்டு அதன் பேறினாலே அவருக்கு இந்தப் பிரபஞ்சத்தின் உணர்வும் தானாகவே முற்றாகவே இல்லாமல் போகின்றது. மனமானது பிரபஞ்சத்தின் உணர்வு யாவையும் கடந்து சென்று சிவானுபவத்திலேயே மூழ்கி விடுகின்றது. ஆனாலும் "ஆற்றேன் எம் ஐயா" என்று அவர் "ஓ" என்று "கதறுகின்றார்". வேற்று விகார – அதாவது வேறு வேறு கோலங்களில் வரும் உடம்பானது இனி வேண்டாம் என்று இந்த விடக்குடம்பின் உட்கிடக்க வேண்டாம் என்று கருதுகின்றார். ஆனாலும் அவர் எத்தனை வேதனையோடு இந்த உடம்மை வெறுத்தாலும் பரம்பொருளின், குருவின், திருக்கரத்தால் வருடிய உடம்பு இந்த உடம்பு என்றும் எண்ணியும் பார்க்கின்றார். ஆனால் தான் பார்க்கத்தக்கதாக குருவானவர் ஒளியில் மறைந்தும் தான் மட்டும் அந்த ஒளியுள் குருவுடன் கலக்காதிருந்ததும் இந்த உடம்பினாலேயே என்று எண்ணி எண்ணி உடம்பை வெறுக்கிறார். அவருக்கு இவ்வுலகத்தை விட இவ்வுடம்பை விட அரனின் அரவணைப்பே மேலோங்கியதாக தோன்றியது ஆகவே அரனேயே ஓ என்று கூர்ந்து அழைக்கிறார். கூவிக்கூவி மேலும் மேலும் உணர்ச்சிமேலீட்டால் அழைக்கிறார் எமது உள்ளமும் இதைக் கண்டு இந்த வசனத்தைப் பாடிப்பாடிக் கனிய வேண்டும். கனிந்து உருகவேண்டும்

**86 - போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்**

போற்றிப் - வணங்கிப் போற்றி
புகழ்ந்திருந்து - புகழ்ந்து பாடி
பொய்கெட்டு - பொய்யாகியது கெட்டு
மெய்யானார் - மெய் உணர்வில் மெய்யானார்

இறைவனை வணங்க வணங்க எமக்கும் பொய் உணர்வு கெடும். அதாவது பொய்களை நம்புகின்ற பொய் உணர்வு கெடும் என்பதுவும் நமக்குக் உலகம் பொய், உயிர்பொய், உடல்பொய் என்ற உணர்வும் கெட்டுபோய் முடிவில் நல் உணர்வு ஏற்பட்டு அதன்பின்பு போற்றிப் புகழ்ந்து – உன்னைப் போற்றிப் புகழ்ந்து வணங்கி, பொய் கெட்டு – பொய் உணர்வுமுற்றாக நீங்கி மெய்யானார் - மெய்யுணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்களின் மனம் சொல், செயல், இறை வணக்கம் எல்லாம் மெய்யுணர்வுடையதாக மாறும். மெய்யான மெய்யனான இறைவன் ஒருவனையே நம்புகின்ற தெளிந்த உணர்வு ஏற்படும் உள்ளமானது மேய்யுடையதாகவே அமையும், அன்பானது தூய்மையாகுமளவிற்கு போகப் போக அது பக்தியாக வடிவெடுக்கிறது. பக்தி நிறைந்த உள்ளத்தில் இறைவனுடைய சான்னித்தியம் தெளிவடைகின்றது என்பதை தெளிந்தே நாமும் சிந்திக்கமுடியும். இறைவனுடைய சான்னித்தியம் ஒருவனது புத்தி சித்தத்திலே தெளிவடையத், தெளிவடைய அதுவே தெளிவும் விவேகமும் மெய்யுணர்வும் ஓங்குவதற்கும் ஏற்ப இறைவனது பிரமை நெஞ்சத்தில் நிலை பெறுகின்றது. பின்பு எண்ணிய எண்ணம் திண்ணியதாகும் போது சித்தத்திலே அதாவது உணர்விலே மெய்யுணர்வும் இறைபக்தியில் பிரேமையும் பிறக்கின்றது. பிரபஞ்சத்தைப் படைத்தும், காத்தும், அழித்தும் நிற்கின்ற எங்கும் நிறைந்திருக்கும் தெய்வத்தை அன்பினாலும் எண்ணத்தினாலும் வரையறை செய்யப்பட்டவனாய் நம் உணர்வில் நாம் காணமுடியும் "பக்தி வலையில் படுவோன்காண்க" என்று கூறி வைத்ததற்க்கு இணங்க இறைவனை பக்திக்குள் ஆள்படுபவனாக்குகின்றார்கள் பக்தர்கள். பொய்யெல்லாம் கெட்டு மெய்யராகி மெய் உணர்வையும் தாங்கள் பெறுகிறார்கள் மெய்யான மெய் உணர்வு பெற்றவர்கள். பக்தியின் உன்னதத்தை அடைந்தவராவார்கள்

பக்தி நிலையினால் பக்தியின் மேம்பாட்டினால் உள்ளன்பால் உணர்ந்தவர்களின் அன்பிலும், அறிவிலும் எண்ணத்திலும் உட்பட்டவனாக இறைவன் விளங்குவான். இதை அநுபூதியில் உணர்ந்தவர்கள் போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யாகிறார்கள். அதாவது இவ்வுலகில் பொருளில்லாதவற்றைப் பொருள் என்று உணரும் மயக்க உணர்வு நீங்கப் பெற்று சிவபெருமானைப் போற்றிப் புகழ்ந்து வணங்கி பொய் உணர்வு கெட்டு பொய்களெல்லாம் அற்றுப்போய் மெய்யுணர்வுடையவர்களாகி மெய்ப்பொருளை உணர்ந்தவர்களாகின்றார்கள். மெய்யுணர்வு பெற்றவர்களால் என்ன செய்ய முடியும் என்பதைச் அடுத்த 87வது வரியிலே மிக உன்னிப்பாக, மிக உன்னதமாகச் சிந்திப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“பொருளல்லவற்றை பொருளென்றுணரும்”**
**மருளானம் மாணாப்பிறப்பு**

**(குறள் 351)**

மெய்யுணர்வு என்பது? இதனை வள்ளுவர் எப்படிக் கூறுகின்றார் என்று பார்ப்போம். பொருள் அல்லாதவற்றைப் பொருள் என்று உணரும் மருளானாம் மாணப்பிறப்பு. இதற்கு மாறானதே மெய்யுணர்வாகும். இந்த பெருமையற்ற பிறவியிலே மெய்ப்பொருளல்லாதவற்றை மெய்பொருள் என்று எண்ணுவதாகும் என்று கூறுகிறார்.

மெய் - எனப்பட்டது இந்த உடம்பு - இந்த உடம்பில் உயிர் எடுத்த பிறவி பொய்ப்பிறவி. இதன்படி எத்தனை எத்தனையோ வகை உடம்பை இந்த ஆன்மாவானது (உயிரானது) எடுத்துக் கொண்டே இருக்கும். இப்படியாக இந்த ஆன்மாவானது “வேற்று வேற்று” உடம்புக்குள் புகாவண்ணம் இனியும் பிறவி எடுக்காவண்ணம் (பிறவியை போக்கி பிறவி வேரை அறுத்து) அருள் செய்யக்கூடியவன் இறைவன் ஒருவனேயாம். பொய்கெட்டு மெய்யானார் என்பது என்ன என்பதை சிந்திப்போம்? இறைவனையே இடையறாது போற்றி வணங்குபவர்களின் இந்த வகையில் அறிவு நிலையில் உலகிலுள்ள தம் பொய்களெல்லாம் எம் பெருமானாகிய மெய்ப்பொருளையே எண்ண எண்ணக் கெட வேண்டும். என எண்ணி மெய்யான மெய்பொருளோடு இந்தவகையில் உள்ளவர்கள் இணைபவருமுண்டு. மெய்பொருளோடு பேரொடுக்கத்தில் ஒடுங்கிவிடுபவர்களுமுண்டு. இது இந்த இரண்டாவது வகையானது ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் வாய்தவாய்பேயாம். இது ஒருவகை பொய் கெட்டு மெய்யாதல் வாக்கினால் ஆகும். சிவனை நாம் உணர்ந்து உணர்ந்தே பக்திபண்ண முடியும். ஆனால் உணர்த்தவோ, சொல்லாலே சொல்லவோ அல்லது ஏனையோருக்கு உணர்த்தவோ இயலாத மெய்பொருளே சிவமாகும். “மெய்பொருள் சிவமேயாம்”. மெய்யாகவே மெய்பொருள் சிவம் ஒன்றேயானாலும் அந்த ஒன்றே என்பதனைப் பல்லுயிரும் பல உலகும் உணர்ந்து தான் அறியமுடியுமே தவிர உணராதவர்கட்கு உணர்த்துவது கடினமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**87 - மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே.**

| | |
|---|---|
| மீட்டு இங்கு வந்து | - திரும்பவும் இவ்வுலகிற்கு வந்து |
| வினையால் | - நல்வினை தீவினையால் |
| பிறவியாகிய | - ஒரு பிறப்பு |
| சாராமே | - வினைப்பிறவியானது வந்து சேராமல் |

பிறவியானது எம்மைச் சேராமல் இருப்பதற்கு முதலில் ஆசையை அறுக்கவேண்டும். நாம் செய்யும் செயல்கள் நற்செயல்களாக இருக்க வேண்டும். நல்ல சுத்தமனத்தோடு செய்யவேண்டும். பொய்மையாகிய எண்ணமெல்லாம் அழிந்து பட்டுப்போய் மெய்யுணர்வு பெற்றுவிட்டாய்! அதன்பின்பும் இந்த வினையின் வயப்பட்டு மீண்டும் பிறவிவந்து சேராமல் இறைவன் காப்பான்! என்று திண்ணமாக நம்பவேண்டும். நம்புவதோடு எம்மனமும் சுத்தமடைய வேண்டும். இறை வணக்கத்தை இடையறாது செய்தால் நமக்கு அன்புநெறியும் கைகூடும் அப்படிக் கைகூடினால் தீவினை நாடாது நல்வினையை செய்விக்கும் வழி எமக்குப் பிறக்கும் அப்பொழுது மீண்டும் பிறக்கின்ற வினைப்பிறவி எப்படிப்பட்டபிறப்பாயினும் வந்து சேராது. என்பதை நாம் எமது புத்திசித்தத்தினாலே நம்பவேண்டும்.

ஒரு மனிதனுக்கு மெய்யறிவு பிறக்கின்றது என்றால்? அது மெய்ப்பொருளான இறைவனை உணரத் தலைப்படும்! அப்படி உணரத்தலைப்படுவதே மெய்யறிவேயாகும். இதுவே மெய்ஞ்ஞானமும்மாகும். இந்த மெய்ஞானத்தில் மனதைச் சேரவிடாமல் தடுத்து திரிவுபடுத்தும் தன்மையை உண்டாக்கக்கூடிய நிலையைத் தருவது ஐம்பொறிகளாகும். எனவே ஐம்பொறிகள் வயப்பட்டு மீண்டும் மீண்டும் வினையைச் செய்து தான் நாம் பிறக்கின்றோம். எனவே எனக்கு வினை வழியாக பின்னரும் பிறவி வந்து சாராமல்க் காத்துக்கொள் என்று மாணிக்கவாசகசுவாமிகள் தானும் கேட்டு சிவபுராணம் மூலம் உலகோரையும் உணர வைக்கிறார். **சிவபுராணத்தை உணர்ந்து கற்பவர்களுக்கும் உணர்ந்து பாராயணம் செய்யபவர்களுக்கும் இயல்பாகவே பாசவேர் அறும். வினையினால் வரும் பிறவியானது வந்து வாய்க்காது பிறவித்துன்பம் இனியும் வந்து வருத்தாது என்பதே அவர் கூறும் துணிவாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருவினைப் பயனினாலேயே திரும்பவும் பிறக்கின்ற பிறவி நிலை வருகின்றது. மீட்டிங்கு வந்து - திரும்பவும் வந்து இந்த வினைப்பயனால் வினையாவாகிய பிறவி வாய்காமல் இருக்க அருள்வாயாக என்கிறார். திரும்பவும் உன் திருவடி கீழ் இருக்குமாறு என்னைக் காத்துக் கொள் என்றும் உள்உணர்வோடு கேட்கின்றார். இதுயாருக்கும் உருக்கம் வரக்கூடிய யாவரும் உருகத்தக்க செயல்களாகும்.**

நாம் செய்த வினையின் காரணமாகவே! மீட்டு இங்கு வந்து பிறக்கும் பிறவி வந்து திரும்பவும் எம்மை சேருகின்றது. அப்படி மீண்டும் இங்கு வந்து பிறக்காமல் காப்பாற்றுபவனும் இறைவனேயாம். எனவே மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு நாம் செய்தவினையே முழுக்க முழுக்கக் காரணம்! ஆகும். இதன்படி நாம் செய்த நல்வினை, தீவினைப்படியே பிறவி வாய்க்கும் என்பதையும் நன்கு வலிஉறுத்தி – மீண்டு வந்து பிறவாமல் இருக்கும் நிலைக்காக மன்றாடி வினைப்பிறவி சாராமல் பார்த்துக்கொள் என்பதையே சுவாமிகள் வேண்டுகின்றார். உலகோரையும் வேண்டுதல் செய்ய வைக்கிறார். எப்படி எனின் அது திருவாசகம் மூலமாகத்தான். அதைப்பாடிப் பாடி எமக்களித்து வலியுறுத்துகின்றார். என்பதை நம்உள் உணர்வோடு நாம்மும் சிந்திக்கவேண்டும்.

**88 - கள்ளப் புலக்குரம்பை கட்டு அழிக்க வல்லானே**

| | | |
|---|---|---|
| கள்ளம் | - | வஞ்சனை |
| புலன் | - | ஐம்புலன் |
| குரம்பை | - | கூடு, உடம்பு என்னும் சிறியவீடு |
| கட்டு | - | பாசம் |
| கட்டுஅழிக்க | - | தளையை அறுப்பது |
| வல்லானே | - | வல்லமையுடையவனே |

குரம்பை - வஞ்சகத்தையுடையது ஐம்பொறிகளுக்கும் இடமாகிய இவ் உடம்பு. இந்த உடம்பை நான் என்று கூற முடியாது நான்வேறு, இந்த உடம்பு வேறு, இது மாறுதல் அடைவது ஆகும் உடம்பு எனப்படுவது ஊன் பொதிந்த பொதி. பற் பல பிறவிகளில் இந்த உடம்பை எடுத்தெடுத்துக் களைத்து விட்டேன் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையுணர்வுடன் ஒன்றியவர்களுக்கு திரும்பவும் பிறவி எடுத்தெடுத்து உழலும் நிலை இருக்காது அது அப்படி இறையருளால்க் கிட்டாது. ஐம்புலங்களின் வீடாகிய இவ்வுடம்பின் கட்டினை அழிக்க வல்லவன் இறைவனே தான். அவனின்றி வேறொருவராலும் எம்பிறவி வேரை அறுக்கவும் முடியாது. என்பதுவே இந்த வசனத்திலிந்து எமக்குப் புலனாவது ஆகும்.

எமது உடம்பின் கட்டினை அழிக்கவும் முடியாது ஆக்கவும் முடியாது என்பதே சிவபுராணத்தினுடைய பொதிந்த உட் பொருளாகும். எனவே பிறவி என்னும் பந்தத்தினையும் உலக ஆசாபாசத்தையும் அழிக்க வல்லவன் இறைவனேயாம் என்பதைச் சிவபுராணம் மூலம் உணர்த்துகின்றார். நாம் இதனைச் சிந்தித்துச் சிந்தித்து உணர்வோமாக. கள்ளப் புலக்குரம்பை அதாவது வஞ்சனை நிறைந்த ஐம்புலங்கள் நிறைந்த உடம்பை உயிரின் கட்டு என்னும் தளையை என்றும் கூட்டு இல்லாது பாசம் இல்லாது அழிக்க வல்லவன் இறைவனேயாம்.

எமது உடம்பையும் உயிரையும் இந்த உலக வாழ்க்கைக்காக எப்படித்தான் நாம் பேணிப் பேணிப் பாதுகாத்தாலும் அது "கள்ளப் புலக்குரம்பை" தான் ஆம் கள்ளப்புறற்குடம்பை தான். ஆகவே அது போன போக்கிலேயே போகும் – அதாவது எமது ஐந்து பொறிகளும் ஐந்து புலன்களும் கள்ளப் புலனையே செய்யும் கள்ளப் புலனின் ஈடுபாட்டிலேயே இந்த புலனுகள் எப்போதும் இருக்கும். அத்தோடு மேலும் உள்ளது ஒன்றுண்டு அதுதான் ஒவ்வொருவருக்கும் இருக்கும். மனம் என்பது! அது இருக்கின்றதே! அது ஆறு துர்குணங்களும் நிரம்பி வழிந்து செயல்படுவதற்கும் மேலும் மேலும் அதுவும் தீமையே செய்து கொண்டிருக்கும் என்கிறார்.

ஆகவே ஒரு உயிருக்கு உடம்பை இறைவன் கொடுக்கின்றான். ஒரு உடம்புக்குள் உயிரை இறைவன் இணைக்கின்றான். ஆனால் அந்த உடம்புக்குள் உணர்வில் இறைவன் இணைக்கிறான். ஆனால் அந்த உடலும், உயிரும் சேர்ந்த வாழ்க்கை எப்படிப்பட்டதென்றால் கள்ளப்புலக்குரம்பு வாழ்க்கையே தான். அது என்றோ ஒரு நாள் அழிகின்ற உடம்பு! அதனாலேயே கள்ளப் புலக்குரம்பை என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கட்டழித்து "முற்று முழுதாகக்கட்டழித்து" தளைகளிலிருந்து அறுத்து! பாசத்திலிருந்து அறுத்து! வேறொரு பிறவியும் அந்த உயிர்க்கு வந்து சேராதவண்ணமும் எடுக்காத வண்ணம். பிறவியைக் கடக்க கட்டழிக்க வல்லவன் இறைவனேயாம். பிறவினையைக் கடக்க இறையன்பில் நின்று நாம் எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும் என்பதையே "சிவபுராணம்" கூறுகின்றது.

**89 - நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே.**

நள்ளிருள் - நடு இரவு, செறிந்த இருள்
நட்டம் - நர்த்தனம், நடனம்,
பயின்றாடும் - எல்லையின்றிப் பழகி பலகாலும் ஆடுதல்,
நாதன் - அரசன், தலைவன்

ஒழிவின்றி, நள்ளிருளில் இறைவன் செய்யும் நடனம், சூக்கும நடனம் ஆகும் செறிந்த இருளிலும் நாதனே! திருக்கூத்தினை ஆடுகின்றான். தலைவனே! அதாவது உலகில் எல்லாம் அயர்ந்து உறங்குகின்ற வேளையிலும் இறைவன் நித்திய ஜாக்கிருதாவஸ்தனாய் இருக்கின்றான். அயராது ஓயாது விழித்திருத்தலையே? இந்த நள்ளிருளில் நடனம் உணர வைக்கின்றது. நமக்கு நள்ளிருளில் நடனம் பயில்தல் என்பது இதனையே உணர்த்துவதாகும். இவ்வாசகமானது அமைந்துள்ளது எப்படி எனின்? ஓய்வின்றி நடனமாடும் நடனத்தை உணர்த்துவதாகும். தலைவனே ஓய்வின்றி நள்ளிருளிலும் நடனமாடும் கூத்தன். இவையெல்லாம் உலக உயிர்களை உய்விக்கும் பொருட்டேயாம் நடைபெறுகின்றது. ஐந்தொழில்களையும் செய்யும் பொருட்டேயாம் எல்லை இன்றிப் பலகாலும் ஆடுதல். இறைவன் பேரூளி காலத்திலும் வாழதிருக்காது (பேசாதிருக்காது) ஆடுகிறான். ஆகையாலேயே நள்ளிருளிலும் நடனத்தை எல்லையின்றியும் ஆடுகின்றான் என்றார். எல்லையில்லாத் திருக்கூத்தே இவ்வுலக இயக்கம் என்பதை இங்கே நடராஜன் நர்த்தனத்தால் நாம் உணரமுடிகின்றது. எல்லா உயிர்களின் உணர்வும் செயலும் அறியமையாகிய இருளில் மூழ்கிக் கிடக்கும்! அப்படிப்பட்ட நிலையிலும் இறைவன் தான் அவ்வுயிர்களுக்காக அவற்றின் பொருட்டு ஆடுதலினால் தான் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். நாதன் எல்லா உயிர்களிலும் இரக்கம் நிறைந்தவன். இவ்வுலகிற்கே நாதன் அவன் தான். என்பதை நன்கு விளங்கவைக்கின்றார்.

அவித்தை என்பது – அஞ்ஞான இருள், இது அறியாமையாகிய இருளாகும் என்பதை நாம் இந்த சிவபுராண வரியிலிருந்து உணர்வோமாக! இறைவன் சிந்தையுள் இருப்பவன் என்றும் சிவன் ஒளி வடிவினன். என்றும் எம்மனதில் இருத்துகின்றோம். ஆனாலும் எம் அறியாமை விலகுவதில்லை இந்த "அறியாமை என்கின்றதை விளங்காமல் இருக்கிறது எம்மனது ஆனால் "நள்ளிருளிலும் அவன் நடனமாடிக் கொண்டிருக்கின்றான்". இதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே" என்றார். ஏன்? நள்ளிருளில் என்பது? அறியாமையாகிய இருளேயாம். நள்ளிருள் என்பதையும் இந்த "அறியாமையாகிய இருள்" என்பதையும் சற்று விரிவாக நோக்குவோம். அதாவது **இந்த விரிந்து பரந்து எம் கண்முன் எமக்கு எதிரே தோன்றும் இந்த அண்டத்திலும் எமது உடம்பாகிய பிண்டத்திலும் படர்ந்துள்ள மாயா இருளாகிய, புற இருள், அக இருள் என்னும் இவை இரண்டுமே நள்ளிருளாம் என்பதாகும். இதுவே அவா தனது அனுபவத்தால் உணர்ந்து கூறிய இருளாகும்.** இதையே மெய்ஞ்ஞானியான மாணிக்கவாசக சுவாமிகளும் ஞானத்தை கைவரப்பெற்ற நிலையில் தன்னுள் கண்டு தனது உள்உணர்வால் கூறினார் என்பதை இந்த உலகிலுள்ளோர் கண்டு கண்டு உணர்ந்து கொள்ளவேண்டியது அவசியம். என்பது இதன்பொருள். மேலும் இதன் பொருளை என்ன என்று நோக்குவோமானல் அது என்னவெனில் இறைவன் ஒவ்வொரு உயிருக்குள்ளும் இருக்கும் இந்த அறியாமை என்னும் இருள் ஒவ்வொரு உயிருக்குள்ளும் இல்லாமல் போகவே அவன் நள்ளிருளில் நடனம் ஆடுகிறான். ஏனெனில் அறியாமை அகன்றால்தான் இறைஅறிவு நமக்கு வரும். இதனால் தான் நமக்கு இறைஒளி மனதில் தெரியுமாம். நள்ளிருளில் நடனம் என்பது என்ன? ஒவ்வொரு உயிரிலும் உள்ள அகங்காரம் மமகாரம் அகன்று உயிரை நல்ல நிலையில் எடுத்தாளவே உயிர்களுக்காகவே ஆடுகிறான் என்பதையும் "நள்ளிருள் என்பது அறியாமை ஆகிய இருள்" ஆகும் என்பதை நாம் நன்கு அறிந்து எம் அறியாமையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவோமாக. எமது அவிந்தையாகிய அறியாமையை அதுவே அஞ்ஞானம். அஞ்ஞானமாகிய இருளைப்போக்கவே இந்த நள்ளிருளில் நடனம் ஆடுதலாகும். என்பதை எமது உயந்த மன உறுதியோடு உள்ளத்திலே இருத்துவோமாக.

**90 - தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே.**

| | | |
|---|---|---|
| தில்லை | - | சிதம்பரம் |
| சித் | - | ஆகாசம் |
| கூத்தனே | - | எம்பெருமான் ஆடுவது தூல நடனம் |
| தென்பாண்டிநாட்டான் | - | பழம்பதி, தென்பாண்டி நாடு |

தில்லையில் எம்பெருமான் ஆடுவது தூல நடனம். இது உயிர்களுக்காகவும் உலகிற்காகவும் ஆடும் பொது நடனம். தில்லை திருச்சிற்றம்பலத்தின் கண்ணே ஆடும் கூத்து. இறைவன் இடைநிறுத்தம் என்று இல்லாமல் கூத்தனாக கூத்தாடிக் கொண்டே இருக்கின்றான். அகில அண்டங்களையும் ஒழுங்காக இயக்குவதிலும் இயக்குவிப்பதிலும் ஓயாத நிலையிலே நின்று தான் என்றும் கூத்தாடிக் கொண்டே இருக்கின்றான். ஆகவே கூத்தை நடத்துபவன் கூத்தனாகவே என்றும் எங்கும் விளங்குகிறான். அவன் கூத்தே உலக இயக்கம். இதுவே "தில்லை கூத்து" இதுவே "தில்லை திரு நடனம்." என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

இப்படி தூல நடனத்தினையும், சூக்கும நடனத்தினையும், ஐவகைத் தாண்டவங்களையும் எந்நாளும் இயற்றுகின்றார் என்பதையே இது விளக்குகின்றது இந்தத் தில்லைக்கூத்து சிறப்பாகச் சிதம்பரம் என்னும் சேஷத்திரத்திலும், தென்பாண்டி நாட்டிலும், அதாவது தமிழ் நாட்டிலும் நடனமாடிக் திகழ்கின்றாய் என்று இங்கே எடுத்து இயம்புகிறார். மேலும் தெற்கே உள்ள பாண்டிநாட்டிலும் திகழ்கின்றாய் என்பதை உன்னிப்பாகக் காட்டுகின்றார். இறைவன் மதுரையிலும் அதைச் சூழவுள்ள இடங்களிலும் பல திருவிளையாடல்கள் புரிந்துள்ளான். மாணிக்கவாசக சுவாமிகளுக்காகப் பலஅருட்செயல்களை அங்கே செய்துள்ளான். இதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள் "தென்பாண்டி நாட்டானே" என்று போற்றுகின்றார் போலும். இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின் பொருட்டும் தமிழன்பர் பொருட்டும் செய்த திருவிளையாடல்கள் பல. இவை எல்லாம் பல காரண காரியங்களுக்காகச் செய்யப்பட்டவையாகும். தென்பாண்டிநாடே 64 திருவிளையாடல்கள் புரிந்த பதியாகும்.

தில்லையுள் கூத்தன்! தென்பாண்டி நாட்டான். ஆனால் எந்நாட்டையும் தன்திருக்கூத்தினால் காப்பவன். இதனை மாணிக்கவாசகசுவாமிகள் தென்னாடுடைய சிவனே போற்றி என்றார் என்நாட்டவர்க்கும் இறைவா போற்றி அவர் சிவபெருமானால் ஆள் கொள்ளப்பட்ட பின்பு பாண்டிய மன்னனால் பட்ட இன்னல்கள்! துன்பங்கள்! யாவற்றினாலும் அவருக்காகவே சிவபெருமான் அதாவது மாணிக்கவாசகசுவாமிகள் பொருட்டு செய்யப்பட்ட அற்புதச் செயல்கள் அதிசயச் செயல்களாலும் அவரது "பக்திப்பிரேமை" மேலீட்டாலும் அவர் கண்ணிற்குத் 'தென்பாண்டி நாடே சிவலோகமாக' 'சிவபுரமாகத் தோன்றியது. எனவே அவர்கண்' முன்னே அவர் சாயுச்சிய முத்தி பெறும் வரை தென்னாடெங்கும் அவருக்கு சிவரூபமே தென்பட்டது என்பதை நாம் இந்த "தென்பாண்டி நாட்டானே" என்பதிலிருந்து உணரக் கூடியதாக உள்ளது. இவையெல்லாம் அவரது மனோநிலையின் செயட்பாடேயாம் என்பதை இவ்வரிகள் மூலம் உணர்வோமாக.

இறைவன் தில்லையுள் கூத்தன் - அது தில்லை – தில்லை என்பது உடம்பாகிய கோயில்தான் என்று ஞானியர் பதில் கூறுவர். மாணிக்க வாசக சுவாமிகளும் ஞானநிலையில் நின்று கொண்டே தனது உடம்பாகிய கோயிலிலே இறைவன் கூத்தனாகக் காட்சியிளிப்பதையே மனக் கண்ணால் பார்க்கிறார். பார்த்தும் கண்டும் இவ்வாறு கூறினார் என்பதே மிகமிகப் பொருத்தமாகும். **தில்லையில் கூத்தன் கூத்து ஆடுவதற்கு தென்பாண்டி நாடே சரியான இடம். இறைவனின் பழம்பதியாகும். எனவே "தில்லையுள் கூத்தனையும்" "தென்பாட்டி நாட்டினையும்" அவனின் பூர்வீக தெய்வ மணம் கமழும் இருப்பிடத்திலிருந்து தெய்வீக அருள்புரியும்படி இறைவனைக் கூவி அழைக்கின்றார். மாணிக்கவாசகசுவாமிகள். தனது பிறவிவேர் அறும்படி கூவி அழைக்கின்றார் ஆகா ஆகா "தில்லையுள் கூத்தனையும் தென்பாண்டி நாட்டானையும்" அவரால் அவ்வாறு கூவி அழைக்க முடியுந்தது நாமும் அவ்வாறு கூவி அழைப்பதற்கு சிவபுராணத்தின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூலம் எமது உள்ளத்தையும் உணர்வையும் கட்டி எழுப்புகின்றார்** என்பதைப் புரிந்து கொள்வோமாக. தில்லையிலேயே அழைக்கமுடியாமல் இருந்து அழைக்கிறார். இறைவனை தட்டி எழுப்பும் மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையிலேயே சாயுக்சிய முக்தியடைந்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**91 - அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று**

அல்லல் - தொல்லை, துன்பம்.
பிறவி - துன்பத்திற்கிட மான ஒரு பிறவி,
அறுப்பான் - பிறவியை நீக்குபவன்,
ஓ - ஓலமிட்டு அழைப்பது

ஓ என்பது அன்புமேலீட்டால்! அலறி அங்கலாய்த்துக் கூப்பிடுவது அலறி அழைப்பது அல்லலாகிய பிறவிவேரை அறுப்பதற்கு அந்த பூரணனாகிய இறைவனையே ஓலமிட்டு அழைத்து அவன் அருள் வேண்டி வேண்டி நிற்கவேண்டும். என்பதை வெளிப்படையாகவே மணிவாசகர் இங்கே கூறுகிறார். தமது பிறவிவேரை அறுப்பதற்குப் பூரணனையே நம்பித் தொழவேண்டும் என்கிறாார். அல்லல் பிறவியினை அறுப்பவனைச் சொல்லாலும், செயலாலும் உணர்த்தவே முடியாது. இறைவனைப் பரிபூரணமாக நம்புபவர்கள் இறைவனை வணங்குவதோடு, இடையறாது இறைவனோடு இணைந்து கொண்டே இருக்க வேண்டும். தொடர்ந்தும் இறைவனோடு இணைந்தால் தான் .... பிறவி வேரை அறுக்கமுடியம் இறைவன் பால் கவனத்தைச் செலுத்துபவர்கள் நம்பிக்கையையும் முயற்சியையும் கைவிடவேமாட்டார்கள். அந்த நம்பிக்கையே அவர்களை இறையருளில் முன்னேற்றம் காணச் செய்யும் என்பதை தாம் உணர்ந்ததோடு திருவாசகச்சிந்தனை வழியில் **ஒவ்வொரு ஆன்மாவும் வளப்படட்டும் என்றும் ஒவ்வொரு ஆன்மாவும் விடுதலை பெறட்டும் என்றே மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசக தேனமுதை தந்தருளினார். இந்த அமுதினை அள்ளிப் பருகுபவர்கள் மன அமைதியும் விடுதலையும் பெறட்டும் என்று அருளிய ஒளியே! ஒளி வாசகமே திருவாசகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலைத் தேடிப் போன நதி ...... பின்பு தானே கடலாகி கடலோடு கடலாகச் சேர்ந்து விடுகின்றது. இதேபோன்றே எமது பிறவியும், இனி மீண்டும் பிறவாதநிலை எய்திவிட்டால் பூரணனுடனேயே எம் ஆத்மா கலந்துவிடும். பின்பு பிறவிச்சுழியில் அகப்படவேமாட்டாது. அல்லலான பிறவியை அறுப்பவனின் திருவடியை உள்ளன்போடு நம்பவேண்டும். அடைக்கலமே, அடைக்கலம் என்று திருவடிவயைச் சேர்ந்து விட்டால் அல்லல்பிறவியிலிருந்தும் விடுதலை கிடைத்துவிடும். எனவே சிவபுராணத்தை உருகி உருகி ஓதினால் பந்தபாசங்களும் ஆசாபாசங்களும் விலக்கப்பட்டு விலகி தூயவனான இறைவனின் திருவடியையும் அடையமுடியும்.

எமது பிறவி வேரை அறுப்பவன் அவன் ஒருவனே. உலகின் கண் உள்ள வாழ்க்கையில் என்றும் அல்லல்களே மிகுந்து காணப்படும். இந்த அல்லல்களையெல்லாம் போக்கிவிடு, நீக்கிவிடு, நீக்கிவிடு என்று இறைவனைத் தினம் தினம் விண்ணப்பம், விண்ணப்பம் என்று கேட்டுக் கொண்டிருக்காமல் அதிலும் மாணிக்க வாசக சுவாமிகள் பட்ட துன்பம் கொஞ்சமா? அவர் வாழ்க்கையின் பெரும்பகுதியில் பெரும்பாலும் துன்பமே பட்டார். அவர்பட்ட துன்பங்களை எல்லாம் "திருவாசகமே" கூறும். ஆகவே எல்லாத் துன்பத்தையும் பார்க்கும் போது அல்லல் ஒன்று மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும் என்பதை நாமும் உணர்வோமாக. ஆகவே தான் தனது பாசத்தை முற்றாக அறுத்துவிடு என்று வீடு பேறு கேட்கின்றார். அல்லல்களுக்கெல்லாம் மூலமாக உள்ளது பிறவிவேர் அதை அறுக்கும் வண்ணம் இறைவனிடம் எம்மையும் கேட்கச் சொல்லி எல்லாம் எங்கும் வழிகோலித் தந்துள்ளார். அனைவரினதும் பிறவிவேரை அறுப்பவனைப் பற்றி சிவபுராணத்தில் மட்டும் பல இடங்களில் கூறியுள்ளார். எமது நன்மை கருதியே இவையெல்லாம் கூறப்பட்டது என்று கருதில் கொண்டே "சிவபுராணத்தை" மனனம் செய்யவேண்டும் அதுவே எமக்கு ஆன்மாவுக்கு நன்மை பயக்கும். என்பதை எம்மனதில் புரிந்து கொள்பவர்களாக நாம் மாறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**92 - சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்.**

| | | |
|---|---|---|
| சொல்லற்கு | - | சொல்லால் சொல்ல முடியாது. |
| அரியான் | - | கூறிவிடமுடியாத அரியவன் |
| சொல்லி | - | சொல்லி, சொல்லி |
| திருவடி | - | திருவருள் நிறைந்த திருத்தாள் |
| கீழ் | - | அவரடியின் கீழ் |

**சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க**

**(திருவண்டப்பகுதி 40)**

அழகு, செல்லம், தூய்மை, அருள், அன்பு இவையெல்லாம் நிறைந்தது என்பதனால் இறைவனின் பாதம் திருவடியாயிற்று. பரிசுத்தமான அடிகளாயிற்று. அடிக்கீழ் - பிறவிநிலை இனி இல்லையென்று போய்சேருகின்ற ஆன்மாவானது திருவடிக்கீழ் போய் சேரும் என்பது அடிகளார் கூறிவைத்துள்ள உண்மை. அதுவே திருவடிக்கீழ் என்றார். ஒரு ஆத்மாவின் இறுதிநிழல் அதுவேயாகும் என்று நாம் எண்ணி எம்மைச் சொல்லலிற்கு அரியவனிடம் திருவடிக்கீழ்ப் போய்ச்சேரத் தயார்ப்படுத்துவோமாக. இறைவனின் நிலைப்பற்றி எம்மால் எதுவுமே கூறஇயலாது. இறைவனை சொல்லிலோ, செயலிலோ, காட்சியிலோ காட்டிவிடமுடியாது. நாம் சொல்லிப்பாராட்டிவிடவும் முடியாது அவ்வளவு அருமைப்பாடு உடையவன் அவன். எம் சொற்களிலடங்காத புகழையுடையவன். இறைவனுடைய சான்னித்தியத்தை அடைய அவனது அருளினால் அதாவது அவனது சான்னியத்தைப் பெற்றே அருள் பிரவாகம் பெற்றே அவனது திருவடிஅடைய முடியும். **அவனைப் பற்றிப் பெரியோர்கள் கூறியவற்றைத் திருவடியடைந்தவர்கள் கடைப்பிடித்த முறையோடு நாமும் கடைப்பிடிக்கவேண்டும். அந்த முறைகளையெல்லாம் நாம் நன்றாக உணர்ந்து அத்தோடு இறைவனையும் நாம் நன்கு உணரவேண்டும். நம் பாவங்களையும் தூயசெயல்களையும் சீர்தூக்கிப்பார்த்து முதலில் நாம் சீர்திருத்த வேண்டும். எம் அறிவைப்பயன்படுத்த வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இறைவனை உணரவேண்டும். உணர்ச்சியானது உள்ளன்போடு கூடிய உணர்ச்சியாக இருக்கவேண்டும். உள்ளத்தில் உணர்ந்த உணர்ச்சியின் உயர்வே நல்ல ஆராதனையாகும். சொல்லற்கரியானை சொல்லாலும் செயலாலும் உணர்வாலும் உணர்ந்து, உணர்ந்து அவன் திருவடிக்கீழ் சேரவேண்டும். என்பதே நாம் மானிடப்பேறு எடுத்ததன் அருமையாகும். ஊயர்ந்த நிலையும் ஆகும்.

இறைவனுடைய அருளும் ஆத்ம சாதகனுடைய முயற்சியுமே இராஜயோகம் எனப்படுகின்றது. சொல்லையும் பொருளையும் நன்கு உணர்ந்தவன் ஆவான் சிவசொரூபத்தையும் உணர்ந்தவன் நல்ல சிவபக்தனாகின்றான். தூய்மையான உண்மையான பத்தியவழியில் வாழும் "சிவபக்கதன்" நிச்சயம் சிவசன்னிதி (சிவபுரம்) சேருவான். இதுவே சிவபுராணம் கூறிநிற்கும் பூரணத்தன்மையாகும். "நமசிவாய" என்னும் நாம மந்திரத்தை அழைக்க அழைக்க இறைவன் எளிதில் வருவான். அவனது திருவடியை எளிதில் அடைய முடியும். இது உறுதியான உண்மையாகும். நினைக்கும் தகுதியுடையது மனம் என்ற ஒன்று அது உடையது மானிடப்பிறவிக்கு மட்டுமே ஆகவே மானுடப்பிறவி உள்ளவரை இறைவனை நினைத்து நினைத்து உருக வேண்டும். இப்படி நினைப்பது என்பது பெரும் கொடையே என்றும் நாம் எண்ண வேண்டும்.

அல்லற் பிறவி அறிப்பவன் : அவனைப் பற்றி வார்த்தையால் கூறமுடியாது. அவன் சொல்லற்கரியான். ஆகவே அவனைச் சொல்லிக் கொண்டே! இருக்க வேண்டும் எப்படி? "நமச்சிவாய வாழ்க" என்று சொல்லிக் கொண்டே இருப்பவர் திருவடிக்கீழ் புகுவர். ஆனால் அவன் அருளின்றி அவனை நாம் அறிவதற்கில்லை. அதையும் "சிவபுராணமே" கூறுகின்றது. "அவனருளாலே அவன்தாள் வணங்கி" இதனை சித்தராகிய திருமூலரும் நன்கு உணர்த்துகின்றார். மந்திர நூலாகிய திருமந்திரம் இதைக் கூறுகின்றது.

**சிந்தையினுள்ளே எந்தை திருவடி**
**சிந்தையும் எந்தை திருவடிக்கீழ்**
**எந்தையும் என்னை அறிகிலனாகில்**
**எந்தையை யானும் அறிகிலேனே**

**(திருமூலர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எந்தையின் அருளைப் போற்றுகின்றார். எனவே "அவனருளாலேயே அவன் தாள்" வணங்கி நிலைபேறான வாழ்வாகிய திருவடிக் கீழ் நிற்கவேண்டும் என்று வலியுறுத்தினார். உலக உயிர்களின் நிலைபேறான வாழ்க்கையானது இறைவனுடைய திருவடி நிழலேயாம். என்பதை தான் கண்ட "ஞானஒளி" மூலம் "சிவஒளியின் அருளினாலே!" "சிவன் மூலமாகவே!" உலகோர்க்கு உணர்த்தியுள்ளார். என்பதை மானிடராகிய நாம் உணர்வோமாக.

**93 - சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்.**

சொல்லிய - நாம் சொல்லிய,
பாட்டின் - பக்திப்பனுவல்களின்,
பொருள் - உள்பொருள்,
உணர்ந்து - உள்பொருளை உணர்ந்து
சொல்லுவார் - பாடுபவர்கள்

அதன் கருத்துகளின் கருத்தை கருத்துபவர்கள் கூறுபவர்கள், சிவனின் திருவருளை இலகுவில் பெறுபவர்களாகிறார்கள். சைவசமயத்திலுள்ள எந்தவகை பாடல்களையோ, பக்திப் பனுவல்களையோ, திருமுறைகளையோ, பாடுபவர்கள் ஓதுபவர்கள் அதற்குள் கூறியுள்ள, பொதிந்துள்ள பொருளையும் கருத்தையும் அதற்குள் உணர்ந்து உணர்ந்து பாடினால் ஈசனின் சிவசொரூபத்தை எம்மனதில் பதித்துக்கொண்டால் சிவனையே நாம் உணர்ந்தவர்களாவோம். தாம் முதலில் பாட்டின் பொருளுணர்ந்து உணர்ந்து – அதை ஏனையோருக்கும் உணர்த்தும் வண்ணமே பொருளை நன்கு உணரவேண்டியுள்ளது என்பதனை நாம் நன்கு உணர்வோமாக! இதனால் இறையுணர்வும் மேலோங்கும் என்பதையும் சிவனின்பாதத்தினைச் சீவன் பெறும் என்பதையும் உணர்வோமாக. "சொல்லிய பாட்டின் பொருளை" உன்கருவை தெரிந்து கொள்வதால் அதைப்பாடும் போது மனித நெஞ்சக்கல்லு நெகிந்து உருகும் என்பதே பக்திப் பாடல்களின், பக்திநூல்களின் கருத்தாகும்.

"பக்தி பனுவல்களை பக்குவமாகப் பண்ணோடு பாடுதல்" என்பது அதுவும் ஒரு பக்குவ நிலையாகும். அதை அறிவின் கண்கொண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியின் முதிர்ச்சி கொண்டும் அறிதல் என்பதும் வேறு ஒரு நிலையாகும். அறிதலோடு மட்டும் நின்றுவிடாது, பாடுதலோடு மட்டும் நின்றுவிடாது. அறிந்து தெளிந்து, உணர்ந்து, உட்பொருளை உணர்ந்து விளங்கிக் கொள்வதே பெருநிலையாகும். அப்படி உணர்ந்து கொள்வதும் ஒரு பேறுமாகும். இக்காரணத்தினாலேயே மரணமில்லாப் பெருவாழ்வு நோக்கி மனிதகுலத்தை அறிவுறுத்துகின்றது. "சிவபுராணம்" இந்த சிவபுராணம் கூறும் இக்கருத்துக்கள் யாவும் வேறெங்கேயும் காணப்படாத ஒன்றாகும். **அதாவது : பதவுரை, பொழிப்புரை, கருத்துரை என்பவற்றை எல்லாம் அறிவால் அறிதலைவிட, அறிவால் அறிந்து தெளிதல் என்பதை விட, உணர்தலே மேலானது ஆகும். "உணர்வு என்னும் ஒளி" உள்ளத்துக்குள்ளே பிரகாசிக்கவேண்டும். இதையே மாணிக்கவாசக சுவாமிகள் சொல்லிய பாட்டிலும் பொருள் உணர்ந்து சொல்லுவார். என்று உணர்ச்சி பூர்வமாக கூறினார்.** என்பது தெளிவானதொரு உண்மையாகும். உலகிலுள்ளோருக்கு அனைவருக்கும் ஒருபெரும் தெளிவுமாகும். அதிகூடிய விளக்கமுமாகும். எனவே பக்திப்பனுவல்களின் பொருளை உணர்வதற்கு சிந்தனையை செப்பனிட்ட நிலையில் நின்று உணர்வோமாக.

**94 - செல்வர் சிவபுரத்துள் உள்ளார் சிவனடிக்கீழ்**

செல்வர் - சிவனடிக்கீழ் செல்வர்,
சிவபுரம் - சிவநகர், சிவலோகம்,
உள்ளார் - நீங்காது உள்ளார்,
சிவனடிக்கீழ் - சிவனின் திருவடிக்களின் கீழ்

சிவனை உணர்ந்தவர்கள் சிவனடிக்கீழ் சிவனுடைய நிழலைச் சென்று சேருவார்கள். திருவடி நிழலைச் சென்று சேருவார்கள். ஏனையோர் சிவனை உணராதோர் மீண்டும் மீண்டும். பலபிறவிகளை எடுத்து அல்லல் படுவார்கள் நரகலோகத்திற்கும் செல்வார்கள் என்பதும் எமக்கு ஓரளவு புலனாக வேண்டும். பிறவி எடுக்கும் போது புழுவாய் பிறப்பது தொடக்கம் பிறவி தொடங்குகின்றது ஆகவே நாம் பிறந்துள்ள இப்பிறவியில் தான் அதாவது மானிடப் பிறவியில் தான் நினைக்கும் புலனுண்டு சிரிக்கும் புலனுண்டு அழுகின்ற புலனுமுண்டு உணரும் திறமும் உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எம் பிறவியின் பயனை உணர்ந்து அதாவது மனிதப்பிறவியின் மகத்துவத்தை உணர்ந்து அதன்பயனை உணர்ந்து இறைவணை உணர்ந்து? கொள்ளலாம். நான் யார்? எங்கிருந்து வந்தேன்? இனி எங்கே போகப்போகின்றேன். என்ற கேள்விகளுக்கு மனிதனானவன் இவற்றிற்காக நாம் எதைச்செய்ய முடியும் என்பதை உணரவேண்டும். மனிதம் செத்த மனதோடு வாழக்கூடாது. மனிதநேயம்,மனிதமனம்,பண்படுத்தப்பட வேண்டும். என்பதே மனிதனானவன் முதல் முதலில் உணரவேண்டுவதாகும்.

மனிதன் தனது நிலையில் என்ன முடிவென்ன என்று உணர்ந்து கொண்டால் சொல்லற்கரிய – பரம்பொருளைச் சிந்தித்து வந்தித்து வணங்கி வாழ்த்தி, தாழ்ந்து பணிந்து சொல்லிய பாட்டின் பொருளிலே அதாவது திருப்பாடல்களிலும் திருப்பொருள்களிலும் அவனையே உணர்ந்து சொல்லமுடியும். சிவபுரத்துக்குள்ளே அவன் திருவடிக்கீழ் புகவும்முடியம் என்பதை இவ்வுலகில் வாழும் பல உயிர்களுக்காகவும் கூறியும் வைத்துள்ளார். மாணிக்க வாசகர் கூறி வைத்துள்ளது மணிவாசகமல்ல! இது ஒரு பொக்கிசம்! பல்லோரும் ஏற்றப்பணிந்து. ஏற்றக்கூடியதான அருள் பொக்கிசத்தை என்றும் ஏற்றிப் போற்றுவோமாக.

உயிரினங்கள் புல்லிலிருந்து – மனிதர் வரை எப்படி முன்னேற்ற நிலை கண்டுள்ளன என்பதை தான் அவர் தானே தனக்குள் நன்கு அனுபவித்த மாதிரித் தந்துள்ளார் சுவாமிகள். இவ்வுலகில் உயிர் வளர்ச்சியின் படித்தரங்களை முறையாகவும் நன்றாகவும் சொல்லியுள்ளார். சிவபுராணத்திலே! இவற்றையெல்லாம் நாம் படிமுறையாக நினைவு கூர்ந்து அதன்படி நாம் சிவபுராணம் மூலம் உணரவும் முடியும் உணர்ந்து கொண்டால் மெய்யுணர்வு ஓரளவேனும், கைவரப் பெற்றும் மெய்யறிவின் துணை கொண்டு சிவபுரத்து வாழ்வாகிய அமரத்துவ நிலையை அறிந்து கொள்ளவும் முடியும். இந்த மனிதப்பிறவியில் சிவபுரத்து நிலையை, உடம்பின்றி உயிர் எய்தக்கூடும் என்பதே சிவபுராணம் எமக்கெல்லாம் கூறி வைத்துள்ள தனிச்சிறப்பாகும். இதை யாம் உணர்ந்து உணர்ந்தே சிந்திப்போமாக! “சிவபுரம்” என்பது வேறெங்கோ இருப்பது அன்று ஒரு ஆத்மாவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் பேறடைந்து இறைவன் திருவடிக்கீழ் இருப்பதையே "சிவபுரம்" என்றார். இதுவே இங்கே "சிவபுராணம்" கூறி வைத்துள்ள சிவபுரமும் ஆகும். இதனையும் நாம் சிவபுராணத்தின் மூலம் கற்று உணர்ந்துதெளிதல் நன்றேயாகும். நன்றையே நினைந்து நினைந்து பண்படுத்திக்கொள்வதற்கு **. மனம், மொழி, மெய் என்கின்ற முக்கரணங்களையும் ஒருமுகப்படுத்தி பண்படுத்திக் கொள்வதற்கு சிவபுராணம் எமக்கு ஒரு அருமருந்தாகும். அருமருந்து இவ் உலகிலேயே கிடைத்த மாதிரி எண்ணி எண்ணி நாம் பராயணம் பண்ணவேண்டும்.** பாராயணம் பண்ணிப்பயனடைய வேண்டும்.

**95 - பல்லோரும் ஏத்தப் பணிந்து**

| | |
|---|---|
| பல்லோரும் | - பல உலகிலும், உள்ளவர்களும் |
| ஏற்ற | - ஏற்றிப்போற்றத்தக்கதாக |
| பணிந்து | - எமது பிறவியை உணர்ந்து பணிந்து |

இனிப்பிறவிவேண்டாமென்று உணர்ந்து! இறைவன் திருவடி நிழலே! எமது ஆத்மாவிற்கு ஆறுதல் தரும் நிழல் என உணர்ந்து திருவடி நிழலின் கீழ் போய்ச் சேர்ந்தோமேயானால் பல்லோரும் அதாவது ஈரேழு உலகிலுள்ளோரும் பணிந்து ஏற்றுவர் என்பதை சிவபெருமானால் படிஎடுக்கப்பட்ட இந்நூலான திருவாசகத்தேனிலே மாணிக்கவாசக சுவாமிகள் மிகவும் ஆழமாகவும் அனுதாபமாகவும் கூறியுள்ளார். ஏனெனில் இறைவன் திருவடிக்கீழ்ப் போய்ச்சேர்வது அவ்வளவு உன்னதமானதும் புனிதமானதுமாகும். திருவாசகத்திலே மாணிக்கவாசகசுவாமிகளால் அருளப்பட்ட சிவபுராணமானதும் அதன் உட்கிடையானது அதன் கருத்தாவது என்னவென்றால் இறுதிவரை உள்ளயாவையும் பிறவிவேரை அறுப்பவையாகவே கூறப்பட்டது. இங்கே இறுதியிலே சுவாமிகள் இரண்டு விடயங்களை சீர்தூக்கிக் கூறியுள்ளார்கள். என்பதை மிகவும் கவனத்தோடு நோக்குவோம்.

1) அல்லல் பிறவி அறுப்பானே! – அதன் பெறுபேறு என்னவெனில் பிறவித் தொடர் அறுக்கப்பட்டவனுக்கு சிவப்பேறு கிடைக்கும் என்பதாகும். ஆம் அது சிவபுராணத்திலே கூறப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமானதொரு உண்மையாகும். உனது பிறவிவேர் அறுந்தால் நிச்சயம் கிடைப்பது சிவப்பேறேயாம்.

2) ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று! ஓ என்று கூறித் தனது அல்லலைக் கூறுகின்றார். இப்படியாக சிவபுராணத்திலே இரண்டு இடங்களில் "ஓ" எனறு ஓலமிடுகிறார். ஆற்றறேன் ஐயா அரனே ஓ! என்று கதறுகிறார். தன்நிலை மறந்து அரற்றுகிறார். ஆற்றேன் இனி இந்த உடம்புக்குள் இருக்க ஆற்றேன். என்று இந்தஞானியே கூறுகின்றார்.

தனது அல்லலாகிய பிறவியை அறுத்து! அதாவது அறுப்பானே ஓ என்று அலறிய அவர் உன் திருவடிக்கீழ் என்னை வை "சிவபரம் பொருளே" என்று கூறிநிற்கின்றார். சிவஞானஒளியும் பெற்று, சிவப்பரம் பொருளை மானிடவடிவில் இம்மண்ணிலே நம் கண்முன்னே காண்பதற்கும் கிடைத்த பேறினில் தோய்ந்த அவரே இப்படி மன்றாட்டமாக வணங்குகிறார். இது "ஓ" என்று கூறி தனக்கு இவ்வுலக வாழ்வு வேண்டாம் என்ற தனக்கு இவ்வுலக வாழ்வில் இருந்த அல்லலைக் கூறுவது தொடங்கி பல்லோரும் ஏத்தப் பணிந்து என்பது வரை இதனை உணர்த்துகின்றார். எனவே சிவபுராணத்தை பொருளை உணர்ந்து ஓதுபவர்களும் உள்பொருளை மேலும் மேலும் உணர்ந்து உணர்ந்து ஓதுபவர்களும் சிவனடிக்கீழ் உள்ளவராவார்கள். இது சிவபுராணத்தில் கூறப்பட்ட உன்னதமான. முடித்த முடிவாகும். இதனை கூறி மேலும் சிவனடிக்கீழ் உள்ளவர்களாவர்கள் என்று இந்த உலகினோர்க்கும் கூறி வைத்துள்ளார். இது செம்மையும், மேன்மையும் நிறைவும் பொருத்திய கூற்றாகும். அழுதடி அடைந்த அண்ணலின் கூற்றாகும். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்றார் இந்த மெய்ஞானி

**"நமச்சியவாய மந்திரம்" அருள்வாயிலாகிய வீட்டுநிலையை, விடுதலையை அடையச் செய்வது. இது இருதயமந்திரமாகும். உடலில் உயிர் வாழ்வதற்கு இருதயம் எப்படி அவசியமோ? அதே போன்று அவசியமானது "நமச்சியவாய மந்திரம்" அம்மந்திரம் "பரமார்த்திகப் பெருவாழ்வினை" நல்கும். உயிர்களுக்கு விடுதலைப் பேறினை நல்கி இறுதிப்பேறாகிய பேரின்ப வாழ்வை நல்கும். என்பதை யாவரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணர்ந்து உணர்ந்து அதன் பொருளை எம்மனதில் பதித்து உய்தியடைவோமாக. சிவன் சேவடிகளை "மாணிக்கவாசக சுவாமிகளின் மணிவாசகத்தோடு", அருள்வாசகத்தோடு வழிபட்டு,** அருள் பெற்று உய்வு அடைவோமாக.

"பணிந்து" எல்லோரிடத்திலும் நாம் "அன்பு செலுத்துவது" ஒரு பெரும் பேறாகும். செல்வர் சிவபுரத்துக்குள்! ஆம் அனைவரும் செல்வர் எப்படி எனின் பணிவொன்றிருந்தால் அதாவது அகங்காரமில்லாத பணிவு இருக்கவேண்டும். மனிதமனம் வழுக்கி விழுகின்ற இயல்பினையே பெரும்பாலும் உடையது. அகங்காரம் : அகங்காரத்தினையும், அகங்காரத்தினால் வழுக்கி விழுகின்ற இரண்டு தன்மையையும் இல்லாமல் செய்வதும் "பணிவேயாகும்". "எல்லோர்க்கும் நன்றாம் பணிதல்" பணிந்து செல்லுதலே சிவபுரத்துக்குள் செல்வதற்கும் திருவடிக்கீழ் செல்வதற்கும் தேவையானதாகும். அவசியமானதும் ஆகும். எந்த 'பாட்டை' எந்தப் 'பக்திப் பனுவலை' சொன்னாலும்! சொல்லப்படும் பாட்டின் பொருள் உணர்ந்து சொல்பவர்கள் பல்லோரும் பணிந்து ஏற்றிப் போற்றத்தக்கதாகச் சிவபுரத்துக்குள் செல்வர். நாம் ஒருவரைப் பணிந்தால் அது "அந்தப்பணிவு" எல்லோரையும் பணிய வைக்கும் என்பதையும் மாணிக்கவாசக சுவாமிகள் தன் வாழ்க்கை மூலம் தந்துள்ளார். அவருடைய மனம், வாக்கு, காயம் எல்லாம் "பணிவு" என்னும் தாழ்மை என்பவற்றையே மேலானதாக ஆக்கித் தந்து துலங்க வைத்துள்ளதையே நாம் காணமுடிகிறது. இது எல்லேரையும் பணிய வைக்கும் இதையே காரைக்காலம்மையார் "இறவாத இன்ப அன்பு வேண்டி" "அறாவ நீ ஆடும் போது" உன் திருவடிக்கீழ் இருக்க என்றார். இவர்களின் இந்த பேறு எல்லாம் பணிதலையே எமக்கு விளங்க வைக்கின்றது. "இந்த நோக்கிலே திருவாசகத்திலுள்ள சிவபுராணத்தை நோக்கினால்" அதனுள் பொதிந்துள்ள ஞான ஒளியின்" "ஞானஒளிப் பொருளின்" "தனிச்சிறப்பு மிகவும் தலை சிறந்தது ஆகும் என்பது நன்கு புரியும். போற்றுதற்கரிய தலைசிறந்த ஞானியால் தலை சிறந்த யோகியால் இவ்வுலகில் அருளப்பட்டதே சிவபுராணம் ஆகும். எட்டாம் திருமுறையாகிய திருவாசகமும், திருக்கோவையாரும் இறைவனால் தன் கைப்படவே எழுதப்பட்டது ஆகும். அதில் சிவபுராணம் முதன்மையானதும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்பொருளாகிய சிவத்தையும், சொல்லிற்கும், செயலிற்கும், மனதிற்கும் எட்டாத செம்பொருளையும் "சிவபுராணம் முழுமையாக தந்துள்ளது. இதை பாட்டாகவும் தந்துள்ளார்கள் எமது மெய்ஞானிகளுமான மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனிடத்தில் ஞானக்கல்வியை நேருக்கு நேரே பெற்றவரான அவரின் மணிவாசகம் என்றென்றும் மாணிக்கவாசகமாகவே என்றும் மங்காது துலங்கி விளங்கும் என்பது உறுதியாகும்.

அவரைப் போற்றி வணங்கி சிவபுராணத்தினைத் தினமும் பாராயணம் செய்வோமாக.

"அன்பே சிவம்"
"வாழ்க மாணிக்கவாசகர் திருவடிகள்"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

**சிவபுராணத்தின் தொகுப்புரை**

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழப்பொருளே" என்பது மாணிக்க வாசக சுவாமிகளின் உள்ளக்கமலத்தில் படிந்த பதிவாகும். அது அவர் உள்ளத்தில் பதிந்து நின்று அவரைத் தூண்டித் செயலாற்றும் பதிவுமாகும். ஞான நூல்களின் எட்டாம் திருமுறையாகிய திருவாசகம் திருமுறைகளில் முதன்மையானது, உயிர்களின் பிறவித்தளையை அறுப்பதுதான் திருவாசகத்தின் பொருள் அடக்கம், அதிலே சிவபுராணம்" ஆகமம் சார்ந்த உள்ளிடை முழுவதும் அடங்கப் பெற்ற பொருளடக்கத்தோடு கூடிய முதன்மையானதும் முழுமையானதும் ஆகும். சிவபிரானிடத்திலே இடையறாத பேரன்புபூண்ட சுவாமிகள் தமது உள்ளக்கிடக்கையிலிருந்து வெளிப்பட்ட பாடல்களூடாக சித்தாந்த சைவக்கருத்துக்களையே வெளிப்படுத்தியுள்ளார்கள், என்பது தெற்றெனத்தெரியும் தெளிவாகும்.

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" இது சிவபுராணத்தின் தொடக்கமாக உள்ளதும் சிவமூலமகா மந்திரமுமேயாகும். ஆகமமேவடிவான இறைவனை மந்திரமே வடிவான இறைவனைப் போற்றி செய்வதற்கு திருவைந்தெழுத்தின் நாமரூபத்தை முதலடியாக வைத்துப் பாடியுள்ளார். "நமசிவாய" என்பது நாமத்தைப் போற்றுவதும் இறைவனையே போற்றுவதுமாகும். "நாதன் தாள்" என்பது உருவத்திருமேனியைப் போற்றுவதும். நாமத்தையும் உருவத்தையும் போற்றுவதற்கும், பஞ்சாட்சர மந்திரத்தை நெஞ்சில் நிறுத்துவதற்கும் பஞ்சாட்சரமந்திரமே தொடக்கமாக அமைந்துள்ளமையை நாம் உள்ளார்ந்த உள்உணர்வோடு நோக்கும் போது இது சைவ மக்களின் ஆன்மீக வாழ்விற்கு வழிவகைகளைக் கூறி நிற்பதோடு மட்டுமல்லாமல் தெய்வ சிந்தனையையும் தூண்டி நிற்பதுமாகும். மனத்தின் கண்ணே தெய்வசிந்தனையை எப்பொழுதும் வைக்க வல்லதும் ஆகும். எனவே திருவாசகத்திலே . "சிவபுராணம்" முதலிடம் பெறுவதை எம்மால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரமுடியும். வாழ்க்கையில் வெற்றிபெற ஆன்மீக வாழ்வில் புத்துணர்ச்சி ஏற்பட பிறவிதனை அறுத்து ஆன்மா விடுதலையடைய செய்ய "சிவபுராணம்" வழிவகுக்கின்றது. இது உற்று உணர்ந்தும் பொருளுணர்ந்தும் படிப்போருக்கும் பாராயணம் செய்வோருக்கும் "சிவபுராணம்" சிறந்ததொரு **ஔடதமாகும்** என்பதும் உண்மையாகும். மகாமந்திரத்தை தொடக்கமாகக் கொண்டதினால் சிவபுராணம் அருள்பொலிவு முழுவதும் ஒருங்கே அடங்கியதாகும்.

**இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!** இது அருவத்திருமேனியை வாழ்த்துவதாகும். வாழ்க. அருவந்திருமேனியை வாழ்த்துவதும் நெஞ்சைவிட்டகலாத நினைவைவிட்டகலாத வாழ்த்துதலாகும் என்பதால் தான் வாழ்க என்றும் நெஞ்சு எப்பொழுதும் என்றும் நெக்குருகி நெக்குருகி இறைவனை நினைத்து கொண்டே இருக்கும், என்பதையும் எடுத்துக்கூறினார். அத்தோடு கோகழியாண்ட குருமணிதன் தன் தாள் என்பது? கோகழி திருப்பெருந்துறையில் உறைபவர் குருமணி குருமணியாக மனிதவடிவில் குருவாக வந்து ஆட்கொண்டமையையும் எப்பொழுதுமே நினைத்துக் கொள்வார் என்பதே பொருள்.

குருவருள் குருவணக்கம், குருவின் மேன்மையை ஆங்காங்கே திருவாசகத்திலே விளங்கவைத்துள்ளார். குருவருள் இன்றேல்த் திருவருளில்லை, குருமணி ஆச்சாரியன் ஆச்சாரியருள் சிறந்தவன் குருமணி என்பதாகும். ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க! இது ஒன்றாய், உடனாய். வேறாய், பலவாய் நிற்கும் தன்மையை வாழ்த்துதலாகும். வேகம் கெடுத்தாண்டவேந்தனடி வெல்க! என்றது வேகம், மனஓட்டம், என்பது ஐம்புலன்களின் உலகஇன்ப இச்சைகளில், ஆசைகளில் அடங்காமை என்பவையே! இவ்வுணர்வுகளைக் கெடுத்தால் தான் நமது பிறவிவேர் அறிவிக்கப்படும் என்பதையும் சிவபுராணம் நன்கு விளக்குகின்றது. அத்தோடு பிஞ்ஞகன் தலைக்கோலம் உடையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவனது சடாமுடியிலேயே யாவையும் அடக்கம் என்பதே இதன் பொருள்.** இதன் குளிர்ச்சியையடைய சீறிப்பாய்ந்து வரும் கங்கையும், குளிர்ச்சியையே தரும் பிறை சந்திரனும் இவற்றோடு சடாமுடியை சுற்றி சீறும். பொல்லாத பாம்பும் விஷம் கக்குவதற்கென கோபத்தோடு உள்ள கோலத்தோடு அமைந்துள்ளது. இவற்றை எல்லாம் நோக்கும் போது இறைவனே எமது ஆன்மாவுக்குப்புறம்பானவற்றை எல்லாம் அழித்து எம்மைக்காப்பான் அதே நேரம் இவற்றையும் எல்லாம் காப்பவனும் இறைவனேயாம் என்பதுவும் உள்ளம் நிறைந்த உண்மை. அடுத்து புறத்தார்க்குச்சேயோன் - புறச்சமயந்தார்க்கும் மனதாலே அவனை நினையாதவர்களுக்கும் அவன் தூரத்தே இருப்பவன். ஆனால் இறைவனை **நினைப்பவர் உள்ளத்தில் ஒளி போன்று பிரகாசிப்பவன். பூவும் மணமும் போல பிரியாமல் இருப்பவன். ஆனால் அவன் நினைப்பவர்களையும் நினையாதோரையும் காப்பவன் கரம் குவிவார் உள்மகிழும் கோன்!** உள்ளன்போடு கரம் குவித்து வணங்குபவர்களின் உள்ளத்திலே அருள்சுரக்கும் தூய மனத்தினராக அவர்களை மாற்ற அவர்களை மாற்றி அமைக்க வல்லவனும் இறைவனேதான் என இக்கருத்தானது எமக்கு இந்த வகையில் புலனாகின்றது. என்றும் நீங்காது உறைபவன் என்பதும் அவன் அருளாலேயே விளங்கிக் கொள்ளலாம். சிரத்தின் மேல் கைகுவித்து சீரியமனத்தோடு வணங்கி, வணங்கி வாழ்பவர்களை என்றும் சீர்செய்து வாழவழிகாட்டுபவன். ஆனால் அவன் என்றும்.

**கள்ளப்புலக்குரம்பைக்கட்டழிக்க வல்லானே ஆம் வல்லவனேயாம்**

**உளது இலது என்றலின் எனதுடல் என்றலின்**
**ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்**
**உண்டி வினை இன்மையின் உணர்த்த உணர்தலின்**
**மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா**

**(சி.போதம் 3)**

**இதன் பொருள்**

ஆன்மாவின் பொது இயல்பு இந்நூற் பாவில்க்கூறப்பட்டது. ஒரு பொருளுக்குப் பிற பொருளின் சேர்க்கையால் உண்டாகும் இயல்பே பொது இயல்பு, அந்த வழியில் ஆன்மாவானது கருவிகளோடு கூடிப் பலநிலை வேறுபாடுகளை அடைதலே ஆன்மாவின் பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாயிற்று என்பதை இச்சூத்திரம் கூறிநிற்கும் உண்மையே! எனவே இந்குரம்பையானது கள்ளப்புரக்குரம்பையாம். மாயா இயந்திரமே இவ்உடலாகும் இந்த மாயா உடலுக்குள்ளேயே ஆன்மா உள்ளது என்பதனை இந்த நூற்பாவில் மெய்கண்ட தேவர் நன்கு விளங்க வைத்துள்ளார். மாயா இயந்திர உடம்பினுள் உயிர் இருக்கின்றது என்பது இங்கே புலனாகின்றது.

**எண்ணிறைந்து எல்லை இல்லாதவன்!** இறைவன் தானே! மூலவஸ்துவாக இருந்தும்...... பிரபஞ்சமாக விகாரப்பட்டுத் தோன்றும் போதும் எல்லையென்று ஒன்று இல்லாதவனாகின்றான். எண்ணிறைந்த பலகோடி உயிர்வர்க்கங்களாகத் இறைவனே தோன்றுகிறான், அருளுகின்றானே அப்போதும், உலகிலேயுள்ள அனைத்து இன்பதுன்பங்களின் ஓட்டத்தையும் திசை திருப்பி அவனே அனைத்தையும் ஆட்கொள்ளும் தன்மையும் நன்கு புலனாகின்றது. இதனைச் சிவபுராணம் நன்கு புலப்படுத்துகின்றது இவ் உலகில் பிறந்த உயிர்களெல்லாம் பரமனை நாடிய பயணம் போகின்றன என்பதை உணர்த்துகின்றது சிவபுராணம். இது தான் எம் பிறவியின் நோக்கமும் முடிவும் ஆகும். இறைவனும் தன்பெரும் கருணையினால் உயிர்களுக்கு பிறவிச்சுழியின் நின்றும் விடுதலை கொடுக்கின்றான். பிறப்பில்லாத இறைவனே இவற்றை எல்லாம் உலகத்திலுள்ள உயிர்களின் பொருட்டு செய்கின்றான். என்பதனை நாமும் நன்கு உணரமுடியும். பெரிய வீரக்கழல்களையுடையவன் இவ்வுலகில் இருக்கின்ற உலகு உயிர்களுக்கெல்லாம் மறைந்து நின்று பாலில் வெண்ணை போல அனுக்கிரகம் செய்கின்றவன். இதை நாம் எண்ணிப் பார்த்தால் இது பதிக்குரிய பதி இலச்சணமாகும் என்பது எமக்கு எல்லாம் நன்குபுலனாகும். திருவாசகத்தில் பதிக்குரிய பதி இலச்சணம் ஆக்கம் அளவு இறுதி என்பதை பின்பும் நோக்கும் போது அவனுக்கு ஆக்கம் அளவு இறுதி இலான் என்பதுதான் அவன் செயல் ஆகும். ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய், போக்குவாய், என்னைப் புகுவிப்பாய், நின்தொழுப்பின் என்று கூறுகின்றார். எனவே தொடக்கம், முடிவு நிலைபேறு அழிவு என்பது எல்லாம் அவனேயாம் என்கிறார். **"நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே."** இறைவனது சிந்தனையோடு இருப்பவர்கள் பூவும் மணமும் ஒன்றாகப் பிரியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தேயிருப்பது போல் இறைவனுக்குப் பக்கத்திலேயே இருப்பார்கள் மாற்றம் மனம் கழிய என்பதிலிருந்து இறைவனது சொரூப தட்டந்த நிலைகள் விளங்குகின்றது.

சுத்த தத்துவங்களாவனவற்றையெல்லாம் படைத்து தனு, கரண, புவன, போகங்களைப் படைத்து நிலைபெறச் செய்து உய்வித்து ஒடுக்குபவனும் அவனே! எனவே தோற்றுவிக்கும் திருமேனி சகலம் எனவும் ஒடுக்குவிக்கும் திருமேனி நிச்களம் எனவும் கூறப்படும். ஆகவே உலகத்தைப் படைத்தல், இரட்சித்தல், அழித்தல் எல்லாம் அவன் செயலேயாம். வெய்யாய் தணியாய் இயமான ஆம்விமலா என்பது வெம்மையுடையவனே தணியாய் குளிர்ச்சியுடையவனே வேள்விவேட் போனின் (யாகம் செய்வோனின் உள்ளத்தில் விளக்கி நிற்கும் விமலா) உள்ளத்தில் விளங்கி நிற்பவனே! தூயவனே! என்று **என்றும் தூய்வனான இறைவனைக் கூறுகின்றார்.** மானிடரிடத்திலுள்ள அஞ்ஞானம் தன்னை அகல்வித்து நல்லறிவைத்தந்து நிற்கின்றவனும் அவனேயாம் மெஞ்ஞானமாகியும் மிளிர்கின்ற மெய்சுடராம் அவன். அவனது ஆதிஅந்தம் பற்றியும், உற்பத்தி பற்றியும் சிவபுராணத்திலே 43வது, 44வது அடிகள் விளக்குகின்றன, சீவனுக்குள்ளே சிவமணம் கமழவேண்டும் என்பதை 46வது- 50வது வரிகள் விளக்கி நிற்கின்றன.

**கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போல**
**சிறந்தடியார் சிந்தையுள் தேனூறி நின்று**
**பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்**

**சீவனுக்குள்ளே சிவமணம் கமழவேண்டும்"** என்பதை மாணிக்கவாசகசுவாமிகள் சீரும் திருவும் பொலிய சிவலோக நாயகன் சேவடிக்கீழ் யாரும் பெறாத அறிவு பெற்றேன் என்று தன்னையே தான் கூறினார் எவ்வளவுக்கு அவரின் அருமை நிலையும் அநுபூதிநிலையும் விளக்குகின்றது 58வது வரியிலே தன்னை மிகவும் சிறியவனாக சிறியவனில் சிறியவனாக சிந்தனையற்றவனாக நாயினும் இழிந்த பிறவி மனிதப்பிறவி என்று தன்னை தானே எடுத்துக்காட்டி தன்னைக் கீழ்படுத்துவதோடு நாய் நன்றியுடையது என்றும் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு நன்றியை கூறும் முப்பால் முனிவர் மிகவும் உறைப்போடு கூறுகின்றார். இதனையும் சற்று சிந்திபோம்!

**என் நன்றி கொன்றாற்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய் நன்றி கொன்ற மகற்கு.**

**(குறள் 110)**

செய்நன்றியறிதல் என்ற ஒரு அதிகாரமாகவே நன்றி மறவாமை பற்றி இந்த மனிதகுலத்திற்கு கூறிவைத்துள்ளார். மனிதனாகப்பிறந்தவர்கள் யார்தான் இதைக் கடைப்பிடிக்கிறார்கள். நன்றி என்பதை ஒரு மிருகவர்க்கமான நாயோடு ஒப்பிடும் போது நாய் எஜமானை எக்காரணம் கொண்டும் பிரியாது. எங்கோ ஒரு கண்காணாத இடத்திலே கொண்டு போய் விட்டாலும் அது எஜமானது வீட்டிற்கே வந்து சேர்ந்து விடும் எஜமானின் காலடியை மணந்து வீட்டிற்கு வந்து சேர நாயால் முடியும்! நம்மால் முடியுமா? ஆகவே திருவாசகத்தின் பல இடங்களிலே தன்னை மிகவும் தாழ்த்தி நாயினும் கடையான பிறவி மனிதப்பிறவி என்கிறார் அந்த புனிதனான மாணிக்கவாசகசுவாமிகள் நாயிற்கடையாயக்கிடந்த அடியேற்கு என பல இடங்களில் கூறிக்கூறி தாயிற் சிறந்த தயாவான தத்துவனே என்பதுடன் மேலும் இறைவனுடைய தத்துவத்தை மெய்ப்பொருளை உயர்வடையச் செய்து உணர்த்துகின்றார். 74,75,76வது வரிகளின் தன்னை வலிய வந்து கவர்ந்து ஆட்கொண்ட என்தந்தையாகிய எம் பெருமான் எந்தை என்று கூறுகின்றனர்.

**கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்** இதில் சிவபுராணத்தின் உண்மை என்னவெனின் கூர்த்த மெய்ஞானம் என்பது? நிறைந்த - சிவஞான அநுபூதிக்கும் இறைவனுக்கும் உண்மையாகவே அடிமையாகின்ற உண்மையான அநுபூதி ஞானமுடைய ஞானம் ஆகும். அதாவது சுவாமிகள் கூர்ந்த மெய்ஞானம் உடையவரே தனது உள்ளத்திலும் அப்படிப்பட்ட அடியாரது உள்ளமும் உருகத்தகுந்ததாக அடியாரது கண்ணிற்குப் இறைவனை நன்கு புலப்படத்தக்கதாக கூறியுள்ளார். இறைவன் தானே எழுந்தருளிவந்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது அவருக்கு நேருக்கு நேர் தானே வந்து "ஆட்கொண்ட நாதனே" என்று கூறுகின்றார். இப்படியெல்லாம் கிடைக்கப் பெறுவது அவரவர் செய்த நல்வினைப்பயனாகும். கூர்ந்த மெஞ்ஞானத்தாலும் என்பதை நாம் உற்று உணர்ந்து நோக்கவேண்டும். எப்படி எனின்? தான் பெற்ற துணிவால் தான் பெற்ற அனுபூதியால் கூறியுள்ளார் தான் தரிசித்த குரு தரிசனத்தால் இதனை மிகவும் விதந்தும், விநயமாகவும் பரிந்தும், துணிந்தும் தானே கூறகின்றார். அவரது உயர்ந்த கூர்த்த மெய்ஞ்ஞானம் அப்படிக் கூறவைத்துள்ளது. இதனை சிவபுராணத்தை உணர்ந்து படிப்பவர்களால் அனுபவித்து அறிய முடியும் அனுபூதி அடையவும் முடியும் என்றும் கூறிவைத்துள்ளார். போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே அதாவது இன்பம் துன்பம் பிறப்பு என்ற ஒன்றுமே இல்லாத ஈசன் பூமியிலே அந்தந்த ஆன்மாக்களுக்கும் அந்தந்தப் பக்குவத்திற்கேற்ப வந்து அருளுகின்றார் என்பதை மிகவும் தெளிவாகத் தெளிய வைக்கின்றார் எனவே இறைவன் தோற்றச் சுடர் ஒளியாகவும் சொல்லாத நுண்ணுனர்வாகவும் இருக்கின்றான் என்பது சிவபுராணத்திலே பொதிந்த பொருளாக நன்கு உணர்த்தப்படுகின்றது. தோன்றாத் துணையாக நின்று அருள்வானே

ஈசனாரின் இத்தனை அருள்திறத்தையும், இத்தனை அருமை பெருமைகளையும் புரிந்து கொள்ள முடியாத இந்த உலகமக்களுக்கு, இந்த ஜீவ ஆத்மாக்களுக்கு இந்த புரியாத ஜென்மங்களுக்கு மிகவும் துல்லிய உணர்வோடும், தூயஉள்ளத்தோடும் நன்கு புரிய வைக்கின்றார் பதியாகிய இறைவன் பெருமைக்கும், சிறுமைக்கும், பெரும்கருணைக்கும், பெறுதற்கு அரிது அருமைக்கும் என்று கூறப்படுகின்ற பண்பு நிலைகளில் தனக்கு ஒப்பில்லாதவன் ஆவான். அவன் நிகரில்லாத பரம்பொருளாவான் இதை 9வது குறள் பாவில் திருவருள்பயனிப்பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நலன்**
**சலமிலன் பேர் சங்கரன்**

பதியானவர் இறையருள் பெறும் தன்மையடைந்தவர்க்கு நன்மைகள் அருளும் தன்மையுடையவர். இறையருளை நாடாத மூர்க்கருக்கு நன்மையருளும் இயல்பில்லாதவர் ஆனால் விரும்பு வெறுப்போ விகாரமோ அவர் திரு உள்ளத்தில் இல்லாதவராகவே எப்பொழுதும் விளங்குவார் ஈற்றில் இரங்கி வந்து எல்லோருக்கும் அருள்வார் மாற்றமாம் வையகத்தே வெவ்வேறே வந்தறிவாம்.

**தேற்றனே தெற்றதெளிவே என்சிந்தனையுள்**
**ஊற்றான உண்ணார் அமுதே உடையானே**
**வேற்று விகார விடக்குடம்பின் உள்கிடப்ப**
**அற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று**

உடையானே என்பதிலிருந்து பக்தனின் பாடுகளை இங்கே உணர முடிகிறது பக்தனின் சிந்தனையுள் ஊற்றான அன்பு வெள்ளமாகி உண்ணார் அமுதமுமாகி இருப்போன் இறைவன். கள்ளப்புரக்குடம்பு – அழுக்கு நிறைந்த உடம்பு, ஐம்புலனின் ஆசைகளால் கொள்ளப்படும் உடம்பு, நோய் கொண்ட கள்ளப்புரட்குடம்பு **இந்த உடம்பானது ஒருவருக்கு இருவினை காரணமாக வருகின்ற மலம் சோரும் ஒன்பது வாயிற்குடில் ஆகும் கள்ளப்புலக்குரம்பையாகிய உடம்பாகிய கட்டினை அழிப்பவன் இறைவனே சிவஞானபோதம் மூன்றாம் சூத்திரம். இதனை நன்கு விளக்குகின்றது**

ஜீவர்கள் இவ்வுலகில் தெளிவுபெற பல படித்தரளங்கள் வேண்டும். பலபடித்தரளங்களை பலபிறவிகளை எடுத்து எடுத்து பாவங்களைத் தாண்டவேண்டும். ஜன்மங்கள் பலவற்றில் அவை படிப்படியாகப் பக்குவமைடவேண்டும். செல்வத்தில் பற்றுவைத்து அறிவை இழந்து கிடக்கும் பேதமை நெஞ்சங்களுக்கு பரமார்த்த பெருநிலை விளங்குவதில்லை, தெய்வீக உணர்வு விளங்குவதில்லை நேரேவந்துஅருள்புரிந்து அருள்பவனை எம்நெஞ்சம் வஞ்சம் கெடநினைப்பதுமில்லை. இறைவனது பெயராது நின்ற பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைப் பேராறின் அருமை, அருள்உடைமை, பெருமை இவ் உலகில் நாம் தெளிவு பெறவும் என்றே உள்ளது ஆனால் உலக இன்ப துன்பங்களால் இது மனிதருக்கு விளங்குவதுமில்லை. **அன்பருக்கு இறைவன் சிறந்த அன்பன் என்பதை இவ்வுலகுயிர்கள் புரிந்து கொள்ளுவதுமில்லை.**

**சிறந்தடியார் சிந்தை அதாவது உண்மையன்போடும் இறைவனை தூய செந்நெறி உள்ளத்தோடும் தூய ஒழுக்கமுள்ள சிந்தனையோடும் இறைவனை நாடுவோர்க்கும் இறையருள் ஆராத இன்பமாக இறைவனது அருளானது இன்பமலையிடத்திலிருந்து தூய மனம் படைத்த யாவருக்கும் கிடைத்தே தீரும் என்பதெல்லாம், அருளாளர்களின் அநுபூதிமான்களின் உறுதியான முடிவாகும்.** அருளாளர்கள் நேரே கண்டும் உணர்ந்தும் அனுபவித்தவர்களாவார்கள். நேயந்தே நிற்கும் நிமலன். தூயவன் அவனருளாலே அவன்தாள் வணங்கும் நிலையைத் எமக்குத் தருவான். எம்சிந்தை மகிழ சிவபுராணத்தை ஓதி ஓதி முந்தை வினைமுழுவதும் அற்றுப்போகச் செய்யமுடியும். இதை பொல்லாவினை யேனாக நான் இருந்தால் பெறமுடியாது. அருளுமலையாகியவன். அவன் அருளாலேதான் அவனருளை பெறமுடியும். பெற்றபின்பு தான் அவனருளாலே அவன் தாள் வணங்கி! ஆம் வணங்க! முடியும்.

நன்னருளில் நட்டம் பயின்று ஆடும் நாதன் அதாவது சூக்கும நடனம் செய்யும் நடராஜனின் நடனம் அந்த நடனம் பிரபஞ்ச நடனம் அந்த நடனத்தை விளக்குவதே தில்லைக் கூத்து. தில்லையுள் கூத்தானது அண்ட சராசரங்களை உய்விக்கவும், அல்லல் பிறவியை அறுத்து உயிர்களுக்குக் உய்வினைகொடுக்கவும் என்றே ஆடுவதாகும். சிவபுராணத்தைப் பொருள் உணர்ந்து பொருள் உணர்ந்து சொல்பவர் களெல்லோரும் பல்லோரும் பல உயிரும் போற்றிப்புகழத்தாக்கதாக போற்றிவணங்கத்தக்கதாக செல்வர் சிவபுரத்துக்குள் என்று கூறி முடிக்கின்றார். அவருடைய தூக்கிய திருவடி கீழ்போய் சேர்வார்கள் என்பதே சுவாமிகள் கூறும் உறுதிமொழியாகும். மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த சிவபுராணத்திலே இறைவனின் ஐந்தொழில்கள் சொரூபநிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடத்தநிலைகள் உருவம், அருவம் அருவுருவழிபாடுகள் திருவைந்தெழுத்து முப்பொருள் தத்துவம் இறையுண்மை இறைக்கொள்கை மிகவும் தெளிவாக கூறப்பட்டுள்ளது **தவஜெபதியான சாதனைக்கு முழுமனத்தோடு ஈடுபடுவதற்கு சிவபுராணம் ஒரு திறவுகோல். இது பூலோகத்திலே கயிலாயம் போன்றது பிறவிவேர் அறுத்து ஆத்மாவுக்கு விடுதலை தரவல்லது.**

ஊயிர்களுக்கிடையில் இருக்கும் தொடர்பும் இறைவனுக்கும் நெருங்கிய இணைப்பானதும் சிவபுராணத்தின்மூலம் பக்தியாகப் பர்ணமிக்கிறது. **அந்தப்பக்தி பற்றிய சிந்தனையானது சிவபுராணத்திலே மிகத்தெளிவாக ஆங்காங்கே கூறப்பட்டுள்ளது. வழிபாட்டு நெறியும் தெய்வநெறியும் ஓங்குவதற்குரிய அடிப்படை உண்மை முழுவதும் கூரியதாகவும் சீரியதாகவும் சிறப்புடனே சிவபுராணத்திலே காட்டப்பட்டுள்ளதையும் ஆணையிட்டுக் கூறப்பட்டுள்ளதையும் காணமுடிகின்றது. திருவடிப்பேறினை சுவாமிகள் தெள்ளத்தெளியக்காட்டி நிற்கின்றார் என்பதை அனைவரும் உணர்வோமாக. அருள்குருவிடம் வைத்திருக்கின்ற பக்தியால் சன்மார்க்க** நெறிவாய்க்கும் சன்மார்க்கநெறி என்பது ஒளி நெறி குருவினுடைய மகிமை மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்விலே மிகமிக முக்கியமான ஒன்றாக விளங்கியது, என்பது மிகவும் தெளிவான உண்மையாகும். ஞானம் பெறுவதற்குச் சற்குரு வழிபாடே மிக அவசியமானதும் மூலகாரணமானதுமாகும். சிவபுராணம் கூறும் சற்குருவழிபாடு பிற்காலத்தில் குருலிங்க சங்கமவழிபாடு என்று பரிணமித்ததையும் சித்தாந்த சைவத்திலே நோக்கக்கூடியதாக உள்ளது.

**போற்றி எல்லா உயிர்கும் தோற்றமாம் பெற்பாதம்**
**போற்றி எல்லா உயிர்கும் ஈறாம் இணையடிகள்**

இலெளகீக வாழ்வு வாழ்ந்த சுவாமிகள் இறைவனால் ஆள்கொள்ளப்பட்ட பின்பு அவரின் நிலையை ஒருதரம் நோக்குவோம். மாணிக்கவாசக சுவாமிகளின் ஆத்மயாதரைப் பயணத்திலே இத்தனையையும் அவர்தானாகவே கூறிவைத்துள்ளார். அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியாத்திரையானது திருவாதவூரிலே ஆரம்பித்து, திருப்பெருந்துறையிலே சிவதரிசனம் பெற்று சிதம்பரத்திலே சிவபரத்துவம் கிடைக்கும் வரை தொடர்கிறது. அவர் ஆட்கொள்ளப்பட்டு ஆன்மீக வாழ்விலே புகுந்து சாயுச்சிய முத்தி கிடைக்கும் வரை ஞானஒளி நெறியாகிய பக்திநெறியால் வயப்பட்டு இத்தனையையும் கூறிவைத்துள்ளார். அவருடைய அருள் நிலையின் வீச்சுக்குள் இத்தனையும் அவர் அனுபவித்துப்பாடிய பாடல்களாம். எனவே, நாம் உற்று உணர்ந்து நோக்கும் போது நோக்கவேண்டியதும் **எம்மனதில் இருத வேண்டியதும் என்னவெனில் ஆகமப்பொருள்களின் ஞானகாண்டப் பகுதியைத் தெளிவுபடுத்துவதே சிவபுராணம். எனவே சிவபுராணம் இறைமைக் கொள்கையை இறைநுட்பத்தை பக்திமார்க்கத்தை அனுபூதி அறிவியலை முற்றுமுழுதாக விளக்குகின்றது என்பது இங்கே நன்கு விளங்குகின்றது.** மாணிக்கவாசக சுவாமிகளின் அருள்நிலையானது பலபரிமாணங்களைக் கொண்டதாகவே திருவாசகத்தில் மிளிர்கின்றது. இக்கலியுகத்திலே மாசுடன் கூடிய மனதைக் கொண்ட மனிதன் தான் மாசிலாதவனாகி சிவனை எவ்வாறு அடைய முடியும் என்ற வழிவகைகளைச் சிவபுராணம் சிறப்பாகவே கூறி நிற்கின்றது. நாம் வாழ்க்கையில் வெற்றிபெற உயர்ச்சி பெற வீடுபேறாகிய முத்திப்பேறு பெற வழிவகுத்துத் தருவது சிவபுராணம். சைவசித்தாந்த மரபில் ஆன்மீக வாழ்வுக்குரிய அனைத்து வழிகளும் சிவபுராணத்திலே செறிந்தும், பரந்தும், விரிந்தும் இருப்பதனை மக்கள் எல்லோரும் உணரவேண்டும். உள்ளத்தூய்மையோடு உச்சரிப்பதற்கு உரியதான சிவமந்திரம் நமசிவாய மந்திரம் ஆகும்.

**ஓம் நமசிவாய**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிருத்தம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

L17739



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியரைப் பற்றி....

கலாபூஷணம், சைவப்புலவர், சைவசித்தாந்தப் பண்டிதர் இந்து தர்மாசிரியர் திருமதி. சரோஜினிதேவி சிவஞானம் M.A. அம்மையார் யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டையில் அமரர் திரு. வீ.தெய்வேந்திரம் பிள்ளை J.P, (ஓய்வு பெற்ற அதிபர்) சரஸ்வதி தம்பதியினருக்கு மூத்த புதல்வியாகப் பிறந்தார்.

இவர் இளமை கல்வியை யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர் நிலைப் பாடசாலையில் கற்றுத்தேறினார். அவ்வூரைச் சேர்ந்த கந்தையா சிவஞானத்தை திருமணம் முடித்து ஐந்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்து அனைவரையும் பட்டதாரிகளாக்கி உயர்பதவிகள் பெற வழி காட்டினார். தனது குடும்பப் பணிகளை நிறைவுசெய்த, பின்னர், "கற்கை நன்றே" என்ற வாக்கியத் திற்கு அமைய 2010 ஆண்டு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட இளம் சைவப்புலவர் தேர்வில் சித்திபெற்று திருவாவடுதுறை ஆதீனக்குரு மகா சந்நிதானத்திடம் பட்டமும் பெற்று, 2012 ஆம் ஆண்டில் சைவப்புலவர் தேர்வில் சித்தி பெற்று சைவப்புலவர் பட்டமும் பெற்றார். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையில் சைவ சித்தாந்தபண்டிதர் தேர்வில் சித்தி பெற்று, பட்டமும் பெற்றார். மதுரை திருவாவடுதுறை ஆதீன குருமகா சன்னிதானத்தினால் "திருமுறை நெறிச்செல்வர்" பட்டமும் திருவாவடுதுறை யிலே பெற்றார். யாழ்ப்பாணம் பல் கலைக்கழகத்தில் 2016 ஆம் ஆண்டில் தனது 69வது வயதில் சைவசித்தாந்த முதுகலைமாணிப்பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார். மேலும் இவர் "அன்னைக்கு என் உள்ளக்கமலம்" "பிள்ளைக்குணம்", "வெருகலம்பதியும் அருகும் எம் விதியும்" என்ற நூல்களை எழுதி வெளியீடு செய்துள்ளார். நல்லூர் கந்தசுவாமி கோயில் உட்பட பல ஆலயங்களிலும் சைவ சமய சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகிறார். இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற் போல் கலாபூஷணம் விருதும் பெற்றுள்ளார். இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பணிகளைப் பொறுப் பேற்று 2014ஆம் ஆண்டு 54 வது பட்டமளிப்பு விழாவை திருக்கோணமலையில் மிகவும் சிறப்பாக நடத்தியுள்ளார். நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவத் தின்போது உலகச் சைவத்திருச்சபை (இலங்கை)யினால் நடாத்தப்பட்ட சொற்பொழிவுகளில் கலந்து சொற்பொழிவாற்றி "சிவநெறிசெம்மல்"என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். "திருவாசகத்தில் சிவபுராணம் இனிய எளிய தெளிவுரை" என்னும் இந்நூலினை மிகச்சிறப்பாக எழுதியுள்ளார். இது பள்ளிச்சிறார்களுக்கும் பாமர மக்களுக்கும் படித்துப்பயன் பெறும் வண்ணம் எழுதியுள்ள இவரது இப்பணிகளைப் பாராட்டுகின்றேன்.

சைவப்புலவர் க. கந்தசத்தியதாசன்
செயலாளர் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்
ஆசிரிய ஆலோசகர் வலிகாம கல்வியகம்
அருசொல்வாரிதி, பௌராணிகவித்தர், முத்தமிழ்வித்தகர்
வித்தியா சிரோண்மணி, சைவசித்தாந்தகலாவித்தகர், வர்ணனையாளர்.

ISBN 978-955-42918-0-0
9 789554 291805

Printed By : ART 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org